ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி

ஐந்தாம் பத்து

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான்
அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,

* அன்போடழகிய மணவாளச்சீயரருளிச் செய்த
பன்னீராயிரப்படி உரையும்

* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை
வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த
ஈடு ப்ரதி திருவாய்மொழியின்
ப்ரவேசங்களும்
ப்ரதி பாசுரங்களின் அவதாரிகைகளும்

ஸபாபண்டிதரான
ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்
பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை.

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரகாசம் செய்யப்பட்டது.

பிரபவ௵

1927

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருவாய்மொழி.

ஐந்தாம்பத்து.

முதல்திருவாய்மொழி—கையார்சக்கரம் ப்ரவேசம்.

ஆறு:—(கையார்சக்கரம்.) இப்படி "எம்பெருமானை ஆஸ்ரயியுங்கோள்" என்று பிறரைக் குறித்து அருளிச்செய்தருளி; தம் பக்கலுள்ள ப்ராதிகூல்யங்களொன்றும் பாராதே நிர்ஹேதுகமாக எம்பெருமான், ஸ்வஸர்வேஸ்வரத்வ ஜ்ஞாநத்தையும் ஸ்வகைங்கர்யப்ராப்யத்வ ஜ்ஞாநத்தையும் தமக்குக் கொடுத்தருளித் தம்மை ஸ்வாநுபவைகதாரக போஷக போக்யராக்கித் தம்பக்கல் நிரதிஸய வ்யாமுக்தனாய்க்கொண்டு தம்மோடு ஸம்ஸ்லேஷித்தபடியை ப்ரீத்யதிஸயத்தாலே அருளிச்செய்கிறார். *

ப:—முதலிரண்டுபத்தாலே - ப்ராப்யபூதனான ஸேஷியினுடைய ரக்ஷகத்வபோக்யத்வங்களைச்சொல்லி அநந்தரம் மூன்றாம்பத்தாலும் நாலாம்பத்தாலும்-ப்ராப்தாவான பகவச்சேஷபூதனுடைய ததேகாநுபவத்வத்தையும் ததேகப்ரியத்வத்தையுஞ் சொல்லி; ஆக, நாலுபத்தாலும் - ஸித்தரூபமான பராவராத்மயாதாத்ம்யத்தை அருளிச்செய்தாராய்; அநந்தரம் அஞ்சாம்பத்தாலும் ஆறாம்பத்தாலும் - ஸித்தோபாயபூதனான ஈஸ்வரவிஷயத்தில் சேதநனுக்கு ஸாத்யமான உபாயஸ்வீகாரத்தை அருளிச்செய்கிறார்.

அதில், இந்த அஞ்சாம்பத்தில் - ஸித்தமான உபாயஸ்வரூபத்தினுடைய யாதாத்ம்யத்தை நிரூபிக்கிறது; எங்ஙனேயென்னில்;—கீழ்ச்சொன்ன ததேகப்ரியத்வத்தாலே "பகவத்கைங்கர்யமே உத்தேஸ்யம்" என்று பிறர்க்கு உபதேசிக்கும்படி தமக்கு அவ்விஷயத்தில் பிறந்த ப்ராவண்யத்தை அநுஸந்தித்து, "இதுக்கடி அவனுடைய உபாயபாவம்" என்று நிஷ்கர்ஷித்து, உபாயபூதனுடைய க்ருபாபாரவஸ்யத்தையும், அதடியாக ஆஸ்ரிதரைபாகவதரையிட்டுத் திருத்திக் கொள்ளும் ஆகாரத்தையும், நிரதிஸயப்ரேமத்தையுண்டாக்கி ப்ராப்யத்வரையை ஜநிப்பிக்கும்படியையும், ப்ராப்யாலாபதசையில் ஆர்த்திபிறந்தார்பக்கல் அவனுடைய ரக்ஷகத்வ ஸாமர்த்யத்தையும், அப்ராப்யவ்யநத்தோடே ஹார்த்தமான அநுபவம் நடக்கையாலேப்ரீத்யப்ரீதிகளை ஸமமாக உண்டாக்கும்படியையும், ஆர்த்யதிசயத்தாலே அநுகரிக்கும்படி அவன்

இவனுக்கு அஹம்பாவ விஷயமாம் படியையும், இப்படி ஆர்த்திபிறந்தால் அகிஞ்சநரானார்க்குத் தன் உபாயபாவத்தை ப்ரகாசிப்பிக்கும்படியையும், போகாகாங்க்ஷையுடையார்க்கு அவ்வுபாயத்தில் ப்ரதிபத்திவிசேஷ கரத்வத்தையும், பரிபூர்ணாநுபவப்ராவண்யம் பிறந்தால் ப்ரதிபந்நமான உபாயத்தில் விஸ்வாஸ ஜநகத்வத்தையும், அதிசயிதஶக்தியான உபாயவிஷயத்தில் அபிநிவிஷ்டரானார்க்கு அந்த விஸ்வாஸத்தை யாவத்ப்ராப்தி அநுவர்த்திப்பிக்கும்படியையும் அருளிச்செய்து நிரபாயோபாயபூதனுடைய யாதாத்ம்யத்தை நிஷ்கர்ஷித்து அருளுகிறார்.

அதில் முதல் திருவாய்மொழியில் - உபாயபூதனான ஈஸ்வரனுடைய க்ருபாபாரவஸ்யத்தை ப்ரதிபாதிப்பதாக; க்ருத்ரிமாநுகூல்யவான்கள் பக்கலிலும் ஸர்வ ஸுலபனான ஈஸ்வரனுடைய க்ருபை அவ்யபிசாரிதை என்னுமிடத்தையும், அந்த க்ருபாபாரவஸ்யத்தாலே அஹ்ருதயோக்தியே பற்றாசாக அவன் அபிநிவிஷ்டனாய் மேல்விழும்படியையும், ஆஸ்ரிதருடைய கிந்நதையையும் போக்கித் தன்னை யநுபவிப்பிக்கும்படியையும், அநுபவப்ரதிபந்தக தோஷ நிவர்த்தகத்வத்தையும், தோஷரூப ஸரீராதிகள் நிவர்த்தகனுக்கு விதேயமென்னுமிடத்தையும், தோஷரூப ப்ரக்ருதியோடேகூட விருக்கச்செய்தேயும் அந்த தோஷம் நெஞ்சிற்படாதபடி விலக்ஷணவிக்ரஹத்தை அநுபவிப்பிக்கும்படியையும், போக்தாவின் நிகர்ஷம்பாராதே ப்ரேமத்தை ஜநிப்பித்துத் தானும் மேல்விழுந்தநுபவிக்குமென்னுமிடத்தையும், அநுபவிக்குமளவில் ஸர்வவிதபந்துவாய் புஜிப்பிக்கும்படியையும், இப்பந்தத்தோடே அஸாதாரணாகாரசிஹ்நவிஶிஷ்டனாய் அநுபவிப்பிக்கும் ஆகாரத்தையும், அந்தவாகாரத்தை அழியமாறியும் ஆஸ்ரிதார்த்தமாக அநேகாவதாரங்களைப் பண்ணும்படியையும் அநுஸந்தித்து, இப்படி உபாயபூதனான ஈஸ்வரனுடைய க்ருபாபாரவஸ்யத்தை அநுபவிக்கிறார். *

ஈடு;—*நண்ணாதார்முறுவலிப்பவிலே ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை யநுஸந்தித்து அதுக்குப் பரிஹாரமாக, "பகவத்பரத்வஜ்ஞாநத்தை யுண்டாக்குவோம்" என்று பகவத்பரத்வத்தை உபதேசித்தார்-கீழ்; இரண்டுகிட்டம் தன்னிலே சேரக்கிடக்க அதிலேயொன்று பொன்னாயிருக்குமாபோலே அவர்களிலே ஒருவராயிருக்கிற தாம், "அவர்களையும் திருத்தும்படி தமக்குப்பிறந்த நன்மைக்கு அடியென்?" என்றுபார்த்து, தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே செய்தானத்தனை யென்கிறார். அநாதிகாலம் ஸம்ஸரித்து, புத்திபூர்வம் விரும்புவது ஶப்தாதி விஷயங்களையேயாய், தன்பக்கல் எனக்குள்ளது அஹ்ருதயமான உக்திமாத்ரமேயாயிருக்க,

நான் புத்திபூர்வம் பண்ணிப் போந்த ப்ராதிகூல்யங்களை விஸ்மரித்து, ஜ்ஞாநம்பிறந்தபின்பு ப்ராமாதிகமாக வந்தவற்றில் அஜ்ஞனாய், என்னை இவ்வளவாக விஷயீகரித்தான்; பிறரையும் நான்திருத்தவல்லேனாம்படி பண்ணினான்" என்று தாம் பெற்றபேற்றின் கனத்தைச் சொல்லி ஈடுபட்டு அநுபவிக்கிறார்.

பகவத்பரத்வஜ்ஞாநத்தைத் தம் நெஞ்சிலே படுத்தினபடியையும், அதுக்கு உறுப்பாயிருப்பதொரு நன்மை தமக்கின்றிக்கேயிருந்தபடியையும், அநாதிகாலம் தாம் விபரீதங்களையே அநுஷ்டித்துப் போந்தபடியையும், புருஷார்த்தோபாயமாகச் சொல்லுகிறவற்றில் தாம் ஒன்றும் கணக்கண்டறியாதேயிருக்கிறபடியையும், இழந்து நோவுபடாநிற்கச் செய்தே புருஷார்த்தம் வேணுமென்னும் ப்ரதிபத்தியுமின்றிக்கேயிருந்தபடியையும், ஸம்ஸாரத்திலே தரைகாணவொண்ணாதபடி ஆழ்ந்து நோவுபடாநிற்கச் செய்தே "நோவுபடாநின்றோம்" என்று அறிவிக்கவும் மாட்டாதே உணர்த்தியற்றிருக்கிறபடியையும், அம்ருதமிருக்க விஷத்தை விரும்புவாரைப்போலே ஆராவமுதைவிட்டு இன்னமுதெனத் தோன்றின ஶப்தாதிவிஷயங்களை விரும்பிப்போந்தபடியையும், அதுக்குமேலே அவன்பக்கல் இச்சையின்றிக்கேயிருக்க அவனையுகந்தார் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லிப்போந்தபடிகளையும் அநுஸந்தித்து; இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் தண்ணியேனாயிருக்கிற என்னை, அவையொன்றும்பாராதே, "தான் ஸர்வஶேஷி" என்னுமிடத்தையும் "தன்திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம்" என்னுமிடத்தையும் என்நெஞ்சிலேபடுத்தி என்பக்கலிலே வ்யாமுக்தனாய் என்னோடேவந்து கலந்தானென்று தாம்பெற்றபேற்றைச்சொல்லி ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு; அவ: — முதற்பாட்டு. என்பக்கலுள்ளது அஹ்ருதயமான உக்தியாயிருக்க, இத்தை ஸஹ்ருதயமாகக்கொண்டு விரும்பி, "இனி இதுக்கு அவ்வருகில்லை" என்னும்படியான பேற்றைப் பண்ணித் தந்தானென்கிறார்.

கையார்சக்கரத்தென்கருமாணிக்கமேயென்றென்று*
பொய்யேகைம்மைசொல்லிப் புறமேபுறமேயாடி*
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்றுகாப்பாரார்*
ஐயோகண்ணபிரான் அறையோவினிப் போனாலே. (க)

ப:—முதற்பாட்டில் க்ருத்ரிமமான அநுகூலோக்திகளைப் பண்ண, ஸர்வ ஸுலபனானவனுடைய தப்பவொண்ணாத க்ருபாவைபவத்தாலே அக்ருத்ரிமப்ரேமபரர் பெறும்பேற்றைப் பெற்றேன் என்கிறார்.

கை—திருக்கையோடு
ஆர்—பொருந்தின
சக்கரம்—திருவாழியை யுடையவனாய் (அச்சேர்த்தியோடே)
என் கருமாணிக்கமே—நீலரத்நம்போலே தர்சநீயமான வடிவை எனக்கு அநுபாவ்யமாக்கினவனே
என்றென்று—என்று என்று பாரமார்த்திக ப்ரேமயுக்தரைப் போலே பலகாலும்
பொய்யே—அந்தப்ரீதியின்றி யிருக்கச் செய்தே
கைம்மை—(எதிரியும் ஸத்யபுத்திபண்ணும்படி) க்ருத்ரிமோக்தியை
சொல்லி—பண்ணி, (உக்திவிருத்தமாம்படி)
புறமேபுறமே—பாஹ்ய விஷயங்களிலே ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி
ஆடி—ஸர்வதா ஸஞ்சரித்துவைத்து
மெய்யே—பாரமார்த்திகப்ரேம யுக்தர் பெற்றபேற்றை
பெற்றொழிந்தேன்-பெற்றுவிட்டேன்
விதி—(இதுக்கு ஹேதுவாய், பொய்யையும் மெய்யாக நீ ப்ரதிபத்திபண்ணும்படி பண்ணக்கடவதாய், நீ "அல்லேன்" என்னிலும் தவிரவொண்ணாதபடி ப்ரவர்த்திப்பிக்கையாலே விதி பதவாச்யையான) உன்னுடைய க்ருபை,
வாய்க்கின்று-(பலோந்முகியாகிற)இது
ஆர்—ஆராலே
காப்பார்—விலக்கலாம்? (அதுக்கடியென்னென்னில்)
கண்ணன்—ஸர்வ ஸுலபனாய்க்கொண்டு
பிரான்—எனக்கு உபகரித்த நீ, (உன்ஸ்வாதந்த்ர்யத்தாலே ஶக்தனென்று)
இனி—க்ருபை பலித்த பின்பு
போனாலே-கால்வாங்கிப் போகலாமோ
ஐயோ—ஐயோ
அறையோ-வல்லையாகில்போய்க்காண்
ஐயோவென்றது—அதுகாண்போமென்கிற ஹர்ஷோக்தி.
அறையோவென்றது—அறுதியானகர்வோக்தி (க)

ஆ:—ஸ்வசரணயுகளஸ்நேஹ கந்தரஹிதனாய், ப்ராக்ருதவிஷய ப்ரவணனாயிருந்து வைத்து, ஸ்வவிஸ்லேஷத்தில் ஆத்மதாரணக்ஷமரல்லாதாரைப்போலே கையார்சக்கரத்து என்கருமாணிக்கமே யென்றென்று நான்சொல்ல, என்னுடைய இந்த அதிதுஸ்ஸஹமான ப்ராதிகூல்யத்தை ஒன்றும்பாராதே என்னை மெய்யாக ஸ்வாநுபவைக போகனாக்கி என்னோடே கலந்தருளினான். எம்பெருமானுடைய நிரவதிககாருண்ய ஸமுத்ரம் கரையுடைந்து பெருகப்

புக்கால் எம்பெருமான் தன்னாலும் தடுக்கமுடியாதாகாதே. அவன் ஸர்வஶக்தனல்லனோ, அவனால் முடியாததுண்டோ வென்னில்; வல்லனாகில் போவதிறே யென்கிறார். (௧)

ஈடு; அவ:—அஸ்தாநேபயஶங்கிகள் சொல்லும்வார்த்தையை நான் அஹ்ருதயமாகச் சொல்ல ஸர்வஜ்ஞனானவன் அத்தை மெய்யாகக் கொண்டு தன்விபூதியோடே கூட நானிட்டவழக்கானானென்கிறார்.

போனாய்மாமருதின்நடுவே என்பொல்லாமணியே*
தேனேயின்னமுதே என்றென்றேசிலகூத்துச்சொல்ல*
தானேயெம்பெருமானவனென்னாகியொழிந்தான்*
வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே. (௨)

ப:—அநந்தரம், அஹ்ருத்யமான ப்ரேமோக்தியே பற்றாசாக ஸவிபூதிகனான ஸர்வேஶ்வரன் என்பக்கலிலே அபிநிவிஷ்டனானானென்கிறார்.

மா—மஹாகாயங்களாய் அஸுராவிஷ்டங்களாய்க்கொண்டு நலிகைக்குத் தன்னில்தான் செறிந்த
மருதின்—மருதுகளின்
நடுவே—நடுவே
போனாய்—போனவனே! (அவற்றை நிரஸித்து அவ்வருகுபட்ட போதை ஔஜ்ஜ்வல்யத்தாலே
பொல்லா—தொளையாத
என்மணியே—ரத்நம்போலே அவிகல தேஜஸ்ஸை யுடையையாய்க்கொண்டு) எனக்கு தர்ஶநீயனானவனே
தேனே—தேன்போலே ரஸிப்பிக்கும் வடிவில் ஸௌகுமார்யத்தை யுடையவனே
இன் அமுதே—(விரோதி பலத்தை நினைத்து ஸத்தை யழிந்து என்னை) உஜ்ஜீவிப்பிக்கும் அம்ருதமானவனே
என்றென்றே—என்றென்று தனித்தனியே
சில—(பாரமார்த்திக ப்ரேமத்தாலே) சொல்லுவன சில,
கூற்று—பாசுரத்தைக்
சொல்ல—பாவித்துப் பலகாலுஞ்சொல்ல
எம்—எனக்கு
பெருமான்—ஸ்வாமியான
அவன்—அவன்
தானேல்—தான் செய்தபடியாகில்
என்—என் அபிமாநத்துக்குள்ளே
ஆகியொழிந்தான்—ஆம்படியாய் விட்டான்;
வான்—ஆகாசம்
மாநிலம்—பூமிமுதலான பூதபஞ்சகங்களும் தத்கார்யமான லீலாவிபூதியும்

மற்றும்—அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தையுடைய நித்யவிபூதியும்
முற்றும்—எல்லாம்
என்—எனக்கு
உள்ளன—உள்ளே யிருந்து நடத்தும்படி யாயிற்று (உ)

ஆறு;—(போனாய்.) தன்திறத்திலே ப்ரேமகந்தரஹிதனா யிருந்துவைத்து, நிரதிஶயப்ரேமயுக்தர் சொல்லும் பாசுரங்களை நான் சொல்ல, ஸர்வேஶ்வரனான தான், அத்யந்த நிஹீநதரனான என்னுள்ளே ஸபரிகரமாக வந்து புகுந்தருளினா னென்கிறார். (உ)

ஈடு; அவ.—பொய்யேகைம்மைசொல்லி" என்றும், "சிலகூத்துச்சொல்ல" என்றும் சொன்னவார்த்தையை விவரியாநின்றுகொண்டு, இப்படி வாங்மாத்ரத்தாலே உன்னைப்பெற்ற நான் உன்னையொழிய வேறொன்றை ஆசைப்படே னென்கிறார்.

உள்ளனமற்றுளவாப் புறமேசிலமாயஞ்சொல்லி*
வள்ளல்மணிவண்ணனே யென்றென்றேயுன்னையும் வஞ்சிக்கும்*
கள்ளமனந்தவிர்ந்தே யுன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்*
வெள்ளத்தணைக்கிடந்தாயினியுன்னைவிட்டென்கொள்வனே. (ங)

ப:—அநந்தரம், ஸர்வஜ்ஞனான உன்னையும் வஞ்சிக்கும்நெஞ்சில் க்ருத்ரிமஸ்வபாவம் தீர்ந்து காணப்பெற்றேன்; இப்படி உபகாரகனான உன்னையொழிய அபாஶ்ரயமுண்டோ? என்கிறார்.

உள்ளன—அந்தர்க்கதங்கள்
மற்று—உன்னையொழிந்த ப்ராக்ருத விஷயங்களாய்
உளவா—நடக்க,
புறமே—கண்டாதுபரியாம்படி புறம்பே
வள்ளல்—உதாரனானவனே
மணிவண்ணனே — விலக்ஷணவிக்ரஹயுக்தனே
என்றென்று என்றுஎன்று பலகாலும்
சில—சில
மாயம்—மித்யோக்திகளை
சொல்லி—பண்ணி
உன்னையும்—ஸர்வஜ்ஞனான உன்னையும்
வஞ்சிக்கும்—விப்ரலம்பிக்கும்படி
கள்ளம்—க்ருத்ரிமஸ்வபாவமான
மனம்—நெஞ்சு
தவிர்ந்து—தவிர்ந்து
உன்னை—(ஆநுகூல்யபாவனையே பற்றாசாக அங்கீகரிக்கும்)உன்னை
கண்டுகொண்டு—அபரோக்ஷித்து அநுபவிக்கப்பெற்று
உய்ந்தொழிந்தேன்—அஸத்கல்பனான நான் உஜ்ஜீவித்துவிட்டேன்(இப்படிஎன்னைத்திருத்துகைக்காக)
வெள்ளம்—க்ஷீரார்ணவத்திலே

அணைக் கிடந்தாய்—கண்வளர்ந்தருளினவனே
இனி—உன்க்ருஷி பலித்தபின்பு
உன்னை—(நித்யாவஸாப்ரதீக்ஷனாய் நிரதிஶயபோக்யனான) உன்னை
விட்டு—விட்டு
என்-நஶ்வரமாய் துராராதமான எத்தை
கொள்வன்—கைக்கொள்ளுவேன்? (௩)

ஆறு;—(உள்ளன.) அந்தஃகரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்கச்செய்தே, ஸர்வஜ்ஞனான நீயுங்கூட "மெய்" என்றிருக்கும்படி "வளல்மணிவண்ணனே" என்றென்று புறமே சிலமாயஞ்சொல்லி வஞ்சிக்க, நான் இப்போது உன்னுடைய ப்ரஸாதத்தாலே அந்தக்கள்ளம் தவிர்ந்து அக்ருத்ரிமநிரவதிகபக்தியுக்தனாய் உன்னைக் கண்டுகொண்டொழிந்தேன். வெள்ளத்தணைக்கிடந்தாய், இனி நான் ஆத்மாந்தமாக, உன்னையல்லது மற்றொரு ப்ராப்யம் வேண்டேனென்கிறார். (௩)

ஈடு; அவ;—நாலாம் பாட்டு. " 'பொய்யேகைம்மைசொல்லி' என்றும், 'சிலகூத்துச்சொல்ல, என்றும், 'உள்ளனமற்றுளவாப் புறமே சிலமாயஞ்சொல்லி' என்றும்-பகவத்விஷயத்திலேயும் பொய் சொல்லிப்போந்தேனென்றார்; 'இப்படி பொய்யனானைக்கு நிபந்தநமேது' என்றுபார்த்தார்; ப்ரக்ருதி ஸம்ஸர்க்கமாயிருந்தது; மெய்யேபெற்றொழிந்தேன் 'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றவற்றை மறந்தார்; இந்த ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே இதரவிஷயங்களிலே ப்ரவணமான மநஸ்ஸை அவற்றில் நின்றும் மீட்டு உன் பக்கலிலே ப்ரவணமாம்படிபண்ணி, தேஹத்திற்காட்டில் ஆத்மாவைப்பிரிய அநுஸந்திக்கைக்குக்ஷமனாகிறிலேன், நீயே என்விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

அன்றிக்கே, " 'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றார்; அது ஜ்ஞாநாநுஸந்தாநமான காட்சியாயிருந்தது; காட்சிக்கு அநந்தரம் பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து கையைநீட்டினார், கைக்குள் அகப்படக்கண்டிலர், அத்தாலே தளர்ந்து, இதுக்கு அடி-தேஹஸம்பந்தமாயிருந்தது, இத்தைக் கழித்துக்கொள்ளுகைக்கு ஈடாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநக்ஷமனாகிறிலேன் பக்திபாரவஶ்யத்தாலே; ஆனபின்பு நீயே என்விரோதியைப்போக்கி உன்திரு

வடிகளிலே அழைத்துக் கொண்டருளவேணு மென்கிறார்" என்று நிர்வஹிப்பாரு முண்டு. க்ரமத்திலேவரும் பக்தி தமக்கு உண்டாக நினைத்திராரிறே.

என்கொள்வனுன்னைவிட்டென்னும் வாசகங்கள்சொல்லியும்*
வன்கள்வனேன்மனத்தைவலித்துக் கண்ணநீர்கரந்து*
நின்கண்நெருங்கவைத்தே எனதாவியை நீக்ககில்லேன்*
என்கண்மலினமறுத்தென்னைக் கூவியருளாய்கண்ணனே! (ச)

ப:—அநந்தரம், இந்த விப்ரலம்போக்த்யாதிமூலமான தோஷத்தைப் போக்கி அங்கீகரிக்கவேணு மென்கிறார்.

(அநந்யப்ரயோஜநர்சொல்லுமாபோலே) உன்னை — (பரமப்ரயோஜநபூதனான) உன்னை
விட்டு—விட்டு
என்—என்னப்ரயோஜநத்தை
கொள்வன்—கொள்வேன்?
என்னும்—என்கிற
வாசகங்கள்—பாசுரங்களை
சொல்லியும்—பலபடியாகச்சொல்லுவதும்செய்து
வல்—அநாதி ஸித்தமாக ஆத்மாவை அபஹரித்த
கள்வனேன்—க்ருத்ரிமனான நான்
மனத்தை — (விஷயாந்தரங்களிலே போன) நெஞ்சை
வலித்து—வரவலித்து
கண்ணநீர் — (அவற்றின் இழவால் பிறக்கும்) கண்ணநீரையும்
கரந்து — (வாஸநாநிவ்ருத்தியாலே) மாற்றி
மனத்தை—அந்நெஞ்சை
நின்கண்-(நிரதிஶயபோக்யனான) உன்னிடத்திலே
நெருங்கவைத்து—நெருங்கவைத்து
எனது ஆவியை—என் ஆத்மாவை
நீக்ககில்லேன்—ஸம்ஸாரத்தில்நின்றும் விடுவிக்க மாட்டுகிறிலேன் (இதுக்கு ஹேதுவான)
என்கண்—என்னுடைய
மலினம்—அவித்யாதி தோஷத்தை
அறுத்து—போக்கி
என்னை—அஶக்தனான என்னை
கண்ணனே—ஶோகித்தாரை (க) ‘ஶர ஶ வ்ரஜ-மாசுச:’’ என்னும் க்ருஷ்ணனே!
கூவியருளாய்—(உன்பக்கலிலே) அழைத்துக்கொண்டருளவேணும்.
(அன்றியே)
வன்—அநாதிஸித்தமாக
கள்வனேன்—க்ருத்ரிமனான நான்
உன்னை—உன்னை
விட்டு—ஒழிய
என்—வேறு என்னப்ரயோஜநத்தை
கொள்வன்—கொள்வேன்?
என்னும்—என்று
வாசகங்கள் சொல்லியும்—செல்லாமை தோன்றச் சொல்லுவதும்செய்து

(க) கீதை-கஅ-சுசு.

மனத்தை—உன்னைப் பெருமையாலே பரிதிலமாகிற நெஞ்சை
வலித்து—யோகயோக்யமாம்படி சிக்கெனப்பண்ணி
கண்ணநீர் - அநுபவாலாபத்தாலேவந்த கண்ணநீரையும்
கரந்து—மாற்றி, தாரணாகிமுகத்தாலே
நின்கண்—உன் பக்கலிலே
நெருங்க—ஸமாதிபர்யந்தமாம்படி சிக்கென
வைத்து—வைத்து
எனது ஆவியை—என் ஆத்மாவை
நீக்க—உபாஸநமுகத்தாலே முக்தமாம்படி பண்ணிக்கொள்ள
கில்லேன்—மாட்டுகிறிலேன்;
என்கண் மலினமறுத்து என்னைக்கூவியருளாய்—நீயேபண்ணித்தந்தருள வேணுமென்றுமாம். (ச)

ஆறு;—(என்கொள்வன்.)-த்வத்ப்ராப்த்யபேக்ஷை யுண்டாயிருக்கச்செய்தேயும், த்வத்குணாநுஸந்தாநத்தாலே பரிதிலமநஶ்சக்ஷுராதி ஸர்வகரணனாகையாலே, அவற்றை நிலைநிறுத்தித்வதேகப்ரவணமாக்கிவைக்க நான் க்ஷமனாகிறிலேன். ஆனபின்பு, நீயே உன்னுடைய நிரவதிக க்ருபையாலே என்னை இப்போது த்வதிதரஸகலவிஷயவிமுக ஸர்வகரணனாய் த்வதேகதாரகனாய் த்வத்விஶ்லேஷாஸஹிஷ்ணுவாம்படி பண்ணியருளினாய். இனி இந்த ப்ரதிபந்தகத்தையும் போக்கி உன் திருவடிகளிலே என்னை வாங்கியருளாயென்கிறார். (ச)

ஈடு.—அஞ்சாம்பாட்டு நீர் "மலினம்" என்கிறது எத்தையென்ன, இன்னதென்கிறார்.

கண்ணபிரானை விண்ணோர்கருமாணிக்கத்தையமுதை*
நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு*
திண்ணமழுந்தக்கட்டிப் பலசெய்வினை வன்கயிற்றால்*
புண்ணைமறையவரிந்தென்னைப் போரவைத்தாய்புறமே. (ரு)

ப:—அநந்தரம், கீழ் தோஷரூபமாகச்சொன்ன ப்ராக்ருதாதிகளிலே பந்தித்தாய் நீயன்றோவென்று, நிவர்த்யம் அவனுக்கு விதேயமானபடியை அருளிச்செய்கிறார்.

கண்ணன்—கிருஷ்ணனாய் அவதரித்து
பிரானை—(க) "ஏகமேவ ஶரணம் வ்ரஜ - மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்று உபாயோபதேஶத்தைப்பண்ணி உபகரித்து (ஆஶ்ரயித்தவர்களை)
விண்ணோர்—நித்யஸூரிகளுக்கு தாரகமானயமான

(க) கீதை - கஅ சுசு.

கருமாணிக்கத்தை — விலக்ஷணவிக்ரஹத்தை அநுபவிப்பித்து
அமுதை—நித்யபோக்யமான உன்னை
நண்ணியும்—நீ தந்த ஜ்ஞாநமுகத்தாலே கிட்டியிருக்கச்செய்தேயும் (போகாலாபத்தாலே)
நண்ணகில்லேன் — கிட்டாதார்கணக்கானேன்; அதுக்கடி)
நடுவே — நிர்வாணமயனான ஆத்மாவோடும் ஸ்வதஸ்ஸம்பந்தமற்று ஹேயப்ரத்யநீகனான உன்னோடும் துவக்கற்று இருவரையும் அகற்றுகைக்கு) நடுவேபுகுந்து
ஓர்—ஓர்
உடம்பில்—உடம்பிலே
இட்டு—ஸம்ஸர்க்கிப்பித்து,
பல—பலவகையாய்,
செய்—காயிகபர்யந்தமாக அநுஷ்டிதமான
வினை—கர்மங்களாகிற
வல் கயிற்றால்—ப்ரபல பாஶங்களாலே
திண்ணம்—த்ருடமாம்படி
அழுந்த—துர்விவேசமாக
கட்டி—கட்டி
புண்ணை—ஆந்தரதோஷத்தை
மறைய—காணவொண்ணாதபடி
வரிந்து—நிரந்தரமாகச் சூழ்ந்து
என்னை—(இக்கட்டு அவிழ்க்கைக்கு அஶக்தனாய் அப்ராப்தனான) என்னை
புறமே—உனக்குப்புறம்பான விஷய ப்ரசுர ஸம்ஸாரத்திலே
போர—போர
வைத்தாய் — இட்டுவைத்தாய்;
நீ நினைத்தால் விடுவிக்கலாமென்று கருத்து. (௫)

ஆறு;—(கண்ணபிரானை.) ஸ்ரீவைகுண்டநிலயனாய் * அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து ஸர்வபோக்யனும்படிவந்து வஸுதேவக்ருஹே அவதீர்ணனான உன்னைக் கண்டுவைத்தும் உன் திருவடிகளை ப்ராபிக்கப்பெறுகிறிலேன். ஏன்றானென்னில்; நடுவேயோருடம்பிலிட்டுப் பலசெய்வினைவன்கயிற்றால் திண்ணமழுந்தக் கட்டிப் புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய் புறமே, அதினாலே யென்கிறார். (௫)

ஈடு;—அவ;—ஆறும்பாட்டு. "போரவைத்தாய்புறமே" என்று இவர் நொந்தவாறே, 'இவருடைய இழவை மறப்பித்து உளராக்கி நடத்தவேணும்" என்றுபார்த்துத் தன்வடிவழகைக்காட்ட, அவ்வடிவழகைக் கண்டவாறே தம் உடம்பை மறந்து ப்ரீதராய், கண்டுகொண்டேனென்கிறார். இவரை மெய்ம்மறக்கப் பண்ணிற்று அவன் வடிவு.

புறமறக்கட்டிக்கொண்டிரு வல்வினையார்குமைக்கும்*
முறைமுறையாக்கை புகலொழியக் கண்டுகொண்டொழிந்தேன்*
நிறமுடைநால்தடந்தோள் செய்யவாய்செய்யதாமரைக்கண்*
அறமுயலாழியங்கைக் கருமேனியம்மான் தன்னையே. (சு)

ப:—அநந்தரம் இத்தோஷத்தோடே யிருக்கச்செய்தே அது நெஞ்சிற் படாதபடி அவன் ப்ரகாஶிப்பித்த விலக்ஷண விக்ரஹத்தை அநுபவிக்கப் பெற்றே னென்கிறார்.

புறம்—புறம்புஒருதலை
அற—தெரியாதபடி
கட்டிக்கொண்டு-பந்தித்துக்கொண்டு
இரு — (புண்யபாபரூபமான இருவகையையுடைய
வல்—ப்ரபலமான
வினையார்—கர்மத்தினுர்
குமைக்கும்—பீடிக்கைக்குஸ்தலமாய்
முறைமுறை — தேவாதிக்ரமவிஶிஷ்டமான
ஆக்கை—ஶரீரத்திலே
புகல்-பஹுப்ரகாரமான ப்ரவேஶத்தை
ஒழிய—தவிரும்படியாக
நிறம்—தர்ஶநீயமான வேஷத்தை
உடை—உடைத்தாய்
நால்—நாலுவகையாய்
தடம்—சுற்றுடைத்தான
தோள்—தோள்களையும்
செய்ய—சிவந்த
வாய்—
செய்ய—சிவந்த
தாமரை—தாமரைப்போன்ற
கண்—கண்களையும்
அறம்—ரக்ஷண தர்மத்தில்
முயல்—உத்யுக்தமான
ஆழி — திருவாழியை யுடைத்தாகையாலே
அம்—பேரழகுடைய
கை—திருக்கையையு முடைத்தாய்
கரு—ஶ்யாமளமான
மேனி—வடிவையுடைய
அம்மான் தன்னை—ஶேஷியானவனை
கண்டுகொண்டொழிந்தேன் — என் இழவெல்லாம் தீரும்படி அபரோக்ஷித்து அநுபவித்து விட்டேன்;
ஆந்தரமான விக்ரஹாநுபவ ப்ரீதி "இனி ஶரீரஸம்பந்தம் நமக்கில்லை" என்கிற ப்ரதிபத்தியைப் பிறப்பித்த [illegible]; (சு)

ஆறு:—(புறமற.) தம்முடைய இந்த தேஹஸம்பந்த ப்ரதிபந்தகம் போயிற்றதென்று தோற்றும்படி தமக்கு எம்பெருமான் தன்னையுள்ளபடியே காட்டியருள, அப்படியேகண்டு ப்ரீதராய் அந்த ப்ரீத்யதிஶயத்தாலே தாம் கண்டபடியைப் பேசுகிறார். (சு)

ஈடு:—ஏழாம்பாட்டு. அவன் க்ருபையாலே தாம் பெற்றபேற்றைக்கண்டு விஸ்மிதராய், பகவத்க்ருபை நடையாடாநிற்க, சிலர்க்கு "நான் அயோக்யன்" என்று இழக்க வேண்டாகிடீகோளென்கிறார்.

அம்மானாழிப்பிரா னவனெவ்விடத்தான்யானார்*
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்*
கைம்மாதுன்பொழித்தாயென்று கைதலைபூசலிட்டே*
மெய்ம்மாலாயொழிந்தேனெம்பிரானுமென்மேலானே. (எ

ப:—அநந்தரம் தன்க்ருபாதிஶயத்தாலே, எத்தனையேனும் நிக்ருஷ்டர்க்கும் ஸ்வவிஷயத்தில் ஆசையைப்பிறப்பித்துத் தானும் விரும்புமென்று, ஸ்வலாபமுகத்தாலே அருளிச்செய்கிறார்.

ஆழி—கையுந்திருவாழியுமாய்
பிரான்—ஆஶ்ரிதரை அநுபவிப்பிக்கும் மஹோபகாரகனான
அம்மான்—நிருபாதிக ஸ்வாமியான
அவன்—அவன்
எவ்விடத்தான்—(அபரிச்சிந்ந ஜ்ஞாநரான ஸூரிகளும் அளவிட்டு அநுபவிக்கவொண்ணாதபடி) எந்நிலத்திலே நிற்கிறான்?
யான்—(இவ்விஷயத்திலே க்ருத்ரிமோக்த்யாதிகளைப்பண்ணும் நிக்ருஷ்டனான) நான்
ஆர்—எவ்வளவாயிருப்பானொருவன்? (இப்படியிருக்க)
கைம்மா—(உன்திருவடிகளிலே ஆராதநத்திலே உத்யுக்தமான) ஆனையினுடைய ஜந்மாத்யபகர்ஷம் பாராதே
துன்பு—க்லேஶத்தை
ஒழித்தாய்—போக்கினவனே!
என்று—என்று
கை—கை
தலை—தலையிலேயாம்படி
பூசலிட்டே—ப்ரஸித்தமாகக் கூப்பிட்டே
மெய்ம்மால்—பாரமார்த்திக ப்ரேமத்தையுடையேன்
ஆயொழிந்தேன்—ஆய்விட்டேன்;
எம்—என்தண்மைபாராதே இப்படித் திருத்தின
பிரான்—உபகாரகனானவனும்
என்மேலான்—என்பக்கலிலே அபிநிவிஷ்டனானான்:
(ஆதலால்)
எ—எத்தனையேனும்
மா பாவியர்க்கும்—மஹா பாபிகளாயிருப்பார்க்கும்
விதி—தப்பவொண்ணாத பகவத்க்ருபாருபவிதியானது
வாய்க்கின்று—பலோந்முகமாமளவில்
வாய்க்குங்கண்டீர்—பலித்தேவிடுங்கிடீகோள். (எ)

ஆறு;—(அம்மான்.) ஸர்வப்ரகாரத்தாலும் அத்யந்தநிஹீநனாய் கைம்மாதுன்பொழித்தாயென்று பொய்யே தொழுது அலற்றுகை

யாகிற ப்ராதிகூல்யயுக்தனுமா யிருந்த என்னை, ஸர்வப்ரகாரேணாபி நிரஸ்தஸமாப்யதிகனாயிருந்ததான் தன்னுடைய நிரவதிககாருண்யத்தாலே ஸ்வவிஷய நிரதிஶயா க்ருத்ரிமபக்தியுக்தனாக்கித்தானும் நிரதிஶயாபிநிவேஶயுக்தனாய்க் கொண்டு என்னுள்ளேவந்து புகுந்தருளினா னென்கிறார். (எ)

ஈடு;—எட்டாம்பாட்டு. உபயவிபூதிநாதனானவன் என்பக்கலிலே மேல்விழுந்து என்னைவிடாதே ஹ்ருதயத்திலே புகுந்திருந்தான்; நானும் இனி நித்யஸூரிகளைப்போலே நித்யஸம்ஸாரத்தை விட்டு, அவனையே எல்லாவுறவுமுறையுமாகப் பற்றப் பார்த்தே னென்கிறார்.

மேலாத்தேவர்களும் நிலத்தேவரும்மேவித்தொழும் *
மாலார்வந்தினநாளடியேன்மனத்தேமன்னினார் *
சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வ மும்நன்மக்களும் *
மேலாத்தாய்தந்தையுமவரே யினியாவாரே. (அ)

ப:—அநந்தரம், உபயவிபூதிநாதனான மேன்மையையுடையவன் என் நெஞ்சில் வந்துபுகுந்து தன் ஸர்வவிதபந்துத்வத்தையும் அநுபவிப்பியாநின்றான் என்கிறார்.

மேலாம் — ஸர்வப்ரகாரோத்க்ருஷ்டரான
தேவர்களும் — ஸூரிகளும்
நிலம் — இவ்விபூதியில்
தேவரும் — பகவத்ஜ்ஞாநப்ரேமாதிகளாலே உஜ்ஜ்வலஸ்வபாவரான பாகவதரும்
மேவி — அநந்யப்ரயோஜநத்வாதிகளாலே ஒருநீராகப்பொருந்தி
தொழும் — அநுபவிக்கும்படியான
மாலார் — ஸர்வாதிகரானவர் (தம்முடைய மேன்மைநிற்கச்செய்தே)
இனநாள் — இப்போது
வந்து — என்பக்கலிலே அபிமுகராய் வந்து
அடியேன் — ஸர்வகாலமும் தமக்கு ஶேஷபூதனான என்னுடைய ஸம்பந்தமே பற்றாசாக
மனத்தே — நெஞ்சுக்குள்ளே
மன்னினார் — ப்ரதிஷ்டிதரானார்;
இனி — இனிமேற்பட்டு (ஔபாதிகபந்துக்கள்போலன்றியே)
சேலேய்கண்ணியரும் — விலக்ஷணத்ருஷ்டிகளான ஸ்த்ரீகளும்
பெரும் — அதிஶயிதமான
செல்வமும் — ஐஶ்வர்யமும்
நல் — குணாதிகரான
மக்களும் — புத்ரர்களும் பட்ட
மேலாம் — ப்ரியஹிதங்களால் மேற்

தாய் தந்தையும்—மாதாபிதாக்களும்	இவ்வோவிஷய ஸித்திகளாற்பிறக்கும்
அவரே—அவரே.	ப்ரீதி தம்மை அநுபவித்துப்பிற
ஆவார்—ஆகிநிற்பர்;	க்கும்படி யாகாநின்றாரென்று
	கருத்து (அ)

ஆறு;—(மேலாத்தேவர்களும்) நித்ய ஸித்த புருஷர்களாலும், கர்மபூமியிலே வர்த்தமாநராய் ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டராயிருந்து வைத்து ஸ்வாநுபவைகபோகாான திவ்யபுருஷர்களாலும் அபிவந்த்யமாநனான எம்பெருமான் இனநாள் அடியேன்மனத்தே மன்னினான் இனி ஸர்வகாலமும் எனக்கு, சேலேய்கண்ணியரும் பெரும் செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும் மற்றுமெல்லாம் ஆவான் அவன் என்கிறார். (அ)

ஈடு;—ஒன்பதாம்பாட்டு. பலசொல்லியென்? நான் ஸம்ஸாரத்தில் பட்ட க்லேஶமெல்லாந் தீரும்படி தன்க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தானென்கிறார்.

ஆவாரார்துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போல்* பிறவிக்கடலுள் நின்றுநான்துளங்க*
தேவார்கோலத்தொடும் திருச்சக்கரம்சங்கினொடும்*
ஆவாவென்றருள்செய்தடியேனொடுமானானே. (கூ)

ப:—அநந்தரம், இப்படி ஸர்வவித பந்துவானவன் தன் அஸாதாரணவிக்ரஹத்தோடேகூட என்னோடே கலந்தா னென்கிறார்.

துணை—துணை	ஆர்—பூர்ணமான
ஆவார்—ஆவார்	கோலத்தொடும்—வடிவோடும்
ஆர்—ஆர்	திருச்சக்கரம் சங்கினொடும்—அவ்வடிவுக்கு ஸோபாவஹமான திவ்யாயுதங்களோடுங்கூட
என்று—என்று சொல்லி	ஆஆ என்று—ஐயோ ஐயோ என்று
அலை—அலைகிற	அருள்செய்து—க்ருபைபண்ணி
நீர்—நீரையுடைத்தான	அடியேனொடும் - தன்னுடைமையானவென்னுடனே
கடலுள்—கடலிலே	ஆனான்—கூடினான்.
அழுந்தும்—அழுந்துகிற	கீழ் "விதி" என்று சொல்லிப்போந்தத்தை இங்கே "அருள்" என்று வெளியாக்கினாராயிற்று.
நாவாய்போல்—நாவாய்போலே	தேவு—அழகு; திவ்யமாய் அப்ராக்ருதமென்றபடி (க)
பிறவிக்கடலுள்—ஸம்ஸாரஸமுத்ரமத்யத்திலே	
நின்று—நின்று	
நான் — (கரையேறிக்கொள்ள மாட்டாத) நான்	
துளங்க—நடுங்க (அவ்விழவிலே)	
தேவு—திவ்ய ஸௌந்தர்யாதிகளாலே	

ஆறா;—(ஆவாரார்) ஆவாரார்துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள்ளே அதிதயநீயனாம்படி நின்று நான்நடுங்க, எம்பெருமான் தன்னுடைய நிரவதிக காருண்யத்தாலே யாவாவென்று அருள்செய்து தன்னுடைய ஸர்வலோகேஶ்வரத்வ ஸூசகமான நிரவதிகஸௌந்தர்யத்தோடும் திருவாழி திருச்சங்கு தொடக்கமாகவுள்ள திவ்யாயுதங்களோடுங் கூட வந்து, அவர்களோடு கலந்தருளுமாபோலே அடியேனோடும் கலந்தருளினானென்கிறார். (௯)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. அவன் தன் க்ருபையாலே ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்தை யறுத்துத் தன்பக்கலிலே ருசியைப்பிறப்பித்த மஹோபகாரத்தையநுஸந்தித்த க்ருதஜ்ஞதையே பற்றாசாக வந்து, என்னோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப் பண்ணினானென்கிறார்.

ஆனானாளுடையானென்றஃதேகொண்டுகந்துவந்து*
தானேயின்னருள்செய்தென்னை முற்றவுந்தானானான்*
மீனாயாமையுமாய் நரசிங்க முமாய்க்குறளாய்*
கானாரேனமுமாய்க் கற்கியாமின்னங்கார்வண்ணனே. (௧௦)

ப:—அநந்தரம், இப்படி அஸாதாரணவிக்ரஹ விஶிஷ்டனானவன் தன்னுடைய ஸர்வாவதாரங்களையும் அநுபவிப்பித்துக்கொண்டு என்பக்கலிலே கலந்தானென்கிறார்.

(ஜகத்ரக்ஷணார்த்தமாக)
மீன் ஆய்—மத்ஸ்யமும்
ஆமையும்ஆய்—கூர்மமும்
நரசிங்கமும்ஆய்—நரஸிம்ஹமும்
குறளாய்—வாமனமும்
கானாரேனமும்—வநவராஹமும்
ஆய்—ஆய்
இன்னம்—இன்னமும்
கற்கி—கல்கியும்
ஆம்—ஆவதான
கார்—காளமேகம் போலே ஶ்யாமளமான
வண்ணன்—அஸாதாரண விக்ரஹத்தை யுடையவன் (என்னை)
ஆள்—அடிமையாக
உடையான்—உடையன்
ஆனான்—ஆனான்;
என்று—என்கிற
அஃதே—அந்த உக்திமாத்ரமே;
கொண்டு—பற்றாசாகக்கொண்டு
உகந்து—அதிப்ரீதனாய்
வந்து—வந்து
தானே—அபேக்ஷா நிரபேக்ஷமாகத் [தானே
இன்—நிரதிஶயபோக்யையான

அருள்—க்ருபையை
செய்து—பண்ணி
என்னை—என்னைப்பற்ற
தான்—தான்
முற்றவும் — ஸகலாவதார விஶிஷ்டனாய்க்கொண்டு
ஆனான்—ஸம்ஶ்லேஷித்தான்
அவ்வவதாரவைலக்ஷண்யங்களை யநுபவிப்பித்தானென்று கருத்து (க0)

ஆறு;—(ஆனானுடையானென்று.) தான் என்னோடே பண்ணின ஸம்ஶ்லேஷத்தை அநுஸந்தித்தவித்தனையுமேகொண்டு உகந்துவந்து தானே இன்னருள்செய்து, இதுக்கு முன்பு என்னோடு ஒன்றும் ஸம்ஶ்லேஷியாதானாய்க்கொண்டு என்னை வேறுபடக்காணவொண்ணாத தொருபடி ஸம்ஶ்லேஷித்து, இதுக்குமுன்பு தான் பண்ணியருளின ஸர்வதிவ்யாவதாரங்களையும் எனக்குபோக்யமாகக் காட்டியருளினான்; ஆதலால், இதற்குமுன்பு தான்பண்ணியருளின இந்தத் திருவவதாரங்களெல்லாம் என்பக்கலுள்ள அபிநிவேஶத்தாலே; வேறுமெனக்காகப்பண்ண எண்ணினதுக்கும்முடிவுண்டோ வென்கிறார். (க0)

ஈடு; அவ;—நிகமத்தில்-இப்பத்தை அப்யஸிக்கவல்லார், நிரவதிக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையராய் அவன் திருவடிக்கீழே புகப்பெறுவரென்கிறார்.

கார்வண்ணன் கண்ணபிரான் கமலத்தடங்கண்ணன்தன்னை*
ஏர்வளவொண்கழனிக் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
சீர்வண்ணவொண் தமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்*
ஆர்வண்ணத்தாலுரைப்பாரடிக் கீழ்ப்புகுவார்பொலிந்தே. (கக)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ப:— அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஆவிர்ப்பூதஸ்வரூபகுண ஸம்பத்விஶிஷ்டராய்க்கொண்டு க்ருஷ்ணன் திருவடிகளை ப்ராபிப்பர்களென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

கண்ணன்-க்ருஷ்ணனாய்வந்தவதரித்த
பிரான்—மஹோபகாரகனாய் (ஆஶ்ரிதர்க்குஉபகரிக்கும்
கார்-காளமேகம் போலேஶ்யாமளமான
வண்ணன்—வடிவையும்
கமலம்—தாமரைபோலே
தடம்—பெருத்த
கண்ணன்தன்னை—கண்களையுமுடையவனை
ஏர்—ஏர்களின்
வளம்—மிகுதியையுடைத்தாய்
ஒண்—ஶ்லாக்யமான
கழனி—கழனியை யுடைத்தான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான

சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
சீர்—சீரும்
வண்ணம்—சந்தமுமுடைத்தாய்
ஒண்—அர்த்த ப்ரகாசகமாகையாலே நலல்
தமிழ்கள்—த்ராமிடரூபமாயிருக்கிற
இவை—இவை
ஆயிரத்துள் — ஆயிரந்திருவாய்மொழியிலும்
இப்பத்தும்—இப்பத்தையும்
ஆர்வணத்தால்—(க)"க்ஷவ பாய யஷி- கவயோத யந்தி" என்கிற படியே) அம்ருத பாநம் பண்ணுவாரைப்போலே
உரைப்பார்—சொல்ல வல்லவார்கள்
பொலிந்து—ஆவிர்ப்பூதமான ஸ்வரூப குணப்ரவ்ருத்திகளை யுடையராய்க்கொண்டு
அடிக்கீழ்—அந்த க்ருஷ்ணன் திருவடிகளை
புகுவார்—ப்ராபிப்பர்கள்.
ஆர்வணத்தா லுரைப்பாரென்று—ஸ்வச்சந்தத்தாலே உரைக்குமவர்களார், அவர்கள் அடிக்கீழ்ப்புகுவார்க ளென்றுமாம்.
இது—கலித்துறை. (கக)

ஆறு;—(கார்வண்ணன்.) *நீலமேகநிபனாய் புண்டரீகதளாமலாயதேக்ஷணனாய் ஆஶ்ரிதஸுலபனான எம்பெருமானைச் சொன்ன இத்திருவாய்மொழியை ஆர்வணத்தாலுரைப்பார் பகவச்சேஷைகரதிகளாய்க் கொண்டு அவன் திருவடிகளின்கீழே புகப்பெறுவரென்கிறார். (கக)

அஞ்சாம்பத்து முதல் திருவாய்மொழி
வ்யாக்யாநம் முற்றிற்று.

(க) ஶ்ரீகுண-எ.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இரண்டாந்திருவாய்மொழி — பொலிகபொலிக ப்ரவேசம்.

ஆறு;— *ஒன்றுந்தேவில் தம்முடைய உபதேசத்தாலே வைஷ்ணவீக்ருதரான ஜநங்களைக் கண்டு நிரதிஶயஹர்ஷயுக்தராய், அந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே அவர்களைத் திருப்பல்லாண்டு பாடுகிறார். *

ப:— இரண்டாந் திருவாய்மொழியில், கீழே-பகவத்க்ருபாபாரவஶ்யத்தை அநுஸந்தித்து ஸந்துஷ்டரான ஆழ்வாருடைய ப்ரீதியை அநுபவிக்கைக்கு, பகவத்குணாநுபவவித்தராய் ஸூரிஸமரான பாகவதர்கள் ஸம்ஸாரத்தில் துரிதமெல்லாம் நீங்கும்படி ப்ரேமபரவஶராய்த் திரண்டுவந்தபடியைக் கண்டு, "ஈஶ்வரன் இவர்களையிட்டு ஜகத்தைத் திருத்த நினைத்தானாகக்கூடும்" என்று திருவுள்ளம்பற்றி; அவனுடைய நிரதிஶயமாஹாத்ம்யத்தையும், மாஹாத்ம்யப்ரகாஶகமான ஶ்ரிய:பதித்வாதி சிஹ்நத்தையும், ஆஶ்ரிதோபகாரகமான விக்ரஹாதியோகத்தையும், உபகாரார்த்தமான ஸமுத்ரஶாயித்வத்தையும், அதுக்குமடியான ஸ்ரீவைகுண்டவாஸத்தையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான ஆயுதவத்தையையும், அவதாரதசையிலுண்டான அதிஶயிதாதிக்யத்தையும், ஆதிக்யலக்ஷணமான ஸ்ரீவத்ஸசிஹ்நத்தையும், ஆஶ்ரிதவிஷயத்தில் அப்ரச்யுதஸ்வபாவத்தையும், அதிஶயிதஶீலவத்தையையு மநுஸந்தித்து, 'இவ்வோ ஸ்வபாவங்களில் வித்தரான பாகவதர் இங்கே ஸந்நிஹிதராகப்பெறுவதே!" என்று ஹ்ருஷ்டராய் மங்களாஶாஸநம்பண்ணி, இவர்களை யநுவர்த்தித்து ஶாந்தஸ்வபாவராய் இவர்களோடொக்க நீங்களும் பகவத்விஷயத்தை யநுபவிக்கப் பாருங்கோளென்று லௌகிகரைக்குறித்து உபதேஶித்தருளுகிறார். *

ஈடு அவ;— இத்திருவாய்மொழியை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி —" ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைக் காண்கைக்காக நித்யஸூரிகள் இங்கேவர, அவர்களைக்கண்டு மங்களாஶாஸநம்பண்ணுகிறார்" என்று. *"நண்ணாதார் முறுவலிப்பவிலே-ஸம்ஸாரிகள் படுகிற க்லேஶத்தையநுஸந்தித்து, அதுக்குப் பரிஹாரமாக, *ஒன்றுந்தேவிலே-பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்த, அத்தாலே திருந்தி ஸம்ஸார பரமபதவிபாகமற்று அங்குள்ளாரும் இங்கே வரலாம்படியிருக்கிற இருப்பைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்" என்று, இங்

குள்ளார் பக்கலிலே ப்ராதாந்யந்தோற்ற எம்பெருமானார் அருளிச்செய்யும்படி.

தாம் பகவத்பாரத்வத்தை உபபாதிக்க, அத்தாலேதிருந்தின ஸாத்விகரடைய விஸ்த்ருதராயிருக்கிறபடியையும், ராஜஸராயும் தாமஸராயு முள்ளார் அநவதாநத்தாலும் அஜ்ஞாநத்தாலும் ஸங்குசிதராயிருக்கிறபடியையும், ஸாத்விகர் பரிக்ரஹித்ததாகையாலே உத்தமதர்மமான வைஷ்ணவதர்மமே ப்ரஸித்தமாய்ப் போருகிற படியையும், அதுக்கு விருத்ததர்மங்கள் அபிபூதமாய்ப் போருகிற படியையும், தேசகாலங்கள் அதிகாரிகள் அங்கங்கள் என்கிற வற்றுக் குண்டான நன்மைகள், (க) "ஸமெவ-ஷாம் கிரயமச-ராணா ச-நதுெசாெவஷ-ணெவாவிபிஃ- ஸர்வேஷாம்கிலதர்மாணாமுத்தமோ வைஷ்ணவோவிதிஃ" என்கிறபடியே - பகவத்ஸ்பர்ஶத்தாலேயாயிருக்கிறபடியையும், அது இல்லையாகில் எல்லாநன்மைகளு முண்டாலும் அவையடையத் தண்ணிதாயிருக்கிறபடியையும் சொல்லி, தம்மாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளிலே விழுந்தும், திருந்துகைக்கு யோக்யதையுடையாரைத் திருத்தியும், திருந்தாதாரை உபேக்ஷித்தும், இப்படி பாகவத ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

ஈடு; அவ;—முதற்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

பொலிகபொலிகபொலிக போயிற்றுவல்லுயிர்ச்சாபம்*
நலியும்நரகமுந்நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை*
கலியுங்கெடுங்கண்டுகொண்மின்கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்*
மலியப்புகுந்திசைபாடி ஆடியுழிதரக்கண்டோம். (க)

முதற்பாட்டில், நிரவதிக மாஹாத்ம்யயுக்தனான ஸர்வேஶ்வரனாலே லப்தஸத்தாகரான பாகவதருடைய ஸம்ருத்தியைக் கண்டு மங்களாஶாஸநம்பண்ணுகிறார்.

கடல்—ரத்நாகரமாய்தர்ஶநீயமானகடல் போலே	த்மயனான ஸர்வேஶ்வரனாலே
வண்ணன் — குணவைலக்ஷண்யத்தாலும் ரூபவைலக்ஷண்யத்தாலும்அபரிச்சிந்நமாஹா	பூதங்கள் - (லப்தஸ்வருபஸத்தாகரான) பாகவதரானவர்கள்

(க) பாரத-மோக்ஷ-௮-

மண்மேல் — (பகவத் குணங்களுக்கு மேட்டுமடையான) பூமியிலே
மலிய—ஸம்ருத்தமாம்படி
புகுந்து—வந்துபுகுந்து (பகவத்குணங்களை)
இசை—இசையிலே
பாடி—பாடி
ஆடி—(ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி
உழிதர—எங்கும்வ்யாபிக்க
கண்டோம்—கண்டோம்; (ஆதலால்)
வல்லுயிர்ச்சாபம்—ஆத்மாவுக்கு வந்தேறியாய் அநுபவவிநாஶ்யமாய் ப்ரபலமான அவித்யாதிரூபமானசாபமானது
போயிற்று—நசித்துப்போயிற்று; (அவித்யாகர்மாதிகள் போகையாலே)
நலியும்—தத்பலமாய் நலியும்
நரகமும்—நரகங்களும்
நைந்த—சிதிலமாயிற்றின; (ஆதலால்)
நமனுக்கு — தந்நிர்வாஹகனான யமனுக்கு
இங்கு—இந்தவிபூதியில்,
யாது — நிர்வாஹ்யமாயிருப்பதேதேனும்
ஒன்றும்—ஒரு அம்சமும்
இல்லை—இல்லை,
கலியும் — இதுக்கெல்லாம் அடியான காலதோஷமும்
கெடும்—நசியாநிற்கும்
கண்டுகொண்மின்—இது(க) "கூருதயஜம்ஸகலே-கலௌக்ருதயுகம்தஸ்ய" என்கிறபடியே கார்த்தயுகதர்மவ்ருத்திகளான பாகவதஸந்நிதியாலே வந்தது" என்னுமிடம் ப்ரத்யக்ஷித்துக் கொள்ளுங்கோள்
பொலிக பொலிகபொலிக—இது ஸம்ருத்தமாகவேணும்·
த்ரிராவ்ருத்தி—(உ)"ஶாந்தி ஶாந்தி ஶாந்தி:-ஶாந்தி ஶ்ஶாந்தி ஶ்ஶாந்தி:" என்கிற ஶ்ருதிச் சாயையாலே. பூதஸப்தம் கபும்ஸகமாகையாலே அஃறிணை. (க)

ஆறு; —(பொலிக.) ஸர்வாத்மாக்களுடைய ஸர்வபாபங்களும் போய், தத்பல பூமியான நரகங்களும் தத்பல யாதநாரஹிதங்களாய், தத்பலாநுபவப்ரயோஜகனான யமனும் ஸ்வகர்த்தவ்யரஹிதனாய், இனிமேலும் ரௌரவாதிநரகயாதநாஸ்பதமான அவைஷ்ணவ ஜந்துக்கள் உளவாகாதபடியாகவும், எம்பெருமானுடைய அபரிமித காரீர்யௌதார்யாதி கல்யாணகுணாநுபவ லப்தஸத்தாகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்தஜகத்தெல்லாம் நிறையும்படி வந்து புகுந்து, எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணவிபவ சேஷ்டிதங்களைப் பாடி யாடி வர்த்திக்கக் காணப்பெற்றோம்; இந்த ஸம்ருத்தி நித்யஸித்தையாகவேணுமென்கிறார். (க)

(க) விஷ்ணுதர்மம்-கoக-ருள. (உ) தை-ஶீ

ஈடு அவ;—இரண்டாம் பாட்டு. இவ்வைஷ்ணவ ஸம்ருத்தியை அநுபவிக்கைக்கு அநுகூலரெல்லாரும் வாருங்கோளென்கிறார்.

கண்டோங்கண்டோங்கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்*
தொண்டீரெல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்*
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள்மண்மேல்*
பண்தான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே. (௨)

ப:—அநந்தரம், பாத்வப்ரகாஶகமான ஶ்ரிய:பதித்வாதிகளையுடைய ஸர்வேஶ்வரன்குணங்களிலே வித்தரான பாகவதரைக் கண்டுகந்து, மங்களாஶாஸநம்பண்ண வாருங்கோளென்று அநுகூலவர்க்கத்தைக் கூட்டிக்கொள்ளுகிறார்.

வண்டு—வண்டுகளாலே
ஆர்—பூர்ணமாய்
தண் அம்—செவ்வியையுடைத்தான
துழாயான் — திருத்துழாய்மாலையையுடையனாய்
மா—அவ்வழகையநுபவிக்கிற லக்ஷ்மிக்கு
தவன் — வல்லபனான ஸர்வேஶ்வரனுக்கு
பூதங்கள்—ஶேஷபூதரானவர்கள்
மண்மேல்—(இந்தபோக்யதைக்கு நிலவரில்லாத) பூமியின்மேல் (அநுபவபரவஶராய்க்கொண்டு)
பண்தான்—பண்மிகும்படி
நின்று—நின்று
பாடி—பாடி
ஆடி—(ப்ரேமபார வஶ்யத்தாலே) ஆடி
பரந்து—எங்கும்பரந்து
திரிகின்றன—வ்யாபரியாநின்றார்கள்;
கண்ணுக்கு—நம்கண்ணுக்கு
இனியன—போக்யமானஸம்ருத்திகளை
கண்டோம்—காணப்பெற்றோம்.
கண்டோம் கண்டோம் கண்டோம்—ஒருகால்கண்டு விடுகையன்றியே, (க) "ஹாவு ஹாவு ஹாவு–அஹமந்நாத:" என்று த்ரிராவ்ருத்தி போலே நிரந்தராநுபவம் பண்ணப்பெற்றோம்.
தொழுதுதொழுது—இந்தப்ரீதிபரவஶராய்க்கொண்டு நிரந்தராநுவ்ருத்திபண்ணி
நின்று—நின்று
ஆர்த்தும் — ஸஹர்ஷகோலாஹலம் பண்ணுவோம்;
தொண்டீர்—பகவத்பாகவத விஷயத்தில் அநுகூலரானவர்களே! (இப்போகத்தையிழவாதே)
எல்லீரும்—எல்லாரும்
வாரீர்—வாருங்கோள். (௨)

ஆறு;—(கண்டோம்.) கண்டோம் கண்டோம் கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம், தொண்டீரெல்லீரும்வாரீர், தொழுது தொழுது நின்றார்த்தும். அது என்? என்னில்:—வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள் மண்மேல் பண்தான்பாடி நின்றாடிப் பரந்து திரிகின்றனவென்கிறார். (௨)

(க) தை-ப்ருகு-௰.

ஈடு; அவ:—மூன்றும்பாட்டு. நித்யஸூரிகளுக்கும் புகுந்து பரிமாறலாம்படி ஸம்ஸாரமடைய ஸ்ரீவைஷ்ணவர்களே யாயிற்றுஎன்கிறார். (௩)

திரியுங்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து*
பெரியகிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம் பெருக*
கரியமுகில்வண்ணனெம்மான் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல் *
இரியப்புகுந்திசைபாடி எங்குமிடங்கொண்டனவே. (௩)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதார்த்தமான வடிவையுடையனான ஸர்வேஸ்வரனுடைய ஸௌந்தர்யாதிகளில் வித்தரான பாகவதர், இந்தவிபூதி ஸூரிகளுக்கும் நிலமாம்படி ஸர்வப்ரதேசத்திலும் அவஷ்டம்பித்தார்க ளென்கிறார்

திரியும்—சேதநருடைய ஸ்வபாவங்கள் அதரோத்தரமாம்படியான	முகில் — மேகம்போலே அநுபாவ்யமான
கலியுகம்—கலியுகம்	வண்ணன்—வடிவை யுடையனாய்க்கொண்டு
நீங்கி—கடக்கப்போய்	எம்மான்—எனக்கு ஸ்வாமியாய்
தேவர்கள்— (அஸ்கலிதஜ்ஞாநௌஜ்ஜ்வல்யத்தையுடைய) ஸூரிகளும்	கடல்வண்ணன் -அநவதிககுண ஸாகரனை ஸர்வேஸ்வரனுடைய
தாமும்—ஸ்வயமேவ	பூதங்கள் — ஸ்வபாவங்களிலே வித்தரான பாகவதர்
புகுந்து—ப்ரவேஸித்து	மண்மேல்—இப்பூமியிலே
பெரிய — (யுகாந்தரவிச்சேதமில்லாதபடி) ஏகாகாரமாய்வளர்ந்த	இரிய—ப்ரீதிகோலாஹலம் பிறக்கும்படி
கிதயுகம்—க்ருதயுகமானது	புகுந்து—ப்ரவேசித்து(ஹர்ஷத்தாலே)
பற்றி—கைக்கொண்டு	இசை—கீதங்களை
பேரின்பவெள்ளம் - பகவதநுபவஜநிதமான அபரிச்சிந்நாநந்த ஸாகரம்	பாடி—பாடிக்கொண்டு
பெருக—மேன்மேலும் பெருகும்படியாக	எங்கும்—ஸர்வப்ரதேசங்களும்
கரிய—ஸ்யாமளமான	இடம் கொண்டன—தங்களுக்கிடமாம்படி கைக்கொண்டார்கள்.
	தொழுது தொழுது நின்றார்த்தும்—வாரீரென்று அந்வயம். (௩)

ஆறு:—(திரியும்.) வைஷ்ணவதர்ம விபர்யயஹேதுவான கலியுகம் நீங்கி, ஸர்வகாலமும் கலியுகாத்ய வ்யவஹிதமாய்க்கொண்டு கேவல க்ருதயுகமேயாய்ச் செல்லும் படியாகவும், *அயர்வறுமமரர்களும் புகுந்து பேரின்பவெள்ளம் பெருகும்படியாகவும், கரியமுகில்

வண்ணனெம்மான் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் இரியப் புகுந்து இசைபாடி எங்கும் இடங்கொண்டன; இவர்களைத் தொழுது தொழுது நின்றார்த்தும் தொண்டரெல்லீரும் வாரீரென்கிறார். (௩)

ஈடு; அவ.— நாலாம் பாட்டு. அவிசால்யமான பாஹ்யஸமயங்களை வேரோடே அறுப்பாரைப்போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய், பகவத்குணாநுபவஜநித ஹர்ஷத்தாலே களித்துத்திரியாநின்றார்களென்கிறார்.

இடங்கொள் சமயத்தையெல்லாமெடுத்துக்களைவனபோலே*
தடங்கடற்பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்*
கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபலபாடி*
நடந்தும்பறந்துங்குனித்தும் நாடகஞ்செய்கின்றனவே. (௪)

ப:—அநந்தரம், ஆஸ்ரிதோபகாரகனான அர்ணவஶாயியினுடைய குணத்திலே வித்தரானவர்கள், பாஹ்யஸமயங்களை உத்பாடநம்பண்ணுவாரைப் போலே அநேகவிதமான ஹர்ஷசேஷ்டிதங்களைச் செய்யாநின்றார்களென்கிறார்,

இடங்கொள்—(வைதிகஸங்கோசம்பிறக்கும்படி) ஸர்வப்ரதேசத்திலுமவஷ்டம்பிக்கக்கடவதான
சமயத்தை—பௌத்தார்ஹதாதிபாஹ்யஸமயங்களை
எல்லாம்—எல்லாம் (ஸவாஸநமாக)
எடுத்து—உத்பாடனம்பண்ணி
களைவனபோலே — போகடுவாரைப்போலே
தடம்—விஸ்தீர்ணமான
கடல்—கடலிலே
பள்ளி—(ஆஸ்ரிதார்த்தமாகக்) கண்வளர்ந்தருளுகிற
பெருமான் தன்னுடை—ஸர்வாதிகன் குணங்களிலே ஈடுபட்ட
பூதங்களே—பாகவதர்கள் தாங்களே
ஆய்—லோகமெல்லாமாய் (அவ்வோப்ரதேசங்களிலே)
கிடந்தும்—கிடந்தும்
இருந்தும்—இருந்தும்
எழுந்தும் — நின்றும் (பகவத்குண சேஷ்டித ப்ரகாஶகங்களான)
பலபல—பலபல
கீதம்—கீதங்களை
பாடி—பாடிக்கொண்டு
நடந்தும்—தர்ஶநீயமாம்படி ஸஞ்சரித்தும்
பறந்தும்—ஹர்ஷத்தாலே தரையிலே கால்படாதபடி மேற்கிளம்பியும்
குனித்தும் — ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணியும் இப்படி
நாடகம்—நாடகங்கள்
செய்கின்றன—செய்யாநின்றார்கள்.
இப்பாட்டும்—கீழோடே அந்விதம்.

ஆறு;—(இடங்கொள்.) ஸர்வஜகத்தையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிற வேதபாஹ்ய ஸமயங்களையெல்லா மெடுத்துக்களைவனபோலே, ஜகத்தெல்லாம் தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய், பரமபுருஷநிரவதிக கல்யாணகுணாம்ருத பானத்தாலே மத்தராய்க் கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபல பாடி நடந்தும் பறந்தும் குனித்தும் இங்ஙனே தர்ஸநீயமான சேஷ்டிதங்களைப் பண்ணாநின்றார். இவர்களைத் தொழுது நின்றார்த்தும், தொண்டரெல்லீரும் வாரீரென்கிறார்- (௬)

ஈடு; அவ—அஞ்சாம்பாட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸுரராக்ஷஸரான உங்களையும் முடித்து யுகத்தையும் பேர்ப்பர்களென்கிறார்

செய்கின்றதென்கண்ணுக்கொன்றே யொக்கின்றதிவ்வுலகத்து*
வைகுந்தன்பூதங்களேயாய் மாயத்தினா லெங்குமன்னி*
ஐயமொன்றில்லையரக்க ரசுரர்பிறந்தீருள்ளீரேல்*
உய்யும்வகையில்லைதொண்டரூழிபெயர்த்திடுங்கொன்றே. (ரு)

ப:—அநந்தரம், ப்ரதிகூலரான அஸுரராக்ஷஸ ப்ரக்ருதிகளைக்குறித்து, ஸ்ரீவைகுண்ட நாதனுடைய குணாநுஸந்தாந வித்தரான பாகவதர் உங்களை நிரஸித்தும் பொகடுவர்கள்; உங்களுக்கு உஜ்ஜீவிக்கவிரகில்லை என்கிறார்.

செய்கின்றது — இவர்கள் செய்கிற வ்யாபாரம்
என்கண்ணுக்கு—என் கண்ணுக்கு
ஒன்றேயொக்கின்றது — அதிசயிதமாயிருப்பதொன்று போலேயிராநின்றது; (எதென்னில்)
இவ்வுலகத்து—(ப்ரதிகூலப்ரசுரமான) இந்தலோகத்திலே
வைகுந்தன்—பரமபத நிலயனுடைய
பூதங்களே — குணாநுபவவித்தரான பாகவதர்தாங்களே
ஆய்—ஆய்
மாயத்தினால்-ஆஶ்சர்யவ்ருத்திகளாலே
எங்கும்—ஸர்வப்ரதேசத்திலும்
மன்னி—நிரந்தரவாஸம்பண்ணி
அரக்கரசுரர்—ராக்ஷஸியாயும் ஆஸுரியாயுமுள்ள ப்ரக்ருதிகளோடே
பிறந்தீர்—பிறந்தவர்கள்
உள்ளீரேல்—உண்டாகில்
தொண்டர்— இதரவிஷய சபலரானவர்களே
கொன்று — உங்களைநிரஸித்து (கலிக்ருதயுகமாம்படி)
ஊழி—காலத்தை
பெயர்த்திடும் — பேதிக்கும்படியாயிராநின்றது; (ஆதலால்உங்களுக்கு)
உய்யும்—உஜ்ஜீவிக்கும்
வகை—ப்ரகாரம்
இல்லை—இல்லை; (இதில்)
ஐயம்—ஸந்தேஹம்
ஒன்று—ஒன்றும்
இல்லை—இல்லை.

ஆறு;—(செய்கின்றது) என்கண்ணனுக்கொன்று செய்கிறாப் போலே யிரா நின்றது; என்? என்னில் - இந்த லோகத்திலெங்கும் ஆஸ்சர்யமாம்படி வைகுந்தன் பூதங்களேயாய், எங்கும் அவர்களே மன்னுகையாலே அவைஷ்ணவரான உங்களுக்கு உய்யும் வகையின்றியே, அதத்விஷயப்ரவணரான நீங்களெல்லாரும் உபஸம்ஹ்ருதராய், ஸ்ருஷ்டிபேருமாபோலே யிருந்தது; இது நிஸ்ஸம்ஶய மென்கிறார். (௫)

ஈடு; அவ;—ஆறாம்பாட்டு. ஸகல து:க்கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள்; அவர்களோடே நீங்களும் அவனை யாஸ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

கொன்றுயிருண்ணும்விசாதி பகைபசிதீயனவெல்லாம்*
நின்றிவ்வுலகிற்கடிவான் நேமிப்பிரான்தமர்போந்தார்*
நன்றிசைபாடியுந்துள்ளியாடியும் ஞாலம்பரந்தார்*
சென்றுதொழுதுய்ம்மின்தொண்டீர் சிந்தையைச் செந்நிறுத்தியே.

ப:—அநந்தரம், ஸாம்ஸாரிக ஸகலக்லேஶமும் தீரும்படி ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான திருவாழியையுடைய ஸர்வேஶ்வரனுக்கு அடியாரானவர்கள் ஜகத்தெங்கும் பரந்தார்கள்; அவர்களை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று கீழ்ச் சொன்னவர்களை நோக்கி அருளிச்செய்கிறார்.

கொன்று—ஶரீரத்தைமுடித்து
உயிர்—ப்ராணனை
உண்ணும்—க்ரஸிக்கக் கடவ
விசாதி—வ்யாதியும்
பகை—பகையும்
பசி—பசியும்முதலான
தீயன—க்ரூரஸ்வபாவங்கள்
எல்லாம்—எல்லாவற்றையும்
இ—இந்த
உலகில்—லோகத்திலே
நின்று—நின்று
கடிவான்—கடிகைக்காக
நேமி—சக்ராயுதத்தை
பிரான்—ஸர்வேஶ்வரனுடைய
தமர்—அடியாராய்க்கொண்டு
போந்தார்—போந்தவர்கள்
நன்று—விலக்ஷணமான
இசை—இசைகளை
பாடியும்—பாடியும்
துள்ளி—ஸஸம்ப்ரமமாகக் கிளர்ந்து
ஆடியும்—ஆடியும்
ஞாலம்—பூமியெங்கும்
பரந்தார்—பரந்தார்கள்;
தொண்டீர் — (தேவதாந்தரங்களையும் விஷயாந்தரங்களையும் உத்தேஶ்யமாகவும் போக்யமாகவும் நினைத்து) சபலரானவர்கள்

சிந்தையை — உங்கள் அந்யபரமான நெஞ்சை (ப்ராப்தமான பாகவதவிஷயத்திலே)
செம்—செவ்விதாக
நிறுத்தி—நிறுத்தி
சென்று (அவர்கள் பரிஸரத்திலே) சென்று
தொழுது — ஶேஷத்வாநுரூபவ்ருத்தி யைப்பண்ணி
உய்ம்மின் — பிழைக்கும்படி பாருங் கோள். (சு)

ஆறு:—(கொன்று.) ஸர்வாத்மாக்களுடைய ஸர்வபாதா பரி ஹாரார்த்தமாக ஶங்கசக்ரகதா ஶார்ங்காதி திவ்யாயுதோபேத பரம புருஷ கைங்கர்யைக ஸ்வரூபரான ஸ்ரீவைஷ்ணவஜநங்கள் இந்த லோகத்திலே போந்து,நன்றிசைபாடியும் துள்ளியாடியும் ஞாலம்பரந் தார். நீங்களும் இந்ததேவதைகளைவிட்டு அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு எம்பெருமானை ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

ஈடு:அவ,—ஏழாம்பாட்டு. நாங்கள் நெடுநாள் தேவதைகளுக் குப் பச்சையிட்டு ஆஶ்ரயித்துப் போந்தோம்; அதின்முடிவுகண்டு பின்னை பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணுகிறோமென்ன; நீங்கள் ஆஶ்ர யிக்கிற தேவதைகள் உங்களை ரக்ஷிப்பதும் அவன்பக்கலிலே கொண்டு சென்று காட்டிக்கொடுத்தாயிற்று, ஆனபின்பு, அவனையே ஆஶ்ரயிக்கப் பெறில்அழகிது; அதுவும் மாட்டிகோளாகில், நீங்கள் அவர்களுக்கு இடுகிறவற்றை "இவர்கள் அவனுக்குத்தநுபூதர், இவர்கள் முகத்தாலே நாம் பகவத்ஸமாராதநம்பண்ணுகிறோம்" என்று புத்திபண்ணியாகிலும் இடப்பாருங்கோ ளென்கிறார்.

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளும்தெய்வங்களும்மையுய்யக்கொள்
மறுத்துமவனோடேகண்டீர் மார்க்கண்டேயனுங்கரியே*
கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை*
இறுப்பதெல்லாமவன்மூர்த்தியாயவர்க்கேயிறுமினே. (எ)

ப:—அநந்தரம், தேவதாந்தரபரரானவரைக்குறித்து; அவனையொழிய இவர்களுக்கு ரக்ஷணஶக்தியில்லை, ஸர்வஸுலபனான க்ருஷ்ணனே பரதே வதை; ஆனபின்பு, தேவதாந்தரவிஷயமான நித்யநைமித்திகாதிதர்மங்களை, அவர்களுடைய பகவச்சரீரத்வ புத்தியைப்பண்ணி அநுஷ்டிக்கும்படி பாருங் கோ ளென்கிறார்.

நும்—உங்கள்
உள்ளத்து—நெஞ்சுக்குள்ளே
நிறுத்தி—ஸமாஶ்ரயமல்லாமையாலே வலியப்பிடித்து நிறுத்தி

கொள்ளும்—கொள்ளும்
தெய்வங்கள்—தெய்வங்கள்
உம்மை—உங்களை
உய்யக்கொளும் — உஜ்ஜீவிப் பித்துக் கொள்வதும்
அவனோடே—தங்களுக்கும் பலப்ரதத் வஸக்தி கொடுத்தவன்தன்னோடே
மறுத்து—மீண்டு சென்று கிட்டிக்கிடீர்; (இதுக்கு
மார்க்கண்டேயனும்— மார்க்கண்டேயனும்
கரி—ஸாக்ஷியாக
கண்டீர்—கண்டிகோள் (ஆகையாலே)
கருத்த — (இதரதேவதாபரத்வப்ரதிபத்தி பண்ணும்படி) மலிநமான
மனம்—நெஞ்சு
ஒன்றும்—ஒருபடியாலும்
வேண்டா—வேண்டுவதில்லை;
(க) ஃயொயொயாயொ_த ந-ம
ஸக்ஷ-யோயோயாம் யாம் தநும் பக்த:'' என்கிறபடியே)
கண்ணனல்லால் — (தேவதாந்தரங்களுக்கு ஶரீரியான) க்ருஷ்ணனையொழிய
தெய்வம்—பரதேவதை
இல்லை—இல்லை (ஆனபின்பு)
இறுப்பது—ஶாஸ்த்ரீயமாய்க் கர்த்தவ்யமான நித்யநைமித்திகங்களை
எல்லாம்—எல்லாம்
அவன்—அந்தக்ருஷ்ணனுக்கு
மூர்த்தியாயவர்க்கே—ஶரீரங்களான அந்ததேவதைகளை விஷயீகரித்து
இறுமின்— *ஸர்வயஜ்ஞாநாம்போக்தாவான அந்த க்ருஷ்ணன் பர்யந்தமாக ஸமர்ப்பியுங்கோள்.
இதிலே — பாகவதோத்கர்ஷஹேதுவான பாரம்யம் சொல்லிற்றாயிற்று (எ)

ஆறு;—(நிறுத்தி.) மற்று, நாங்கள் ஆஶ்ரயிக்கிற ப்ரஹ்மருத்ராதிதேவதைகள் எங்களுக்கு ரக்ஷகராகமாட்டாரோவென்னில் ;- உங்களாலே ஸமாஶ்ரிதைகளான தேவதைகள், உங்களை எம்பெருமான் ரக்ஷிக்குமிடத்தில் புருஷகாரமாமத்தனை ; இப்பொருளில் மார்க்கண்டேயனும் ஸாக்ஷி; ஆகையால், நாராயணனே ஸர்வேஶ்வரன், இதிலொன்றும் ஸம்ஶயிக்க வேண்டா. ஆதலால் அவனை யாஶ்ரயியுங்கோள். அக்நீந்த்ராதிதேவதைகளையும் ஆராத்யதயா ஶாஸ்த்ரங்கள் ப்ரதிபாதியாநின்றனவிறே யென்னில்; - அப்படியன்று ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறது; எங்ஙனேயென்னில் ;-அக்நீந்த்ராதி ஸமஸ்ததேவதாந்தர்யாமிதயா ஶரீரிபூதனை பரமபுருஷனை ஸர்வகர்மஸமாராத்யனென்றது. ஆனபின்பு, நித்யநைமித்திககாம்யரூப ஸர்வகர்மங்களாலும் அக்நீந்த்ராதி ஸமஸ்ததேவதாந்தர்யாமியான பரமபுருஷனை யாஶ்ரயியுங்கோளென்கிறார். (எ)

(க) கீதை-எ-உக.

ஈடு;அவ;—எட்டாம் பாட்டு. ராஜஸராயும் தாமஸராயுமுள்ள சேதநர் குணாநுகுணமாக ஆஸ்ரயிக்கலாம்படி இதரதேவதைகளை லோகமடங்கப் பரப்பிவைத்தான்; அவனுடைய அஸாதாரண விக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள். அவர்களைப்போலே நீங்களும் அவனை யாஸ்ரயிக்கப் பாருங்கோள் என்கிறார்.

இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்குந்தன்மூர்த்தி*
நிறுத்தினான்தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே*
மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள்கீதங்கள்பாடி*
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார் மேவித்தொழுதுய்ம்மினீரே. (அ)

ப:—அநந்தரம், இப்படி ஸர்வதேவதாநாயகனாய் ஸ்ரீவத்ஸவக்ஷாவான க்ருஷ்ணனுடைய சேஷபூதரானவர்கள் லோகத்திலே அதிகாரய்வர்த்தியாநின்றார்கள், அவர்களை யாஸ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார்.

இறுக்கும்—கர்த்தவ்யமாய்
இறை—கடமையான நித்யநைமித்திகங்களை
இறுத்து—ஸமர்ப்பித்து
உண்ண—உஜ்ஜீவிக்கைக்காக
எவ்வுலகுக்கும்—நாநாருசிகளான ஸமஸ்தலோகத்துக்கும்
தன்—தன்னுடைய
மூர்த்தி—ஸரீரபேதங்களை
தெய்வங்களாக — தத்தத்கர்மாராத்ய தேவதைகளாக
நிறுத்தினான்—நிறுத்தினவன்
அத்தெய்வநாயகன்தானே — ஸர்வதேவதாநாயகனை (க்ருஷ்ணன்தானே; (ஆகையால்)
மறு—அந்த ஸர்வாதிகத்வஸூசகமான ஸ்ரீவத்ஸத்தை
திருமார்பன்—திருமார்பிலுடையனை
அவன்தன்—அவனுக்கு
பூதங்கள்-சேஷபூதரான பாகவதர்கள்
கீதங்கள்—நாநாகீதங்களை
பாடி—பாடி
ஞாலத்து—ஸாம்ஸாரிகதோஷத்தாலுண்டான
வெறுப்பு இன்றி—விஷாதம் இல்லாதபடி
மிக்கார்—ஸர்வோத்க்ருஷ்டராய் வர்த்தியாநின்றார்கள்;
நீர்—நீங்கள்
மேவி—அவர்களைக்கிட்டி
தொழுது—தொழுது
உய்ம்மின்—உஜ்ஜீவியுங்கோள். (அ)

ஆறு:—(இறுக்கும்) கேவலேந்த்ராதிகளையே ஸ்வகர்மங்களாலே ஸமாராதித்து ஸ்வாபிலஷிதபுத்ரபஸ்வாதிபலங்களை அவர்கள் பக்கலிலே பெற்றன்றோ எல்லாரும் புஜிக்கிறதென்னில்;—இந்த்ராதிகளெல்லாரும் ஸ்வாதிகாராநுகுணகர்மங்களாலே யாரா

தித்து ஸ்வாபிலஷிதங்களைப் பெற்று அநுபவிக்கும்படி அந்த ஸர்வேஶ்வரனான பரமபுருஷன் தானே ஸ்வஶரீரபூதரான அந்த இந்த்ராதிகளை, ஸர்வகர்மஸமாராத்யராய் ஸமாராதகாபிலஷித பலப்ரதாந ஸமர்த்தராம்படி பண்ணியருளினான்; ஆதலால், அவனே ஸர்வேஶ்வரன். இப்படி ஸர்வேஶ்வரனாகையாலும், பகவதேகபோகரான ஸ்ரீவைஷ்ணவர்களாலே இந்தலோகம் பூர்ணமாகையாலும், நீங்களும் எம்பெருமானையே அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார் (அ)

ஈடு; அவ:— ஒன்பதாம்பாட்டு. பகவத்குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமியெங்கும் பரந்தார்கள், நீங்களும் அவர்களோடொக்க அநந்யப்ரயோஜநராய் ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை*
நாவிற்கொண்டச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே*
பூவிற்புகையும்விளக்குஞ் சாந்தமும்நீரும்மலிந்து*
மேவித்தொழுமடியாரும் பகவரும்மிக்கதுலகே. (கூ)

ப:— அநந்தரம், ஆஶ்ரிதரைக்கைவிடாத அப்ரச்யுதஸ்வபாவனுடைய கைங்கர்யநிஷ்டராலும் குணநிஷ்டராலும் லோகம் மிகுந்தது; அவர்களையாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார்.

வேதம்—வேதத்தில்
புனிதம்—ஸ்வரூபகுணாதி ப்ரதிபாதகமாகையாலே பரமபாவநங்களான
இருக்கை—ஸ்ரீபுருஷஸூக்தநாராயணாநுவாகாதி ருக் விஶேஷங்களை
நாவில்—நாவிலே
கொண்டு—உச்சரித்துக்கொண்டு
ஞானவிதி — பக்திரூபஜ்ஞாநம்பண்ணுகிற ஶாஸ்த்ரமர்யாதை
பிழையாமே—தப்பாதபடி (ஆராதநோபகரணமான)
பூவில்—புஷ்பத்தோடுகூடின
புகையும்—தூபமும்
விளக்கும்—தீபமும்
சாந்தமும்—சாத்துப்படியும்
நீரும்—திருமஞ்சனமும்
மலிந்து — பூர்ணமாகவுடையராய்க்கொண்டு
அச்சுதன்தன்னை—அப்ரச்யுதஸ்வபாவனான ஸர்வேஶ்வரனை
மேவி-அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு
தொழுது - ஶேஷவ்ருத்திமுகத்தாலே ஆஶ்ரயிக்கும்

அடியாரும்—சேஷபூதரையும்	உலகு—லோகம்; (ஆணபின்பு)
பகவரும்—அவனுடைய ஜ்ஞாநசக்த்யாதி குணாநுஸந்தாநவித்தரான முநிகளையும்	மேவி—அவர்களைக்கிட்டி
	தொழுது—தொழுது
	நீர்—நீங்கள்
மிக்கது—மிகவுடைத்தாயிற்று	உய்ம்மின்கள்—உஜ்ஜீவியுங்கோள் (கூ)

ஆறு;—(மேவித்தொழுது.) பகவத்ஸ்வரூபகுணவிபூதி ப்ரதிபாதகமாய் பரிபூர்த்தமான ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு பக்திமார்க்கம் தப்பாமே புஷ்பதூப தீபாநுலேபந ஸலிலாத்யுபகரணங்களாலே அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு எம்பெருமானுக்கு அடிமைசெய்கிற பரிஜநங்களும், பரமபுருஷகுணசேஷ்டிதாநுபவைகபோகரான திவ்யஜநங்களுமேயாயிற்று இந்தலோகம்; நீங்களும் அப்படியே அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு எம்பெருமானுக்கு அடிமைசெய்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார். (கூ)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. நீங்கள் ஆஸ்ரயிக்கிற தேவதைகள் செய்கிற இத்தை நீங்களும் செய்திகோளாகில், யுகப்ரயுக்தமான தோஷங்களும் போமென்கிறார்.

மிக்கவுலகுகள்தோறும் மேவிக்கண்ணன்திருமூர்த்தி*
நக்கபிரானோடயனுமிந்திரனும் முதலாக*
தொக்கவமரர்குழாங்களெங்கும்பரந்தனதொண்டர்*
ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே (கo)

ப:—அநந்தரம், இப்படி ஸர்வாதிகனை ஸர்வேஸ்வரனுக்கு சேஷபூதரான பாகவதருடைய ஆஸ்ரயணீயதையை ப்ரதிபாதித்து, இப்பாட்டில்-ப்ரயோஜநாந்தரார்த்தமாக தேவதாந்தரங்களை யாஸ்ரயிப்பாரைக்குறித்து; அவனை யாஸ்ரயித்து தேவதைகள் அபிலஷிதபதங்கள் பெற்றவோபாதி நீங்களும் அவனை யாஸ்ரயிப்புகிகளாகில், உங்களுடைய புத்திபேதஹேதுவான காலதோஷமில்லை யென்கிறார்.

நக்கன் பிரானோடு—நக்நனானஈஸ்வரனோடேகூட	அமரர்குழாங்கள் — தேவதாஸமூஹங்களானவை
அயனும்—ப்ரஹ்மாவும்	கண்ணன் — ஸர்வாஸ்ரயபூதனை க்ருஷ்ணனுடைய
இந்திரனும்—இந்த்ரனும்	திரு—ஸ்ரீமத்தான
முதலாக—முதலாக	மூர்த்தி—விக்ரஹத்வை
தொக்க—திரண்ட	

மேவி—ஆஶ்ரயித்து
மிக்க — போக்யபோகோபகரணாதிகளால் ஸம்ருத்தமான
உலகுகள்தோறும் — லோகங்கள்தோறும்
எங்கும்—ஸர்வத்ர
பரந்தன — விஸ்தீர்ணமான ஸம்பத்தையுடையரானார்கள்.
தொண்டீர் — இதரபுருஷார்த்த சபலரானவர்களே
ஒக்க—நீங்களுமவர்களோடொக்க

தொழ—அவனையே தொழ
கிற்றிராகில்—வல்லிகோளாகில்
கலியுகம்— (உங்களுக்குத் தேவதாந்தரப்ராவண்யரூபபுத்யபகர்ஷஹேதுவான) கலியுகதோஷம்
ஒன்றும்—ஒன்றும்
இல்லை—இல்லை;
கலியுகத்தில் பகவதர்ச்சந விமுகராம்படி பாஷண்டோபஹதராயிறே ஜநங்க ளிருப்பதென்றுகருத்து.

ஆறு;—(மிக்க.) சதுர்முகபஶுபதிஶதமகப்ரப்ருதி ஸமஸ்த தேவாதிகாரங்களும் பரமபுருஷஸமாஶ்ரயணத்தாலே லப்தலோகாதிபத்யரானார்கள்; ஆனபின்பு, நீங்களும் அவர்களைப்போலே எம்பெருமானை யாஶ்ரயிக்க வல்லிகோளாகில் இக்கலியுகமொன்றுமில்லையென்கிறார். (௧௦)

ஈடு:அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தேவதாந்தரங்கள் பக்கலுண்டான பரத்வஶங்கையும், எம்பெருமான்பக்கல் ப்ரயோஜநாந்தரபரதையுமான மாநஸதோஷம் போமென்கிறார்.

கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும்*
மலியுஞ்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னை*
கலிவயல்தென்னன் குருகூர்க் காரிமாறன்சடகோபன்*
ஒலிபுகழாயிரத்திப்பத்து உள்ளத்தைமாசறுக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழி, அப்யஸித்தவர்கள் நெஞ்சில் ஸகலமாலிந்யமும் அறுக்குமென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தன்—தனக்கு
அடியார்க்கு—அஸாதாரணஶேஷபூதரானவர்களுக்கு
கலியுகம்—கலியுகதோஷம்
ஒன்றும்—ஒன்றும்

இன்றிக்கே—தட்டாதபடி (ஸ்வவிஷயஜ்ஞாநப்ரேமவ்ருத்திகளை)
அருள்—தன்னருளாலே
செய்யும்—கொடுக்கையாலே
மலியும்—அபிவ்ருத்தமான

சுடர்—ப்ரகாஶத்தையுடைத்தான
ஒளிமூர்த்தி—தேஜோமய திவ்யவிக்ரஹத்தை யுடையனாய்
மாயம் — ஆஸ்சர்ய குணசேஷ்டிதங்களை
பிரான் — அவர்களை யநுபவிப்பிக்குமுபகாரகனை
கண்ணன்தன்னை — க்ருஷ்ணனைப் பற்ற
கலி—ஸம்ருத்தமான
வயல்—வயலையுடைத்தாய்
தென்—தெற்குத்திக்குக்கு
நன்—ஶ்லாக்யமான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகராய்
காரி—ஜநகவைலக்ஷண்யத்தையும்
மாறன்—குலவைலக்ஷண்யத்தையுமுடையரான
சடகோபன்—ஆழ்வாருடையதாய்
ஒலி—ஸுப்ரஸித்தமான
புகழ்—பகவத்குணப்ரதையையுடைத்தான
ஆயிரத்து— ஆயிரந்திருவாய்மொழியில்
இப்பத்து—இப்பத்தும்
உள்ளத்தை — அப்யஸித்தவர்கள் நெஞ்சை
மாசு—(பாகவதஸாம்ய ப்ரதிபத்திரூபமாயும் அதுக்கடியான பகவதுத்கர்ஷாதி ஶங்காரூபமாயும் தேவதாந்தரபரத்வ ப்ரதிபத்திரூபமாயும் ப்ரயோஜநாந்தர ப்ராவண்யரூபமாயுமுள்ள) மாசு
அறுக்கும்—அறும்படி பண்ணும்.
இது அறுசீராசிரியவிருத்தம் (கக)

ஆறு;—(கலியுகம்) ஸ்வாஶ்ரிதரபேக்ஷித்தால் கலியுகத்தையே க்ருதயுகமாக்கி யருளும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானைச் சொன்ன இத்திருவாய்மொழி, வைஷ்ணவத்வ விரோதி ஸகலவிரோதங்களையும் போக்குமென்கிறார் (கக)

அஞ்சாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி
முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

மூன்றாந்திருவாய்மொழி, மாசறுசோதி ப்ரவேசம்.

ஆறு;—(மாசறுசோதி.) இப்படி ஆஶ்ரித வாத்ஸல்யாத்யநவதிக கல்யாண குணவிபூஷிதனாயிருந்த எம்பெருமானோடே ஸம்ஶ்லேஷிக்க ஆசைபட்டுப் பெறாதே சிரகாலம் அவஸந்நையாயிருந்தாளொருபிராட்டி, தன்னுடைய வ்யஸநத்தைப் பொறுக்க மாட்டாமையாலே "மடலூர்ந்தாகிலும் அவனோடே ஸம்ஶ்லேஷிக்கவேணும்" என்று மநோரதித்து மடலூருகையிலே வ்யவஸிதையாயிருந்த விடத்தில், இவளுடைய தோழியானவள் "நீ ஆசைப்படுகைக்கீடான ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்கள் அவனுக்குண்டோ? உண்டானால்தான் அவனை யுத்திஶ்ய மடலூருகை யுக்தமோ? இவ்வூரெல்லாம் உன்னைப்பழிசொல்லாதோ?" என்ன;— *

ப:—மூன்றாந்திருவாய்மொழியில் கீழ் அநுஸந்தித்தபாகவதோத்கர்ஷ ஹேதுவான பகவதுத்கர்ஷத்தையும், குணவிக்ரஹாதி வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தித்து, அவனுடைய ஆலோகாலாபாதி முகத்தாலே ஸம்ஶ்லேஷித்து அநுபவிக்கைக்கு ஆசைப்பட்டு அது கிடையாமையாலே, ஆஶாஜநகமான ஆபிரூப்யாதிஶயத்தையும், அவயவ விஶேஷவைலக்ஷண்யத்தையும், ப்ரதிபந்தக நிவர்த்தகமான பாலசேஷ்டிதத்தையும், அபிநிவேஶவர்த்தகத்வத்தையும், அநந்யார்ஹதாபாதகத்வத்தையும், ஆகர்ஷகத்வ ஸ்வபாவ யோகத்தையும், ஆஸக்திஹேதுவான அர்ணவஶாயித்வாதிகளையும் அகிலவிரோதி நிவர்த்தநத்தில் அநாயாஸத்தையும், உத்துங்கதேஶ வாஸித்வத்தையும், அஸாதாரணசிஹ்நயோகத்தையும் அநுஸந்தித்து, ஏவம் விஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் தமக்குப்பிறந்த அபிநிவேஶாதிஶயத்தாலே, "இரண்டு தலைக்கும் அநநுரூபமான ஸ்வப்ரவ்ருத்திவிஶேஷத்தாலேயாகிலும். ப்ராப்பிக்கக்கடவோம்" என்கிற த்வராதிஶயத்தால் தமக்குப் பிறந்த வ்யவஸாயவிஶேஷத்தை அந்யாபதேஶ முகத்தாலே, நாயகனான ஈஶ்வரனோடு கலந்து பிரிந்தாளொருநாயகி தத்ப்ராப்த்யபிநிவேஶ த்வரையாலே, தன்குடிப்பிறப்புக்கும் பெண்மைக்கும் அநநுரூபமாம்படி "அவனுடைய மெய்ப்பாட்டை யழித்து மடலூர்ந்தும் பெறக்கடவோம்" என்கிற அறுதிப்பாட்டைப் பாங்கிக்கு உரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். *

ஈடு;—"மலியும்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை" என்று-வடிவழகையும் குணங்களையும் ஸௌலப்யத்தையும் அநுஸந்தித்து; இப்படி ஸுலபனுமாய், ஆஶ்சர்யமான குண

சேஷ்டிதங்களை யுடையனுமாய், அவையில்லையேயாகிலும் விட வொண்ணாத வடிவழகையு முடையனான இவனை பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கக்கோலிக் கையைநீட்ட, அகப்படாதே கைகழிந்து நிற்க, அத்தாலே கலங்கி மடலெடுக்கையிலே உபக்ரமிக்கிறார். மடலெடுக்கையாவது - போர்சுட்டுப் பொரிகொறிக்கையோபாதி. "அநீதிசெய்யாதே கொள்ளுங்கோள்" என்று பிறரைத்திருத்தினவர், "நீர்செய்யப்பார்க்கிற இது அநீதி, அத்தைத்தவிரும்" என்று பிறர்திருத்தவும் திருந்தாதபடியானார். பிறரை பகவத்விஷயத்திலே ப்ரவணராக்குகைக்குத் திருத்துகிற இவரை, "பகவத்ப்ராவண்யமாகாது" என்று திருத்தப்பார்த்தால் திருந்தாரிறே.

அன்றிக்கே, * ஏறாளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டாவென்று அலாபத்தாலே கூப்பிடும் தம்மோடொக்கக் கூப்பிடுகைக்குத் துணைதேடி லோகவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தவிடத்து, தாம் பகவத்விஷயத்திலே ப்ரவணராயிருக்குமாபோலே அவர்கள் இதர விஷயங்களிலே ப்ரவணரா யிருக்கிற படியைக்கண்டு, அவர்கள் அநர்த்தத்துக்கு நொந்து அவர்களுக்கு பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்தி, "இவர்களிலே ஒருவனாயிருக்கிற என்னை, இவர்களையும் திருத்தும்படியாக்குவதே ஸர்வேஶ்வரன்" என்று அவன் தமக்குப்பண்ணின உபகாரத்தை ஸ்மரித்து, தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாஶாஸநம்பண்ணி, இப்படி பரஹிதத்துக்கு வேண்டுவ தெல்லாம் செய்து கையொழிந்தபின்பு பழைய தம்மிழவே தலையெடுத்து, "வழியல்லாவழியேயாகிலும் கிட்டுமத்தனை" என்னும்படியான விடாய்பிறந்து மடலெடுக்கையிலே யொருப்பட்டுச் செல்லுகிறது - இந்தத்திருவாய்மொழி.

ஒரோ விஷயங்களிலே ஒரொருத்தர்க்கு ஸங்கமுண்டானால் அவ்விஷயங்கள் கிடையாவிட்டால் "அவை இப்போதே பெறவேணும்" என்னும்படியான த்வரைபிறந்தால், பின்னையவை யிருந்தவிடங்களிலே புகைசூழ்ந்து புறப்படவேண்டும்படியா யிருப்பதொரு ஸாஹஸத்தைப் பண்ணிப் புறப்படவிடுவித்து முகத்திலே விழிப்பாரைப்போலே, "அத்தலைக்குப் பழியை விளைத்தாகிலும்

முகத்திலேவிழிக்குமத்தனை" என்று ஸாஹஸத்திலே யொருப்பட்டு, தமக்கு இவ்வளவாகப் பிறந்த தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

"அபிமத விஷயத்தைப் பிரிந்து ஆற்றமாட்டாதார் மடலெடுக்கக்கடவர்கள்" என்று ஒன்றுண்டு தமிழர் சொல்லிப்போருவது. அதாவது - (௧) " துல்யஶீலவயோவ்ருத்தாம் - துல்யசீல வயோவ்ருத்தாம்" என்று சீலத்தாலும் வயஸ்ஸாலும் அபிஜநத்தாலும் வடிவழகாலும் ஸம்பத்தாலும் குறைவற்றிருப்பன இரண்டு விஷயமாய், அதுதன்னில் "அறிவு, நிறைவு. ஓர்ப்பு, கடைப்பிடி" என்றாற்போலே சொல்லுகிற நாயகலக்ஷணங்கள் நாயகனுக்கும் உண்டாய், "நாண், மடம், அச்சம், பயிர்ப்பு" என்றாற்போலே சொல்லுகிற நாயகியுடையலக்ஷணங்கள் நாயகிக்கும் உண்டாய், இப்படி இரண்டுதலையும் குறைவற்று இவர்கள் தாங்கள் ப்ராப்த யௌவநருமாயிருக்க: இவர்களைப் புறம்புகூட்டு வாரின்றிக்கேயிருக்க, யாத்ருச்சிகமாக அவனும் "வேட்டைக்கு" என்று புறப்பட்டு, இவளும் "பூக்கொய்துவிளையாட" என்று உத்யாநத்திலே புறப்பட, அவ்விடத்திலே தைவயோகத்தாலே இருவர்க்கும் கண்கலவியுண்டாய், சிலராடியாகவந்த ஸம்ஶ்லேஷமல்லாமையாலே பிரிவோடே வ்யாப்தமாகப் பிரிந்து, குணாதிகவிஷயமாகையாலே இரண்டுதலைக்கும் ஆற்றாமைவிஞ்சி, ஒருதலையையொழிய ஒருதலைக்குச் செல்லாமைபிறந்து, இரண்டு தலையையுமழித்தாகிலும் பெறப்பார்க்கை.

மடலூருகையாவது - அபிமதவிஷயத்தைப் பிரிந்த ஆற்றாமையாலே அவ்விஷயத்தை ஒருபடத்திலே யெழுதி, வைத்தகண்வாங்காதே அத்தைப் பார்த்துக்கொண்டு, பனைமடலைக் குதிரையாகக் கொண்டு, பிரிந்த போதுதொடங்கி கண்டபோகோபகரணங்களெல்லாம் அக்நி கல்பமாய்த் தோற்ற, ஊணுமுறக்கமு மின்றிக்கே, உடம்பில் துளிநீரேறிட்டுக் கொள்ளாதே, மயிரை விரித்துக்கொண்டுதிரியாநின்றால், இத்தர்மஹாநியைக் கண்ட க்ஷத்ரியாதிகள் "கெட்டேன், இவனுக்கு ஒரு விஷயத்திலே இத்தனை பாவபந்தமுண்டாகாதே" என்று, அவர்கள் அவ்விஷயத்திலே கூட்டுதல்.

(௧) ரா-ஸு-௧௬-௫

இல்லையாகில், இதுவே ஹேதுவாக இரண்டுதலையிலுள்ள பந்துக்களும் கைவிட, அலக்குப்போர்போலே ஒருவர்க்கொருவர் புகலாய் அங்ஙனேகூடுதல், தோழிமார் கூட்டுதல், ஆற்றாமைகூட்டுதல், அந்த விஷயந்தான் குணாதிகவிஷயமாயிருக்குமாகில் பழிக்கு அஞ்சிக்கூடுதல். இவையித்தனையுமில்லையாகில் முடிந்து பிழைத்தல்செய்கையாவதொரு ஸாஹஸப்ரவ்ருத்திவிசேஷமாயிற்று.

இதுதன்னை "கடலன்னகாமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார்மேல்" என்று-ஆஶ்ரயத்தளவல்லாதபடி ஆற்றாமைகரைபுரண்டாலும் ஸ்த்ரீகள் மடலூரக்கடவர்களன்று; நாயகன் தன்னாற்றாமையாலே மடலெடுத்து உலகின்மேல் வைத்துச் சொல்லுதல், (உலகின்மேல்வைத்துச் சொல்லுகையாவது - ஸ்வாபிப்ராயத்தையறிவியாமல் "ஒருவன்மடலூரப்போகிறான்" என்று அந்யாபதேசேந சொல்லுகை.) "நான்வரைபாயப்புகா நின்றேன். மடலெடுக்கப்புகாநின்றேன்" என்று தோழிக்கு வந்து அறிவித்தால், அவள் கூட்டிற்றிலளாகில் பின்பு அவன் இதுசெய்யக்கடவன்; இத்தனையல்லது " ஸ்த்ரீகள் மடலெடுக்கக் கடவரல்லர்கள் " என்று இங்ஙனே ஒருமர்யாதை கட்டினார்கள் தமிழர்;

இங்கு அங்ஙனன்றிக்கே, பிராட்டிதான் மடலெடுத்ததாக இராநின்றது; தமிழர் "ஸ்த்ரீகள்மடலூரக்கடவரல்லர்" என்று சொன்ன இது பின்னைச்சேரும்படி என்? என்னில்; அவர்கள் ஒரு தலையிலேதான் அத்தை யிசைந்தார்களே; அப்படியிசைகைக்கு அடி ஆற்றாமையே; இது இரண்டுதலைக்கு மொத்தபின்பு ஒருதலையிலொதுக்குவாரார். வரம்பழியவாகிலும் முகங்காட்டிவைத்துக் கொண்டு தரிக்க வேண்டும்படியா யிருப்பதொரு விஷயம் புறம்பில்லையே; இங்ஙனேயிருப்பார் சிலரைக் கல்பித்துக் கொண்டார்களித்தனையிறே, இதுக்கு ஒருமர்யாதை கட்டுகையாவது-ஆசைக்கு ஒரு வரம்பிட்டார்களாமித்தனையிறே; அப்போது பின்னை ராஜாஜ்ஞைக்கு நிற்கவேணும், இல்லையாகில் வேலியடைத்தால் நிற்கவேணும்; ஆகையால் அவர்கள் ப்ரேமஸ்வபாவம் அறிந்திலர்களாமித்தனை.

இவர்தாம் * வளவேழுலகிலே - நாம் அவனோடே கலக்கையாகிற இது அவனுக்கு அவத்யாவஹம், நம்பேற்றுக்காக அவ

ஞேடேகலந்து அவனுக்கு அவத்யத்தை விளைப்பதிற்காட்டில் நாம் அகன்று முடிந்தாகிலும் அத்தலைக்கு அதிஶயத்தைப்பண்ணவமை யுமென்றிருக்குமத்தோடும் சேராது; இனி * ஏறுளுமிறையோ னிலே - அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் நசித்துப் போக வமையுமென்று சொன்னவத்தோடும் சேராது; ஆக, விதாய கராயிருப்பார் செய்வதுமொன்றல்ல, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது; ஜ்ஞாநாதிகரா யிருப்பார் செய்வதுமொன்றல்ல, ஆனுல் இது இருந்தபடியென்? என்னில்; இவற்றுக்கெல்லாம் பரிஹாரம், பட்டர் திருமடல் அருளிச்செய்கிறபோது அருளிச்செய்தருளினர்; இங்குத்தைக்கும் வேண்டுவது சொல்லவேணுமிறே.

ஜ்ஞாநாதிகராயிருப்பார் ஜநககுலத்தி லுள்ளார்க்கு மேலில்லை யிறே; அக்குடியிலே பிறந்த பிராட்டியானவள்(க)"யா நமக்ஷ்ராவ நாஹூஷ-யாநமக்யாபுராத்ரஷ்டும்" என்கிறபடியே, பெருமாள் காட்டுக்கு எழுந்தருளுகிறபோது (உ) "மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் அன்னநடைய வணங்கு நடந்திலளே" என்கிறபடியே - அவர்பின்னே பிராட்டி புறப்பட்டுப்போகையாலே ஶிஷ்டாசாரமுண்டாயிருந்தது; இனித்தான்* மயறர்வமதிநல மரு ளப்பெற்றஇவர் அநுஷ்டிக்கையாலே இதுதானே ப்ரமாணமாகத் தட்டில்லையிறே; (ங) " யத்யதாசரதிஶ்ரேஷ்டஃ-யத்யதாசரதிஶ்ரே ஷ்டஃ " என்றும், " ஸயத்ப்ரமாணம் குருதே-ஸயத்ப்ரமா ணம்குருதே" என்றும் ஸத்துக்களுடைய அநுஷ்டாநத்தைப்ரமா ணமாகக் கொள்ளக் கடவதிறே.

ஆனுலும் காமத்தை நிஷேதியா நின்றதேயென்னில் ; அப் ராப்த விஷயத்தில் காமத்தையிறே நிஷேதித்தது; அவை நிலைநில் லாமையாலே; பகவத்விஷயத்தில் காமத்தை (ச) " நித்யஸ்ராவிதவ்யஃ-நிதித்யாஸிதவ்யஃ" என்று விதியாநின்ற திறே. வேதாந்த விஹிதையான பக்தியையிறே - இங்கு, காமமென்கிறது.

* வளவேழுலகில்-நாம்கிட்டுகை அவனுக்கு அவத்யமென்று அகன்ற இவர், அத்தலையையழித்து முகங்காட்டுவித்துக்கொள் ளப் பார்க்கிற இது இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ என்னவும்

(க) ரா-அயோ-ங ங-அ. (உ) பெரியதிருமடல்
(ங) கீதை ங-உக. (ச) ப்ருஹ-சு-ரு

வேண்டா; அங்கு அகலநினைத்ததும் அத்தலைக்கு அவத்ய பரிஹாரத்துக்காகவிறே; தமக்கு ஆற்றாமை கரைபுரண்டிருந்தது, "தன்னையாசைப்பட்டார் பெறுதேமுடிய, முகங்காட்டாதேயிருந்தான்" என்கிற அவத்யத்தை பரிஹரிக்கைக்குச் செய்கிறாராகையாலே இதுவும் இவர் ஸ்வரூபத்தோடே சேரும்; அங்கு அகன்றது ஜ்ஞாநகார்யம், இங்குமேல்விழுகிறது பக்திகார்யம். இத்தனை கலங்கப்பண்ணிற்றில்லையாகில் அத்தலையில் வைலக்ஷண்யத்துக்கு நமஸ்காரம். இவர்தாம் இப்படி கலங்கிற்றிலராகில் இவருடைய ப்ரேமத்துக்கு நமஸ்காரம். அவன் அருளிற்றும் மதிநலமிறே, அதுபடுத்துகிற பாடிறே இதெல்லாம்; மதியின் கார்யம் அது, நலத்தின்கார்யம் இது.

இனித்தான் ஸித்தோபாயத்தை ஸ்வீகரித்து அது பலியாவிட்டால் ஸ்வரூபத்தை அந்யதாகரிக்குமித்தனையிறே ; அவன் ஸ்வரூபம் அந்யதாகரித்தால் இத்தலைசொல்லவேண்டாவிறே. "இத்தலையில் கர்த்தவ்யமில்லையாகில் அவனுக்கு அஶக்தியில்லையாகில் நடுவுவிளம்பத்துக்கு ஹேதுவென்?" என்று தோற்றுமிறே. ஆற்றாமையையும் ஆவிஷ்கரித்து அம்பும் தொடுக்கவேணும்படியான விஷயத்தை யன்றே இவர்பற்றிற்று. இவர் தமக்கு "மடலெடுக்கக் கடவேன்" என்று துணிந்த துணிவுக்கு மேற்பட அநுஷ்டிக்க வேண்டுவதில்லையாயிற்று குணாதிகவிஷயமாகையாலே; கடலைப்பெருமாள் ஶரணம்புக்கவிடத்தில் தானாகவந்து முகமுங் காட்டாமையாலே நாலுமூன்று, அம்பைவிட்டு உடம்பிலேபாதிவெந்தபின்பிறே வந்து முகங்காட்டிற்று; இங்கு அதெல்லாம் வேண்டாமையாலே (க) "ஸாவஶாநய-சாபமாநய" என்கிறவோபாதி, "மடலூருவேன்" என்று அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப் பார்க்கிறார்.

தம்முடைய ஸ்வரூபத்தில் கலக்கம் அநுவர்த்தியாநிற்கச்செய்தேயும் அவனுடைய குணஜ்ஞாநத்தில் கலக்கமின்றிக்கே யிருக்கிறதுகாணும் இவர்க்கு; * ஏறாளுமிறையோனில் —அவனுக்கு உறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்று முடித்துக் கொள்ளப்பார்த்தவிடத்தில் அது தம்கையதன்றிக்கே, அவனுளனாக இது அழியாததாயிருந்தது; இனி "அத்தலையே பிடித்து அழிப்போம்" என்று, வேர்ப்பற்றோடே யழிக்கப்பார்க்கிறார்; உண்

(க) ரா-யு-௨௧-௨௨

டாம்போதும் அத்தலையாலேயுண்டாய், இல்லையாம்போதும் ஒன்றாக இல்லையாம்படியிறே வஸ்து ஸ்வரூபந்தானிருப்பது. "உயிரினாற்குறைவிலம்" என்றார் அங்கு, இங்கு-உயிர்க்கு உயிரினால்குறைவிலமென்கிறார். ஏறாளுமிறையோனில் அவனுக்குறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டாவென்றார், இதில்-எனக்கு உறுப்பல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டா வென்கிறார். "ராவணன் மாயாசிரஸ்ஸைக்காட்டினபோது இதரஸ்த்ரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன்னாற்றாமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பாளென்" என்று பட்டரைச் சிலர் கேட்க, "ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவநநிமித்தம், அத்தலையில் ஸத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லாமையாலே யிருந்தாள்" என்று அருளிச்செய்தார்.

இப்படி அத்தலையை அழித்தாகிலும் முகங்காட்டுவித்துக் கொள்ள வேண்டும்படி தமக்குப் பிறந்த தசாவிசேஷத்தை; எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொரு பிராட்டி ஆற்றாமை மீதூர்ந்திருக்கச்செய்தே இவள் தரித்திருந்த இருப்பைக்கண்டு, தோழியானவள், "முன்புத்தையளவுகளன்றிக்கே இவள் தேறி யிருந்தாள், அவன் வாராதிருக்க இவளுக்கித்தனை தேற்றம் உண்டாம்போது, ஸாஹஸங்களிலே துணிந்தாளாகவேணும்" என்று பார்த்து, நீசெய்யநினைக்கிறவிது "உன்தலைமைக்கும் அவன்தலைமைக்கும் உன்மதிப்புக்கும் அவன்மதிப்புக்கும், உன்பிறப்புக்கும் உன்னுடையமர்யாதைகளுக்கும் போராதுகிடாய்" என்ன; "என்ஸ்வரூபத்தை அழித்தாகிலும் (அவன்ஸ்வரூபத்தையழித்தும்) மடலெடுக்கை தவிரேன்" என்று துணிந்த துணிவைத் தோழிக்கு அறிவிக்க; இத்தைக்கேட்டு அஞ்சி, ஸர்வேஶ்வரன், இருந்தவிடத்தில் இருக்க மாட்டாமை வந்து முகங்காட்டித் தானும் ஸத்தைபெற்று இவளையும் தரிப்பித்தானாய்த் தலைக்கட்டுகிறது.

இவர்மடலிலே துணிந்தால் கடுகவந்துமுகங்காட்டிப் பிழைக்கில் பிழைக்குமித்தனைபோக்கி, இல்லையாகில் ஸத்தைகிடக்க விரகில்லையிறே அவனுக்கு; ப்ரஹ்மாஸ்த்ரத்துக்குத் தப்பவொண்ணாதிறே அவனுக்கு; இதுக்குமுன்பு, "அவனாலேபேறு" என்று போந்தாரேயாகிலும், ப்ராப்யமான கைங்கர்யத்துக்கு பூர்வகாலீ

நமா யிருப்பன பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளென்று சிலவுண்டிறே, அவை தவிரவொண்ணாதிறே. இனி, பக்திமானுக்கும் பக்தியுண்டு; ப்ரபந்நனுக்கும் பக்தியுண்டு, ருசியையொழிய ப்ரபத்தி பண்ணக்கூடாதே; பக்திமானுடையபக்தி-வைதமாய்வருமது; ப்ரபந்நனுடையபக்தி - ருசிகார்யமாயிருக்கும். பக்திமானுக்கு ஸாதநமாயிருக்கும், இவனுக்குதேஹ பாத்ராபோஷமாயிருக்கும். பக்திமானுக்கு பலஸாதனையில்லாதபோது தவிரலாயிருக்கும்; ப்ரபந்நனுக்கு ஸ்வரூபப்ரயுக்தமாய் வருமதாகையாலே ஒருகாலும் தவிராதாயிருக்கும். *

ஈடு;அவ;—முதற்பாட்டு. "ஸௌந்தர்யத்தாலும் ஶீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றதொருவிஷயமாயிற்று அது; நீசெய்யப் புகுகிற இது அவ்விஷயத்துக்கு பழிப்பை விளைக்கப் புகுகிறாய்கிடாய்" என்று தோழி சொல்ல; நான் அவ்விஷயத்துக்குப் பழிப்புண்டாக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பு அறுக்கப் புகுகிறேன்காணென்கிறாள்.

மாசறுசோதி என்செய்யவாய்மணிக்குன்றத்தை*
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியைநாடியே*
பாசறவெய்தி அறிவிழந்தெனைநாளையம்*
ஏசறுமூரவர்கவ்வை தோழீயென்செய்யுமே? (க)

ப:—முதற்பாட்டில், இவளுடைய வ்யவஸாயம் அறிந்த தோழி விலக்க உத்யோகித்து, "ஊரார் பழிசொல்வார்காண்" என்ன; அவனுடைய ஆபிரூப்யாதிகளிலே யகப்பட்டுக் கலங்கின என்னை ஊர்ப்பழி என்னசெய்யுமென்கிறாள்.

மாசு—அழுக்கு
அறு—அற்ற
சோதி—தேஜஸ்ஸையுடைத்தாய்
செய்ய—சிவந்த
வாய்—வாயையுடைத்தான
என்மணிக்குன்றத்தை — மாணிக்க மலைபோலே எனக்குபோக்யனானவனாய் (ப்ராணயித்வத்தால் வந்த தாழ்ச்சியாலே)
ஆசு—குற்றம்
அறு—அற்ற
சீலனை—ஶீலத்தையுடையனாய்
ஆதி—தான்முற்பாடனாய்வந்து அநுபவிப்பித்த
மூர்த்தியை—ஸ்வாமியானவனை
நாடியே—நிரந்தரமாகத்தேடி
பாசு—மேனியிற்பசுமை
அறவெய்தி—அழிந்து
அறிவு—அறிவும்

இழந்து—இழந்து
எனைநாளையம்—எத்தனைகாலத்தோம்;
தோழீ—தோழீ
ஏசு—ஏசுதலிலே
அறும்—அறுதிப்பட்ட
ஊரவர்—ஊரவாது
கவ்வை—ஆரவாரம்
என்—எத்தை
செய்யும்—செய்வது;
பாசறவு—நிறமழிவு; பாசென்று-ஸ்நேஹமாய் அத்தை மிகவெய்தியென்றுமாம்; ஏசுதல் - பழித்தல்; கவ்வை - அலர். (க)

ஆறு—நிரதிசய நிர்மலஜ்யோதிஸ்ஸௌந்தர்ய ஸௌசீல்யாத்யஸங்க்யேய கல்யாணகுணகணமஹோததியாயிருந்த பரமபுருஷனை ஆசைப்பட்டுப் பெறாதே அறிவழிந்து எத்தனைகாலமுண்டு தோழீ; ஆனபின்பு, எனக்கு ஒருயுக்தாயுக்தத்தை யுண்டோ? என்னை ஏசுகையிலே தீர்ந்திருக்கிற ஊரவர் கவ்வைதானிப்படி அறிவழிந்திருக்கிற என்னை எத்தைச் செய்வதென்று தோழியைக் குறித்துச் சொல்லுகிறாள். (க)

ஈடு; அவ; —இரண்டாம்பாட்டு. "கீழிற்றிருவாய்மொழியில்நின்றும் இத்திருவாய்மொழிக்குப் புகுருகைக்கு வழியிரண்டாயிருக்கும்; * சீலமில்லாச்சிறியனிலே-கூப்பிட்டார்; கூப்பிடச்செய்தேயும் வந்துமுகங்காட்டாமையாலே, அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் எனக்கு வேண்டாவென்றார்; இப்படி யொழியப் பேறிழவு புறம்பேயாயிருக்கிற ஸம்ஸாரிகள் படியைக்கண்டு வெறுத்தார்; 'ஈச்வரனும் கைவாங்கின இவர்களைநான்திருத்துவேன்' என்று, பகவத்பரத்வத்தை உபபாதித்துத்திருத்தினார்; "இவர்களிலேயொருவனாயிருக்கிற எனக்கு இவ்வாசியுண்டாவதே" என்று, பகவத்க்ருபையைக் கொண்டாடினார்; தாந்திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணினார்; தொடங்கினகார்யம் தலைக்கட்டினவாறே பழைய இழவே தலையெடுத்து, தம் ஆற்றாமையாலே மடலூர்ந்தாகிலும்பெறப்பார்க்கிறாரென்னுதல்; அன்றிக்கே, கீழே, 'மலியுஞ்சுடரொளிமூர்த்தி' என்று - வடிவழகை யநுஸந்தித்து, அநந்தரம் பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அப்போதே பெறாமையாலே, வழியல்லாவழியே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறாரென்னுதல்.

என்செய்யுமூரவர்கவ்வை தோழீயினிநம்மை*
என்செய்யதாமரைக்கண்ணன் என்னைநிறைகொண்டான்*
முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி*
என்செய்யவாயுங்கருங்கண்ணும் பயப்பூர்ந்தவே. (௨)

ப:—அநந்தரம், அவன்கண்ணழகாலே என் ஸர்வஸ்வத்தையும் அபஹரித்து என் வைலக்ஷண்யமடங்க அழிந்திருக்க, ஊரார் என் செய்வதென்கிறாள்.

செய்ய—சிவந்த
தாமரை—தாமரைபோன்ற
கண்ணன் — கண்ணழகையுடையனாய்க்கொண்டு
என்—எனக்கு பவ்யனானவன்
என்னை—என்னை
நிறைகொண்டான்—பூர்த்த்யபஹாரம் பண்ணினான்; (ஸ்த்ரீத்வபூர்த்தி போனபடியாலே)
முன்—முன்புதோற்றுகிற
செய்ய—விலக்ஷணமான
மாமை—மாமைநிறமும்
இழந்து—இழந்து
மேனி—(அதுக்காஶ்ரயமான) ஶரீரமும்
மெலிவு எய்தி—மெலிவு எய்தி (அவன் செய்யவாயும், செய்யதாமரைக்கண்ணும் குறியழியாதிருக்க)
என்—என்
செய்யவாயும்—செய்யவாயும்
கருங்கண்ணும்—கருங்கண்ணும்
பயப்பு—ஒருவெளுப்பாம்படியானவைவர்ண்யம்
ஊர்ந்த—பரந்தன;
தோழி—தோழீ
இனி—இனி
நம்மை—நம்மை
ஊரவர்கவ்வை—ஊரவர்கவ்வை
என்செய்யும்—என்செய்யும்.
நம்மை யென்று — ஸமது:க்கையான தோழியையும் கூட்டிக்கொள்ளுகிறாள். (௨)

ஆறா:—(என்செய்யும்.) எம்பெருமான் தன்னுடைய அதிஶீதளமாய் ஸர்வஸத்வமநோஹரமாய் அருணகமலஸத்ருஶமான அழகிய திருக்கண்களைக் காட்டி என்னைத் தோற்பித்துப் போனான்; அவனை ஸம்ஶ்லேஷிக்கப்பெறாமையாலே, தத்ஸம்ஶ்லேஷஜநிதமான ஔஜ்ஜ்வல்யமுமிழந்து, மேனிமெலிவெய்து, தத்ஸம்ஶ்லேஷத்தால் புதுக்கணித்த என்செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த; இனி நம்மை என்செய்யும் ஊரவர் கவ்வை தோழீ யென்கிறாள்.

(௨)

ஈடு;—மூன்றாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; "எல்லாஞ்செய்தாலும் பழி பரிஹரிக்கவேண்டாவோ" என்றிருக்குமிறே இவள்; "இதுபழி" என்று பரிஹரிக்க வொண்ணாதபடி எனக்கு ப்ராவண்யத்தை விளைத்தவனெங்குத்தான்; "இதுபழி" என்று மீளாதபடி இவ்விஷயத்திலே ப்ரவணையாயிருக்கிற நான் எவ்வளவிலே நிற்கிறேன், "இதுபழி" என்று சொல்லுவர்கள்தான் எவ்வளவிலே நிற்கிறார்கள், அவர்கள் சொல்லுகிறத்தைச் சொல்லுகிற தோழியான நீதான் எவ்வளவிலே நிற்கிறா யென்கிறாள்.

ஊர்ந்தசகடமுதைத்தபாதத்தன்* பேய்முலை
சார்ந்துசுவைத்த செவ்வாயன் என்னைநிறைகொண்டான்*
பேர்ந்தும் பெயர்ந்துமவனோடன்றியோர் சொல்லிலேன்*
தீர்ந்தவென்தோழீ என்செய்யுமூரவர்கவ்வையே. (௩)

ப:—அநந்தரம், அவனுடைய விரோதிநிவர்த்தகமான அதிபாலசேஷ்டிதத்திலே அகப்பட்ட என்னை ஊரார் அலர் என்செய்யு மென்கிறாள்.

ஊர்ந்த—நலியநினைந்துஊர்ந்துவந்த
சகடம்—சகடத்தை
உதைத்த — (ஸ்தந்யார்த்தியாயழுது நிமிர்ந்த அந்யபரவ்யாபாரத்தாலே முறிந்துவிழும்படி) உதைத்த
பாதத்தன் — திருவடிகளையுடையவனாய் (அதுபக்வதசையாம்படி அதிசைசவாவஸ்தையிலே)
பேய்முலை—பேய்முலையை
சார்ந்து—(தாய்முலையோபாதி நெஞ்சு பொருந்திச் செறிந்து)
சுவைத்த—(ப்ராணஸஹிதமாகப்பசையற) உண்ட
செம்—சிவந்த
வாயன் — திருப்பவளத்தையுடையவன் (இப்பருவம்நிரம்பாச் செயலாலே)
என்—என்
நிறையை—நிரப்பத்தை
கொண்டான்—அபஹரித்தான் (ஆகையாலே)
பேர்ந்தும் பெயர்ந்தும்—மீண்டும்மீண்டும்
அவனோடன்றி — அவனோடுசேர்ந்ததன்றி
ஓர்—வேறொரு
சொல்—வார்த்தையை
இலேன்—உடையேனல்லேன்;
என்—என்னோடொருநெஞ்சாம்படி
தீர்ந்த—அறுதியுடைய
தோழி—தோழீ
ஊரவர்—ஊரவருடைய
கவ்வை—அலர்
என்—எத்தை
செய்யும்—செய்யும்;
அவன்கொண்ட நிறையை மீள அழைக்குமோ; அவனையொழிய வேறே சிலரை நான்பெற்றிடப்பண்ணுமோ வென்று கருத்து. (௩)

ஆறு;—(ஊர்ந்தசகடம்) "ஆகிலும் மடலூருகை நமக்குப் போராது" என்று தோழிசொல்ல,—தன்னுடைய அதிதைவாதி மாநுஷ திவ்யசேஷ்டிதங்களாலும் அழகாலும் என்னை நிறைக்கொண்டான்; ஆனபின்பு, பேர்ந்தும் பெயர்ந்தும் அவன் திறமல்லது மற்றேதேனும் சொல்லிலும் கேளேன். நான் ஏதேனுமொன்றைச் சொன்னால் அத்தைச் செய்கையிலே எனக்கு முற்படவே துணிந்திருக்கக்கடவ நீ என்னை ப்ரதிபந்திக்கலாமோ? நீ ப்ரதிபந்திக்கிறது "ஊரவர் நம்மைப்பழிசொல்லுவர்" என்றிறே, அது தத்குணபராஜிதரான நம்மைச்செய்வதென்? என்கிறாள். (௩)

ஈடு:—நாலாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; ஊரார்சொல்லும்பழியேயாய், அவன்தான் நமக்கு உடலாவோனா அவர்கள் சொல்லும்பழி பொருந்திருக்கைக்கு; ஆனபின்பு அவன் கடியன்காணென்றாள்; ஏதேனுமொன்றைச் சொல்லியாகிலும் மீட்கவேணுமே அவளுக்கு, "அவன் நிர்க்க்ருணன்காண்" என்ன; "கெடுவாய் நீசொல்லும் வார்த்தையேயிது, அவன் நமக்கு என்னகுறை செய்தான்" என்ன, "ஊரவர்பழிசொல்லிலும் மீளாதபடியான ப்ராவண்யமுண்டானவிடத்திலும் இத்தசையில்வந்து முகங்காட்டிற்றிலன் கண்டாயே" என்ன; அவன் இப்போது வந்து முகங்காட்டிற்றிலகினாலும், தான் முகங்காட்டாதபோதும் தன்னையொழிய நமக்கு மற்றொன்றால் பொருந்தாதபடி பண்ணினானே! அவன் செய்தபடி பொல்லாதோவென்கிறார்.

ஊரவர்கவ்வையெருவிட்டன்னைசொல்நீர்படுத்து*
ஈரநெல்வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ்செய்யுள்*
பேரமர்காதல் கடல்புரையவிளைவித்த*
காரமர்மேனி நங்கண்ணன்தோழீகடியனே? (௪)

ப—அநந்தரம், தன்பக்கலிலே அபிநிவேசத்தை வளரும்படி க்ருஷி பண்ணின உபகாரசீலனை, அநுபகாரகரைப்போலே குறையச்சொல்லக்கடவையோவென்று; தன்னைமீட்கைக்காக அவனை யியற்பழித்ததோழியைக் குறித்துச் சொல்லுகிறாள்.

ஆறு;—(ஊரவர்கவ்வை.) "இப்படி தன்னைப்பிரிந்து அத்யந்தம் அவஸந்நையா யிருக்கச்செய்தே, தன்னுடைய லோபத்தாலே தன்னை உனக்குகாட்டித் தாராதேயிருக்கிற அவனை யாசைப்படுகிறதுதான் என்" என்று தோழிசொல்ல; ப்ரதிபந்தக ஶதஸஹஸ்ரங்க ளுளவாயிருக்கச்செய்தே, அவற்றையே வர்த்தகமாகக் கொண்டு தன்திருவடிகளிலே நிரவதிகமான அபிநிவேஶத்தை எனக்குவிளைவித்த காரமர்மேனி நங்கண்ணனையே! தோழீ லுப்தனென்று சொல்லுகிறதென்கிறாள். (௪)

ஈடு;—அஞ்சாம்பாட்டு. நீ "அவனுக்கு நீர்மையில்லை, நிர்க்க்ருணன்" என்றாயாகிலும்; அச்சொலவுக்கு ஒரு ப்ரயோஜநமில்லை காண், நீ அவனுக்கு குணஹாநி சொல்லுவது என்னை மீட்கைக்காகவிறே, அதுவும் நான் அவனைப்பற்றுகைக்கு உறுப்பாகச்சொன்ஞயானவித்தனை என்கிறாள்.

கடியன்கொடியன் நெடியமாலுலகங்கொண்ட
அடியன்* அறிவருமேனிமாயத்தன்* ஆகிலுங்
கொடியவென்னெஞ்சமவனென்றேகிடக்குமெல்லே*
துடிகொளிடைமடத்தோழீ! அன்னையென்செய்யுமே? (௫)

ஊரார்—ஊரார்
கவ்வை—அலராகிற
எரு—எருவை
இட்டு—இட்டு
அன்னை—தாயாருடைய
சொல்—நிரந்தரஹிதவசநமாகிற
நீர்—நீரை
படுத்தி—நிறுத்தி
ஈரம்—ஆசையாகிற
நெல்—நெல்லை
வித்தி—விரைத்து
முளைத்த—அதுமுளைத்த
நெஞ்சப்—நெஞ்சமாகிற
பெரும்—பெரிய
செய்யுள்—விளைநிலத்துக்குள்ளே
பேர்—மிகவும்பெருத்து

அமர்—ஊர்ப்பூசலையுடைத்தான
காதல்—அபிநிவேஶத்தை
கடல்புரைய—கடல்போலே ஸம்ருத்தமாக
விளைவித்த—பலிக்கும்படி பண்ணின
கார் - வர்ஷுகவலாஹகஸ்வபாவத்தை
அமர்—உடைத்தான
மேனி—திருமேனியையுடையனாய்
நம்—நமக்கு பவ்யனான
கண்ணன்—க்ருஷ்ணன்
தோழீ—(முன்பு அவன்குணத்தைச் சொல்லிமூட்டின) தோழீ
கடியனே—(இன்று அவன் குறை சொல்லியியர்பழிக்கும்படி) கடியனானே?
பேரமர்—பெரியவமர்த்தியுமாம் (௪)

ப:—அநந்தரம், நீ இயல்பழித்தபடியே குணஹீநனாகிலும், என் நெஞ்சு என்னை அநந்யார்ஹமாக்கின அவனையொழிய அறியாதென்கிறாள்.

கடியன்—(ஸ்வகார்யத்தில் எதிர்த்தலை பாராமல் ஶீக்ரப்ரவ்ருத்திபண்ணும்) கடுமையையுடையனாய்
கொடியன்—(அக்காரியம் தலைக்கட்டினால் புரிந்துபாராமல்போம்) கொடியவனாய்
நெடிய—(போகப்புக்கால் விலக்கவரிதாம்படி) பெரிய
மால்—மேன்மையை யுடையனாய்
உலகம்—லோகமடங்க
கொண்ட—தன்னதேயாம்படி எதிர்த்தலைக்கு ஒன்றும் ஒட்டாமல் அநந்யார்ஹமாக்கி
அடியன்—கார்கடைக்கொள்ளும் வஞ்சகனாய்
அறிவு—“ஸ்வச்சந்தன் ‘க்ருத்ரிமன்’’ என்று விவேகிக்க
அரு—அரிதாம்படி
மேனி—அழகாலேமயக்கும்
மாயத்தனாகிலும் — ஆஶ்சர்யத்தையுடையவனேயாகிலும்
கொடிய — (லோகமர்யாதையன்றியே குற்றஞ்சொல்லிமீட்கவரிதாம்படி) கொடிதான
என்—என்
நெஞ்சம்—நெஞ்சமானது
அவனே—(கீழ்ச்சொன்ன ஸ்வபாவவிஶேஷங்களையுடைய) அவனே தஞ்சம்
என்று—என்று
கிடக்கும்—கிடவாநிற்கும்;
எல்லே — தான்முற்பாடனாய் மேல்விழுகையாலும் புறம்புள்ள உறவில் பற்றறுக்கையாலும் அதிஶயித வ்யாமோஹத்தாலும் அநந்யார்ஹமாம்படி தன்கபற்கீழே இட்டுக்கொள்ளுகையாலும் நம்மளவிற்பண்ணின உபகாரம்பரிச்சேதிக்க வரிதான வடிவையுடைய ஆஶ்சர்யபூதனாகையாலும், இக்குணங்களை யுடையவனென்று நினைத்திராநின்றது;) எல்லே! இதொருநெஞ்சின் ஸ்வபாவமிருந்தபடியே!
துடி—துடியினழகை
கொள்—கொள்வதான
இடை—இடையையும்,
மடம்—மடப்பத்தையுமுடைய
தோழி—தோழீ (நீ இந்த ப்ரணயதாரையில் வாசியறியும் ஆபிரூப்யாத்மகுணங்களை யுடையையாயிருக்கநிஷேதித்தது தாயார் நியமநத்துக்கு அஞ்சியோ)
அன்னை—அவள்
என்—எத்தை
செய்யும்—செய்வது;
எல்லேயென்பது—என்னேயென்றாய் ஆஶ்சர்யமாதல்; தோழியை எல்லேயென்று ஸம்போதித்ததாதல்; மால்-பெருமையும் வ்யாமோஹமும் (ரு)

ஆறு;—(கடியன்.) நீ சொன்னபடியே அவன் லுப்தன், நிர்க்ருணன், துஷ்ப்ராபன், வஞ்சகன், த்ரவகமஸ்வரூப ஸ்வபாவசேஷ்

டிதன், மற்றும் ஶதஸஹஸ்ரதோஷங்களை யுடையவனாகிலும், கொடிய என்னெஞ்சம் அவனென்றேகிடக்கும், என்னே! ஒரு நெஞ்சினுடைய அபிநிவேஶமேயிது என்று பிராட்டி அருளிச்செய்ய; தோழியானவள், "இப்படி அபிநிவேஶிக்கை ஈடோ, அன்னைமார் பொடியில் செய்வதென்" என்ன; விரஹாக்நியாலே தக்தராயிருக்கிற நம்மை எத்தைச்செய்வதென்கிறாள். (௫)

ஈடு அவ;—ஆறும்பாட்டு, கீழ், அன்னை என்செய்யுமென்று—நீசெய்கிறவித்தைப் பொறுள்கிடாயென்ன, அவள்பொறுதேசெய்வதென் என்னுமளவிலே நின்றது, இதில் நீஇப்படி வ்யவஸிதையானபடியறிந்தால் அவள்ஜீவியாள்கிடாயென்ன, அவள்ஜீவிக்கிலென்; முடியிலென் என்கிறாள்.

அன்னையென்செய்யிலெனூரென்சொல்லிலென் தோழிமீர்*
என்னையினியுமக்காசையில்லை யகப்பட்டேன்*
முன்னையமரர்முதல்வன் வண்துவராபதி
மன்னன்*மணிவண்ணன் வாசுதேவன்வலையுளே. (௬)

ப:—அநந்தரம், அவனுடைய ஆகர்ஷகமான ஸ்வபாவங்களிலே யகப்பட்டேன், என்னை நீங்கள் ஆசையறவமையுமென்று, திரளவந்த தோழிமாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

தோழிமீர் — (ஸமாநஸுகது:கைகளான) தோழிமீர்
முன்னை—ப்ரதமஜரான
அமரர்—நித்யஸூரிகளுக்கு
முதல்வன் — ப்ரதானனான மேன்மையையுடையனாய்
வண்—நிரதிஶயஸம்பத்தையுடைய
துவராபதி—ஸ்ரீமத்த்வாரகைக்கு
மன்னன்—நிர்வாஹகனான நீர்மையையுடையனாய் (இரண்டுமில்லாதவன்றும் விடவொண்ணாத)
மணி—நீலரத்நம்போலே தர்ஶநீயமான
வண்ணன்—ஆபிரூப்யத்தை யுடையனாய்
வாசுதேவன் — (அழகில்லையாகிலும் விடவொண்ணாத அநுரூபமான ஆபிஜாத்யத்தை யுடைய) வஸுதேவதநயனானவனுடைய
வலையுளே—(இப்படி நாலுபாடும்கண்ணியான ஆகர்ஷகசேஷ்டிதரூபமான) வலைக்குள்ளே தப்பவொண்ணாதபடி
அகப்பட்டேன்—அகப்பட்டேன்;
இனி—ஆனபின்பு
என்னை—(மீட்கவரிய) என்னைப்பற்ற
உமக்கு—(மீட்கநினைத்திருக்கிற) உங்களுக்கு

ஆசை — விதேயையாக ஆசைப்பட வேண்டுவது
இல்லை—இல்லை (ஆகையாலே;
அன்னை—தாயார்
என்—எது
செய்யில்—செய்யில்
என்—என்;
ஊர்—ஊரவர்
என்—எது
சொல்லில்—சொல்லில்
என்—என்
அவள்செய்யும் ப்ரியத்தோடு அப்ரியத்தோடு வாசியில்லை; அவர்கள்சொல்லும் குணத்தோடு தோஷத்தோடு வாசியில்லை யென்றுகருத்து (௬)

ஆறு;—(அன்னை.) ஸ்வபாவதஏவ நிரஸ்த ஸமஸ்தஸாம்ஸாரிக ஸ்வபாவராய் அஸ்கலிதஜ்ஞாநரான ஶேஷஶேஷாஶந வைநதேயாத்யஸங்க்யேய பரிஜநங்களாலே அநவரதபரிசரிதசரணயுகளனாயிருந்துவைத்து, அதிக்ஷுத்ர மநுஷ்யஸஜாதீயதயா அவதீர்ணனாய் வந்துவராபதித்திருநகரியிலே ஆஶ்ரிதபரதந்த்ரனாய்க்கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீவஸுதேவர்திருமகனுடைய கல்யாணகுணங்களாகிற வலையுள்ளேயகப்பட்டேன்; இனி என்னை அன்னையென்செய்யிலென், ஊரென்சொல்லிலென்; தோழிமீர், என்னையினியுமக்காசையில்லை யென்கிறாள். (௬)

ஈடு; அவ.—ஏழாம்பாட்டு. அவன் குணஹாநி சொல்லுகிறஸ்த்ரீகள் வாயடங்கும்படி, நாம் அவனை வரக்கண்டு அந்த உபகாரத்துக்காகத்தலையாலே வணங்கவல்லோமே யென்கிறாள்.

வலையுளகப்படுத்தென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு*
அலைகடற்பள்ளியம்மானை ஆழிப்பிரான்தன்னை*
கலைகொளகலல்குல்தோழி நங்கண்களாற்கண்டு*
தலையில்வணங்கவுமாங்கொலோ தையலார்முன்பே. (௭)

ப:—அநந்தரம், ஆஶ்ரயணார்த்தமான க்ஷீரார்ணவஶயநத்தையுடைய ஸர்வேஶ்வரனை நாட்டார்முன்பே நாம்கண்டு ஆதரிக்கக்கூடுமோவென்று அந்தரங்கையான தோழியைக்குறித்து உரைக்கிறாள்.

என்னை—என்னை
வலையுள்—தன்னுடைய ஆகர்ஷககுண சேஷ்டிதங்களிலே
அகப்படுத்து—அகப்படுத்தி
நல்—(என்னிலும் தன்பக்கல்) நலத்தையுடைய
நெஞ்சம்—நெஞ்சை
கூவிக்கொண்டு — அடியறுத்தழைத்

துக்கொண்டவனாய் (அந்நெஞ்சு தன்பக்கலிலே ப்ரவணமாகைக்கடியாக திரைக்குள்ளே கிடப்பாரைப் போலே)
அலை — அலைகிற
கடல்—கடலுக்குள்ளே
பள்ளி — ஏகாந்தமாகப் பள்ளிகொள்வானாய்
எம்மானை — அக்கிடையழகைக்காட்டி என்னை அடிமைகொண்ட ஸ்வாமியாய்
ஆழி—(அவ்வழக்கைக் காத்தூட்டும்) திருவாழியையுடைய
பிரான்தன்னை — மஹோபகாரகனானவனை
கலை—பரிவட்டவுடையழகை
கொள்—உடைத்தாய்
அகல்—விஸ்தீர்ணமான
அல்குல்—அல்குலையுடைய
தோழி—தோழீ (இருவருமொக்க)
நம்—நம்
கண்களால்—கண்களாலே
கண்டு—கண்டு
தையலார்—பழிசொல்லுகிற தையலார்
முன்பே—முன்பே (அவன்வந்த உபகாரந்தோன்ற)
தலையில்—தலையாலே
வணங்கவும்—வணங்கவும்
ஆங்கொலோ—ஆகக்கூடுமோ? (௭)

ஆறு;—(வலையுள்.) இப்படி தன் நிலைமையை மெய்யாகச் சொன்னபின்பு, "இனி இவளால் ஒரு செயலில்லை" என்றுகொண்டு இவளுடைய அத்யவஸாயத்தைத் தோழியிசைந்தபின்பு, அவளைக்குறித்து; தன்னுடைய ஸ்வரூபரூபகுண சேஷ்டிதங்களாகிற வலையுள்ளே என்னை யகப்படுத்தி, என்னுடைய நெஞ்சைக் கூவிக்கொண்டு, ஆரும் செல்லவொண்ணாததொரு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற ஆழிப்பிரான்தன்னை, கலைகொளகல்குல் தோழி, அவனுக்குக் குணஹாநி சொல்லுகிற இந்தத்தையலார்கண்ணெதிரே நங்கண்களால்கண்டு தலையில்வணங்கவுமாங்கொலோவென்கிறாள். (௭)

ஈடு;—எட்டாம்பாட்டு. மஹோபகாரகனை "குணஹீநன்" என்று சொல்லுகிற தாய்மார், "இவனையாகாதே நாம் குணஹீநனென்றது" என்று லஜ்ஜிக்கும்படி என்றோ நாம் அவனைக் காண்பதென்கிறாள். அவன் தன்ஸத்தையையுண்டாக்கி, நம் ஸத்தையைத் தந்தான்; நாம் அவன்ஸத்தையாலுண்டானபலம் பெறுவதென்றோ வென்கிறாள்.

பேய்முலையுண்டுசகடம்பாய்ந்துமருதிடை
போய்முதல்சாய்த்து* புள்வாய்பிளந்துகளிறட்ட*
தூமுறுவல்தொண்டைவாய்ப்பிரானை எந்நாள்கொலோ*
யாமுறுகின்றதுதோழீ அன்னையர்நாணவே. (௮)

ப — அநந்தரம், அநாயாஸேந அகிலவிரோதியையும் நிவர்த்திப்பிக்குமவனை நாங்கிட்டுவது என்றோ வென்கிறாள்.

பேய்—பேயின்
முலை—முலையை
உண்டு—உண்டு
சகடம்—ஶகடத்தை
பாய்ந்து—பாய்ந்து
மருது—மருதின்
இடை—நடுவே
போய்—போய்
முதல்—வேர்பறித்து
சாய்த்து—விழவிட்டு
புள்—பகாஸுரனாகிற பக்ஷியின்
வாய்—வாயை
பிளந்து—பிளந்து
களிறு—குவலயாபீடத்தை
அட்ட—நிரஸித்தவனாய் (விரோதிகளினுடைய பற்றுசறுதியாலே ஸாவஜ்ஞமாக ஸ்மிதம்பண்ணுகையாலே)
தூ—வெளுத்த
முறுவல்—முறுவலொளியையும்
தொண்டை—தொண்டைப்பழம் போலே சிவந்த
வாய்—அதரஶோபையையும்
பிரானை — ஆஶ்ரிதைகளான கோபிமாரை அநுபவித்த உபகாரகனை
தோழீ—தோழீ
அன்னையர் — (அவனைக் குற்றஞ்சொன்ன) அன்னையர்
நாண—லஜ்ஜிக்கும்படியாக
யாம்—நாம்
உறுகின்றது—கிட்டுவது
எந்நாள்கொலோ-என்றாயிருக்கிறதோ? நாம் கிட்டினால் அவர்கள் நாணுமித்தனையென்றுகருத்து. (௮)

ஆறு—(பேய்முலை.) பூதநா ஶகட யமளார்ஜுந குவலயாபீட ப்ரப்ருத்யாஶ்ரிதவிரோதி நிரஸநைக ஸ்வபாவனாயிருந்தவனை "குணஹீநன்" என்றுசொல்லுகிற அன்னையர், "இவனையாகாதே ப்ரணயித்வ வாத்ஸல்யகாருண்யாதி குணரஹிதனென்று சொல்லுவது" என்று லஜ்ஜித்துத் தலையெடுக்கமாட்டாதே யிருக்கும்படி, எந்நாள் கொலோ யாமுறுகின்றது தோழீ யென்கிறாள். (௮)

ஈடு;அவ—ஒன்பதாம்பாட்டு. நெஞ்சு விம்மல்பொருமலாகாநிற்கவும், தன் ஸ்த்ரீத்வத்தாலே இதுக்குமுன்பு மறைத்துக்கொண்டு போந்தாள்; இனி "அவனையழிக்கப்புகுகிற நாம்ஆர்க்குமறைப்பது" என்று அதுதன்னையே சொல்லுகிறாள். (௮)

நாணும்நிறையுங்கவர்ந்தென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு*
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை*
ஆணையென்தோழீ! உலகுதோறலர்தூற்றி* ஆம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே. (௯)

ப.—அநந்தரம், என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி எட்டாமலிருக்கிறவனை. ஸர்வலோகமும் பழிக்கும்படி மடலூரக்கடவேனென்று தோழிக்குத் தன்னெஞ்சை வெளியிடுகிறாள்.

என்னை—என்னை
நாணும்—லஜ்ஜையையும்
நிறையும்—பூர்த்தியையும்
கவர்ந்து—அபஹரித்து
நல்—ஸ்நேஹோத்தரமான
நெஞ்சம்—நெஞ்சையும்
கூவிக்கொண்டு- அழைத்துக்கொண்டு
(க) "விஷூசீர்வ்ருஷேஷு ஸவ்ருக்ஷேஷு விஶ்வதஃப்ருஷ்டேஷு ஸர்வத:ப்ருஷ்டேஷு" என்கிறபடியே)
சேணுயர்—மிகவும் உயர்ந்த
வானத்து — பரமாகாஶஶப்தவாச்யமான) பரமபதத்திலே
இருக்கும்—இருப்பானாய்
தேவர்—ஸூரிகளுக்கு
பிரான்தன்னை — (இங்குப்பண்ணின ப்ரவ்ருத்திகளை ப்ரகாஶிப்பிக்கும்) ஸர்வாதிகனானவனை
என்—எனக்குவிதேயையான
தோழீ—தோழீ
ஆணை—உன்னாணையே
உலகுதோறு—ஸர்வலோகங்களிலும்
அலர்—பழி
தூற்றி—(ப்ரஸித்தமாம்படி) தூற்றி
ஆம்—என்னால் செய்யலாம்
கோணைகள்—மிறுக்குக்களடங்க
செய்து—செய்து
குதிரி—ஒருவர்க்கடங்காத நாணமற்ற பெண்
ஆய்—ஆய்க்கொண்டு
மடல்—மடல்
ஊர்தும்—ஊரக்கடவேன்;
குதிரி—நாணப்பெண்
கோணை—மிறுக்கு. (௯)

ஆறு;—(நாணும்) நாணும்நிறைவுங்கவர்ந்து என்னை நன்னெஞ்சங் கூவிக்கொண்டு, ஒருவர்க்கும் செல்லவொண்ணாத திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற தேவபிரான்தன்னை அயர்வறுமமரர்களுங் கூடத் தேறுதலொருபடி, தோழீ, ஆணை, அவனையுலகுதோறலர் தூற்றி, மற்றும் செய்யலாம் மிறுக்குக்களெல்லாம்செய்து குதிரியாய் மடலூர்துமென்கிறாள். (௯)

(க) சாந்தோ-௩-க௩.

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. ஜகத்க்ஷோபம்பிறக்கும்படி மடலூர்ந்தாகிலும், நிரதிசயபோக்யனானவனைக் காணக்கடவேனென்கிறாள்.

யாமடலூர்ந்துமெம்மாழி யங்கைப்பிரானுடை*
தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்*
யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார்*
நாமடங்காப்பழிதூற்றி நாடுமிரைக்கவே. (௧0)

ப—அநந்தரம், நிரதிசயபோக்யமான அஸாதாரண சிஹ்நங்களையுடையவனை எங்கும்பழிதூற்றி ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி மடலூர்ந்தேயாகிலும் அவன் மாலையைச்சூடுவோமென்கிறாள்.

(அத்யந்தாபிநிவேசத்தாலே)
யா—ஏதேனுமொருபடியாலும் ஸ்த்ரீத்வாநுரூபமான
மடம்—ஒடுக்கம்
இன்றி—இன்றியே (லோகத்தளவில் பர்யவஸியாதே)
தெருவுதோறு—தெருவுதோறும்புக்கு
அயல்—அயலாரான
தையலார்—ஸ்த்ரீகளானவர்கள்
நா—நா
மடங்கா—ஓவாதேசொல்லும்
பழி—பழியை
தூற்றி—தூற்றி
நாடும்—ஸகலஜகத்தும்
இரைக்க — க்ஷுபிதமாய்க் கூப்பிடும்படி
யாம்—மடலூரத்தகாத ஸ்த்ரீத்வத்தையுடைய நாம்
மடல்—(நமக்குகூடலாத) மடலை
ஊர்ந்தும்—ஊர்ந்தேயாகிலும்

ஆழியங்கை— கையுந்திருவாழியுமான வழகையநுபவிப்பித்து
எம்—நம்மை வசீகரித்த
பிரானுடை—உபகாரகனுடைய
தூ—செவ்வியாலே தூய்தான
மடல்—இதழையுடைய
தண்—ஸ்ரமஹரமாய்
அம்—தர்சநீயமான
துழாய்—திருத்துழாய்
மலர்—பூந்தாரை
கொண்டு—(க) "வதிஸஹோ நிதா வஸீதா-பதிஸம்மாநிதாஸீதா" என்கிற கணக்கிலே கையில்மடல் வாங்குகைக்காக) அவன்தரவாங்கி
சூடுவோம் — நந்தலையிலே சூடக்கடவோம்.
பன்மை — மடலூரத்துணிந்த கர்வோக்தி; யாமடமென்றது-ஏதேனுமொருமடப்பமுமென்றபடி (௧0)

ஆறு;—(யாமடலூர்ந்தும்.) யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார்நாவுங் கூடமடங்காத பழிகளைத்தூற்றி நாடுமிரைக்க யாம் மடலூர்ந்தாகிலும், எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோமென்கிறாள். (௧0)

(க) ரா-அயோ ௧௬-௨௧.

ஈடு; அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லாரிருந்த தேசத்தே அவன்தானேவந்து நித்யஸம்ஶ்லேஷம் பண்ணுமென்கிறார்.

இரைக்குங்கருங்கடல்வண்ணன் கண்ணபிரான்தன்னை*
விரைக்கொள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
நிரைக்கொளந்தாதி யோராயிரத்துளிப்பத்தும்*
உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகுந்தம்மூரெல்லாம். (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அநுஸந்திக்கவல்லவர்களிருந்த தேசமே பரமபதமமென்று பலத்தையருளிச்செய்கிறார்.

இரைக்கும்—அலையெறிந்திரைக்கிற
கருங்கடல்—கருங்கடல்போலே அபிவ்ருத்தமான
வண்ணன்—வடிவழகையுடையனாய்
பிரான்—அவ்வழகை ஆஶ்ரிதர்க்கு அநுபவிப்பிக்கும் ஸ்வபாவனான
கண்ணன் தன்னை—க்ருஷ்ணனை
விரைக்கொள்—பரிமளோத்தரமான
பொழில்—பொழிலையுடைய
குருகூரவர் — திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
நிரை—எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் பாவும் இனமும் இசையும் தாளமும் மற்றுமுள்ள ஶப்தாலங்காரமும்
கொள்—உடையதாய்
அந்தாதி—அந்தாதியாய்
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்துள்—ஆயிரந்திருவாய்மொழியிலுள்ளும்
இப்பத்தும்—இவைபத்தையும்
உரைக்கவல்லார்க்கு— ஶப்தமாத்ரோச்சாரணம் பண்ணுமவர்களுக்கு
தம்—தாந்தாங்களிருந்த
ஊரெல்லாம்—ஊரெல்லாம்
வைகுந்தம்—பரமபதமென்னலாம்படி,
ஆகும்—ஆநந்தாவஹமாயிருக்கும்
இது—கலித்துறை. (கக)

ஆறு;—(இரைக்கும்) ஓதங்கிளருகிற கடல்போலேயிருந்த திருமேனியையுடைய கண்ணபிரான்தன்னை விரைக்கொள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல் நிரைக்கொளந்தாதியாயிரத்துள் இப்பத்தும் உரைக்கவல்லார்க்கு இத்திருவாய்மொழியைச் சொல்ல, தாங்களிருந்ததேசமே தங்களுக்குத் திருநாடென்கிறார். (கக)

மூன்றாந்திருவாய்மொழி வ்யாக்யாநம் முற்றிற்று.

ஸ்ரீயதேராமாநுஜாயநம:.

நான்காந்திருவாய்மொழி ஊரெல்லாம் ப்ரவேசம்.

ஆறு;—(ஊரெல்லாந்துஞ்சி.) இப்படி மடலூருகையிலே அத்யவஸித்திருந்த பிராட்டி மடலூரக்ஷமையல்லாதபடி அத்யந்தம் அவஸந்நையாய்;

ப:— நாலாந்திருவாய்மொழியில், கீழ்-தம்முடைய அநுபவாபிநிவேசத்தாலே ஸத்வராய்க்கொண்டு ஸ்வரூபாநுரூபமான ஸ்வப்ரவ்ருத்தியாலேயாகிலும் அவனைப்பெறுவதாக உத்யோகித்த இவர், அநுபவயோக்யமானகாலம் ஸந்நிஹிதமாயிருக்கச் செய்தேயும் அவன் அஸந்நிஹிதனாயிருக்கையாலே அத்யந்த ஆர்த்தராய் ஒருப்ரவ்ருத்திக்ஷமரல்லாதபடி மிகவும் அவஸந்நராய்: விளம்பக்ஷமரல்லாமையாலே, இவ்வவஸ்தையிலே அவன் முகங்காட்டி ரக்ஷிக்கைக்கு உடலான; அகிலஜகத்ரக்ஷணார்த்தப்ரவ்ருத்தியையும், ஆபிரூப்யப்ரகாசகமான பவ்யதையையும், அநிஷ்டநிராஸகத்வத்தையும், அபீஷ்டலாபத்தாலே புதுக்கணித்த அவயவசோபாதியாலுண்டான அத்யந்தத்ருப்தியையும் உபகாரகவிக்ரஹயோகத்தையும், ஸ்த்ரிரபரிகாருணகணவத்தையும், ஆகாங்க்ஷாஜநகமான அஸாதாரணசிஹ்நத்தையும், ஆச்ரிதார்த்தமாக ஆயுதமெடுத்துக் காரியங்கொள்ளுமாகாரத்தையும், அதிசயித ஐச்வர்யத்தையும், அநந்யார்ஹமாக்கும் அபதாநவிசேஷத்தையும் அநுஸந்தித்து; "ஏவம்வித ஸ்வபாவனான ஈச்வரன் இவ்வவஸ்தையில்வந்து ஸம்ச்லேஷித்து ரக்ஷிக்கிறிலன் முடிகைக்கும் யோக்யதையில்லாதபடி பராதீனமான இவ்வாத்மாவை ரக்ஷிக்கும்விரகென்?" என்று, காலவிளம்பம்பொறுமல் ஆர்த்தராய்க் கூப்பிட்டப்ரகாரத்தை; அபிமதநாயகனான ஈச்வரனைப்பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கிரங்கிக்கூப்பிட்ட நாயகி பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

*

ஈடு; அவ;—"நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்று - பெரியதொரு த்வராரஸமாயிறே கீழ்ச்சென்றது; மடலூரப்பெறுகைதான் அவனைப் பெறுகையோபாதி தேட்டமாம்படி பலஹாநி மிக்கது; இனித்தான், மடலூரும்போது அபிமதவிஷயத்தைப்படத்திலே எழுதவேணுமே, அதுக்கு அவகாசமில்லாதபடி (க) "ஆழி கொண்டன்றிரவி . றைப்ப" என்கிறபடியே ஆதித்யனை மறைத்தானுதல், தைவயோகத்தால் அஸ்மித்ததாதல் செய்து ராத்ரியாய், அதுதான் ஸந்த்யாமாத்ரமன்றிக்கே சராசரங்களடங்கும்படி மத்யராத்ரமாய்; பழிசொல்லுவாரோடு, அநுகூலராய் ஹிதஞ்சொல்லி

(க) பெரியாழ்-திரு-ச-க-அ.

விலக்குவாரோடு வாசியற எல்லாருமொக்க உறங்குகையாலே ஒருவு சாத்துணையுமின்றிக்கே, இவ்வளவிலே, ப்ரளயாத்யாபத்துக்களிலே யுதவும் ஸ்வபாவனுமாய் ஸர்வரக்ஷகனான புருஷோத்தமனுடைய குணங்களை அநுஸந்திக்க, அவைதான் பிரிவிலே அநுஸந்திக்கை யாலே மிகவும் ஆற்றாமைக்கு உறுப்பாய், * வேண்யுத்க்ரத நாதி களிலே யொருப்பட்டாரோபாதி முடிந்து பிழைக்கவேண்டுமளவாய், அதுதன்னைப் பெறுகை மடலூரப்பெறுகையோபாதி தேட்டமாய் விட்டது; (க) [விஷஸ்ய தாதா-விஷஸ்ய தாதா] இத்தனை நற்சரக் குத்தரும் உதாரரை இவ்வூரில்கிடைக்குமோ? [ஒ8-மே] உண்டா னால்தான் எனக்கு இது ஸம்பவிக்குமோ? [ஶஸ்த்ரஸ்ய-ஶஸ்த்ர ஸ்யவா] விஷம்போலே சிறிதுபோதுநின்று கொல்லுமதன்றியே கடுக முடிக்கும் ஶஸ்த்ரத்தைத்தான் தருவாருண்டோ? [வெஶ்மநிராக்ஷஸஸ்ய-வேஶ்மநிராக்ஷஸஸ்ய] பிரித்துவைத்து உயிர்கொலையாக நலி கிறவனுடையஊரிலே, நற்கொலைக்குப் பரிகாரமானத்தைத்தான் தரு வாருண்டோ ? இப்படிமுடிகை தேட்டமாம்படியிருக்கிறவளவிலே, "நாம் ஸர்வரக்ஷகராகையாலே எல்லாருடையரக்ஷணத்துக்குமாகத் திருப்பாற்கடலிலேவந்து சாய்ந்தோம்: உம்முடையரக்ஷணத்திலே உத்யுக்தராயிருந்தோம், க்ரமப்ராப்தி பற்றாமைப் பதறுகிறவித் தனை" என்கிறவித்தை ஸ்மரிப்பிக்க; அவன் ஸர்வரக்ஷகனுகில், நம் முடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனுகில் க்ரமப்ராப்தி பற்றாமல் பதறுகிறோமித்தனை; நம்மோபாதியானுள்ளரக்ஷணம் நமக்குஸித்தி யாதோவென்று அவன்குணஜ்ஞாநத்தாலே தரித்தாராய்ச்செல்லு கிறது.

(கீழ் - தம்முடைய அநுபவா பிநிவேஶத்தாலே ஸத்வர ராய்க்கொண்டு ஸ்வரூபாநநுரூபமான ப்ரவ்ருத்தியிலேயாகிலும் அவனைப்பெறுவதாக உத்யோகித்த இவர், அநுபவயோக்யமான காலம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தேயும் அவன் அஸந்நிஹிதனு கையாலே அத்யந்தம் ஆர்த்தராய் ஒரு ப்ரவ்ருத்திக்ஷமரல்லாதபடி மிகவும் அவஸந்நராய், விளம்பாக்ஷமராகையாலே இவ்வவஸ்த்தை யிலே அவன்வந்து ரக்ஷிக்கைக்கு உடலான குணங்களை ஆர்த்த

(க) ரா ஸு உ-அ-கூ.

ராய்க் கூப்பிட்ட ப்ரகாரத்தை. அபிமதநாயகனான ஈஶ்வரனைப் பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கிரங்கிக் கூப்பிட்ட நாயகி பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.) *

ஈடு;அவ; —முதற்பாட்டு. ப்ரளயாபத்திலே வந்து உதவினவன் என்னை விரஹ ப்ரளயங்கோக்க வந்து உதவாதபின்பு. இனி நான் ஜீவிக்கை என்று ஒரு பொருளுண்டோ? என்று தன்ஜீவநத்திலே நசையறுகிறாள்.

ஊரெல்லாந்துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய்*
நீரெல்லாந்தேறி ஓர்நீளிரவாய்நீண்டதால்*
பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான்வாரானால்*
ஆரெல்லேவல்வினையேன் ஆவிகாப்பாரினியே. (க)

ப:—முதற்பாட்டில், ஜகத்தெல்லாம் இருளாம்படி ஏகாத்ரியாய் நீண்டது; ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரன்வந்து ரக்ஷிக்கிறிலன், இனி இவ்வாத்மாவை ரக்ஷிப்பாராரென்கிறாள்.

(பழிசொல்லும் அயலாரோடு ஹிதஞ்சொல்லும் தாய்மாரோடு ஸமது:க்கைகளாய் உசாத்துணையான தோழிமாரோடு வாசியற ஒரு முகத்தில் தரியாதபடி)
ஊர்—ஊராக
எல்லா—எல்லாரும்
துஞ்சி — உறங்கி (புறம்பே ஒருபதார்த்ததர்ஶநத்தாலே தரியாதபடி)
உலகெல்லாம்—லோகமடைய
நள்—செறிந்த
இருளாய்—இருளாய்
நீர்—நீரென்றுபேர்பெற்றவை
எல்லாம்—எல்லாம்
தேறி— (ஜலசரஸத்த்வங்களினுடைய கோலாஹலமில்லாமையாலே) அலையடங்கித்தெளிந்து (ஒரு ஶப்தஶ்ரவணமில்லாதபடியாய்)
ஓர்—அஹோராத்ரவிபாகமற்று ஏகாகாரமாய்
நீள்—வளர்ந்த
இரவாய்—ராத்ரியேயாய்
நீண்டது — ஓரவதிகாணவொண்ணாதபடி நீண்டுவிட்டது; (இவ்வளவில்)
பார்—ப்ரளயாபத்கதையான பூமியை
எல்லாம்—எல்லாம்
உண்ட—வயிற்றிலேவைத்து ரக்ஷித்தவனாய்
பாம்பு—ஶேஷபூதனான திருவநந்தாழ்வானை
அணையான்— படுக்கையாகக்கொண்டு வடிவுகொடுத்துரக்ஷிக்கையாலே
நம்—நமக்குத் தஞ்சமானவன்
வாரான் — வந்துமுகங்காட்டி ரக்ஷிக்கிறிலன்

எல்லே—என்னே
இனி—ரக்ஷகன் உதவாதபின்பு
வல்-(அநுபவவிநாஶ்யமல்லாத) வலிய
வினையேன் — பாபத்தையுடையேனுன என்னுடைய
ஆவி—ஆத்மாவை
காப்பார்—ரக்ஷிப்பார்
ஆர்—ஆர்;

உறங்குகிற ஊரார்காக்கவோ? ஓரிருள் விழுங்கின லோகம்காக்கவோ? ஜடமானஜலதத்வம்காக்கவோ? பாதகமான தீர்க்கராத்ரிகாக்கவோவென்று கருத்து,
எல்லே—என்னேயென்று விஷாத ஸூசகம் (க)

ஆறு;—ஸர்வஜந்துக்களும் ப்ரஸுப்தமாய் ஸர்வலோகமும் அந்தகாரபரிபூரிதமாம்படி ஒருநீளிரவுவந்து எங்கும்முடிகிறதில்லை. இந்ததசையில் அந்தப்பரமகாருணிகனுன பாம்பணையான் வாராதொழிந்தான், இனிநான் எங்ஙனே தரிக்கும்படியென்கிறுள். (க)

ஈடு;அவ; இரண்டாம்பாட்டு. இத்தசையில் க்ருஷ்ணனும் வருகிறிலன்; என்னேட்டைஸம்பந்தத்தாலே அவனைப்போலே நெஞ்சே நீயும் பாங்கன்றிக்கே யொழிந்தாயென்கிறுள்.

ஆவிகாப்பாரினியா ராழ்கடல்மண்விண்மூடி*
மாவிகாரமாயோர் வல்லிரவாய்நீண்டதால்*
காவிசேர்வண்ணனென்கண்ணனும்வாராஞல்*
பாவியேன்நெஞ்சமே! நீயும்பாங்கல்லையே. (உ)

ப:—அநந்தரம், தன்னுடைய வாபிரூப்யத்தை ப்ரகாஶிப்பித்து ஆஶ்ரிதபவ்யனுன க்ருஷ்ணனும் வருகிறிலன்;'நெஞ்சே; நீயும் விதேயமாயிருக்கிறிலை இனி ப்ராணரக்ஷணம்பண்ணுவாரார் என்று நெஞ்சைக்குறித்துச் சொல்லுகிறுள்.

ஆழ்—ஆழ்ந்த
கடல்—கடலையும்
மண்—பூமியையும்
விண்—ஆகாசத்தையும்
மூடி — மூடி (அவ்வளவில்நில்லாதே அகிலலோகத்தையும் விளாக்கொலைகொள்ளும்படி)
மா—பெரிய
விகாரமாய்—விகாரத்தையுடைத்தாய்க்கொண்டு

வல் —(அநேகம் ஆதித்யர்களாலும் பேதிக்கவரிதான) சிக்கெனவையுடைத்தான
ஓரிரவாய்—தமோமயராத்ரியாய்
நீண்டது—முடிவறவளர்ந்தது;
காவி—நெய்தலோடு
சேர்—சேர்ந்த
வண்ணன்—நிறத்தையுடையனுய்
என் —அந்நிறம் எனக்கு ஸ்வம்மாம்படி பவ்யனுன

கண்ணனும்—க்ருஷ்ணனும்
வாரான்—இவ்வளவில்வருகிறிலன்;
பாவியேன்—(பவ்யனும் அபவ்யனும் படியான) பாபத்தையுடையேனை என்னுடைய
நெஞ்சமே — நெஞ்சமே (அவனைப் போலே)
நீயும்—நீயும்
பாங்கல்லை—அநுகூலித்திருக்கிறிலை;
இனி—ரக்ஷகனை அவனும் உதவாதே உசாத்துணையான நீயும் உதவாத பின்பு
ஆவி—ப்ராணனை
காப்பார்—காப்பார்
ஆர் — ஆர்? ஒருவருமில்லையென்று கருத்து (உ)

ஆறு;—(ஆவிகாப்பார்) ஆழ்கடல்மண்விண்மூடி மாவிகாரமாய் ஓர் வல்லிரவாய்நீண்டது; காவிசேர்வண்ணன் என்கண்ணனும் வருகிறிலன், பாவியேன்நெஞ்சமே நீயும் எனக்குத் துணையன்றியே போனாய்; ஆவிகாப்பாரினியார் என்கிறாள். (உ)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு ஸகலதுக்கங்களையும் போக்கும் ஸ்வபாவனான காகுத்ஸ்தனும் வருகிறிலன், பாதந்த்ர்யாகையாலே முடியவும் விரகறிகிறிலேனென்கிறாள்.

நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே நீளிரவும்*
ஓயும்பொழுதின்றி ஊழியாய்நீண்டதால்*
காயுங்கடுஞ்சிலை என்காகுத்தன்வாரானால்*
மாயும்வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே. (௩)

ப:—அநந்தரம், அநிஷ்டநிவர்த்தநசீலனை சக்ரவர்த்திதிருமகன் வருகிறிலன்' பாரதீனையாகையாலே முடியவிரகறிகிறிலேனென்று நெஞ்சைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நெஞ்சமே—நெஞ்சமே
நீயும்—ஸர்வகார்யத்துக்கும் ப்ரதாநகாரணமான நீயும்
பாங்கல்லைகாண் — விதேயமாயிருக்கிறிலை;
நீள்—பண்டேநீண்டுவருகிற
இரவும்—ராத்ரியும்
ஓயும்பொழுது—ஓயுங்காலம்
இன்றி—இன்றியே
ஊழியாய்—கல்பமாய்க்கொண்டு
நீண்டது—வளர்ந்துவிட்டது;
காயும்—ஆஸ்ரிதவிரோதிகளைச் சுட்டுப் பொகடுவதான
கடு—கடிய
சிலை—ஸ்ரீஸார்ங்கத்தையுடையனை
என்காகுத்தன்— பரோபகாரசீலமான குடியிலேபிறந்த சக்ரவர்த்திதிருமகன்
வாரான் — ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு உதவினாப்போலேவந்து உதவுகிறிலன்;

வல்வினையேன்—(அவன் உதவாமைக்கடியான) ப்ரபல பாபத்தையுடையநான்
பெண்—(முடியும்போது ஸ்வாதந்த்ர்யமில்லாத) பெண்ணாய்
பிறந்து—பிறந்து
மாயும்வகை—முடியும்ப்ரகாரம்
அறியேன்—அறிகிறிலேன். (௩)

ஆறு;—(நீயும்) மடநெஞ்சமே! நீயும் துணையன்றியேபோனாய்; நீளிரவும் ஓயும் பொழுதின்றி ஊழியாய்நீளாநின்றது, ப்ரதிகூலதஹந ஸ்வபாவமான ஸ்ரீஸார்ங்கத்திருவில்லையுடைய என்காகுத்தன்வருகிறிலன், வாராதொழிந்தால்தான் முடியலாமிறே; 'முடிவன்' என்றால் முடியவொண்ணாதபடி பாபத்தினால் பராதீநையாய்ப் பிறந்தேனென்கிறாள். (௩)

ஈடு;அவ;—நாலாம்பாட்டு, கண்டார்க்குப் பொறுக்கவொண்ணாதபடி வ்யஸநம் செல்லாநிற்க, வரையாதேரக்ஷிக்கும் ஸ்ரீவாமநனும் வருகிறிலன், என்சிந்தாவ்யஸநத்தைப் போக்குவாரார்? என்கிறாள்.

பெண்பிறந்தாரெய்தும் பெருந்துயர்காண்கிலேனென்று*
ஒண்சுடரோன் வாராதொளித்தான்* இம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாயெங்காரேறுவாரானால்*
எண்பெரியசிந்தைநோய் தீர்ப்பாராரென்னையே? (௪)

ப:—அநந்தரம். அபேக்ஷித்தபூமியை யளந்துகொண்ட ப்ரீதியாலே புதக்கணித்த அவயவாதிஸோபையாலே செருக்கனான த்ரிவிக்ரமன் வருகிறிலன்; அபரிச்சிந்நமான என்னுடைய சிந்தாரோகத்தைத்தீர்ப்பார் ஆர்? என்கிறாள்.

(பாதந்த்ர்யைகளாய் ம்ருதுஸ்வபாவைகளான)
பெண்—பெண்ணாய்
பிறந்தார்—பிறந்தார்
எய்தும்—ப்ராபிக்கிற
பெருந்துயர்—துஸ்ஸஹமானமஹாது:க்கத்தை
காண்கிலேன்—காணமாட்டுகிறிலேன்
என்று—என்று
ஒண்—உதயகாலத்திலேதர்ஸநீயமான
சுடரோன்—தேஜஸ்ஸையுடைய ஆதித்யன்
(க) "பீஷாஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:" என்று ஈஸ்வராநுவிதாநம் பண்ணிவரும் காலத்திலும்
வாராது—வாராதே
ஒளித்தான்—(ஆராய்ந்தாலும் அறியவொண்ணாதபடி) ஒளித்துப்போனான்

(க) தை-ஆந-அ-

இ—இந்த
மண்—பூமியை
அளந்த — தனக்கேயாம்படி அளந்து கொண்டப்ரீதியாலே
பெரிய—பரந்த
கண்—திருக்கண்களையும்
செம்—சிவந்த
வாய்—திருவதரத்தையுமுடையனும்
எம்—(அந்தபூமியைப்போலே இவ்வ வ்யவஸாயையாலே) எம்போல்வாரையும் அநந்யார்ஹமாக்கி (அத்தாலே)
கார் — காளமேகம்போலே ஸ்யாமளமான வடிவையுடையவனும்
ஏறு — (நினைத்ததுமுடித்தப்ரீதியாலே ருஷபம்போலேசெருக்கனுயிருக்கிற த்ரிவிக்ரமன்
வாரான்—வருகிறிலன்;
எண்—நினைவுக்கு
பெரிய—(அவ்வருகேவிஞ்சி அவாங்மநஸகோசரமான) பெரிய
சிந்தைநோய்—மநோரதவ்யாதியை
என்னை—என்னை
தீர்ப்பார்—தவிர்ப்பார்
ஆர்—ஆர்? (ச)

ஆறு;—(பெண்பிறந்தார்.) நான்படுகிற இந்தமஹாதுːக்கத்தைக் காண்கயில் முடிகையே நன்றென்றுபார்த்து ஆதித்யன்வாராதே, தன்னைக்கொண்டு முடிந்தான்; இந்ததசையில் தன்னுடைய காருண்ய ஸௌசீல்யஸௌந்தர்யாதி குணங்களாலே என்னைத்தோற்பித்து எனக்குப் பரமபோக்யனுயிருந்தவன் வருகிறிலன், வாராதொழிந்தால் அளவிறந்தசிந்தைநோய்தீர்ப்பார் ஆர் என்னை யென்கிருள். (ச)

ஈடு;அவ;—அஞ்சாம்பாட்டு. ஆபத்தில் உதவும் அன்னைபரும் தோழியரும் ஆராய்கிறிலர்கள், அவர்கள் உதவாதபோது உதவும் க்ருஷ்ணனும் வருகிறிலன், நான் ஸப்தாவ ஸேஷையானேனென்கிருள்.

ஆரென்னையாராய்வா ரன்னையருந்தோழியரும்*
நீரென்னேயென்னுதே நீளிரவுந்துஞ்சுவரால்*
காரன்னமேனி நங்கண்ணனும்வாரானுல்*
பேரென்னைமாயாதால் வல்வினையேன்பின்னின்றே. (ரு)

ப;—அநந்தரம், உபகாரசீலனான வடிவையுடைய க்ருஷ்ணனும்வருகிறிலன், நான் நாமாவஸேஷையானேன், என்னையாராய்வார் ஆர் என்கிருள்.

அன்னையரும்—(பரிவராய்வந்து ஆராயும்) தாய்மாரும்
தோழியரும் — (ஸௌஹார்த்தத்தாலே ஆராயும்) தோழிமாரும்
நீர்—இவள்நீர்மை
என்னே—ஏதாயிருக்கிறது
என்னுதே—என்றுநிரூபியாதே,
நீள்—தீர்க்கையான

இரவும்—ராத்ரிமுழுக்க
துஞ்சுவர்—உறங்காநின்றார்கள் (அவர்கள் ஆராயாதவளவிலும் ஆராயக்கடவனாய்)
காரன்ன — (அதிஶயிதோபகாரஶீலமான) காளமேகம்போலேயிருக்கிற
மேனி—திருமேனியையுடையனாய்
நம்—நமக்குபவ்யனான
கண்ணனும்—க்ருஷ்ணனும்
வாரான்—வந்து ஆராய்கிறிலன்;
வல்வினையேன்—(ப்ராப்தராய் ஆராய்வாரும் ஆராயாமைக்கீடான) ப்ரபலபாபத்தையுடையேனான
எனக்கு
பின்—பின்பு
நின்று—நின்று
பேர்—நாமமாத்ரம்
என்னை—என்னை
மாயாது — முடியவொட்டுகிறதில்லை; (ஆனபின்பு)
என்னை — என்னை
ஆராய்வார்—ஆராய்வார்
ஆர்—ஆர்; ஒருவருமில்லையென்றபடி. அத்யந்தாவஸாதம் பிறந்தவளவிலும் ‘இன்னாள்கிடந்தாள்” என்கிற நாமமாத்ரமே ஸத்பாவஸூசகமென்று கருத்து [வல்வினையேன்பின்னின்று-ஆரென்னையாராய்வார்]என்று அந்வயிக்கவுமாம்; நீர் என்செய்தீரென்றதேயென்றுமாம். (௫)

ஆறு;—(ஆரென்னை.) அன்னையருந்தோழியரும் நீரென்னேயென்றதே நீளிரவுந்துஞ்சினார், ஆரென்னையாராய்வார்; ஸர்வாவஸ்தையிலும் எனக்குத் துணையாயிருக்கக்கடவ காரன்னமேனி நங்கண்ணனும் வருகிறிலன், வாராதொழிந்தால் இவ்வ்யஸநத்துக்கு ஆஶ்ரயமான என்பேர் முடியப்பெறலாமிறே, நான்முடிந்தபின்பும் என்னுடைய பேரானது முடிகிறதில்லையென்கிறாள். (௫)

ஈடு; அவ;—ஆறாப்பாட்டு, விரஹவ்யஸநமும் செல்லாநிற்க, ராத்ரியுமாய் ரக்ஷகனானவனும் வாராதொழிந்தால் முடியப்பெறாத ப்ராணனை ரக்ஷிப்பாராரென்கிறாள்.

பின்னின்றகாதல்நோய் நெஞ்சம்பெரிதடுமால்*
முன்னின்றிராவூழி கண்புதையமூடிற்றால்*
மன்னின்றசக்கரத்தெம்மாயவனும் வாரானால்*
இந்நின்றநீளாவி காப்பாராரிவ்விடத்தே. (௬)

ப;—அநந்தரம், அபிநிவேஶமும் ராத்ரியும் நலியாநிற்க, ஸ்திரமான ரக்ஷணோபகரணத்தையுடையவன் வருகிறிலன், என்னுடைய ஆத்மாவை ரக்ஷிப்பாராரென்கிறாள்.

பின்—பின்தொடர்ந்து
நின்ற—விடாமல்நடக்கிற
காதல்—அபிநிவேஶமாகிற
நோய்—நோயானது
நெஞ்சம் — (தனக்குப் பிறப்பிடமான) நெஞ்சை
பெரிது—மிகவும்
அடும்—அழியாநின்றது;
முன்—முன்னே
நின்று—நின்று
இரா—ராத்ரியாகிற
ஊழி—கல்பமானது
கண்—கண்ணானது
புதைய—புதையும்படி
மூடிற்று—மறைத்தது;
(இப்படிபின்னும் முன்னும் விரோதியானவளவில்)
மன்னின்ற—(ஆஶ்ரிதருடைய வினையைக்கடிகைக்கு) நித்யஸந்நிஹிதமான
சக்கரம்—திருவாழியையுடையனாய்
எம்மாயவனும் — ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களாலே தன்னை என்போல்வார்க்கு ஸ்வமாக்கின க்ருஷ்ணனும்
வாரான்—வருகிறிலன்;
நின்ற — நிரந்தர து:காநுபவம் பண்ணாநின்றாலும் அதுக்கிளையாதிருக்கிற
என்—என்னுடைய
நீள்—நித்யமான
இ—இந்த
ஆவி—ஆத்மவஸ்துவை
இவ்விடத்து—இவ்வவஸ்தையில்
காப்பார்—ரக்ஷிப்பார்
ஆர்—ஆர்.
இந்நின்றவென்று பாடமாய்-இந்நித்யமான ஆத்மவஸ்துவை யென்றுமாம்; நித்யத்வமும் து:காநுபவத்துக்குறுப் பாயிற்றென்று கருத்து(சு)

ஆறு;—(பின்னின்ற.) முடிந்தபின்பும் செல்லுகிற விஶ்லேஷ வ்யஸநமொன்றும் பொறுக்கலாயிருக்கிறதில்லை, இந்த ராத்ரியான யுகமானது அவன்வரிலும் அவனைக் காணவொண்ணாதபடி என் கண்ணைமறைத்துக்கொண்டு நில்லாநின்றது, இவ்வந்தகாரமெல்லாம் போம்படி நிரதிஶயதீப்தியுக்தமான திருவாழியை ஏந்திக்கொண்டு அவன்வருகிறிலன், இந்ததசையில் இந்நின்றநீளாவி காப்பாரா ரென்கிறாள். (சு)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. ராத்ரியாகிறயுகம் செல்லாநிற்க அவன் வந்து தோற்றாமையாலே, அநீமிஷராகையாலே உறங்காத தைவங்களைக்குறித்து, நான் என்செய்வேனென்கிறாள்.

காப்பாராரிவ்விடத்துக் கங்கிருளின்நுண்துளியாய்*
சேட்பாலதூழியாய்ச் செல்கின்றகங்குல்வாய்*
தூப்பாலவெண்சங்கு சக்கரத்தன்தோன்றானால்*
தீப்பாலாவல்வினையென் தெய்வங்காளென்செய்கேனோ. (எ)

ப;—அநந்தரம் தர்ஶநாகாங்க்ஷாஜநகமான அஸாதாரண சிஹ்நத்தை யுடைய ஸர்வேஶ்வரன் வந்துதோன்றுகிறிலன், இந்தமஹாந்தகாரமான ராத்ரி யில் என்செய்கேனென்று. உறங்காததைவங்களைநோக்கிக் கூப்பிடுகிறாள்.

இவ்விடத்து—(ரக்ஷகனுதவாத) இந்த அவஸ்தையில்
காப்பார்—ரக்ஷிப்பார்
ஆர்—ஆர்;
கங்கு—எல்லைநிலமாச்செறிந்த
இருள்—இருளையும்
நுண்—நுண்ணிதான
துளி—பனித்துளியையும்
ஆய்—உடைத்தாய்
சேண்—அதிதூரமான
பாலது—ஸ்வபாவத்தையுடைய
ஊழியாய்—கல்பமாய்க்கொண்டு
செல்கின்ற—செல்லாநிற்கிற
கங்குல்வாய்—ராத்ரியிடத்து
தூ—அழுக்கற்ற
பால—ஸ்வபாவத்தையுடைத்தாய்
வெண்—வெளுத்த
சங்கு—ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
சக்கரத்தன்—திருவாழியையுமுடையனானவன்
தோன்றான்—'பன்னெடுஞ்சூழ்சுடர் ஞாயிற்றோடுபான்மதியேந்தி" என்கிறபடியே சந்த்ராதித்யர்களைக் கொண்டுவருமாபோலேவந்து தோன்றுகிறிலன்;
தீ—அக்நிபோலே
பால—ஸாஹகஸ்வபாவமாய்
வல்—ப்ரபலமான
வினையேன்—பாபத்தை யுடையேனான நான்
தெய்வங்காள்—(என்துக்கங்கண்டு இமைகொட்டாமல் பார்த்திருக்கிற) தேவதைகாள்
என்—எத்தை
செய்கேன்—செய்வேன்.
ரக்ஷ்யமான என்னால் ரக்ஷித்துக்கொள்ளவொண்ணாதென்று கருத்து. கங்கு-எல்லைநிலம்; தூய்மை- அழுக்கறுதி; பாலென்று - ஸ்வபாவம். (எ)

ஆறு;—(காப்பாரார்.) மஹாந்தகார வர்ஷாபேதையாய் முடிவில்லாததொருயுகமாய்க்கொண்டு செல்லாநின்ற ராத்ரியில், தூப் பாலவெண்சங்குசக்கரத்தன் தோன்றுதொழிந்தான், காப்பாராரிவ் விடத்து. தீப்பாலவல்வினையேன் தெய்வங்காள் என்செய்கேனென்று தன்னுடைய நிரவதிக வ்யஸநத்தாலே கூப்பிடுகிறாள். (எ)

ஈடு;—எட்டாம்பாட்டு. ஏகராத்ரி அநேகயுகமாய் மிகவும் நலியாநின்றது, எம்பெருமானும் வருகிறிலன், அதுக்குமேலே தென்றலும் நலியாநின்றதென்கிறாள்.

தெய்வங்காளென்செய்கேனோரிரவேழூழியாய்*
மெய்வந்துநின்றெனதாவிமெலிவிக்கும்*
கைவந்தசக்கரத்தென்கண்ணனும் வாரானால்*
தைவந்ததண்தென்றல் வெஞ்சுடரில்தானடுமே. (அ)

ப; —அநந்தரம், ஆஸ்ரிதவிரோதிநிவர்த்தநத்தில் ஆயுதமெடுத்துக் காரியங்கொள்ளும் க்ருஷ்ணனும் வருகிறிலன், அதுக்குமேலே தென்றலும் நலியாநின்றது, என்செய்வேனென்று அந்தத்தைவங்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

தெய்வங்காள் — (உணர்த்தியோடேயிருக்கிற) தைவங்காள்
(ஒருப்ரவ்ருத் திக்ஷமையில்லாத நான் என்னுடைய ரக்ஷணத்தில்)
என்—எத்தை
செய்கேன்—செய்வது
ஓர்—ஒரு
இரவு—ராத்ரி
ஏழு—ஏழு
ஊழியாய் — கல்பமாய்க்கொண்டு
மெய்—புத்திபூர்வகமாக
வந்து—முன்னே வந்து
நின்று—நின்று (விரஹக்லிஷ்டமான)
எனது—என்னுடைய
ஆவி—ப்ராணனை
மெலிவிக்கும்—க்ருஶமாக்காநிற்கும்;
கைவந்த—(பகலே 'இரவையழைக்க' என்னிலும் நினைவறிந்து காரியஞ்செய்யும்படி) விதேயமான)
சக்கரம்—திருவாழியையுடைய
என்—
கண்ணனும்—க்ருஷ்ணன்
வாரான் — (அத்தைக்கொண்டு இந்த ராத்ரிபோம்படி) வருகிறிலன் (அவன்வாராதது அறிந்து)
தைவந்த —(நலியவருவாரைப் போலே) தடவுகிற
தண்—குளிர்ந்த
தென்றல்—தென்றலானது
வெம்—வெவ்விய
சுடரில்—அக்நியிற்காட்டிலும்
அடும்—சுடாநின்றது.
அக்நிபோல என்றுமாம்; கைவருதை-நினைத்தபடி காரியங்கொள்ளலாகை; தைவருதல்-தடவுதல் (அ)

ஆறு; —(தெய்வங்காள்,)ஓரிரவு ஏழூழியாய் வந்து எனதாவியை மெலிவிக்கும், கருதுமிடம்பொருது கைந்நின்றசக்கரத்து என்கண்ணனும் வருகிறிலன், ஹேமந்தகாலத்தில் அதிஶீதளமான தென்றல் வெஞ்சுடரில்தானடும், தெய்வங்காள் என்செய்கேனென்கிறாள். (அ)

ஈடு; அவ; — ஒன்பதாம்பாட்டு. ராத்ரியும் நலியாநின்றது, ஸூர்யோதயமும் "நமக்கு" என்றவாறே ப்ரார்த்த்யமாய்விட்டது, ரக்ஷகனவனும் தோற்றுகிறிலன், என்மனோதுःகத்தை இனிப்போக்குவார் ஆரென்கிறாள்.

வெஞ்சுடரில் தானடுமால் வீங்கிருளினுண்துளியாய்*
அஞ்சுடரவெய்யோனணி நெடுந்தேர்தோன்றுதால்*
செஞ்சுடர்த்தாமரைக்கண் செல்வனும்வாரானால்*
நெஞ்சிடர்தீர்ப்பாரினியார் நின்றுருகுகின்றேனே. (கூ)

ப;—அநந்தரம், அதிஶயிதாந்தகாரமான ராத்ரியானது நலியாநின்றது ஆதித்யரதம் தோன்றுகிறதில்லை, இவ்வளவில் அத்யபங்குரைஶ்வர்யவிஶிஷ்டனை புண்டரீகாக்ஷன் வருகிறிலன், ஶிதிலையாகிற என்னுடைய மனோது:க்கத்தைப்போக்குவாராரென்கிருள்.

வீங்கு—வீங்கிச்சதைத்த
இருள்—இருளையுடைத்தாய்
நுண்— நுண்ணியதான
துளி - பனித்துளியை
ஆய் —உடைத்தாய்க்கொண்டு (ப்ராக்ருதமானராத்ரிதான்)
வெம்—வெவ்விய
சுடரில்—நெருப்பிற்காட்டில்
அடும்—சுடாநின்றது;
(இவ்வளவில்தன் தோற்றாவாலேஇருளைப்போக்கும்)
அம்—அழகிய
சுடர—சுடரையுடைய
வெய்யோன்–(உஷ்ணபாநுவான) ஆதித்யனுடையதான
அணி— அழகிய
நெடு—உத்துங்கமான
தேர்—தேரானது
தோன்றாது-தோன்றுகிறதில்லை, (இவ்வளவில்)
செம் — (அதிஶயிதைஶ்வர்யஸூசகமாய்ச் சிவந்த
சுடர்—ஒளியையுடைய
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
கண்—கண்களையுடையனை
செல்வனும்—ஸ்ரீமானும்
வாரான்—வருகிறிலன்; (ஆகையாலே)
நின்று—ஒருபடிப்படநின்று
உருகுகின்றேன்—உருகாநின்றேன்;
இனி—இனி
நெஞ்சிடர் — என்மனோதுःக்கத்தை
தீர்ப்பார்—தீர்ப்பார்
ஆர்—ஆர்.
வீங்குதல் — தடித்தலாய். செறிதலைச் சொல்லுகிறது.
நுண்துளியாய்—நுண்ணியதுளியாய், தான்-வெஞ்சுடரில்-அடாநிற்குமென்றுமாம் (௯)

ஆறு;—(வெஞ்சுடரில்) வெஞ்சுடரில் தானடாநின்றது வீங்கிருளின் நுண்துளியாய்; அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றுகிறதில்லை, செஞ்சுடர்த்தாமரைக்கண்செல்வனும் வருகிறிலன், இனிநெஞ்சிடர்தீர்ப்பாரார், முடியப்பெறாதே காலதத்வமெல்லாம் நின்று உருகாநின்றே னென்கிருள். (௯)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. இந்தராத்ரியில் என்னுடைய வ்யஸநத்தைக்கண்டுவைத்து அவன்திறமாக ஒருவார்த்தைசொல்லாதே லோகமாகவுறங்குவதே! என்கிருள்.

நின்றுருகுகின்றேனேபோல நெடுவானம்*
சென்றுருகிநுண்துளியாய்ச் செல்கின்றகங்குல்வாய்*
அன்றொருகால்வையமளந்தபிரான்வாரானென்று*
ஒன்றொருகாற்சொல்லாது உலகோவுறங்குமே. (௧௦)

ப;—அநந்தரம், ராத்ரியிலே நான் ஈடுபடாநிற்க, பூமியை அநந்யார்ஹமாக்கின மஹோபகாரகன் விஷயமாக ஒருவார்த்தைசொல்லாதே லோகம் உறங்காநின்றதென்று கூப்பிடுகிறாள்.

நின்று—(ஒருகாலொழியாமே) நின்று
உருகுகின்றேனேபோல— உருகாநிற்கிற என்னைப்போலே
நெடு—மஹாவகாஶமான
வானம்—ஆகாசம்
சென்று—வ்யாபித்துச்சென்று
உருகும்—உருகுகிற
நுண் —நுண்ணிய
துளி—துளிகளை
ஆய்—உடைத்தாய்க்கொண்டு
செல்கின்ற—(இடைவிடாமல்) செல்லுகிற
கங்குல்வாய்—இராவிடத்து
அன்று — (மஹாபலியபஹரித்த) வன்று
ஒருகால்—ஒருகாலத்திலே
வையம்—பூமியை
அளந்த—அளந்த
பிரான்—லோகோபகாரகன்
வாரான்—இன்றுவருகிறானே
என்று—என்றாகிலும்
ஒன்று—ஒருவார்த்தையை
ஒருகால்—ஒருகால்
சொல்லாது—சொல்லாதே
உலகு—லோகம்
உறங்கும்—உறங்காநிற்கும்.
ஓ — இதுவென்னதட்டுத்தான் என்று, வெறுத்துரைத்தபடி.
வாராதொழிவதே என்று வெறுத்துரைத்ததாகவுமாம், (கo)

ஆறு;—(நின்று.) நின்று உருகுகின்றேனேபோல நெடுவானம் சென்றுருகுநுண்துளியாய்ச் செல்கின்றகங்குல்வாய், அன்றொருகால் வையம் அளந்தபிரான் வாரானென்றாகிலும் அவன்திறமாக ஒன்றொருகாற்சொல்லாது உலகோஉறங்குமேயென்கிறாள். (கO)

ஈடு;—நிகமத்தில், இவர் பாசுரங்கேட்டார், இவர்தசையையநுஸந்தித்தார் பிழையார்களென்கிறார். (பரமபதஸித்திசொல்லிற்று) முடிந்தார் புகலிடம் அதுவாகையாலே சொன்னவித்தனை.

உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை*
சிறந்தபொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் சொல்*
நிறங்கிளர்ந்தவந்தாதி ஆயிரத்துளிப்பத்தால்*
இறந்துபோய்வைகுந்தம் சேராவாறெங்ஙனேயோ. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாகப் பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

உறங்குவான்போல்— (படுக்கைவாய்ப் புப்பெற்று) உறங்கு கிறவன்போலே (ஏகாந்தஸ்த்தலமான க்ஷீரார்ணவத்திலே)	நிறம்—பண்
	கிளர்ந்த—மிகுசின
	அந்தாதி—அந்தாதியான
	ஆயிரத்துள்—ஆயிரத்துள்
	இப்பத்தால்—இப்பத்தால்
யோகு—ஜகத்ரக்ஷணசிந்தாயோகத்தை	இறந்து—ஶரீரவிஶ்லேஷம்பிறந்து
செய்த—பண்ணிக்கிடக்கிற	போய்—அர்ச்சிராதியாலேபோய்
பெருமானை—ஸர்வேஶ்வரனைப்பற்ற	வைகுந்தம்—பரமபதத்தில்
சிறந்த—ஸம்ருத்தமான	சேராவாறு—புகாதொழிவது
பொழில்—பொழிலாலே	எங்ஙனே—எங்ஙனே; அத்தேசத்திலே புகுகை யறுதியென்றுகருத்து.
சூழ்—சூழப்பட்ட	
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான	நிறம்—பண்; சந்தமாகவுமாம்.
சடகோபன்—ஆழ்வார்	இது-கலிவிருத்தம்;நாலடித்தாழிசைய கவுமாம் (கக)
சொல்—அருளிச்செய்த	

ஆறு;—(உறங்குவான்) ஸ்வாத்மாநுபவஜநித நிரவதிகாநந்த மஹிமப்ரஸக்தஸ்தைமித்யத்தாலே நிஸ்தரங்கமஹார்ணவ ஸத்ருஶனான எம்பெருமானைச்சொல்லி அலற்றின இத்திருவாய்மொழியில்சொன்ன ஆர்த்தியை அநுஸந்தித்தார் எங்ஙனே தரிக்கும்படியென்கிறார். (கக)

அஞ்சாம்பத்து நாலாந் திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஐந்தாந்திருவாய்மொழி—எங்ஙனேயோ ப்ரவேஶம்.

ஆறு;—அநுபூதபரமபுருஷகுண ஸ்மரணத்துக்குங்கூட க்ஷமையல்லாதபடி ராத்ரியில் மதியெல்லாமுள்கலங்கி அத்யந்தம் அவஸந்நையாய், விடிந்தவாறே லப்தஸம்ஜ்ஞையாய், பண்டுகண்டு அநுபவித்தநம்பியுடைய திருநகரியினுடைய அழகையும், நம்பிதம்முடைய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணங்களையும், திவ்யபூஷண திவ்யாயுதஜநிதமான அழகையும் ஸ்மரித்து, அந்த ஸ்மரணஜநிதமான ப்ரீதியாலும், தத்ஸம்ஶ்லேஷாலாபநிபந்தநமான அப்ரீதியாலும் விஶிஷ்டையாய் தத்ஸம்ஶ்லேஷார்த்தமாக இருந்து நோவுபடுகிற பிராட்டி, "பரமப்ரணயியான எம்பெருமான்பக்கல் நீ உன்னுடைய அபிநிவேஶந்தோற்ற இருத்தல், அந்தவிஶ்லேஷஜநிதமான அவஸாதந்தோற்ற இருத்தல், அவன் எழுந்தருளியிருந்த திருக்குறுங்குடியிலே போக உத்யோகித்தல்செய்யல்; "தன்னையுத்திஶ்ய இவள் இப்பாடுபடாநிற்கச்செய்தே வாராதொழிவதே, ஒருவனுடைய கொடுமையிருந்தபடியென்?" என்றுகொண்டு இந்தலோகம் அவன் பக்கலிலே நைர்க்ருண்யாதிதோஷத்தைஶங்கிக்கும், இதுவல்லது நங்குடிக்குப்பழியில்லை; ஆனபின்பு அவன்தானே ஸம்ஶ்லேஷிக்கக்கண்டு இருக்குமத்தனையல்லது இப்படிபடுகை ஈடல்ல' என்று தன்னைப் பொடிந்து தனக்கு முகங்காட்டாதேயிருந்த தன்னுடைய அன்னைமாரைக்குறித்து; நம்பியுடைய, ஸ்வதஸ்ஸித்தமாயும் அந்யோந்ய ஸம்ஸர்க்கஸித்தமாயும் ஸதாநுரூபமாநமாயிருக்கச்செய்தே அபூர்வவத்விஸ்மயமாததாநமுமாயிருந்த நிரவதிக திவ்ய ஸௌந்தர்யமும், திவ்யாவயவ திவ்யபூஷண திவ்யாயுதங்களுமெல்லாம் என்னெஞ்சுள்ளும்புகுந்து நிறைந்திருக்கிற இருப்பும், அவற்றில் என்னெஞ்சுவிழுந்து அவையல்லது அறியாதே இருக்கிற இருப்பும் உங்களுக்குத்தெரியாமையிறே நீங்கள் என்னைப் பொடிகிறதென்று சொல்லுகிறாள். *

ப;—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் "உறங்குவான்போல் யோகுசெய்தபெருமான்" என்று அவனுடைய ஆஶ்ரிதஸம்ரக்ஷணசிந்தாயோகத்தை

அநுஸந்தித்து ஆஶ்வஸ்தராய் பூர்வாநுபூதமான, "நல்கியென்னைவிடான்" என்கிறபடியே-தம்மை ஒருகாலும் கைவிடாத நம்பியுடைய வடிவழகு ஸ்ம்ருதிவிஷயமாய் ஆந்தர ப்ரீதியை ஜநிப்பிக்க, பாஹ்யஸம்ஶ்லேஷாலாபத்தாலுண்டான ஆர்த்தியுமொக்க நடக்கச்செய்தே; நம்பியுடைய அஸாதாரணசிஹ்நாவயவ வைலக்ஷண்யத்தையும், அலங்கார ஶோபையையும், ஆஶ்ரிதரைக் காத்தூட்டும் ஆயுதபூர்த்தியையும், பரத்வப்ரகாஶகமான பரிஷ்காரப்ராகாரத்தையும், அதிஶயிதபோக்யமான முகாவயவஶோபையையும், முகாவயத்தோடுசேர்ந்த ரூபபுஜவைலக்ஷண்யத்தையும், தேஜோமயமாய் உத்துங்கமான திவ்யவிக்ரஹயோகத்தையும், ஸர்வாவயவ ஸௌந்தர்யத்தையும், அஸங்க்யேயாபரணஶோபாவிஶிஷ்டமான . அதிஶயிதபோக்யதையையும், அநந்யகோசரமாம்படி ஆந்தரமாகப்ரகாசிக்கிற அதிஶயிததேஜோ விஶிஷ்டமான ப்ராப்யவேஷத்தையும் அநுஸந்தித்து, இந்த ஆந்தராநுபவப்ரீதியோடே அலாபநிபந்தநமான அப்ரீதியும் ஒக்கநடக்கையாலே இவரை ஆஶ்வஸிப்பிப்பதாக உத்யோகித்த ஸுஹ்ருத்துக்களையும் பரிவரையுங்குறித்து, ஸ்வதசையை ஆவிஷ்கரித்த ப்ரகாரத்தை; நாயகனைப்பிரிந்த காமினியானவள் தத்ஸௌந்தர்யாதி ஸ்மரணத்தாலும் ததலாபார்த்தியாலும் ப்ரீத்யப்ரீதிகள் ஸமமாய்நடக்க, இவள் ஆர்த்தியை மீட்கைக்காக நியமித்த தோழிமாரையும் தாய்மாரையுங்குறித்து, தான் இவ்விஷயத்தில் அகப்பட்ட படியைச் சொல்லி அவர்களுக்கு மறுத்துரைத்தபடியாயிருக்கையாலே "கழற்றெதிர்மறை" என்கிற துறையாலே யருளிச்செய்கிறார்.

ஈடு;—* மாசறுசோதியிலே "நாடுமிரைக்கவே-யாமடலூர்ந்தும்" என்று-மடலூரப் பாரித்தாள்; பாரித்தபடியே தலைக்கட்டப்பெறாமையாலே "*ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய் முதலிலே மடலூருகைக்கு விஷயந்தான் இல்லாதபடி பழிசொல்லுவாருங்கூட உறங்கிற்று" என்று வெறுத்தாள்; "அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர்தோன்றாதால்" என்று-ஆதித்யோதயத்துக்கு ஸூசகமுங்கூட இல்லையாயிற்றென்று வெறுத்தாள்; "நீயும் பாங்கல்லைகாண்நெஞ்சமே" என்று ஒன்றைஸ்மரித்து தரிக்கைக்கு விரகற்றதென்றும் வெறுத்தாள். மாசறுசோதியில்-ப்ராப்யத்வரையாலே உபாயாத்யவஸாயம் கலங்கினபடி, *ஊரெல்லாம் துஞ்சியில்-அத்த்வரையுங்கூடக் கலங்கினபடி; இதில் - "ரக்ஷகன் அவன்" என்னும் தெளிவும் செல்லாநிற்க, ப்ராப்யருசிநலிகிறபடி.

இக்குறைகளெல்லாம் தீரும்படி போதும் விடியப்பெற்று; "அன்னையருந்தோழியரும்" என்கிற இழவுதீர, உகப்பாரும் பொடிவாரும் ஹிதஞ்சொல்லுவாருமாகப் பெற்றது; அநந்தரம் பந்துவர்க்

கமடைய உணர்ந்து "தீர்ந்தவென்தோழி" என்று இவளுடைய துணிவுகண்டு உகப்பாரும், "தோழிமீரென்னையினியுமக்காசையில்லை' என்னவேண்டும்படி ஹிதஞ்சோல்லி யலைப்பாருமாகப்பெற்றது; அவ்வழியாலே அவர்கள் தாங்கள் இவ்விஷயத்துக்கு ஸ்மாரகராவார்களிறே. ஆதித்யனும் உதித்து, பதார்த்ததர்ஶநம் பண்ணப்பெறுகையாலே வ்யஸநமும் பாஷிபாயப்பெற்றது. இவ்வளவு ஆஶ்வாஸமுண்டானவாறே, நெஞ்சு ஸ்மரித்து தரிக்கைக்கு ஸஹகாரியாயிற்று.

இப்படி ராத்ரி வ்யஸநம்போம்படி போதுவிடியப் பெறுகையாலே ஒருதரிப்புமுண்டாய், அவனை அநுபவிக்கப்பெறாமையாலே ஆற்றாமைக்கு முடலாய் நோவுபட்டுச்செல்லாநிற்க, உணர்ந்த பந்துக்களுடைய, "நீ இப்படி இவ்விஷயத்திலே அதிமாத்ரப்ரவணையாகிற இது உனக்குக்குடிப்பழி, உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போராது, அவன் தலைமைக்கும் போராது" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, "இவர்கள் உகந்தருளினநிலங்களில் வாஸியறியார்கள்" என்றிருந்தாளிவள், "நீங்கள் சிலர் காட்டக் கண்டுகோளல்லாமையாலே இவ்விஷயத்தை உள்ளபடி அறிந்திலீர்கள்; நான் அங்ஙனன்றிக்கே, அவன்தானே மயர்வறமதிநலமருளித் தன்னைக் காட்டக் காண்கையாலே உள்ளபடி கண்டேன்; ஆகையாலே, நம்பியுடைய வடிவழகிலும் ஒப்பனையழகிலும் ஆபரணச்சேர்த்தியிலும், வேண்டப்பாட்டிலும். நான் உங்கள் ஹிதவசநத்துக்கு மீளாதபடி அகப்பட்டேன்" என்று இங்ஙனே தன்படிகளைச் சொல்லாநிற்கச் செய்தே, "ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு அறியவொண்ணாதபடியாகப் பெற்றோமிறே, இவ்வஸ்துதான் உண்டாகப்பெற்றால் நாம் பெற்றபோது பெறுகிறோம், பிறரறியாதொழியப்பெற்றோமிறே" என்னும் ப்ரீதியோடே தலைக்கட்டுகிறது.

ஆக, போதும்விடிந்து ஹிதஞ்சொல்லியலைப்பாரும் உண்டாகப்பெறுகையாலே ஒருதரிப்பும், அதுதான் நினைத்தவிடிவாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; அவனை ஸ்மரிக்கப்பெறுகையாலே ஒருப்ரீதியும், அதுதான் அநுபவமாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; ஆதித்யனுதித்துப் பதார்த்ததர்ஶநம் பண்ணப்பெறுகையாலே ஒருப்ரீதியும், அதுதான் அவனைக்காணப்பெறாமையாலே ஒரு அப்ரீதியுமாய்; ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது.

* ஏழையராவியும்-உருவெளிப்பாடாயிருக்கச்செய்தே, அதில் இதுக்கு வாசி-அதில், "இணைக்கூற்றங்கொலோ" என்றும், 'உய்விடமேழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும் 'எவ்விடம்" என்றும்-பாதகத்வம் உறைத்திருக்கும்; இதில் கீழ்ப்பிறந்த து:கநிவ்ருத்தியுண்டாம்படி ஸ்மரித்து தரிக்கவும்பெற்று அதுதான் அநுபவமாகப்பெருமையாலே வந்த அப்ரீதியுமாய், இப்படி ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச்செல்லுகிறது.

ஜாபாலிபகவானும் வார்த்தைசொல்லி, "ஸ்ரீவஸிஷ்டபகவானும் இக்குடியில்போந்தபடிகளையுமெல்லாஞ்சொல்லி, "இனி மீண்டு திருவபிஷேகம்பண்ணவமையும்" என்ன, பெருமாள் "அங்ஙன்செய்வதில்லை" என்று முடிய நின்றபடியைக் கண்டவாறே, பௌரஜநங்களெல்லாம் உகப்பதுஞ்செய்தார்கள்; வெறுப்பதுஞ்செய்தார்கள்; "ரக்ஷகனானவன் தொடங்கினகார்யத்திலே இப்படிமுடிய நின்றவிடம் நம்முடைய ரக்ஷணத்துக்குறுப்பன்றே" என்று உகப்பதுஞ் செய்தார்கள், "அத்தாலே நாம்பெற்றதென், இப்போது பதினாலாண்டு இழந்திருக்கவேண்டா நின்றதே" என்று வெறுப்பதுஞ் செய்தார்களிறே.

திருவடி பிராட்டியைத் திருவடிதொழுதபோது, "நமக்குப் பராக்ரமிக்கைக்குக் கைம்முதலுண்டாகப் பெற்றோமிறே" என்று உகப்பதுஞ்செய்தான், "இவள் அவரைப்பிரிந்து இவ்விருப்பிருப்பதே" என்று வெறுப்பதுஞ்செய்தான். பிராட்டிதான் திருவடிவார்த்தையைக் கேட்டபோது (க) "ஸுக்ருதம் விஷஸம்ஸ்ருஷ்டம் ஸ்வயா வாநரஹாஷிதம்-அம்ருதம் விஷஸம்ஸ்ருஷ்டம் த்வயாவாநரபாஷிதம்" என்று பெருமாள் என்னைப்பிரிந்தவிடத்தில் என்னையல்லது அறியார் என்றுசொன்னது எனக்கு இனிதாயிருந்தது, அவர் பிரிவிலே தளராநின்றாரென்று சொன்னபடியாலே வெறுப்பாயிருந்ததென்றாளிறே; அப்படியே இவர்க்கும் ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது

ஈடு அவ;—முதற்பாட்டு. திருக்கையிலாழ்வார்களோடே சேர்ந்தநம்பிதிருமுகத்தி லழகிலே, என் அந்த:கரணம் மிகவும் ப்ரவணமாகாநின்றதென்கிறாள்.

(க) ரா-ஸு-கூஎ-உ

எங்ஙனேயோவன்னைமீர்காளென்னைமுனிவதுநீர்*
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
சங்கினோடும்நேமியோடும் தாமரைக்கண்களோடும்*
செங்கனிவாயொன்றினோடும் செல்கின்றதென்னெஞ்சமே. (க)

ப;—முதற்பாட்டில், நம்பியுடைய அஸாதாரணசிஹ்நமான ஆழ்வார்களிலும் ப்ரதாநமான அவயவசோபையிலும் என்னெஞ்சு ஸக்தமாய் நடவாநின்றதென்கிறாள்.

அன்னைமீர்காள்—அன்னைமீர்காள்
நீர்—(பெற்ற நீங்கள்
ஓ—ப்ரியஞ்செய்யாதே
என்னை—(நல்லதுகண்டுமேல் விழுந்த) என்னை
ஓ—உசக்கப்ராப்தமாயிருக்க
முனிவது—முனிகிறபடி
எங்ஙனே—எங்ஙனே;
நங்கள்—நங்குடிக்கு அஸாதாரணபூதராய்
கோலம்—தர்ஶநீயவேஷரான
திருக்குறுங்குடி—திருக்குறுங்குடியில்
நம்பியை—கல்யாணகுணபரிபூர்ணரானநம்பியை
நான்—நான்
கண்டபின்—அநுபவித்தபின்பு (அவருடைய ப்ராப்யபாவத்துக்கு அஸாதாரணசிஹ்நமான)
சங்கினோடும்-ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடும்
நேமியோடும்—திருவாழியோடும்
தாமரை—தாமரைபோலே தர்ஶநீயமான
கண்களோடும்—திருக்கண்களோடும்
செம்—சிவந்த
கனி—கனிபோலே
ஒன்று—அத்விதீயமாயிருக்கிற
வாயினோடும்—திருவதரத்தோடும்
என்—என்
நெஞ்சம்—நெஞ்சு
செல்கின்றது—ஸக்தமாய் நடவாநின்றது.
கோலம்—ஊருக்கு விசேஷணமுமாம்.

ஆறு;—(எங்ஙனேயோ) என்னுடையப்ரக்ருதியறிந்திருக்கிற தாய்மாரான நீங்கள், என்னுடைய அவஸாதத்துக்கடியான நம்பியுடைய அழகை இன்னதாகாதே என்னைப்பொடிகிறபடி எங்ஙனே? நமக்காக நிரதிசய ஸௌந்தர்யத்தோடே திருக்குறுங்குடியிலே நின்றருளின நம்பியை நான்கண்டபின், சங்குசக்கரங்களோடும் தாமரைபோன்ற திருக்கண்மலர்களோடும் சிவந்தகனிபோலேயிருக்கிற திருப்பவளமொன்றோடும் மிகவும் பூணுநின்றது என்னுடைய அந்தःகரணமென்கிறாள். (க)

ஈடு;அவ;—இரண்டாம்பாட்டு, நம்பியுடைய தோளழகும் ஆபரணஸ்ரீயும் ஸர்வதோமுகமாக நின்று நலியாநின்றதென்கிறாள்.

என்னெஞ்சினால்நோக்கிக்காணீரென்னை முனியாதே*
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
மின்னுநூலுங்குண்டலமும் மார்பில்திருமறுவும்*
மன்னுபூணும்நான்குதோளும் வந்தெங்கும்நின்றிடுமே. (உ)

ப;—அநந்தரம், நம்பியுடைய ஒப்பனையழகும் தோளும் ஸர்வதேசத்திலும் வந்துநின்று அநுபவவிஷயமாகாநின்றது என்கிறாள்.

என்னை—என்னை
முனியாதே-நியமித்துவார்த்தைசொல்லாதே
என்நெஞ்சினால் — (அநுபவித்தாலும் குறியழியாத உங்கள் நெஞ்சுபோலன்றியே பாவயுக்தமான) என் நெஞ்சாலே
நோக்கி—அநுபவித்து
காணீர்—பாரிகோள்;
தென் — தெற்குத்திக்கிலே
நன்—நன்றான
சோலை—சோலையையுடைத்தான
திருக்குறுங்குடி—திருக்குறுங்குடியில்
நம்பியை - நம்பியை(அவனருளாடியாக)
நான்—நான்
கண்டபின்—கண்டபின்பு
மின்னும் — (வடிவுக்குப்பரபாகமாய் ப்ரஹ்மவர்ச்சஸ) ப்ரகாஶகமான
நூலும்—திருயஜ்ஞோபவீதமும்
குண்டலமும்—(இருபாடுமிலங்குகிற) திருமகரகுண்டலங்களும்
மார்பில்-(விலக்ஷணமான) திருமார்பில்
திரு—கழற்றாத ஆபரணமான
மறுவும்—ஸ்ரீவத்ஸமும்
மன்னு—எப்போதும்கழற்றாத
பூணும்—ஆபரணவர்க்கமும்
(சதுர்வர்க்கப்ரதமான)
நான்கு—நாலு
தோளும்—திருத்தோள்களும்
எங்கும்—நான்போனவிடமெங்கும்
வந்து—வந்து
நின்றிடும்—நில்லாநின்றன. (உ)

ஆறு;—(என்னெஞ்சினால்.) "நம்பிதிருவழகை நாங்கள் அநுபவித்தோமல்லோமோ, நாங்கள் பேசாதிருக்க நீ இங்ஙனே படுகிறதென்?" என்று அவர்கள் பொடிய; என்னை நீங்கள்பொடியாதே, உங்களுக்குக் காணவேணுமாகில் என்னைப்போலே ஸ்நேஹயுக்தமான நெஞ்சை யுடையீராய்க்கொண்டு அநுஸந்தித்தறியுங்கோள். தென்னாட்டுச் சோலைசூழ்ந்த திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், மின்னாநின்றுள்ள திருயஜ்ஞோபவீதமும் திருக்குண்டலங்களும் திருமார்வில்திருமறுவும் திருவுடம்போடுபொருந்தின திருவணிகலன்களும்திருத்தோளழகும் சுற்றும்வந்து என்னை நெருக்காநின்றன வென்கிறாள். (உ)

ஈடு; அவ;—மூன்றும்பாட்டு. நம்பியுடைய திவ்யாயுதவர்க்கம் உள்ளும் புறம்புமொக்க நிரந்தரமாகத் தோற்றுகின்றதென்கிறாள்.

நின்றிடுந்திசைக்குமையுமென்றன்னையரும்முனிதிர்*
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
வென்றிவில்லும்தண்டும்வாளும் சக்கரமும்சங்கமும்*
நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்காவே.(௩)

ப;—அநந்தரம் இவ்வழகைக்காத்தூட்டும் ஆயுதவர்க்கம் பஹிரந்த:ப்ரகாசித்தும் போகிறதில்லையென்கிறாள்.

நின்றிடும் — (ஒருவ்யாபாரக்ஷமையன்றியே ஸ்தப்தையாய் நில்லாநிற்கும்
திசைக்கும் — சொல்லிற்றறியாதபடி அறிவழியாநிற்கும்
மையும் — (ஆந்தராநுஸந்தாநத்தாலே) ஶிதிலையாகாநிற்கும்
என்று—என்றுகொண்டு
அன்னையரும் — பெற்றதாய்மாராய் அடியிலே இப்ப்ரியத்திலே ப்ரவர்த்திப்பித்த நீங்களும்
முனிதிர்—அப்ரியவசநங்களைப் பண்ணுநின்றீர்கோள்;
குன்றம்—மலைபோலேயிருக்கிற
மாடம்—மாடங்களையுடைத்தான
திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை
நான்—(௧) "தம் த்ருஷ்ட்வா - தம்த்ருஷ்ட்வா" என்கிறபடியே வீரவேஷம்கண்டுகக்கும்நான்
கண்டபின்—அநுபவித்தபின்
வென்றி — வென்றியையுடையவான
வில்லும்—வில்லும்
தண்டும்—கதையும்
வாளும்—வாளும்
சக்கரமும்—சக்ரமும்
சங்கமும்—ஶங்கமும்
நின்று—ஒருபடிப்படநின்று
கண்ணுள்—என்கண்ணுக்குள்ளே
தோன்றி—தோன்றி
நீங்கா—போகிறனவில்லை
(இப்படி புறவாயளவன்றியே)
நெஞ்சுள்ளும்—நெஞ்சுக்குள்ளே
நீங்கா—நீங்குகிறனவில்லை. (௩)

ஆறு;—(நின்றிடும்.) நம்பியுடைய ஸௌர்யாதிகளிலே அகப்பட்டமையறிந்த தாய்மாரான நீங்களும் 'ஸ்தப்தையாகாநின்றாள். அறிவுகெடாநின்றாள்; ஶிதிலையாகா நின்றாளென்று பொடியாநின்றிகோள். குன்றம்போலே நெடுமாடங்களையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், வெற்றியைக்கொடுக்கும் வில்லுமுதலான திவ்யாயுதவர்க்கம் புறம்புள்ளுமொக்க நிரந்தரமாகத் தோற்றுகின்றன வென்கிறாள். (௩)

(௧) ரா-ஆர ௩௦-௨௦.

ஈடு;—நாலாம்பாட்டு; ரக்ஷணத்துக்குக் கவித்தமுடியும், தனிமாலையும், பரிவட்டப்பண்பும் முதலானவை பார்ஶ்வத்திலே நின்று என்னை நலியாநின்றனவென்கிறாள்.

நீங்கநில்லாகண்ணநீர்களென்றன்னையருமுனிதிர்*
தேன்கொள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
பூந்தண்மாலைத்தண்டுழாயும் பொன்முடியும்வடிவும்*
பாங்குதோன்றும்பட்டும்நாணும் பாவியேன்பக்கத்தவே. (ச)

ப;—அநந்தரம், பரத்வப்ரகாஶகமான நம்பியுடைய வேஷவைலக்ஷண்யமானது என் பார்ஶ்வஸ்த்தமாகாநின்றதென்கிறாள்.

கண்ணநீர்கள் — (இவள்) கண்ணநீர்கள்
நீங்க—போர
நில்லா—நிற்கிறனவில்லை;
என்று—என்று
அன்னையரும்—மூட்டினநீங்களும்
முனிதிர்—முனியாநின்றிகோள்:
தேன்—தேனை
கொள்—உடைத்தான
சோலை—சோலைகளையுடைத்தான
திருக்குறுங்குடிநம்பியை—திருக்குறுங்குடிநம்பியை
நான்—(அவர்மேன்மைகண்டுஉகக்கும்) நான்
கண்டபின்—அநுபவித்தபின்பு
பூ—அநுபாவ்யமாய்
தண்—ஶ்ரமஹரமான
மாலை—மாலாரூபமாயுள்ள
தண்டுழாயும் - செவ்வித்திருத்துழாயும்
பொன்—ஆதிராஜ்யஸூசகமாய் ஸ்ப்ருஹணீயமான
முடியும்—முடியும்
வடிவும் — (அம்மாலைக்கும் முடிக்கும் தகுதியான) வடிவும்
பாங்கு—(திருவரைக்குப்) பாங்காய்
தோன்றும்—தோன்றுகிற
பட்டு—பட்டுப்பரிவட்டமும்
நாணும் — (மேலாபரணமான) விடுநாணும்
பாவியேன்—(உள்ளே ப்ரகாஶியாநிற்கக்கிட்டியநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடையேனான என்னுடைய
பக்கத்த - பார்ஶ்வஸ்த்தங்களாகாநின்றன; "தேங்கோள்சோலை" என்று பாடமாகவுமாம். (ச)

ஆறு;—(நீங்கநில்லா) "நம்பியைப்பிரிந்தால் தரிக்கமாட்டாள்" என்று, அறிந்ததாய்மாரானநீங்களும், கண்ணநீர்மாறுகிறதில்லையென்று பொடியாநின்றிகோள்; தேன்களைச்சொரியாநின்ற திருச்சோலையையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், தர்ஶநீயமாய்க் குளிர்ந்திருந்த திருத்தோள்மாலையும் நிரதிஶயதீப்தியுக்தமான திருவபிஷேகமும் திருவுடம்பும் திருவரைக்குத்தகுதியாய்த்தோற்றுகிற பட்டும் விடுநாணும், கண்டுவைத்து அநுபவிக்

கப்பெறாத பாபத்தைப்பண்ணின என்னுடைய பார்ஶ்வத்திலே நின்று என்னை நலியாநின்றனவென்கிறாள். (௪)

ஈடு;—அஞ்சாம்பாட்டு. ஒன்றுக்கொன்று தகுதியான நம்பியுடைய திருமுகத்திலழகுகள் என் உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள்.

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்றன்னையரும் முனிதிர்*
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும்*
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனுவியின்மேலனவே. (௫)

ப;—அநந்தரம்; நம்பியுடைய முகாவயவஶோபையானது என் ஆத்மகதமாய்த் தோற்றாநின்றதென்கிறாள்.

பக்கம் — (அவன்வருகைக்கு ஸம்பாவனையுள்ள) பார்ஶ்வத்தை
நோக்கி—நோக்கி
நிற்கும்—நிற்கும்;
நையும்—(வரக்காணாமையாலே) ஶிதிலையாகாநிற்கும்;
என்று—என்று இப்படி
அன்னையரும்—(ஸ்நேஹத்தைப்பிறப்பித்த) நீங்களும்
முனிதிர்—(ஸ்நேஹம்தவிருகைக்காக) முனிந்து வார்த்தைசொல்லாநின்றீர்கள்
தக்க—(பூர்த்திக்குத்) தகுதியான
கீர்த்தி—கீர்த்தியையுடைய
திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை
நான் — (அவருடைய கீர்த்தியிலேயகப்பட்ட) நான்
கண்டபின் - அநுபவித்தபின்பு.
தொக்க - திரண்ட.
சோதி—ஜ்யோதிஸ்ஸையுடைத்தான
தொண்டை — தொண்டைப் பழம் போலேயிருக்கிற
வாயும்—திருவதரமும்
நீண்ட—நீண்ட
புருவங்களும்—திருப்புருவங்களும்
தக்க — (அப்புருவத்துக்குத்) தகுதியான நீட்சியையுடைத்தாய்
தாமரை — தாமரைபோலே தர்ஶநீயமான
கண்ணும்—திருக்கண்களும்
பாவியேன்— நினைத்தபடி அநுபவிக்கப்பெறாத பாபத்தையுடையேனான என்னுடைய
ஆவியின்மேலன—ஆத்மகதமாகாநின்றது. (௫)

ஆறு;—(பக்கம்நோக்கி) தன்தசையை அநுஸந்தித்து, "ஸர்வதா அருகேவரக்கூடும்" என்று வரஸம்பாவனையுள்ள பார்ஶ்வத்தைப்பார்த்து நில்லாநின்றாள், பின்னை இங்ஙனே நிற்கமாட்டாதே ஶிதிலையாகாநின்றாளென்று, என்னோடு பழகியிருக்கிற தாய்மா

ரானநீங்களும் பொடியாநின்றிகோள். திருக்குறுங்குடிக்குக் கீர்த்தி தகுதியானாப்போலே ஒன்றுக்கொன்று தகுதியாய் திரண்டசோதியையுடைத்தாய், தொண்டைபோலே சிவந்திருக்கிற வாயும் புருவத்துக்குத் தகுதியாய்த் தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களும், அவனழகை நினைத்தால் நோவுபடுகைக்கீடான பாபத்தைப் பண்ணின என்னை உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள். (ரு)

ஈடு; அவ; — ஆறாம்பாட்டு. நம்பியுடைய திவ்யாவயவஸோபைகள் என்னெஞ்சுநிறையப்புகுந்து நலியாநின்றனவென்கிறாள்.

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்றன்னைகாணகொடாள்*
சோலைசூழ்தண் திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும்*
நீலமேனியும்நான்குதோளுமென்னெஞ்சம்நிறைந்தனவே. (சு)

ப; — அநந்தரம், முகசோபையோடேகூடின ரூபபுஜலைவலக்ஷண்யம் என்னெஞ்சிலே பூர்ணமாயிற்றென்கிறாள்.

நங்குடிக்கு — (அவன்வரக்காணவிருக்கும்) நங்குடிக்கு
இவள் — (தான்காணத்வரிக்கிற) இவள்
மேலும் — (இன்றையளவன்றியே) உள்ளதனையும்
வன் — (கழிக்கவரிய) சிக்கென்ற
பழி — பழிதானொருவடிவாயிருக்கிறவளாயிருக்கும்
என்று — என்று
அன்னை — தாயாரானவள்
காண — நம்பியைக்காண
கொடாள் — இடந்தருகிறிலள்;
சோலை — சோலை
சூழ் — சூழ்ந்த
தண் — ஶ்ரமஹரமான
திருக்குறுங்குடி — திருக்குறுங்குடியில்
நம்பியை — நம்பியை
நான் — (பழிபுகழாம்படியானப்ராவண்யத்தையுடைய) நான்
கண்டபின் — கண்டபின்பு
கோலம் — அபிரூபமாய்
நீள் — நீண்ட
கொடி — கற்பகக்கொடிபோலேயிருக்கிற
மூக்கும் — திருமூக்கும்
தாமரை — (அதினுடையபூவென்னலாம்படியாய்த்) தாமரைபோலேயிருக்கிற
கண்ணும் — திருக்கண்களும்
கனி — (அதின்கனியென்னும்படி) பழுத்த
வாயும் — திருவதரமும்
நீலம் — (அதுக்குப்பரபாகமான) நீலநிறத்தையுடைய
மேனியும் — திருமேனியும் (பச்சிலைமரமடைத்தாற்போலேயிருக்கிற)
நான்கு — நாலு
தோளும் — திருத்தோள்களும்
என் — என்
நெஞ்சம் — நெஞ்சிலே
நிறைந்தன — நிறைந்தன. (சு)

ஆறு;—(மேலும்வன்பழி.) இப்போதன்றிக்கே மேலும் நங்குடிக்கு நிலைநிற்கும் பழியை விளைக்குமிவளென்று, தாயார் நம்பியைக்காண இடங்கொடாதே நோக்காநின்றாள். சோலைகளாலே சூழப்பட்ட திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், கோலம் கொழுந்துவிட்டதொரு கொடிபோலேயிருக்கிற திருமூக்குமுதலான திவ்யாவயவங்களினுடைய அழகுகள் என்னெஞ்சம்நிறையப் புகுந்து நலியாநின்றனவென்கிறாள். (சு)

ஈடு;அவ;—ஏழாம் பாட்டு. நம்பியுடைய திருமேனியி லழகு வெள்ளம் என்னெஞ்சிலே வேர்விழுந்த தென்கிறாள்.

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்றன்னைகாணகொடாள்*
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்*
நிறைந்தசோதிவெள்ளஞ்சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும்*
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான் நேமியங்கையுளதே. (எ)

ப;—அநந்தரம், நிரதிஶய தேஜோவிஶிஷ்டமாய் உத்துங்கமான ஸ்ப்ருஹணீய விக்ரஹத்தோடே நம்பி என் நெஞ்சுக்குள்ளே கையுந்திருவாழியுமாய் நின்றாரென்கிறாள்.

நம்—நம்முடைய
குடிக்கு—குடிக்கு
இவள்—இவள்
நிறைந்த—பூர்ணமாய்
வன்—ப்ரபலமான
பழி—பழி
என்று—என்று
அன்னை—தாயார்
காண—காண
கொடாள்—இடங்கொடுக்கிறிலள்;
சிறந்த—சிறப்பையுடைத்தான
கீர்த்தி—கீர்த்தியையுடைய
திருக்குறுங்குடிநம்பியை—திருக்குறுங்குடிநம்பியை
நான்—(அக்கீர்த்த்யதிஶயத்துக்ககப்பட்ட) நான்
கண்டபின்—அநுபவித்தபின்பு
நிறைந்த—பூர்ணமான
சோதிவெள்ளம்—தேஜோராஶியாலே
சூழ்ந்த—சூழப்பட்டு
நீண்ட—உத்துங்கமாய்
பொன்—ஸ்ப்ருஹணீயமான
மேனியொடும்—வடிவோடேகூட
என்னுள்ளே—என் நெஞ்சுக்குள்ளே
நிறைந்து—நிறைந்து
நின்றொழிந்தான்—நின்றுவிட்டான்;
நேமி—(அஸாதாரணசிஹ்நமான) திருவாழியும்
அம்—அழகிய
கை—திருக்கையிலே
உளது—உண்டாயிருந்தது. (எ)

ஆறு;—(நிறைந்த.) ஒருவராலும் போக்கவொண்ணாத வன் பழியை நங்குடிக்கு விளைக்குமிவள் என்று அன்னை காணகொடாள்.

சிறந்தகீர்த்தித் திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், நிறைந்த சோதிவெள்ளம்சூழ்ந்த போக்யதை மிக்கு விலக்ஷணமான திருமேனியழகும், அல்லாதவழகிற்காட்டில் கையுந்திருவாழியுமான அழகும் என்நெஞ்சிலே வேர்விழுந்ததென்கிறாள். (எ)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. ஸார்வத்ரிகமான அங்கசோபை என்முன்னே நின்று நலியாநின்றதென்கிறாள்.

கையுள்நன்முகம்வைக்கும்நையுமென்றன்னையரும்முனிதிர்*
மைகொள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும்*
மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே.

ப ;—அநந்தரம், நம்பியுடைய ஸர்வாவயவசோபைகளும் என்முன்னே நில்லாநின்றனவென்கிறாள்.

ஆற்றாமையாலே)
கையுள்—கையுள்ளே
நல்—அழகிய
முகம்—முகத்தை
வைக்கும்—வையாநிற்கும்
நையும்-(அதற்குமேலே) சிதிலையாகாநிற்கும்
என்று—என்று
அன்னையரும்—இப்படியிருப்பதற்கு க்ருஷிபண்ணின நீங்களும்
முனிதிர்—முனியாநின்றீகோள் (நம்பியுடைய நிழலீட்டாலே)
மை—கருகினநிறத்தை
கொள்—உடைத்தாய்
மாடம்—மாடங்களையுடைத்தான
திருக்குறுங்குடி நம்பியை—திருக்குறுங்குடிநம்பியை
நான்—(நைவேப்ரக்ருதியான) நான்
கண்டபின்—கண்டபின்
செய்ய—சிவந்த
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
கண்ணும்—திருக்கண்களும்
அல்குலும்—(அநுபாவ்யமான) கடிப்ரதேசமும்
சிறு—(முஷ்டிக்ராஹ்யமாம்படி) சிறுகின
இடையும்—இடையும்
வடிவும் — (இவ்வவயவசோபைக்கு ஆஸ்ரயமான) வடிவும்
மொய்—செறிவை
கொள்—உடைத்தாய்
நீள்—நீண்ட
குழல்—குழல்கள்
தாழ்ந்த—தாழ்ந்த
தோள்களும்—புஜசிகரங்களும்
பாவியேன்— (அபிநிவேசாநுரூபமாக அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடையேனுடைய என்னுடைய
முன்—முன்னே
நிற்கும்—நில்லாநின்றன. (அ)

ஆறு;—(கையுள்.) கைதொடப்பொறாத ஸௌகுமாரமான முகத்தை, விஷண்ணையாய்க் கையிலேவைக்கும், மிகவும் அவஸந்நையாமென்று அந்யரைப்போலே தாய்மாரானநீங்களும் பொடியாநின்றீகோள். நம்பியுடைய திருமேனியில் நீலவர்ணமான தேஜஸ்ஸாலே மைகொள்மாடமான திருக்குறுங் குடிநம்பியை நான்கண்டபின், செய்யதாமரைகண்ணும் அகன்ற நிதம்பமும் சிறுத்த இடையும் நிருபமமான வடிவும் அழகிய குழல்தாழ்ந்த தோள்களும், இவற்றையநுபவித்துப் பிரிகைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னுடையமுன்னே நின்று நலியாநின்றனவென்கிறாள். (அ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. நம்பி, போக்யதைகளெல்லாவற்றோடுங்கூட என் நெஞ்சிலே புகுந்து விடுகிறிலனென்கிறாள்.

முன்னின்றாயென்றுதோழிமார்களுமன்னையரும்முனிதிர்*
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
சென்னிநீண்முடியாதியாய உலப்பிலணிகலத்தன்*
கன்னல்பாலமுதாகிவந்தென்னெஞ்சங்கழியானே. (கூ)

ப;—அநந்தரம், நம்பி அஸங்க்யேயாபரண ஸோபாவிஶிஷ்டத்வத்தாலே அதிஶயிதபோக்யனாய்க்கொண்டு என்னெஞ்சுவிட்டுப் போகிறிலனென்கிறாள்.

(அஸௌர்யம்பஶ்யையாய்க்கொண்டுவளர்ந்த நீ மநுஷ்யர்காண)
முன்—முன்னே
நின்றாய்—நின்றாய்
என்று—என்று
தோழிமார்களும் — (ஸமாநது:கைகளான) தோழிமாரும்
அன்னையரும் — (ஹிதபரைகளான) தாய்மாரும்
முனிதிர்—முனியாநின்றீகோள்;
மன்னும்—ஸ்வஸ்த்திரமான
மாடம்—மாடங்களையுடைய
திருக்குறுங்குடிநம்பியை — திருக்குறுங்குடிநம்பியை
நான்—(ஸ்த்ரீத்வம்பேணாமல் புறம்பு புறப்படும்படியான) நான்
கண்டபின்—கண்டபின்பு
சென்னி—உத்தமாங்கத்தில்
நீள்—(ஆதிராஜ்யஸூசகமாய்) ஓங்கிய
முடி—திருவபிஷேகம்
ஆதியாய்—முதலாய்
உலப்பில்—அஸங்க்யேயமாய்
அணி—அணியப்பட்ட
கலத்தன் - ஆபரணங்களையுடையவன்
கன்னல்—கன்னலும்
பால்—பாலும்
அமுது—அம்ருதமும்போலே
ஆகி—நிரதிஶயபோக்யனாய்க்கொண்டு
வந்து—வந்து
என்—என்
நெஞ்சம்—நெஞ்சை
கழியான்—விட்டுப்போகிறிலன். (கூ)

ஆறு;—(முன்னின்றுயென்று.) ஒருவராலும் காணவொண்ணாதபடிவர்த்திக்கும் ஸ்த்ரீத்வத்தை யுடையவளான நீ, கண்காண நிற்பதே! என்று தோழிமாரும் தாய்மாரும் திரளநின்று நலியா நின்றீர்கள். நித்யமாய்ச் செல்லுகிற மாடங்களையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான் கண்டபின், சென்னிநீண்முடியாதியாய் முடிவில்லாத திவ்யபூஷணபூஷயங்களுடைய சேர்த்தியாலே, கண்டசர்க்கரையும்பாலும் கலந்தாப்போலே நிரதிசயபோக்யனாய் என் நெஞ்சில் புகுந்து எனக்கு மறக்கவொண்ணாதபடி ஒருக்ஷணமும் என் ஹ்ருதயத்தைவிட்டுப் போகிறிலனென்கிறாள். (௯)

ஈடு;அவ;—பத்தாம்பாட்டு. நம்பியுடைய திருமேனி என் நெஞ்சிலே ப்ரகாசிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள்.

கழியமிக்கதோர்காதலளிவளென்றன்னைகாணகொடாள்*
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே*
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழுமார்க்குமறிவரிதே. (௧௦)

ப;—அநந்தரம் நித்யஸூரிபோக்யமாய் அத்யுஜ்ஜ்வலமான ப்ராப்ய விக்ரஹமானது அநந்யகோசரமாம்படி என் அகவாயிலே ப்ரகாசியாநின்றதென்கிறாள்.

இவள்—இவள்
கழிய—கைகழிய
மிக்கதோர்—விஞ்சின
காதலள்—காதலையுடையவளானாள்;
என்று—என்று
அன்னை—அன்னையானவள்
காண—(நம்பியைக்) காண
கொடாள்—இடந்தருகிறிலள்; (ஆஸ்ரிதரை அநந்யார்ஹராக்கும்)
வழுவில்—அவிகலமான
கீர்த்தி—கீர்த்தியையுடைய
திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை
நான் — (அபிநிவேசாதிசயத்தையுடைய) நான்
கண்டபின்—கண்டபின்
தேவர்குழாங்கள்—ஸூரிஸங்கங்களானவை
குழுமி – பரஸ்பரம் ஸங்கீபவித்து
கைதொழ—சேஷவ்ருத்திபண்ணி அநுபவிக்கும்படி
சோதிவெள்ளத்தினுள்ளே—தேஜோராசி மத்யத்திலே
எழுவது—உச்ச்ரிதமாய்த் தோற்றுகிற
ஓர்—அத்விதீயமான
உரு — ப்ராப்யவிக்ரஹமானது (அப்படியே)
என்—என்
நெஞ்சுள்—நெஞ்சுக்குள்ளே
எழும்—தோன்றாநின்றது (இது)
ஆர்க்கும் - எத்தனையேனும் அறிவுடையார்க்கும்
அறிவு—ஸ்வயத்நத்தால் அறிய
அரிது—அரிது. (௧௦)

ஆறு;—(கழிய.) லோகத்தில் தங்களுக்கு அபிமதரைப் பிரிந்தால் நாட்செல்ல நாட்செல்ல ஸ்நேஹம் குறையக்கடவதாயிருக்க, இவளுக்கு வர்த்தியாநின்றதென்று தாயாரானவள் நம்பியை அநுஸந்திக்க வொட்டுகிறிலள். பூர்ணையான கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின் * அயர்வறு மமரர்களுடைய ஸமூஹங்கள் திரண்டநுபவிக்க, அழகுவெள்ளத்தின் நடுவே உஜ்ஜ்வலமாய்த்தோற்றுகிற விலக்ஷணமான நம்பியுடைய திருமேனி என் நெஞ்சிலே ப்ரகாஶிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள். ()

ஈடு; அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிக்க வல்லார் ஸம்ஸாரத்திலேயிருந்தே வைஷ்ணவர்களென்கிறார்.

அறிவரியபிரானையாழியங்கையனையேயலற்றி*
நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன*
குறிகொளாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல்*
அறியக்கற்றுவல்லார்வைட்டணவராழ்கடல் ஞாலத்துள்ளே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்களுக்கு பகவச்சேஷத்வமாகிற ஸ்வரூபலாபம் பலமாகவருளிச்செய்கிறார்.

(ஸ்வஸாமர்த்த்யத்தால் அறிய நினைத்திருப்பார்க்கு)
அறிவு—அறிய
அரிய—ஒண்ணாதபடியான
பிரானை—ஸ்வாமியாய்
ஆழி—(அதுக்குஸூசகமான) திருவாழியை
அம்—அழகிய
கையனை—திருக்கையிலேயுடையவனை
அலற்றி—(ப்ரேமபாரவஶ்யந் தோற்றும்படி) அலற்றி
நறிய—பரிமளோத்தரமாய்
நல்—ஶ்லாக்யமான
மலர்—புஷ்பங்களைப்போலே
நாடி—ஆராய்ந்து
நன்—அநுபவயோக்யமான ஜ்ஞாநாதி வைலக்ஷண்யத்தையுடையராய்
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
குறி—ஆயுதாவயவாபரணரூப சிஹ்நங்களை
கொள்—உடைய
திருக்குறுங்குடியதன்மேல்—
இவைபத்தும்—இவைபத்தையும்
அறிய—ஜ்ஞாநப்ரகாஶம்பிறக்கும்படி
கற்று—அப்யஸித்து

வல்லார்—அர்த்தாநுஸந்தாநம் பண்ண வல்லவர்கள்
ஆழ்—அகாதமான
கடல்—கடல்சூழ்ந்த
ஞாலத்துள்ளே—பூமிக்குள்ளே
வைட்டணவர்— பகவதஸாதாரணஸம்பந்தாநுபவ தத்பரராய்க் கொண்டு வர்த்திப்பார்கள்,
நன்குருகூரென்று — ஸாரமுகாவுமாம்.

இது-அறுசீராசிரிய விருத்தம் (கக)

ஆறு; - (அறிவரிய.) கையும்திருவாழியுமாயிருக்கிற தன்னுடைய திருவழகு ஒருவர்க்கும்அறியவொண்ணாதபடியாயிருக்கிற மஹோபகாரகனை அவ்வுபகார ஜநித ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பரவஸராய் அலற்றி, மிகவும் பரிமளத்தையுடைய செவ்விப்பூவைக் கொண்டு, நம்பியுடைய திருவழகை முட்டக்காண்கைக்கிடான ப்ரபாவத்தையுடைய ஆழ்வார் அருளிச்செய்த பகவத்திவ்யலாஞ்சநவிஷயமான ஆயிரந்திருவாய்மொழியிலும், ஸௌந்தர்ய ஸௌசீல்யாதிகளால் திருநாட்டிலும் அவதாராதிகளிற்காட்டிலும் பரத்வமுள்ளது நம்பிபக்கலிலே யென்று உபபாதித்த இத்திருவாய்மொழியை வ்யக்தமாக அப்யஸித்தவர்கள் ஸம்ஸாரத்திலிருந்து வைத்தே வைஷ்ணவர்களென்கிறார். (கக)

ஐந்தாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:.

ஆறுந்திருவாய்மொழி—கடல்ஞாலம் ப்ரவேசம்.

———:o:———

ஆறு;—(கடல்ஞாலம்.) இப்படி எம்பெருமானைப்பிரிந்த வ்யஸநாதிசயத்தாலே ஆத்மதாரணக்ஷமையன்றிக்கேயிருந்த பிராட்டி, ஆத்மதாரணார்த்தமாக "ஸ்ரீகோபிகளைப்போலே வண்துவரைப்பெருமானுடைய திவ்யசேஷ்டிதங்களையும், மற்றும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் அநுகரித்துதரிப்போம்" என்று அதிலேயொருப்பட, இவள்படியைக்கண்ட திருத்தாயார், "இவள்சொல்லுகிற பாசுரங்கள் ஆச்சர்யமாயிராநின்றன, இவள்பக்கல் எம்பெருமான் ஆவேசித்தானாகாதே, இவளுடைய அதிலோகமான ப்ரவ்ருத்திகள் 'இன்னபடி' என்று அத்யவஸிக்க முடிகிறதில்லை" என்று, வினவவந்தவர்களை நோக்கிச் சொல்லுகிறாள்.

ப;—ஆறுந்திருவாய்மொழியில், கீழ்-ஆந்தராநுபவப்ரீதி நடக்கச்செய்தே பாஹ்யஸம்ஶ்லேஷாலாபத்தாலே அப்ரீதியும்கலந்து நடந்தவிது, பாவநாப்ரகர்ஷத்தாலே அலாபநிபந்தமான ஆர்த்தியே விஞ்சும்படி அதிசயிதாபிநிவேசம்பிறந்து, பகவத்தாதாத்ம்ய ப்ரதிபத்தி பிறக்கும்படி பாவனைமுதிர ; ஸர்வநிர்வாஹகனான ஸர்வேஶ்வரனுடைய ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களும், தத்ப்ரதிபாதகமான வித்யாஸ்தலங்களும், ஜகத்துக்கு ப்ரதாநகாரணபூதமான மஹாபூதங்களும், ஸகலக்ரியைகளும். ஜகத்விஷயரக்ஷண வ்யாபாரங்களும், அவதாரசேஷ்டிதங்களும் ஜகத்திலுண்டான ஸமஸ்த பந்துவர்க்கமும், ப்ரஹ்மாதிகளான தேவர்ஷிவர்க்கமும், புண்யபாபரூபகர்மங்களும், ஸ்வர்க்கநரகாதிரூபபலங்களும் நானிட்டவழக்கென்று, அநுகாரரூபேபாக்தியைப் பண்ணும்படி இவர்க்கு அநந்யபாவனைபிறந்தபடி கண்ட பரிவரானவர்கள், ஜிஜ்ஞாஸுக்களான பார்ஶ்வஸ்தர்க்கு இவர்படியை அறிவித்தப்ரகாரத்தை ; பிரிவாற்றாமையால்வந்த பாவனையாலே க்ருஷ்ணாநுகாரம்பண்ணின கோபிமாரைப்போலே, நாயகனான ஈஶ்வரனுடைய ப்ரகாரங்களை அநுகரிக்கிற நாயகியுடைய ப்ரவ்ருத்திவிசேஷங்களை நற்றாயானவள் வினவினார்க்குரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

*

ஈடு;—கீழில்திருவாய்மொழியில் - ப்ரீத்யப்ரீதி ஸமமாயிறே சென்றது; இரண்டுமொக்கலந்து சென்றால் ப்ரீதியே தலையெடுக்கவு

மாயிறே; பாக்யஹாநியாலே அப்ரீதியம்ஶமே தலையெடுத்தது; கீழ் உருவெளிப்பாட்டாலே அவனை ஸ்மரித்துதரித்த அம்ஶமும்போய், அலாபத்தால்வரும் துவட்சியேயாயிற்று; இப்படி துவண்ட இவள் பிரிவாற்றாமையாலே அவனை யநுகரித்து தரிக்கப்பார்க்கிறாள். ஒரோ அர்த்தோபந்யாஸங்கள் பண்ணவிருப்பாரைப்போலே ஜ்ஞாநமுத்ரையுந்தானுமாய் கீதோபநிஷதாசார்யனைப்போலே யிருந்தாள்; இத்தைக்கண்ட திருத்தாயார், "இது ஏதேனும் மணிமந்த்ரௌஷதாதிகளாலேவந்த விகாரமோ?" என்று ஶங்கித்து, அங்ஙனன்றிக்கே இருந்தவாறே… புடைகள் காணாமையாலே "அதல்ல" என்று அறிந்தாள்; இனி, "அவனைப்பிரிகையாலேவந்த ஆற்றாமையாலே அநுகரித்து தரிக்கிறாள்" என்று தெளியமாட்டிற்றிலள் தன்கலக்கத்தாலே;

இவ்வளவிலேபுகுந்து "இதுதான் என்?" என்று வினவப்புகுந்த பந்துக்களைப்பார்த்து திருத்தாயார்; அவனோட்டை வசநவ்யக்தி ஸாதர்ம்யத்தாலும் ஜ்ஞாநமுத்ராநிரீக்ஷணாதிகளிருந்தபடியாலும், ஸர்வேஶ்வரன் இவள்பக்கலிலே ஆவேஶித்தானாகவேணுமென்று சொல்லுகிறாள், அநுகரித்து தரிக்கிறாள்" என்று அறியமாட்டாமையாலே. பிரிவாற்றாமையுண்டானால் அநுகரித்து தரிக்கக்கடவதிறே; க்ருஷ்ணனை அநுகரித்தார்களிறே திருவாய்ப்பாடியில் பெண்கள் (க) "க்ருஷ்ணோஹமேதல்லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி: - க்ருஷ்ணோஹமேஷலலிதம்வ்ரஜாம்யாலோக்யதாம்கதி:" நான் க்ருஷ்ணன், இங்ஙனே நடக்கப்புகாநின்றேன் ; நடைச்சக்ரவர்த்தியைப்பிடிக்க வேண்டும்படியாக; கண்படைத்தாரடையக் கண்டுகொள்ளுங்கோள் என்றாளிறே. (உ) "து³ஷ்ட காளிய திஷ்டா²த்ர - துஷ்டகாளியதிஷ்டாத்ர" ஒருத்தி காளியனாய்க்கிடக்க, ஒருத்தி க்ருஷ்ணனாய் ஏறி ஆடினாளிறே. "ப்ரதிகூலனான காளியனானாலாகாதோ க்ருஷ்ணனாகத் தன்னை அநுகரிக்கிற பெண்ணின்கால்பொடி படப்பெறில்" என்றிருந்தாள்; க்ருஷ்ணனானவள்தானும் இவனை "காளியன்" என்றே நினைத்துக் கண்ணற்றுத் துகைத்தாளிறே அநுகாரத்தில் பெய்ப்பாட்டாலே.

அவர்கள் ஓரவதாரத்திலே அநுபவிக்கையாலே அங்குள்ள சேஷ்டிதங்களை அநுகரித்தார்கள். இவள் மயர்வறமதிநல மருளப்

(க) வி-பு ரு-கங-உசு. (உ) வி-பு-ரு-கங-உஎ.

பெற்றவளாகையாலே உபயவிபூதியுக்தனை அநுகரிக்கிறாள். இங்கு - கால், நடைதாராமையாலே அங்குப்போலே காயிகமான அநுகாரமல்ல ; வாசிகமாத்ரத்தாலேயாயிற்று அநுகரிக்கிறது. ஆக, "பிறப்பேபரதந்த்ரஜந்மத்திலே பிறந்தவள் பிறப்பே ஸ்வதந்த்ரனானவன் வார்த்தையும் சொல்லாநின்றாள், ஸ்த்ரீத்வத்துக்கு எல்லையான இவள் புருஷோத்தமன்சொல்லும் வார்த்தையையும் சொல்லாநின்றாள்; அறிவுக்குவிஷயம் வ்யவஸ்திதமாயிருக்க, ஸர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தையைச் சொல்லாநின்றாள்" என்றுகொண்டு; இவள் செய்கிறபடிகளைத் திருத்தாயார், வினவப்புகுந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

கீழில்திருவாய்மொழியில் - உருவெளிப்பாட்டாலே அநுபவித்தது விக்ரஹவைலக்ஷண்யத்தையிறே, அதுவேயிறே ஶாபாஶ்ரயம் ; தேஹாத்மாபிமாநம் முற்றினால் வேறொன்றுதோற்றாதாப்போலே, ப்ரகாரியான அவனளவும்செல்லத் தன்னையநுஸந்தித்த பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்தானாகப்பேசுகிறாள் ; அத்தையிறே பாவித்தது. பாவநாப்ரகர்ஷத்தாலே, (க) "தத்பாவபாவமாபந்நஸ்ததாஸௌ பரமாத்மநா । பவத்யபேதீ - தத்பாவபாவமாபந்நஸ்ததாஸௌபரமாத்மநா - பவத்யபேதீ" என்றும், (உ) "அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச - அஹம்மநுரபவம் ஸூர்யஶ்ச" என்றும், (ங) "ஸர்வகதத்வாதநந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தித: - மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்" என்றும் - அவனாக பாவித்தால் பின்னை அவன் சொல்லும்வார்த்தை சொல்லலாயிருக்குமிறே ; அப்படியே விபூத்யத்யாயத்தில் அவன் சொன்னபடிகளை ப்ராசுர்யேண அநுகரிக்கிறாள்.

அதர்வஶிரஸ்ஸிலே-ருத்ரன் தன்வைபவத்தைப் பரக்கநின்று பேசினான், தனக்கு அடங்காத ஐஶ்வர்யமாயிருந்தது, இவன் இப்படிபேசுகைக்கு அடியென் ? என்று ஶ்ருதிதானே ஶங்கித்து, (ச) "ஸோந்தராதந்தரம் ப்ராவிஶத் - ஸோந்தராதந்தரம்ப்ராவிஶத்" என்று பரமாத்மப்ரவேஶத்தாலே சொன்னான் என்றதிறே. அந்த பாவம்வந்தால் அப்படியே சொல்லலாயிருக்குமே. ஆக, "இப்படி பிரிவாற்றாமையால் அவனையநுகரித்து தரிக்கிறாள்" என்று அறியமாட்டாதே, "ஸர்வேஶ்வரன் ஆவேஶித்தான்போலே இராநின்

(க) வி-பு-சு-எ-கூரு.
(உ) ப்ருஹ-ங-ச.
(ங) வி-பு-க-கக-அரு
(ச) அதர்வஶிரஸ்

றது" என்று, திருத்தாயார் வினவவந்தவர்களுக்குச் சொல்லு கிறாள். *

ஈடு; அவ;—முதற்பாட்டு. என் மகள், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் பண்ணினேன் நான் என்னாநின்றாள்; எம்பெருமான் தன்பக்கலிலே ஆவேசித்துச் சொல்லுகிறாள்போலே இராநின்றதென்கிறாள்.

கடல்ஞாலஞ்செய்தேனும்யானேயென்னும்
கடல்ஞாலமாவேனும்யானேயென்னும் *
கடல்ஞாலங்கொண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலங்கீண்டேனும்யானேயென்னும் *
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ? *
கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன்?
கடல்ஞாலத்தென்மகள்கற்கின்றவே. (க)

ப;—முதற்பாட்டில், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளெல்லாம் நானே செய்தேனென்று ஸர்வேஶ்வராவிஷ்டையானுப்போலே சொல்லாநின்றாளென்கிறாள்.

கடல்—கடல்சூழ்ந்த
ஞாலம்—ஜகத்தை (ஸஹாயாந்தர நிரபேக்ஷனாக)
செய்தேனும்—ஸ்ருஷ்டித்தேனும்
யானே—நானே
என்னும்—என்னாநிற்கும்;
கடல்ஞாலமாவேனும்—(இத்தை ஸ்ருஷ்ட்யநந்தரம் அநுப்ரவேசித்து (க) "[illegible]- ஸச்சத்யச்சாபவத்" என்கிறபடியே) தத்தச் சப்தவாச்யதயா தாதாத்மகனாய் நிற்பேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கடல்ஞாலம்—இத்தை
கொண்டேனும்—(மஹாபலி அபிமானிக்க அர்த்தியாய் இரந்து) அளந்துகொண்டேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
(அவாந்தர ப்ரளயத்திலே வராஹவேஷத்தைக்கொண்டு)
கடல்ஞாலம் - இத்தை
கீண்டேனும் - கீண்டெடுத்தேனும்
யானேயென்னும்—யானேயென்னும்;
(மஹாப்ரளயத்திலே (உ) "[illegible] - அத்தா சராசரக்ரஹணாத்" என்கிறபடியே)
கடல்ஞாலம்—இத்தை
உண்டேனும் — உபஸம்ஹரித்தேனும்
யானே—நானே

(க) தை ஆந-உ.

(உ) ப்ரஹ்மஸூ-க-உ-உ.

என்னும்—என்னும் ;
கடல்ஞாலத்தீசன்—ஸகலஜகந்நியந்தாவான ஸர்வேஶ்வரன்
வந்து—வந்து
ஏற—இவளை ஆவேசிக்க
கொலோ—கூடுமோ ?
கடல்ஞாலத்தீர்க்கு—அவிஶேஷஜ்ஞராய் ஸம்ஸாரவர்த்திகளான உங்களுக்கு
கடல்ஞாலத்து—இத்தேஶத்திலேயிருந்துவைத்து
என்மகள்—(அப்ராக்ருதஸ்வபாவையான) என்மகள்
கற்கின்ற—அப்யஸிக்கிறனவாயுள்ள
இவை—இந்த அதிஶயிதாகாரங்களை
என்—என்னாக
சொல்லுகேன்—சொல்லுவேன்
உண்டேனென்று—வடதளஶாயி வ்யாபாரமாகவுமாம். (க)

ஆறு ;—கடலோடேகூடின ஜகத்தைத் ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக ஸ்ருஷ்டித்தேனும் நானென்னும். இஜ்ஜகத்து மதாத்மகம், ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு பதார்த்தமில்லையென்னும். இத்தை மஹாபலியபஹரிக்க, நான் அளந்துகொண்டேனென்னும், ப்ரளயார்ணவத்திலே அழுந்தின இத்தை ஸஹாயநிரபேக்ஷமாக எடுத்தேனும் நானென்னும். பூமிதான் "ப்ரளயம் வாராநின்றது" என்று அறியாதிருக்க, நானே அறிந்து வயிற்றிலேவைத்துப் பரிஹரித்தேனென்னும். இவள்பக்கல் கடல்ஞாலத்தீசன் வந்து ஆவேசித்தானோ? இந்தபூமியிலே இருந்துவைத்து என்மகள் மேன்மேலனச் சொல்லுகிற இவற்றை லௌகிகரான உங்களுக்குச்சொல்ல உபாயமுண்டோ வென்கிறாள். (க)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. ஸகலவித்யாவேதநமும் அவ்வித்யாப்ரவர்த்தகத்வாதிகளும் நானிட்டவழக்கென்கிறாள்.

கற்குங்கல்விக்கெல்லையிலனேயென்னும்
கற்குங்கல்வியாவேனும்யானேயென்னும் *
கற்குங்கல்விசெய்வேனும்யானேயென்னும்
கற்குங்கல்விதீர்ப்பேனும்யானேயென்னும் *
கற்குங்கல்விச்சாரமும்யானேயென்னும்
கற்குங்கல்விநாதன்வந்தேறக்கொலோ ? *
கற்குங்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன் ?
கற்குங்கல்வியென்மகள்காண்கின்றவே. (உ)

ப ;—அநந்தரம், ஸகலவேதவித்யைகளும் தத்ப்ரவர்த்தநாதிகளும் நானிட்ட வழக்கென்னுநின்றாளென்கிறாள்.

கற்கும்—(புஸ்தகநிரீக்ஷணாதிகளாலன்றியே ஆசார்யமுகத்தாலே) கற்கப்படும்
கல்விக்கு—வேதரூபவித்யைகளுக்கு (க) “அநந்தாவைவேதா:” என்கிறபடியே)
எல்லை—எல்லையை
இலன்—உடையேனல்லேன்
என்னும்—என்னும்;
கற்குங்கல்வியாவேனும்—அந்தவித்யைகள் எனக்கு ப்ரகாரமாம்படி ஸப்தப்ரஹ்மாத்மகனாய் நிற்பேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கற்குங்கல்வி—அவற்றை
செய்வேனும்—(ஸுப்தப்ரபுத்த ந்யாயத்தாலே ஸ்ருஷ்டிகாலத்திலே யதாபூர்வம்) உண்டாக்குவேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கற்குங்கல்வி தீர்ப்பேனும்—ஸம்ஹாரஸமயத்திலே உபஸம்ஹரித்து என்னெஞ்சிலே இட்டுவைப்பேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கற்குங்கல்விச்சாரமும்—அந்த வித்யா ஸாரமான மூலமந்த்ராதிகளும்
யானே—நானிட்டவழக்கு
என்னும்—என்னும்;
கற்குங்கல்வி—ஸகலவேதப்ரதிபாத்யனான
நாதன்—ஸர்வேஸ்வரன்
வந்தேற—இவளை ஆவேசித்தானாக
கொலோ—கூடுமோ?
கற்குங்கல்வீர்க்கு—இன்று என்பக்கலிலே இதுகற்கும்படியான உங்களுக்கு
கற்குங்கல்வி—இன்று வார்த்தைகற்கும் பருவமான
என்மகள்—என்பெண்பிள்ளை
காண்கின்ற—தான்கண்டுசொல்லுகிற
இவை—இவற்றை
என்—என்னென்று
சொல்லுகேன்—சொல்லுவேன்?
“கற்குங்கல்வியென்று—ஸகலவித்யாஸ்தாநம்” என்றும் சொல்லுவாருமுளர். (உ)

ஆறு;—(கற்குங்கல்வி). நான்கற்ற வித்யைகளுக்கு ஒருமுடிவில்லையென்னும். எல்லாரும் விரும்பிக் கற்கிற வித்யைகள் நான் இட்டவழக்கென்னும். அவற்றை உண்டாக்கினேன் நானேயென்னும். அவற்றினுடைய தாத்பர்யநிர்ணயம் என்னாலேயென்னும். வித்யாபலம் நானேயென்னும். அப்யஸிக்கப்படும் ஸகலவித்யாவேத்யனான ஸர்வேஸ்வரன்வந்தேறினானோ? அறிவில்லாத உங்களுக்கு அறியத்தொடங்கும் பருவத்தையுடைய இவள் அநுஸந்திக்கிறவற்றைச் சொல்ல விரகுண்டோவென்கிறாள். (உ)

(க) யஜு:.

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு காரணமான ப்ருதிவ்யாதி பூத பஞ்சகங்களும் நானிட்ட வழக்கென்றுநின்று ளென்கிறாள்.

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும் *
காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிக்காற்றெல்லாம்யானேயென்னும் *
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னும்
காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ ? *
காண்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
காண்கின்றவென்காரிகைசெய்கின்றவே. (௩)

ப ;—அநந்தரம், ப்ரமாணஸித்தமான ஜகத்துக்கு ப்ரதாநகாரணமான மஹாபூதங்கள் நானிட்ட வழக்கென்னுமென்கிறாள்.

காண்கின்ற—(ப்ரமாணத்தாலே) காணப்படுவதான
நிலமெல்லாம்—(சரமபூதமான) ப்ருதிவியெல்லாம்
யானே—நானே
என்னும்—என்றுநிற்கும் ;
காண்கின்ற—அப்படிப்பட்ட
விசும்பு—(ப்ரதமபூதமான) ஆகாஶமும்
எல்லாம்—,
யானே—நானே
என்னும்—என்றுநிற்கும் ;
காண்கின்ற—தேஜோபதார்த்தங்களில் ப்ராதாநமாய்
வெம்—உஷ்ணஸ்பர்ஶமான
தீ—அக்நியும்
எல்லாம்—,
யானே—நானே
என்னும்—என்றுநிற்கும் ;
காண்கின்ற—தத்பூர்வபாவியாய்
இ—தாரகத்வாதிகளாலே ஸந்நிஹிதமான
காற்றெல்லாம்—வாயுக்களும்
யானே—நானே
என்னும்—என்றுநிற்கும் ;
காண்கின்ற—ததநந்தரபாவியான
கடல்—ஜலதத்வம்
எல்லாம்—எல்லாம்
யானே—நானே
என்னும்—என்றுநிற்கும் ;
காண்கின்ற—தர்ஶநீயமாய்
கடல்—(அபரிச்சிந்நமான) கடல்போன்ற
வண்ணன்—வடிவையுடைய ஸர்வேஶ்வரன்
ஏறக்கொலோ—ஆவேஶித்தானோ ?
காண்கின்ற—காண்கிற
உலகத்தீர்க்கு—லோகமொழிய அறியாத உங்களுக்கு
காண்கின்ற—ஒருவருங்காணவொண்ணாதவற்றையும் காணும்படியாய் அபிரூபையான
என்—என்
காரிகை—மகள்
செய்கின்ற—செய்கிறவற்றை
என்—என்னென்பதாக
சொல்லுகேன்—சொல்லுவேன். (௩)

ஆறு;—(காண்கின்ற.) அபரிச்சேத்யமான ப்ருதிவ்யாதிபூத பஞ்சகமும் நானிட்டவழக்கு என்னாநின்றாள். கடல்போலே எப்போதும் தர்ஸநீயமான திருநிறத்தையுடையவன் வந்தேறினானோ? நமக்குத் தெரியாத நிலத்திலேபுக்கு அவகாஹித்து என்மகள் பண்ணுகிற சேஷ்டிதங்கள் நீங்கள் காண்கிறபடிக்கு மேற்பட என்னால் சொல்லலாவதில்லை யென்கிறாள். (௩)

ஈடு; அவ;—நாலாம்பாட்டு. காலத்ரயத்திலுமுண்டான க்ரியா ஜாதமெல்லாம் நானிட்டவழக்கென்னாநின்றாளென்கிறாள்.

செய்கின்றகிதியெல்லாம்யானேயென்னும்
செய்வானின்றனகளும்யானேயென்னும் *
செய்துமுன்னிறந்தவும்யானேயென்னும்
செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னும் *
செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னும்
செய்யகமலக்கண்ணனேறக்கொலோ? *
செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்?
செய்யகனிவாயிளமான்திறத்தே. (ச)

ப;—அநந்தரம், ஸர்வக்ரியைகளும் நானிட்டவழக்கென்னுமென்கிறாள்.

செய்கின்ற—செய்யப்படாநிற்கிற
கிதி—(வர்த்தமான) க்ரியையும்
எல்லாம்—,
யானேயென்னும்—,
செய்வான்—மேற்செய்வதாக
நின்றனகளும்—நிற்கிற (பவிஷ்யத்) க்ரியையும்
யானேயென்னும்—,
முன்—முன்பு
செய்து—செய்து
இறந்தவும்—கழிந்த (பூத) க்ரியையும்
யானே—நானிட்டவழக்கு
என்னும்—என்னும்;
செய்கை—இந்த க்ரியையினுடைய
பயன்—பலத்துக்கு
உண்பேனும்—போக்தாவும்
யானே—நானே
என்னும்—என்னும்;
செய்வார்களை—இக்க்ரியைக்கு அநுஷ்டாதாக்களை
செய்வேனும்—உண்டாக்குவேனும்
யானே—நானே
என்னும்—என்னும்; (இது)
செய்ய—சிவந்த
கமலம்—தாமரைபோலேயிருக்கிற
கண்ணன்—கண்ணையுடைய ஸர்வேஶ்வரன்
ஏறக்கொலோ—ஆவேசித்தபடியோ?
செய்ய—செவ்வையொழிய அறியாத
உலகத்தீர்க்கு—லோகத்தார்க்கு
செய்ய—சிவந்த
கனி—கனிபோலேயிருக்கிற
வாய்—அதரத்தையுடையளாய்
இளம்—முக்தையான
மான்—மான்போலே பேதையான இவள்
திறத்து—இடையாட்டத்து
இவை—இவை
என்—என்னாக
சொல்லுகேன்—சொல்லுவேன். (ச)

ஆறு;—(செய்கின்ற) வர்த்தமான க்ரியைகளும், மேல்வருவதான க்ரியைகளும், பண்டுசெய்த க்ரியைகளும், க்ரியாபலம் புஜிப்பேனும், க்ரியாகர்த்தாக்களை அவற்றில் ப்ரவர்த்திப்பிப்பேனும் நானென்னும். இவள்கண்ணினழகாலும் அவன் ஆவேசித்தாற்போலே இரா நின்றது. சிவந்த கனிபோலேயிருக்கிற வாயையுடையவளாயிருக்கிற சிறுபெண்பிள்ளை யிடையாட்டத்தில் ஆழங்காணமாட்டாதே படுபாடான உங்களுக்கு எத்தைச் சொல்லுவேனென்கிறாள். (௪)

ஈடு; அவ:;—அஞ்சாம்பாட்டு. ஜகத்ரக்ஷணப்ரமுகமான சேஷ்டிதங்களுமெல்லாம் பண்ணினேன் நானென்றுநின்றாளென்கிறாள்.

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னும்
திறம்பாமல்மலையெடுத்தேனேயென்னும் *
திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னும்
திறங்காட்டி அன்றைவரைக்காத்தேனேயென்னும் *
திறம்பாமல்கடல்கடைந்தேனேயென்னும்
திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ? *
திறம்பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்?
திறம்பாதென்திருமகளெய்தினவே. (௫)

ப;—அநந்தரம், ஜகத்ரக்ஷணாதி வ்யாபாரமெல்லாம் செய்கிறேன் நானேயென்னுமென்கிறாள்.

திறம்பாமல்—ஆஜ்ஞையை அதிலங்கியாதபடி
மண்—ஜகத்தை
காக்கின்றேன்—ரக்ஷிக்கிறேன்
யானே—நானே
என்னும்—என்னும்; (கோரக்ஷணார்த்தமாக)
திறம்பாமல்—சலியாதபடி
மலை—மலையை
எடுத்தேனே—எடுத்தேனே
என்னும்—என்னும்;
திறம்பாமல்—தப்பாதபடி
அசுரரை—(அரிஷ்டதேநுகப்ரப்ருதிகளான) அஸுரர்களை
கொன்றேனே—கொன்றேனே!
என்னும்—என்னும்;
திறம்—(விஜயஹேதுவான உபாய) ப்ரகாரங்களை
காட்டி—காட்டிக்கொடுத்து

அன்று—(துர்யோதநாதிகள் எதிரிட்ட) அன்று
ஐவரை—பாண்டவர்கள் ஐவரையும்
காத்தேனே—ரக்ஷித்தேனே
என்னும்—என்னும் ;
திறம்பாமல்—நினைவு தப்பாதபடி
கடல்—கடலை
கடைந்தேனே—கடைந்தேனே
என்னும்—என்னும் ;
திறம்பாத—(ஆஶ்ரித ரக்ஷணத்தில்) திறம்புதலில்லாத
கடல்வண்ணன்—கடல்வண்ணனானவன்
ஏறக்கொலோ—இவளை ஆவேஶித்த படியோ (இது)
திறம்பாத—“ அறியவேணும் ” என்கிற நினைவு தப்பாதிருக்கிற
உலகத்தீர்க்கு—லோகத்தீர்க்கு
என்—என்னுடைய
திரு—லக்ஷ்மீ ஸமானையான
மகள்—பெண்பிள்ளை
திறம்பாது—தப்பாதபடி
எய்தின—ப்ராபித்த ஸ்வபாவங்களை
என்—ஏதாக
சொல்லுகேன்—சொல்லுவேன்
திறம்பாதகடலென்று—கரைகடவாத கடலென்றுமாம். (௫)

ஆறு ;—(திறம்பாமல்) ஒருவர்க்கும் தப்பச்செய்யவொண்ணாதபடி இத்தரையை யெல்லாம் ஒருதுணையின்றிக்கே காக்கின்றேன். சலியாதபடி கோவர்த்தநோத்தரணம் பண்ணினேன். தப்பாதபடி கோலி அஸுரரை முடித்தேன். ஒருவர்க்கும் அறியவொண்ணாத என்படியை லோகத்திலே ஆவிஷ்கரித்து தர்யபுத்ராதிகள் ஐவரையுங் காத்தேன். நினைத்தபடி தப்பாமல் கடலைக்கடைந்தேனென்னும். ஒருவர்க்கும் தன் ஸாஸநத்தைத் தப்பவொண்ணாதபடியான ஸர்வேஶ்வரன் ஆவேஶித்தானோ ? லக்ஷ்மீஸமையான என்மகள் பகவத்குணங்களிலே தப்பாமே அகப்பட்டபடிகளை, “கேட்டல்லது போகோம்” என்று நிர்ப்பந்திக்கிற உங்களுக்கு என்னென்று சொல்லுகேனென்கிறாள். (௫)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு. கோவர்த்தநோத்தரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் பண்ணினேன் நான் என்றுநின்றுளென்கிறாள்.

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும்
இனவேறுகள்செற்றேனும்யானேயென்னும் *
இனவான்கன்றுமேய்த்தேனும்யானேயென்னும்
இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும் *

இனவாயர் தலைவனும் யானேயென்னும்
இனத்தேவர் தலைவன்வந்தேறக்கொலோ *
இனவேற்கண்ணல்லீர்க்கிவையென்சொல்லுகேன்
இனவேற்கண்ணியென்மகளுற்றனவே. (௬)

ப ;—அநந்தரம், க்ருஷ்ணசேஷ்டிதங்களைச் செய்தேனும் நானேயென்னுமென்கிறுள்.

இனம்—திரளான
வேய்—மூங்கிலையுடைய
மலை—கோவர்த்தநத்தை
ஏந்தினேன்—எடுத்தேன்
யானே—நானே
என்னும்—என்னும் ;
இனம்—திரளவந்த
ஏறுகள்—ஏழு எருத்தையும்
செற்றேனும்—கொன்றேனும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
இனம்—ஓரினத்தில்
ஆன்கன்று—கன்றுகளை
மேய்த்தேனும்—மேய்த்தேனும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
இனம்—திரள்திரளான
ஆநிரை—பசுக்களை
காத்தேனும்—ரக்ஷித்தேனும்
யானே—நானே
என்னும் —என்னும் ;
இனம்—ஒருதரத்தில்
ஆயர்—இடைப்பிள்ளைகளுக்கு
தலைவனும்—நாயகனுயிருப்பேனும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
இனம்—ஸங்கமான
தேவர்—ஸூரிகளுக்கு
தலைவன்—நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன்
வந்தேறக்கொலோ—ஆவேசித்தபடியோ ?
இனம்—தன்னில்தான்செறிந்து
வேல்—வேல்போலேயிருக்கிற
கண்—கண்ணழகையுடைய
நல்லீர்க்கு—உங்களுக்கு
வேல்—வேலோடு
இனம்—ஒத்திருக்கிற
கண்ணி—கண்ணையுடைய
என்—என்னுடைய
மகள்—பெண்பிள்ளை
உற்றன—லபித்த
இவை—இந்த ஸ்வபாவங்களை
என்—ஏதென்று
சொல்லுகேன்—சொல்லுவேன்
இனத்தேவரென்று—ஸாம்யம்பெற்றவரென்றுமாம். (௬)

ஆறு ;—(இனவேய்மலை.) திரள்திரளானமூங்கிலையுடைத்தான கோவர்த்தநகிரிதாரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் நானே பண்ணுகின்றேன் என்னுகின்றுள். (இனத்தேவர்) - தனித்தனி அநுபவிக்கமுடியாமையாலே திரண்டிருக்கிற அயர்வறுமமரர்களதிபதியானவன் ஆவேஶித்தானே? வேல்போலேயிருக்கிற கண்ணையுடையீராய் அவஹிதராயிருக்கிற உங்களுக்கு, தான்படுகிற

பாட்டைப் பிறரைப்படுத்தவல்ல கண்ணழகையுடைய இவளுற்ற விவற்றை என்சொல்லுகேனென்கிறாள். (சு)

ஈடு ;—ஏழாம் பாட்டு. எம்பெருமான் ஆஶ்ரித விஷயத்தில் இருக்கிற இருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாளென்கிறாள்.

உற்றார்களெனக்கில்லையாருமென்னும்
　　உற்றார்களெனக்கிங்கெல்லாருமென்னும்*
உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும்
　　உற்றார்களையழிப்பேனும்யானேயென்னும்*
உற்றார்களுக்குற்றேனும்யானேயென்னும்
　　உற்றாரிலிமாயன்வந்தேறக்கொலோ ?*
உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்யான் ?
　　உற்றென்னுடைப்பேதையுரைக்கின்றவே (எ)

ப ;—அநந்தரம், ஜகத்தில் பந்துக்களளவில் அவன்படியெல்லாம் தன்படியாகச் சொல்லாநின்றாளென்கிறாள்.

உற்றார்கள்—(ஔபாதியாலேகிட்டுதல் என்னையுள்ளபடி யறிந்து கிட்டுதல் செய்திருக்கும்) பந்துக்கள்
எனக்கு—எனக்கு
யாரும்—ஒருவரும்
இல்லை—இல்லை
என்னும்—என்னும் ;
இங்கு—இஜ்ஜகத்தில் (நிருபாதிகஸம்பந்தத்தைப்பார்த்தால் அவர்கள் தாரதம்யம்பாராதே)
எல்லாரும்—எல்லாரும்
எனக்கு—எனக்கு
உற்றார்கள்—பந்துக்களாயிருக்கும்
என்னும்—என்னும் ;
உற்றார்களை—அவர்களை எனக்கு உற்றாரப்படி
செய்வேனும்—பண்ணுவேனும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
உற்றார்களை—ப்ரயோஜநாந்தரத்துக்காகக் கிட்டினவர்களை
அழிப்பேனும்—ஆவற்றைக் கொடுத்து) உறவறுத்துவிடுவேனும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
உற்றார்களுக்கு—அநந்யப்ரயோஜநராய்க்கிட்டினார்க்கு
உற்றேனும்—எல்லாவுறவுமுறையும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
உற்றார்—எத்தனையேனும் அளவுடையாகிலும் தன்னைமுட்டக் கண்டு கிட்டினார்
இலி—இல்லாத
மாயன்—ஆஶ்சர்யபூதன்
வந்தேறக்கொலோ—ஆவேசித்தபடியோ ?

உற்றீர்கட்கு—பந்துக்களான உங்களுக்கு	உரைக்கின்ற—சொல்லுகிற வார்த்தைகளை
என்னுடைப்பேதை—அதிபாலையான என்னுடைய பெண்பிள்ளை	என்—என்னபாசுரம்
	சொல்லி—சொல்லி
உற்று—உள்ளுறக்கண்டு	சொல்லுகேன்—சொல்லுவேன்? (எ)

ஆறு ;—(உற்றார்கள்.) இஜ்ஜகத்திலே என்படியையறிந்து எனக்கு பந்துக்களாயிருப்பார் ஒருவருமில்லை. அவர்கள் அப்படியிருந்தமை யறிந்துவைத்தே, எனக்கு உறவாக நினைத்திராதார் ஒருவருமில்லை- சிலர் என்னை ஆஶ்ரயிக்கும்படி பண்ணுவேன். அநாஶ்ரயிக்குமவர்களில் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவர்கள் வேண்டினவற்றைக்கொடுத்து அகற்றுவேன் நான். அநந்யப்ரயோஜநரானவர்களுக்கு எல்லா பந்துக்ருத்யமும் பண்ணுவேன் நான் என்னும். எத்தனையேனும் அளவுடையார்க்கும் முட்டக்காணவொண்ணாத அத்யாஶ்சர்யபூதனானவன் ஆவேசித்தானோ? ஈடுபட்டு, அத்யந்த பாலையான என்மகள் சொல்லுகிறவற்றை, உறவுமுறையாரான உங்களுக்கு என்னபாசுரத்தாலே சொல்லுவேன் நான் என்கிறாள். (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மாதிகள் நானிட்ட வழக்கென்னுநின்றாளென்கிறாள்.

உரைக்கின்றமுக்கட்பிரான்யானேயென்னும்
உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும் *
உரைக்கின்றவமரரும்யானேயென்னும்
உரைக்கின்றவமரர்கோன்யானேயென்னும் *
உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும்
உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ ?*
உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே. (அ)

ப ;—அநந்தரம், ஜகத்ப்ரதாநராய் ப்ரஹ்மருத்ராதிகளான தேவர்களும் ருஷிகளும் நானிட்ட வழக்கென்று மென்கிறாள்.

உரைக்கின்ற—(க) (“ ஶம்பு: ஶிவ: ” என்று பகவத்ப்ரகாரமாகச்) சொல்லப்படுகிற	முக்கண்—த்ரிநேத்ரனாய்
	பிரான்—ஈஶ்வரனாக ப்ரஸித்தனான ருத்ரன்

(க) தை-நாரா-

யானே—எனக்கு ப்ரகாரபூதன்
என்னும்—என்னாநிற்கும் ;
உரைக்கின்ற—“ஸஹஸ்ரா - ஸப்ர ஹ்மா” என்று சொல்லப்படுகிற
திசைமுகன்—சதுர்முகன்
யானே—எனக்கு ப்ரகாரபூதன்
என்னும்—என்னும் ; (அப்படியே)
உரைக்கின்ற—(பகவத்விபூதயா (௧) “தக்ஷாதய:-தக்ஷாத்ய:” என்று சொல்லப்படுகிற
அமரரும்—ப்ரஜாபதிகளான தேவர்களும்
யானே—எனக்கு விபூதிபூதர்
என்னும்—என்னும் ;
உரைக்கின்ற—(“ஸேந்த்ரா:-ஸேந்த்ர:” என்று) சொல்லப்பட்ட
அமரர்கோன்—(த்ரயஸ்த்ரிம்ஶத்கோடி தேவதாதிபதியான) இந்த்ரனும்
யானே—எனக்கு ப்ரகாரபூதன்
என்னும்—என்னும் ;
உரைக்கின்ற—(௨) (“தேவர்ஷீணாஞ்ச நாரத:” இத்யாதிகளிலே) சொல்லுகிற
முனிவரும்—ருஷிகளும்
யானே—நானிட்டவழக்கு
என்னும்—என்னும் ;
உரைக்கின்ற—(௩) (“நீலதோயத மத்யஸ்தா-நீலதோயதமத்யஸ்தா” என்று வேதாந்தங்களிலே) சொல்லுகிற
முகில்—காளமேகஶ்யாமமான
வண்ணன்—வடிவையுடையவன்
ஏறக்கொலோ—ஆவேஶித்தபடியோ ?
உரைக்கின்ற—(“சொல்லு சொல்லு” என்று) உரைக்கின்ற
உலகத்தீர்க்கு—லோகத்தாரான உங்களுக்கு
உரைக்கின்ற—லோகமர்யாதையல்லாத பேச்சையுடையளாய்
என்—,
கோமளம்—ஸுகுமாரமாய்
ஒண்—தர்ஶநீயமான
கொடிக்கு—கொடிபோலே ஆஶ்ரய வ்யதிரேகத்தில் தரைப்படும்படியான இவளுக்குண்டான
இவை—இஸ்வபாவங்களை
என்—ஏதாக
சொல்லுகேன்—சொல்லுவேன். (அ)

ஆறு ;—(உரைக்கின்ற) ஜகத்ப்ரதாநராக ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்படுகிற சதுர்முகப்ரமுகரும் நானிட்ட வழக்கென்னாநின்றாள். காலதத்த்வமுள்ளதனையும் பேசினாலும் பேசிமுடிக்கவொண்ணாத அழகையுடையவன் ஆவேஶித்தானோ? அதிலோகமான பேச்சைப் பேசுவதும்செய்து, துஃகஸஹையுமன்றிக்கே யிருக்கிற இவ்விலக்ஷணையான பெண்பிள்ளைக்குப் பிறந்த அவஸாதத்தை “சொல்லு, சொல்லு” என்று நிரந்தரமாகச் சொல்லுகிற லௌகிகரான உங்களுக்கு ஏதென்று சொல்லுவேன் நானென்கிறாள். (அ)

---

(௧) வி-பு-௧-௨௨-௩௧. (௨) கீதை-௧௦-௨௬. (௩) தை-நாரா.

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. அகர்மவஸ்யத்வ ப்ரமுகமான பகவதுக்திகளைத் தன்னினவாகப் பேசாநின்றாளென்கிறாள்.

கொடியவினையாதுமிலனேயென்னும்
　　கொடியவினையாவேனும்யானேயென்னும்*
கொடியவினைசெய்வேனும்யானேயென்னும்
　　கொடியவினைதீர்ப்பேனும்யானேயென்னும்*
கொடியானிலங்கைசெற்றேனேயென்னும்
　　கொடியபுள்ளுடையவனேறக்கொலோ*
கொடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்?
　　கொடியேன்கொடியென்மகள்கோலங்களே. (௯)

ப;—அநந்தரம், க்ரூரமான கர்மப்ரகாரங்களெல்லாம் நானிட்ட வழக்கென்னுமென்கிறாள்.

கொடிய—(கர்மவஸ்யரானபத்தசேதநரைக் கண்ணற்றுநலியும்) கொடுமையை யுடைத்தான
வினை—கர்ம
யாதும்—ஒன்றும்
இலன்—(௧) "ந மாம் கர்மாணி லிம்பந்தி - நமாம்கர்மாணிலிம்பந்தி" என்கிறபடியே) எனக்கில்லை
என்னும்—என்னுநிற்கும்; (அந்தக்ரூரகர்மமானது என் நிக்ரஹமாகையாலே)
கொடியவினை—அது
ஆவேனும்—ஆகிறேனும்
யானே—நானே
என்னும்—என்னும்; (௨) "தாநஹம் த்விஷத: - தாநஹம்த்விஷத:" என்கிற ப்ராதிகூலரானரை)
கொடியவினை—அந்தக்கர்மங்களிலே மூட்டி
செய்வேனும்—செய்விப்பேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கொடியவினை—அந்தக் கர்மத்தை
தீர்ப்பேனும்—(௩) "மோக்ஷயிஷ்யாமி - மோக்ஷயிஷ்யாமி" என்று ஆஸ்ரிதர்க்குப் போக்குவேனும்
யானே—நானே
என்னும்—என்னும்;
கொடியான்—க்ரூரகர்மாவான ராவணனுடைய
இலங்கை—லங்கையை
செற்றேன்—அழித்தேன்
என்னும்—என்னும்;
கொடிய—(ஆஸ்ரிதவிரோதிகளுக்கு) ம்ருத்யுஸமனான
புள்—பெரிய திருவடியை
உடையவன்—வாஹநமாகவுடையவன்
ஏறக்கொலோ—ஆவேஸித்தபடியோ?

(௧) கீ - ௪ - ௧௪.
(௨) கீ - ௧௬ - ௧௯.
(௩) கீ - ௧௮ - ௬௬.

கொடிய—("நமக்கு இது நிலமன்று" என்றிராதே அதிநிர்ப்பந்தம் பண்ணுகிற) கொடுமையையுடைய
உலகத்தீர்க்கு—லோகத்தீர்க்கு
கொடியேன்—(இவளை இப்படி விக்ருதையாகக் காணவைத்த பாபத்தின்) கொடுமையையுடையேனுடைய
என்—என்னுடைய
கொடி—கொடிபோலேமெல்லியளான
மகள்—பெண்பிள்ளையினுடைய
கோலங்கள்—தார்மீய சேஷ்டிதங்களான
இவை—இவற்றை
என்—என்னென்று
சொல்லுகேன்—சொல்லுவேன்.
கொடியபுள்ளென்று—கொடியிலேயான புள்ளென்றுமாம்.
கோலங்களென்று—ஒருப்பாடாகவுமாம். (க)

ஆறு;—(கொடியவினை.) கர்மவஶ்யரை நலியுமாபோலே நலியக்கடவதாய், கொடிதானகர்மங்கள் எனக்கொன்றுமில்லை யென்னும். அவை நானிட்ட வழக்கென்னும். ப்ரதிகூலர்க்குக் கொடிதான பாபத்தை விளைப்பேன் நான் என்னும். அநுகூலர்க்குக் கொடிதான வினையைத் தீர்ப்பேனும் நான் என்னும்; கொடியானிலங்கையை ஒருபடி யழித்தேனென்னும். ப்ரதிபக்ஷத்துக்குக் கொடியனான பெரியதிருவடியை வாஹநமாக வுடையவன் வந்தேறினானோ? இப்படி படுகைக்கீடான பாபத்தைப் பண்ணின என்னுடைய மகளுடைய ஒருப்பாடுகளை "சொல்லு, சொல்லு" என்று மிகவும் அலைக்கிற உங்களுக்கு என்னென்று சொல்லுவே னென்கிறாள். (கூ)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. ஸ்வர்க்கப்ரமுகமான பதார்த்தங்களெல்லாம் நானிட்டவழக்கென்றுநின்றா ளென்கிறாள்.

கோலங்கொள்சுவர்க்கமும்யானேயென்னும்
கோலமில்நரகமும்யானேயென்னும்*
கோலந்திகழ்மோக்கமும்யானேயென்னும்
கோலங்கொளுயிர்களும்யானேயென்னும்*
கோலங்கொள் தனிமுதல்யானேயென்னும்
கோலங்கொள்முகில்வண்ணனேறக்கொலோ ?*
கோலங்கொளுலகத்தீர்க்கென்சொல்லுகேன் ?
கோலந்திகழ்கோதையென்கூந்தலுக்கே. (க0)

ப;—அநந்தரம், ஸ்வர்க்கநரகாதிகளான ஸகலபலங்களும் நானிட்டவழக்கென்னு மென்கிறாள்.

கோலம்—(தர்சநீய) போக்யதையை
கொள்—உடைத்தான
சுவர்க்கமும்—ஸ்வர்க்கமும்
யானேயென்னும்—,
கோலம்—ஒருவைலக்ஷண்யமும்
இல்—இன்றியே
நரகமும்—(து:க்கோத்தரமான) நரகமும்
யானேயென்னும்—,
கோலம்—(நிரதிசயாநந்த) ரூபவைலக்ஷண்யத்தாலே
திகழ்—விளங்குவதான
மோக்கமும்—மோக்ஷமும்
யானேயென்னும்—,
கோலம்—இவ்வோபலங்களை
கொள்—பற்றக்கோலும் ஒருப்பாட்டையுடைய
உயிர்களும்—ப்ராணிகளும்
யானே—நானே
என்னும்—என்னும் ;
கோலம்—இவற்றையடையத் தன் நினைவிலே நிர்வஹிக்கும் ஒருப்பாட்டை
கொள்—உடைத்தாய்
தனி—ஸஹாயாந்தர நிரபேக்ஷமான
முதல்—பரமகாரணவஸ்து
யானே—நானே
என்னும்—என்னாநிற்கும் ;
கோலம்—பசுத்தவடிவும் ஸ்புரிக்கிற மின்னும் நாநாவர்ணமான இந்த்ரதநுஸ்ஸுமான கோலத்தை
கொள்—உடைத்தான
முகில்—மேகம்போலேயிருக்கிற
வண்ணன்—வடிவையுடையவன்
ஏறக்கொலோ—ஆவேசித்தபடியோ ;
கோலங்கொள்—"கேட்டல்லது போகோம்" என்று ஒருப்படுகிற
உலத்தீர்க்கு—உங்களுக்கு
கோலம்—அழகு
திகழ்—விளங்குகிற
கோதை—மாலையையுடைய
என்கூந்தலுக்கு—மயிர்முடியையுடையளான என் பெண்பிள்ளைக்கு
என்—என்னப்ரகாரமாயிருந்தது என்று
சொல்லுகேன்—சொல்லுகேனோ ?.

ஆறு ;—(கோலங்கொள்) கலப்பற்ற ஸுகரூபமான ஸ்வர்க்கமும், ஸுககந்தமின்றிக்கே து:கமேயான நரகமும், அபரிச்சிந்ந ஸுகரூபமானமோக்ஷமும், கர்மாநுகுணமாக தேவாதிசரீரப்ரவேசம் பண்ணக்கடவ ஆத்மாக்களும், விசித்ரகார்யஜநந சக்தியுக்தையான ப்ரக்ருதியும் நானிட்டவழக்கு என்று சொல்லாநின்றாள். ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், வில்லிட்டுமின்னி தர்சநீயமானமேகம்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையவன் வந்து ஏறினானோ ? அழகிய மாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப்பிறந்த அவஸ்த்தைகளை, கேட்கையிலே ஒருப்படாநின்றுள்ள உலகத்தீர்க்கு என் சொல்லுவேனென்கிறாள். (௧௦)

ஈடு ; அவ ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்யப்பெறுவர்களென்கிறார்.

கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
குலவாயர்கொழுந்துக்குங்கேள்வன்தன்னை*
வாய்ந்தவழுதிவளநாடன்மன்னு
குருகூர்ச்சடகோபன்குற்றேவல்செய்து*
ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள்
இவையுமொருபத்தும்வல்லார்* உலகில்
ஏந்துபெருஞ்செல்வத்தராய்த்திருமா
லடியார்களைப்பூசிக்கநோற்றார்களே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழிகற்றார் ஸர்வலோக ஸம்பாவநீயராய்க்கொண்டு பாகவதகிஞ்சித்காரம்பண்ண இட்டுப்பிறந்தார்களென்று பலத்தையருளிச்செய்கிறார்.

கூந்தல்—("வாசஞ்செய்பூங்குழலாள்" என்கிறபடியே விலக்ஷணமான) மயிர்முடியை யுடையளாய்
மலர்—தாமரைப்பூவில்பிறப்பாலே நிரதிசய போக்யபூதையாய்
மங்கைக்கும்—(நித்யயௌவநஸ்வபாவையான) லக்ஷ்மிக்கும்
மண்மடந்தைக்கும்—(இவளோடொத்த ரூபவைலக்ஷண்யத்தை யுடைய) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும்
குலம்—அபிஜாதரான
ஆயர்—கோபாலர்க்கு
கொழுந்துக்கும்—(ஶிரோபூதையான) நப்பின்னைப்பிராட்டிக்கும்
கேள்வன்தன்னை—அபிமதனான ஸர்வேஶ்வரனை யுத்தேசித்து
வாய்ந்த—பாவநாப்ரகர்ஷத்தாலே தத்பாவத்தைக் கிட்டியிருப்பாராய்
வழுதிவளநாடன்—வழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகராய்
மன்னு—ஸாஸத்திரையான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
குற்றவேல்—அந்தரங்கவ்ருத்தியாக
செய்து—அநுஷ்டித்து
ஆய்ந்த—ஆராய்ந்துசொன்ன
தமிழ்மாலை—தமிழ்த்தொடையான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
இவையுமொருபத்தும்—"இவையுமொருபத்தே!" என்னும்படி விலக்ஷணமான இவை பத்தையும்
வல்லார்—(பாவவ்ருத்தியோடே) அப்யஸிக்கவல்லவர்கள்

உலகில்—லோகத்திலே
ஏந்து—ப்ரஸாவஹிக்கும்படியான
பெருஞ்செல்வத்தராய்—ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பத்தை யுடையராய்க் கொண்டு
திருமால்—ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு
அடியார்களை—ஶேஷபூதரான பாகவதர்களை
பூசிக்க—ஆராதிக்கைக்கு
நோற்றார்கள்—பாக்யம் பண்ணினவர்களாவர்கள்.
ஏய்ந்தவென்று பாடமாய் } பொருந்தினவென்றுமாம்.
இது—எண்சீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;—(கூந்தல்.) கூந்தல்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன்தன்னை அநுகாரத்தாலே கிட்டின மன்னுகுருகூர்ச்சடகோபன் வாசிககைங்கர்யமாய் ஆராய்ந்துசொன்ன ஆயிரத்தில் இப்பத்தும் வல்லவர்கள் லோகத்தில் எல்லாரும் கொண்டாடும்படியான பெருஞ்செல்வத்தை யுடையராய், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமானவ்ருத்தி பண்ணப்பெறுவரென்கிறார்.

(கக)

திருவாய்மொழி ஐந்தாம்பத்து ஆறாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஏழாந்திருவாய்மொழி—நோற்றநோன்பு ப்ரவேசம்.

ஆறு ;—(நோற்றநோன்பு.) இப்படி எம்பெருமானுடைய ஸ்வரூபரூபசேஷ்டித ஸர்வைஸ்வர்யோக்திகளை அநுகரித்ததிறனும் ஓர் ஆலம்பமலபமாநரான ஆழ்வார், "தன்னை விஸ்லேஷித்து நான் இப்பாடுபடாநிற்கச்செய்தே என்னை எம்பெருமான் உபேக்ஷித்திருக்கிறது, ஸ்வஸம்ஸ்லேஷோபாயரூப கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களில்லாமையாகாதே" என்று பார்த்து ;

ப;—ஏழாந்திருவாய்மொழியில், கீழில்திருவாய்மொழியில்அநுகாரம் ப்ராப்தியோடு தலைக்கட்டமாட்டாமையாலே ஆர்த்தியே அதிஸயித்து, பாவனையால் வந்த அநுகாரத்தாலே அல்பம் ஆஸ்வஸ்தராய் ப்ரபோதம்பிறந்து. இவ்வளவில்; தன்னை லபிக்கைக்குத் தானே உபாயமான இவன் முகங்காட்டாதொழிந்தது நம்முடைய அநுகாரார்த்தமான பாவனையை உபாஸநமாக நினைத்து, "அதினுடைய சரமதஸையிலே வருகிறோம்" என்று விளம்பித்தானாக அதிஸங்கை பண்ணி, "நம் ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டுக்கொண்டு அபேக்ஷிக்க அவன் ஆபிமுக்யம்பண்ணும்" என்று அறுதியிட்டு ; அகிஞ்சநரும் ஆசைப்படும்படியான அவனுடைய ஆஸ்ரிதஸம்ஸ்லேஷ ஸ்வபாவத்தையும், அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும், அதிஸயிதபரத்வப்ரகாஸகங்களான அவதாரானுகாரங்களையும், ஆஸ்ரிதஸம்ரக்ஷணப்ரகாரத்தையும், ஆஸ்ரிதவிரோதிகளை அந்தர்ப்பேக்ஷம் பண்ணும் ஆகாரத்தையும்: ஆஸ்ரிதோபகாரத்தால்வந்த ஔஜ்ஜ்வல்யத்தையும், அகிலஸத்தாஹேதுத்வத்தையும், ஆஸ்ரிதவிரோதி அவனிட்டவழக்கென்னுமத்தையும், விரோதிநிவர்த்தகத்வத்தால்வரும் விஸேஷௌஜ்ஜ்வல்யத்தையும், விரோதிநிவர்த்தகமான உபாயப்ரகாஸகத்வத்தையும் அநுஸந்தித்து, 'ஏவம்விஸிஷ்டனான நீ, உன்னை ப்ராபிக்கைக்கு ஹேதுவான உபாயாந்தரங்களில் அகிஞ்சநனாய் ஆர்த்தனான எனக்கு உன்திருவடிகளே உபாயமாக உபகரித்த இதற்கு என்னப்ரத்யுபகாரம் பண்ணுவேன்" என்று அலமரும்படி தமக்குப்பிறந்த ஆஸ்வாஸவிஸேஷத்தை, ஸ்ரீவரமங்கையிலே ஆஸந்நமாக எழுந்தருளியிருக்கிற வானமாமலையைநோக்கி விண்ணப்பஞ்செய்கிறார்.

ஈடு ; —கீழில்திருவாய்மொழியில் - அநுகரித்து தரிக்கப்பார்த்தார், "அநுகரித்து தரிக்கவேண்டும்படியான கலக்கம் பிறந்தவிடத்திலும் வந்து முகங்காட்டிற்றிலன், இதுக்கு அடியென் ? தன்பக்கல் ஆஸாலேஸமுடையார்க்குத் தானேவந்து முகங்காட்டி ரக்ஷிக்கக்

கடவ ஸர்வேஸ்வரன் நம்பக்கல் ஆறியிருக்கைக்கு நிபந்தநமென் ?" என்று பார்த்தார் ; " இனி இங்ஙனேயாமித்தனை ; நம்ப்ரக்ருதி ஸ்வ பாவத்தாலே, தன்னாலல்லது செல்லாதபடியாயிருப்பதோர் ஆற்றாமை யுண்டாயிருந்தது ; நமக்கு அத்தை 'ஸ்வரூபம்' என்று அறியாதே 'உபாயம்' என்று இருந்தானாகவேணும்" என்று பார்த்து, தங்கையில் ஒன்று மில்லாமையை யறிவித்து அவன் திருவடிகளிலே ஸரணம் புகுகிறார்

கடற்கரையில் வெளியிலே, மஹாராஜருள்ளிட்ட முதலிகளோடும், (க) " 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 - லக்ஷ்மணம்புண்ய லக்ஷணம் " என்கிற தம்பியோடுங்கூட எழுந்தருளியிருக்க, ஸ்ரீவிபீஷணாழ்வான் (உ) " 𑌰𑌾𑌵𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍁𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 - ராவணோநாம துர்வ்ருத்த:" என்று ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக்கொண்டுவந்து பெருமாள் திருவடிகளிலே விழுந்தாற்போலே, இவரும், அவன் கடற்கரையிலே தனியிருந்த இழவுதீர, பிராட்டிமாரோடும் நித்ய பரிகரத்தோடுங்கூட சிரீவரமங்கலநகரிலே திருவநந்தாழ்வான்மேலே எழுந்தருளியிருக்கிற வானமாமலை திருவடிகளிலே, வேரற்றமரம் போலே புகலற்றுவிழுந்து ஸரணம் புகுகிறார். இவர்தாம் என் கொண்டு அவனை வடிம்பிடப்பார்க்கிறதென்னில் ;—அவன் ரக்ஷ்ய விஷயாபேக்ஷியாயிருந்தான், நமக்கு ரக்ஷகாபேக்ஷை யுண்டாயிருந்தது, ஆனபின்பு இதுக்குமேற்பட ஸம்பந்தமுண்டோ ?

ஈடு ; அவ ;—முதற்பாட்டு. எனக்குப் பேற்றுக்கு உடலாயிருப்பதொரு கைம்முதலில்லை; இல்லாமையாலே ரக்ஷகாபேக்ஷை யுண்டு. பரிபூர்ணரான தேவர் ரக்ஷ்யவிஷயார்த்தியாயிருந்தீர். ஆகையாலே தேவரே என்னபேக்ஷை செய்தருளவேணுமென்கிறார்.

நோற்றநோன்பிலேன்நுண்ணறிவிலேன்* ஆகிலுமினியுன்னைவிட்
ஆற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே * [டொன்றும்
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர் *
வீற்றிருந்தவெந்தாயுனக்குமிகையல்லேனங்கே. (க)

ப ;—முதற்பாட்டில், உன்னை லபிக்கைக்கு ஸாஸ்த்ரோக்தங்களான உபாயங்கள் எனக்கின்றியிருக்கச்செய்தே, உன்னையொழியச் செல்லாதபடி அபிநிவிஷ்டனான நான், ஆஸ்ரிதஸம்ஸ்லேஷத்தாலே உபகாரகனாய் அவஸரப்ரதீக்ஷனான உனக்குப் புறம்போவென்கிறார்,

---

(க) ரா - யு - க௮ எ. (உ) ரா - யு - கஎ-க௦.

நோற்ற—பலவ்யாப்தமாம்படி அநுஷ்டிதமான
நோன்பு—கர்மயோகம்
இலேன்—உடையேனல்லேன் ; (ஆகையாலே)
நுண்—ஸூக்ஷ்மரூபமான
அறிவு ஜீவபரவிஷயஜ்ஞாநயோகத்தை
இலேன்—உடையேனல்லேன் ; (ஆகையாலே)
ஆகிலும்—உபயஸாத்யமான பக்தியின்றிக்கே யிருக்கச்செய்தேயும்
இனி—உன்னுடைய குணநுஸந்தாநம் பிறந்தபின்பு
உன்னை—(ரக்ஷணைகஶீலனான) உன்னை
விட்டு—ஒழிய
ஒன்றும்—ஒருக்ஷணமும்
ஆற்ற—ஆற்ற
கிற்கின்றிலேன்—மாட்டுகிறிலேன் ;
அரவு—ஆஶ்ரிதனான ஶேஷனை
அணை—அணையாகக்கொண்டு அவனுக்குத் திருமேனியை உபகரித்த
அம்மானே—அஸாதாரணஸ்வாமியாய்
சேறு—சேற்றுநிலத்து
தாமரை—தாமரையானது
செந்நெலூடு—செந்நெலோடேகலந்து
மலர்—மலரும்படி தர்ஶநீயமான
சிரீவரமங்கலநகர்—சிரீவரமங்கல நகரிலே
வீற்று—ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தில் அவஸரப்ரதீக்ஷை தோன்றும்படி வ்யாவ்ருத்தமான
இருந்த—இருப்பாலே
எந்தாய்—எனக்கு உபகாரகனானவனே
அங்கு—அங்கு நீ இருக்கிற இருப்பில்
உனக்கு—ரக்ஷணஶீலனான உனக்கு
மிகை—ரக்ஷ்யபஹிர்பூதன்
அல்லேன்—அல்லேன். (க)

ஆறு ;—எனக்கு இவையொன்றும் இல்லையேயாகிலும், நிரவதிகபோக்யபூதனாயிருந்த உன்னைவிட்டு ஒருபடியாலும் நான் தரிக்கமாட்டாமையாலும், அடியேனை விஷயீகரிக்கைக்காக நீ சிரீவரமங்கலநகரிலேவந்து புகுந்தருளுகையாலும், உனக்கு அடிமையான இவ்வாத்மாவை நீ போகடில் இழவு உன்னதாகையாலும் அடியேனைப் பொகட்டருளவொண்ணாது; ஆதலால் அடியேனை விஷயீகரித்தருளவேணுமென்கிறார். (க)

ஈடு ;—இரண்டாம்பாட்டு. "ஆற்றேன்" என்றால் பெற்றதென், ப்ரதிபந்தகங்கள் இன்னமுண்டே ? என்ன ;—பிராட்டிக்கு வந்த ப்ரதிபந்தகங்களைப் போக்கினாப்போலே அடியேனுடைய விரோதியையும் போக்கியருளவேணுமென்கிறார்.

அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன் உன்னைக்காணுமவாவில்
எங்குற்றேனுமல்லேன் இலங்கைசெற்றவம்மானே* [வீழ்ந்து*நான்
திங்கள்சேர்மணிமாடநீடு சிரீவரமங்கலநகருறை *
சங்குசக்கரத்தாய் தமியேனுக்கருளாயே. (உ)

ப ;—அநந்தரம், என்னை அங்கீகரிக்கைக்கு ப்ரதிபந்தகமான அநிஷ்ட முண்டானாலும், அதுக்கு நிவர்த்தகன் நீயாகையாலே, எனக்கு க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார்

அங்குற்றேன்—நிஷ்பந்நோபாயனாய்க் கொண்டு நீ யிருக்கிற ப்ராப்ய ஸ்தலத்தில் புகுந்தவன்
அல்லேன்—அல்லேன் ; ("உபாய ஸாத்யர் ஆறியிருக்கையன்றோ வுள்ளது" என்று நிரபேக்ஷனாய்)
இங்குற்றேன்—இருந்தவிடத்திலிருக்கிறேன்
அல்லேன்—அல்லேன் ;
உன்னை—(நிரதிஶயபோக்யனான) உன்னை
காணும்—அநுபவிக்கவேணுமென்கிற
அவாவில்—அபிநிவேஶத்திலே
வீழ்ந்து—அகப்பட்டு
நான்—(ஆற்றாமையையுடைய) நான்
எங்குற்றேனும்—அந்யபரரான லௌகிகர் நிலையிலொன்றிலும்
அல்லேன்—அல்லேன் ;
இலங்கை—(ஆஶ்ரிதவிஷயத்தில் ப்ரதிபந்தகமான) லங்கையை
செற்ற—அழியச்செய்து ப்ராபித்துக் கொண்ட
அம்மானே—அஸாதாரணஸ்வாமியாய் (பிற்பட்டார்க்கு உதவுகைக்காக)
திங்கள்—சந்த்ரனோடு
சேர்—சேரும்படி
மணி—மாணிக்யமயமான
மாடம்—மாடங்கள்
நீடு—வளர்கிற
சிரீவரமங்கலநகர்—சிரீவரமங்கல நகரிலே
உறை—நித்யவாஸம்பண்ணுமவனாய்
சங்குசக்கரத்தாய்—ஆஶ்ரிதவிரோதி நிரஸநகரமாயும் போக்யமாயுமுள்ள ஆயுதவிஶேஷங்களை யுடையவனே
தமியேனுக்கு—உன்னையொழியத் துணையில்லாத எனக்கு
அருளாய்—(உன் உபகாரஶீலமான) க்ருபையைப்பண்ணி யருளவேணும் (உ)

ஆறு ;—(அங்குற்றேனல்லேன்.) உன்திருவடிமலர்களைப்பெற்றேனல்லேன், பெறுகைக்கீடான உபாயம் உடையேனல்லேன், உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து நான் இனிமேல் ஒருபாயம் அநுஷ்டிக்க க்ஷமனல்லேன். ஆகிலும் அஶோகவநிகையில் பிராட்டியுடைய ப்ரதிபந்தகத்தை அன்றுபோக்கினாப்போலே, அடியேனுடைய ப்ரதிபந்தகத்தையும் நீயே நிர்ஹேதுகமாகப்போக்கி, தமியேனுக்கு அருளாயென்கிறார். (உ)

ஈடு ;—மூன்றாம்பாட்டு. “அருளாய்” என்றீர், அருளக்கடவோம், அதில் ஒருதட்டில்லை ; ஆனாலும், (க) “ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி - ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி” (உ) “கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் - கர்த்தாஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்” அன்றோ, அருள் பெறுவார் பக்கலிலேயும் சிறிது உண்டாகவேணுங்காணுமென்ன ; இது மேலுற்றைக்கிட்ட மர்யாதையோ ! கீழற்றைக்கும் ஏதேனுமுண்டோ ; ஆனபின்பு, இத்தலையில் கிஞ்சித்காரத்தைவிட்டு உன் க்ருபையாலே செய்தருளாயென்கிறார். இவ்வளவும்வர இதுக்கு முன்பு நீ நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபின்பு, மேலும் நீ செய்தருளவேணுமென்கிறார்.

கருளபுட்கொடிசக்கரப்படை வானநாடவென்கார்முகில்வண்ணா*
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி யடிமைகொண்டாய்*
தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்கு*
அருள்செய்தங்கிருந்தாய் ! அறிவேனோருகைம்மாறே. (ந)

ப ;—அநந்தரம், அதிஶயிதபாத்வஸூசகமான ஆகாரங்களை யுடையையாய்க்கொண்டு என்னையங்கீகரித்து அடிமைகொண்ட உபகாரத்துக்கு நான் ஒருப்ரத்யுபகாரம் செய்தேனாக அறிகிறிலேனென்கிறார்.

கருளன்——கருடனாகிற
புள்——பக்ஷியை
கொடி——கொடியாகவும்
சக்கரம்——திருவாழியை
படை——ஆயுதமாகவும்
வானம்——பரமபதத்தை
நாடு——நாடாகவுமுடையையாய் (இப்படி பரமப்ராப்யனான வுன்னை)
கார்முகில்——(எதிர்த்தலையில் தரம்பாராதே யுபகரிக்கும்) காளமேகம் போலே
என்——எனக்காக்கின
வண்ணா——வடிவையுடையையாய் (அவ்வடிவழகாலே)
பொருள்——ஒருவஸ்துவென்று
அல்லாத——புத்திபண்ணவொண்ணாதபடி அஸந்நேவவான
என்னை——என்னை
பொருள்——ஸத்ஸ்வரூபனாம்படி
ஆக்கி——அங்கீகரித்து (அதுக்குமேலே)
அடிமை——வாசிகமான கைங்கர்யத்தையும்
கொண்டாய்——கொண்டவனாய் (அதுமுழுக்க நடத்துகைக்காக)
தெருள்——ஜ்ஞாநாதிஶயத்தை
கொள்——உடையராய்க்கொண்டு
நால்——நாலுவகைப்பட்ட
மறை——வேதங்களையும்
வல்லவர்——(தாங்கள் நினைத்தபடி) நிர்வஹிக்கவல்லவர்கள்

(க) ப்ரஹ்மஸூ (உ) ப்ரஹ்மஸூ

பலர்—பலரும்
வாழ்—(பகவதநுபவத்தாலே ஸம்பந்நராய்) வர்த்திக்கிற
சிரீவரமங்கலநகர்க்கு—சிரீவரமங்கல நகருக்கு
அருள்—நிரவதிகக்ருபையை
செய்து—பண்ணி
அங்கு—அங்கே
இருந்தாய்—இருக்கிறவனே (இப்படி இதுக்குமுன்பு நீபண்ணின உபகாரத்துக்கு நான்)
ஒரு—ஒரு
கைம்மாறு—ப்ரத்யுபகாரம்
அறியேன்—பண்ணினேனாகவறிகிறிலேன்.

ஆனபின்பு மேலும் நீயேயருளவேணுமென்று வாக்யஶேஷமாய், "தமியேனுக்கருளாய்" என்று கீழோடே யந்வயிக்கிறது. கருளப்புள்ளென்று - "கறையணிமூக்கு" என்னுமாபோலே (க)"ஆகேஶாந்தாத்ஸிதேதரா"-ஆகேஶாந்தாத்ஸிதேதராம்" என்கிறபடியே கறுத்ததிருமுகமுடையவனென்னவுமாம்; தெருள்கொள் நான்மறையென்று - வேதவிஶேஷணமாகவுமாம். (ரு)

ஆறு ;—(கருளப்புள்.) இப்படி நிர்ஹேதுகமாக உம்முடைய அபேக்ஷிதத்தைச் செய்தால் ப்ரயோஜநமென்? என்னில் ;—ஸ்வபரிசரணபோக ஶேஷஶேஷாஶந கருடப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரிதசரணயுகளனாய், ஸ்வாநுரூபாசிந்த்யஶக்தி ஶங்க சக்ரகதாஸிஶார்ங்காத்ய ஸங்க்யேய திவ்யாயுதோபேதனாய், நித்யநிரவத்யநிரதிஶய கல்யாணபரம வ்யோமநிலயனாயிருந்த நீ, த்வத்விஷயஜ்ஞாநரஹிததயா அவஸ்துபூதனான என்னை, த்வத்விஷயஜ்ஞாநவத்தயா வஸ்துவாய் த்வத்கைங்கர்யைகரஸியுமா யிருக்கும்படி பண்ணியருளிற்று என்பக்கலென்னப்ரயோஜநங்கொள்ளுகைக்காக; ஒருப்ரயோஜநாபேக்ஷையால்செய்தருளினாயல்லையிறே, உன்னுடைய நிரதிஶயௌதார்ய காருண்யாதிகளாலே செய்தருளினா யத்தனையிறே, இன்னம் குறையும் அப்படியே செய்தருளாயென்கிறார். (ரு)

ஈடு ; அவ ;—நாலாம் பாட்டு. "வெறும் உன்க்ருபையாலே ரக்ஷிக்கவேணும்" என்னுநின்றீர், நாம் இதுக்குமுன்பு அங்ஙன் செய்தவிடமுண்டோ? என்ன,—ஒன்றிரண்டு உதாஹரணத்தை எடுத்துக்காட்டி, இங்ஙனே செய்ததில்லையோ, எனக்கும் செய்தருளவேணுமென்கிறார்.

மாறுசேர்படைநூற்றுவர்மங்க ஓரைவர்க்காயன்றுமாயப்போர்பண்ணி *
நீறுசெய்தவெந்தாய் நிலங்கீண்டவம்மானே! *
தேறுஞானத்தர்வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர் *
ஏறிவீற்றிருந்தாயுன்னை யெங்கெய்தக்கூவுவனே?. (ச)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதஸம்ரக்ஷணைக ஸ்வபாவனான வுன்னை என் அபேக்ஷா ஸாதநமாகப்பெறுவதெங்கே யென்கிறார்.

மாறு—ஶத்ருக்களாய்க்கொண்டு	அம்மானே—ஸ்வாமியாய் (அவ்வவஸ்த்தைகளுக்குப் பிறபட்ட என்போல்வார்க்காக)
சேர்—சேர்ந்த	தேறு—(ப்ராப்யப்ராபகவிஷயமாகத்) தெளிந்த
படை—ஸேனையையுடைய	ஞானத்தர்—ஜ்ஞாநத்தையுடையரான வர்களுடைய
நூற்றுவர்—துர்யோதநாதிகள் நூற்றுவரும்	வேதம்—வைதிகமான
மங்க—நசிக்கும்படி	வேள்வி—பகவத்ஸமாராதநம்
ஓர்—தனியரான	அறு—இடைவிடாமல் நடக்கக் கடவதான
ஐவர்க்கு—பாண்டவர்களைவர்க்கும்	சிரீவரமங்கலநகர்—சிரீவரமங்கல நகரத்திலே
ஆய்—ஸஹாயபூதனாய்க்கொண்டு	ஏறி—(அவர்களோடொக்க) ஏறி
அன்று—(துர்யோதநாதிகளாலே பீடிதரான) அன்று	வீற்று—(அவாகளுக்கு ஆராத்யனாகக் கொண்டு) வ்யாவ்ருத்தி தோன்ற
மாயம்—(பகலை இரவாக்கினது முதலான) ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடைய	இருந்தாய்—இருந்தவனே !
போர்—யுத்தத்தை	உன்னை—(இப்படி அபேக்ஷாநிரபேக்ஷமாக ஸ்வயமேவ ரக்ஷணத்திலே ப்ரவ்ருத்தனாய் அநந்ய ஸாத்யனான) உன்னை
பண்ணி—பண்ணி ("எல்லாச்சேனையும்" என்கிறபடியே ஸமஸ்த பரிகரத்தையும்)	எங்கு—எங்கே
நீறு—தூளிஶேஷமாம்படி	எய்த—ப்ராபிப்பதாக
செய்த—பண்ணின	கூவுவன்—நான் கூவுவேன் ?
எந்தாய்—மஹோபகாரகனாய்	
நிலம்—(அவர்களோபாதி வ்யாபாரக்ஷமையுமல்லாத)[*] பூமியை	
கீண்ட—ப்ரளயாபத்திலே இடந்தெடுத்த	

நீ கூவுதல் வருதல் செய்கையன்றோ அநுரூபமென்று கருத்து. (ச)

ஆறு ;—(மாறுசேர்படை.) இப்படி ஸ்வப்ரயோஜந நிரபேக்ஷமாகவன்றோ ஆஶ்ரிதஸம்ரக்ஷணம் பண்ணியருளிற்று, ஆனபின்பு அடியேனுடைய அபேக்ஷிதத்தையும் அப்படியே செய்தருளாயென் கிறார். (ச)

ஈடு; அவ;—அஞ்சாம்பாட்டு. ஆஶ்ரித பக்ஷபாதத்தையும் ஸ்ரீவரமங்கலநகரிலிருப்பையும் உமக்குக் காட்டினோமே, “எங்கெய்தக்கூவுவன்” என்று - ஒன்றும் பெறாதாரைப்போலே கூப்பிடாநின்றீரேயென்ன;—செய்த அம்ஶமறிந்தேன், அத்தாலே பர்யாப்தனாகிறிலேனென்கிறார்.

எய்தக்கூவுதலாவதேயெனக் கெவ்வதெவ்வத்துளாயுமாய்நின்று *
கைதவங்கள்செய்யுங் கருமேனியம்மானே *
செய்தவேள்வியர்வையத்தேவரறாச் ஸ்ரீவரமங்கலநகர் *
கைதொழவிருந்தாயது நானுங்கண்டேனே. (௫)

ப;—அநந்தரம், ஆஶ்ரிதவிரோதிகளான அஸுரப்ரக்ருதிகளை அந்தர்ப்பேதம் பண்ணியழிக்கும் ஸ்வபாவனான நீ ஆஶ்ரிதர்க்கு அநுபாவ்யனாய் வந்திருக்கக்கண்டேன், இப்படியிருக்கிற உன்னைப் பெறுகைக்கு நான் ப்ரவர்த்திக்கை அநுரூபமோவென்கிறார்

எனக்கு—(அநந்யரக்ஷ்யமான ஸ்வரூபத்தையுடையேனான) எனக்கு
எய்த—(புருஷார்த்தப்ராப்திக்கு) ஸாதநமாக
கூவுதல்—அபேக்ஷிக்கை
ஆவதே—அநுரூபமோ? (அபேக்ஷாநிரபேக்ஷமாக ஆஶ்ரிதவிரோதிகளான)
எவ்வ—எவ்வகைப்பட்ட
தெவ்வத்துள்—ஶத்ருக்களாகிற அஸுரவர்க்கத்துக்குள்ளே
ஆயுமாய்—புத்ராதிவிக்ரஹ பரிக்ரஹம் பண்ணிக்கலந்து
நின்று—நின்று
கைதவங்கள்—(வைதிகருசியைக் குலைத்து பாஹ்யருசியைப் பிறப்பிக்கையாகிற) க்ருத்ரிமங்களை
செய்யும்—செய்யும்
கருமேனி—(அவர்கள் நெஞ்சைக் கலக்கும்) ஶ்யாமளவிக்ரஹத்தையுடைய
அம்மானே—ஸ்வாமியானவனே! (ப்ரதிபக்ஷப்ரஸங்கமில்லாமையாலே)
செய்தவேள்வியர்—க்ருதக்ருத்யராய்
வையம்—பூமியிலே
தேவர்—ஜ்ஞாநைஶ்வர்யத்தாலே ஸூரிஸமாநரானவர்கள்
அறா—கைவிடாதேவர்த்திக்கிற
ஸ்ரீவரமங்கலநகர்—ஸ்ரீவரமங்கலநகரிருந்தேதகுடியாக
கைதொழ—ஶேஷவ்ருத்திபண்ணும்படி
இருந்தாய்—ஶேஷியாயிருந்தாய்;
நானும்—(அவர்களோடொத்த ஶேஷத்வஜ்ஞாநத்தையுடைய) நானும்
அது—அந்தவிருப்பை
கண்டேன்—கண்டேன்.

ஆனபின்பு என்விரோதியையும் பேதித்து அநுபவிப்பிக்கையும் உனக்கே கர்த்தவ்யமென்று கருத்து. (ரு)

ஆறு;—(எய்த.) ப்ரதிகூலர்க்கன்றோ அவர்கள்நடுவே புகுந்துவைத்தே உன்னைக்காட்டிக் கொடாதொழிவது, உன்னை யாசைப்பட்டார்க்கும் அரியையோ, ஆனபின்பு அடியேனுடைய அபேக்ஷிதத்தைச் செய்தருளாய். உம்முடைய அபேக்ஷிதம் பெறுகைக்கு உடலானவுபாயத்தை நீர்செய்யலாகாதோ? என்னில்,—உன்திருவடிகளைக்கிட்டு கைக்கிடாயிருப்பதோர் உபாயம் என்னாற் செய்யமுடியாது. இனித்தான் செய்யவேண்டுவதொன்றுண்டோ. மதேகபோகராயிருப்பாரெல்லார்க்கும் கண்ணாலேகண்டு அநுபவிக்கலாம்படி சிரீவரமங்கலநகரிலே புகுந்திருந்தோமிறேயென்ன; அது நானுங்கண்டேன், எனக்கு அது அமையாதென்கிறார்- (ரு)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. அந்தவாக்யஶேஷத்தாற் சொன்ன கைங்கர்யத்தை யபேக்ஷிக்கிறார்.

ஏனமாய்நிலங்கீண்டவென்னப்பனேகண்ணா! என்றுமென்னையாளு
வானநாயகனே! மணிமாணிக்கச்சுடரே! * [டை *
தேனமாம்பொழில்தண்சிரீவரமங்கலத்தவர் கைதொழவுறை *
வானமாமலையே! அடியேன்தொழவந்தருளே. (கூ)

ப;—அநந்தரம், ஆஶ்ரிதோபகாரகத்வத்தாலே அத்யுஜ்ஜ்வலஸ்வபாவனான நீ, உன்னை நான் அநுபவித்து ஶேஷவ்ருத்தியைப் பண்ணும்படி வந்தருளவேணுமென்கிறார்.

ஏனமாய்—(ப்ரளயார்ணவத்துக்கு நிலவனும்படி) வராஹவேஷத்தையுடையனாய்க்கொண்டு
நிலம்—பூமியை
கீண்ட—கீண்டெடுத்த அபதாநத்தால்
என்—எனக்கு
அப்பனே—உபகாரகனாய்
கண்ணா—(இப்படி ஏகவிஷயமன்றியே ஸர்வவிஷயோபகாரகனான) க்ருஷ்ணனாய் இஸ்ஸௌலப்யாதிகுண ப்ரகாஶத்தாலே)
என்றும்—என்றுமொக்க
என்னை—என்ஸத்தையழியாமல்
ஆளுடை—அடிமைகொண்டு
வானம்—பரமபதபோகம்போலே வாசிககைங்கர்யங்கொண்ட
நாயகனே—நாயகனாய்
மணி—விலக்ஷணமான
மாணிக்கம்—மாணிக்கம்போலே
சுடரே—அத்யுஜ்ஜ்வலமான தேஜஸ்ஸையுடையவனாய்
தேன—தேனையுடைத்தான

மாம்பொழில்—மாம்பொழிலை யுடைத்தாய்
தண்—ஶ்ரமஹரமான
ஸ்ரீவரமங்கலத்தவர்—ஸ்ரீவரமங்கலத்திலுள்ளார்
கைதொழ—ஶேஷவ்ருத்திபண்ணும் படியாக
உறை—நித்யவாஸம்பண்ணாநிற்பானாய்
வானம்—பரமவ்யோமவாஸிகளுக்கு அநுபாவ்யமாய்
மா—அபரிச்சேத்யமான
மலையே—மலைபோலே ஸௌஸ்த்திரமானவடிவை யுடையவனே!
அடியேன்—ஶேஷபூதனான நான்
தொழ—ஶேஷவ்ருத்திபண்ணும் படியாக
வந்து—அவ்விருப்புக்குலைந்துவந்து
அருள்—அருளவேணும்.

வானமாமலையென்று - ஆகாசத்தில் கிட்டும்படி யோங்கின அஞ்ஜந கிரி போலே யென்றுமாம். (௬)

ஆறு ;—(ஏனமாய்நிலங்கீண்ட.) மற்று உமக்குச்செய்யவேண்டுவது என்? என்னில்,—அடியேன் தொழவந்தருளவேணும். அது நிர்ஹேதுகமாகச் செய்யக்கடவதோ? என்னில்,—நிர்ஹேதுகமாக வன்றோ ரஸாதலஸ்த்தமான ஜகத்தை எடுத்தருளிற்றும், இதுக்கு முன்பு அடியேன்திறத்தில் செய்தருளினசெயலும், இன்னம் குறையும் இப்படியே எனக்குச் செய்தருளாயென்கிறார். (௬)

ஈடு ;—ஏழாம்பாட்டு. "அடியேன் தொழவந்தருளே" என்கிறசொல்லோடே வாராமையாலே, "உபேக்ஷித்தானோ" என்று அஞ்சி, என்னைகற்றுதொழியவேணு மென்கிறார்.

"வந்தருளி" இத்யாதிக்குபட்டர், ஸ்ரீபுஷ்பயாக மணித்தானவாறே நஞ்சீயரைப்பலகாலும் இயல்கேட்டருள்வர்; ஒருகோடையிலேதிருவீதியிலே நீரைவிட்டு எழுந்தருளியிருந்து இப்பாட்டை "இயல்சொல்லும்" என்று ஜீயரை யருளிச்செய்து தாம் இத்தை யநுஸந்தித்திருந்து அநந்தரத்தே தாமும் இப்பாட்டை இயல்சொல்லி "யமநியமாதிக்ரமத்தாலே த்யேயவஸ்துவை மநநம்பண்ணிப் புறம்புள்ள பராக்கையறுத்து அநுஸந்திக்கப்புக்காலும் சுக்கான் பரல்போலே இருக்கக்கடவ நெஞ்சுகள் பதம்செய்யும்படி தார்மிகராயிருப்பார். இவை சில ஈரச்சொற்களைப் பொகட்டுப் போவதே" என்றருளிச்செய்தார். நஞ்சீயர் இவ்வார்த்தை உருத்தோறும் அருளிச்செய்வ ரென்றருளிச்செய்வார்.

வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட வானவர்கொழுந்தே !*உலகுக்
முந்தைத்தாய்தந்தையே ! முழுவேழுலகுமுண்டாய் * [கோர்
செந்தொழிலவர்வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர் *
அந்தமில்புகழா யடியேனையகற்றேலே. (எ)

ப ;—அநந்தரம், ஸகலஸத்தாஹேதுவான நீ என்னை விஶ்லேஷிப்பித்து ஸத்தையழியாதொழியவேணு மென்கிறார்.

- வந்தருளி—(பரமபதகுநீராப்திகளை விட்டு) வந்தருளி
- என்—(உன்பக்கல் அபேக்ஷையற்று விமுகனாய்ப்போந்த) என்
- நெஞ்சு—நெஞ்சை
- இடம்—வாஸஸ்தாநமாக
- கொண்ட—கொண்டு என்ஸத்தையை நோக்கி
- வானவர்—பரமபதவாஸிகள்ஸத்தையையும்
- கொழுந்தே—அபிவர்த்திப்பிக்குமவனாய்
- உலகுக்கு—இந்தலோகத்துக்கு
- ஓர்—(ஸத்தாஹேதுவாய்க்கொண்டு) அத்விதீயனாய்
- முந்தை—ப்ரதமபாவியான
- தாய்—மாதாவும்
- தந்தையே—பிதாவுமாய் (ப்ரளயார்ணவத்திலழுந்தாதபடி)
- முழுவேழுலகும்—ஸகலலோகத்தையும்
- உண்டாய்—அமுதுசெய்து வயிற்றிலேவைத்து ஸத்தையை நோக்கினவனாய்
- செம்—அநந்யப்ரயோஜநமாய் கைங்கர்யரூபமாகையாகிற ஆர்ஜவத்தையுடைய
- தொழிலவர்—வ்ருத்திவிஶேஷத்தை யுடையானவர்களுடைய
- வேதம்—வைதிகமான
- வேள்வி—பகவதாராதநம்
- அறா—மாறுதல்நடக்கிற
- சிரீவரமங்கலநகர்—சிரீவரமங்கல நகரிலே
- அந்தம்—முடிவு
- இல்—அற்ற
- புகழாய்—குணப்ரதையையுடையனாயிருக்கிறவனே !
- அடியேனை—(அகற்றினாலும் அகற்றப்போகாதபடி அநந்யார்ஹமான ஸ்வரூபத்தையுடையேனான) என்னை
- அகற்றேல்—அகற்றுதொழிய வேணும். (எ)

ஆறு ;—(வந்தருளி.) வானவர்கொழுந்தாய் வைத்து வந்தருளி என்னெஞ்சிடங் கொண்டருளினவனே, உலகுக்கோர் முந்தைத் தாய்தந்தையே, ஸர்வலோகத்தையும் உன்திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தருளின பரமகாருணிகனே, கைங்கர்யைகரதித்வ நிரூபணீய ஸ்வரூபரான ஜநங்களாலே அநவரதபரிசரிதசரணயுகளனுக்கொண்டு சிரீவரமங்கலநகரிலே யெழுந்தருளியிருந்த அஸங்க்யேய கல்யாணகுணங்களை யுடையவனே அடியேனையகற்றேலென்கிறார். (எ)

ஈடு ; அவ ;— எட்டாம்பாட்டு. உம்மை யகற்ற ப்ரஸங்கமென், இங்குவந்து ஸந்நிஹிதராய் நின்றது உமக்காகவன்றோ ? என்ன,— அடிமைக்கு விரோதியான ஶப்தாதிகள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்தபோதே என்னை யகற்றினையல்லையோ வென்கிறார்.

அகற்றநீவைத்தமாயவல்லைம்புலன்களாமவை நன்கறிந்தனன் *
அகற்றியென்னையும்நீ அருஞ்சேற்றில்வீழ்த்திகண்டாய் *
பகர்க்கதிர்மணிமாடநீடு சிரீவரமங்கைவாணனே * என்றும்
புகற்கரியவெந்தாய் புள்ளின்வாய்பிளந்தானே ! (அ)

ப ;—அநந்தரம், அகலுகைக்கு ஹேதுவான இந்த்ரியங்கள் நடையாடுகிற ஸம்ஸாரம் உனக்கு விதேயமாயிருக்க, அதிலே வைத்தது அகற்ற நினைத்தன்றோ வென்கிறார்.

அகற்ற—(உன்பக்கல்விமுகரை) அகற்றுகைக்காக
நீ வைத்த—நீ உண்டாக்கிவைத்தவையாய்
மாயம்—(ஒன்றோடொன்று சேராத) ஆஶ்சர்ய ஸ்வபாவங்களாய்
வல்—(ஒருவராலும்) வெல்லஅரிதான
ஐம்புலன்களாமவை— அஞ்சிந்த்ரியங்களாமவற்றை
நன்கு—(உள்ளபடியே) நன்றாக
அறிந்தனன்—அறிந்தேன் ;
என்னையும்—(இப்படி யறிவுபிறந்து அஞ்சியிருக்கிற) என்னையும்
அகற்றி—(உன்பக்கல்நின்றும்) அகற்றி
நீ—,
அரு—(கால்வாங்கிக் கரையேற) அரிதான
சேற்றில்—(விஷயங்களாகிற) சேற்றிலே
வீழ்த்திகண்டாய் — தள்ளுவதியென்றஞ்சாநின்றேன் ;

பகர்—விளங்குகிற
கதிர்—ஒளியையுடைத்தான
மணி—மாணிக்கங்களையுடைய
மாடம்—மாடங்கள்
நீடு—ஓங்கியிருக்கிற
சிரீவரமங்கை—சிரீவரமங்கைக்கு
வாணனே—நிர்வாஹகனாய் (நீ நினையாதார்க்கு)
என்றும்—ஒருநாளும்
புகற்கு—ப்ரவேஶிக்க
அரிய—அரிய
எந்தாய்—என் ஸ்வாமியாய்
புள்ளின்—(நீ நினைத்த கோபிமாருக்கு உன்னைக்கிட்டுகைக்கு விரோதியான) பகாஸுரன்
வாய்—வாயை
பிளந்தானே—பிளந்தவனே ! இப்படி ஶக்தனாயிருக்க விரோதியைப் போக்காதிருந்தது அகற்ற நினைத்தென்று கருத்து.

பகரென்று - விளங்குதல். புகற்கரியவென்று - புகலுதற்கரிய வென்றுமாம். (அ)

ஆறு ;—(அகற்ற.) உம்மை யகற்றினேனோ ? என்ன,—த்வத்ப்ராப்தி விரோதிதயா பரிஹரிக்கக்கடவதான ஸப்தாதிவிஷயங்கள் கையிலே என்னைவிட்டு வைத்தபோதே யகற்றினையல்லையோ, இப்படி நீ அரியையாவது ப்ரதிகூலர்க்கன்றே, அநுகூலர்க்கும் அரியையோவென்கிறார். (அ)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. "அருஞ்சேற்றில் வீழ்த்தி கண்டாய்" என்று அஞ்சுகிற உமக்கு நான்செய்யவேண்டுவதென்? என்ன,—ஸக்தனாய் ஸந்நிஹிதனாயிருக்கிற நீ என்விரோதியைப் போக்கி, உன் திருவடிகளில் கைங்கர்யத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

புள்ளின்வாய்பிளந்தாய் ! மருதிடைபோயினாய் ! எருதேழடர்த்த *
கள்ளமாயவனே ! கருமாணிக்கச்சுடரே ! * [என்
தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார் மலிதண்சிரீவரமங்கை *
உள்ளிருந்தவெந்தா யருளாயுய்யுமாறெனக்கே. (கூ)

ப ;—அநந்தரம், ஆஸ்ரிதவிரோதி நிரஸநத்தாலே அத்யுஜ்ஜ்வலஸ்வபாவனாயிருக்கிற நீ, நான் உஜ்ஜீவிக்கும்படி க்ருபைபண்ணியருளவேணு மென்கிறார்.

புள்ளின்வாய்பிளந்தாய்—(ஆஸ்ரிதருடைய ப்ராக்ருதஸம்பந்தத்தை யழிக்கைக்கு ஸூசகமாக) பகாஸுரனை நிரஸிப்பானாய்
மருதிடைபோயினாய்—(த்வந்த்வதுःகத்தைப் போக்குகைக்கு ஸூசகமாக) யமளார்ஜுந நிரஸநம் பண்ணினவனாய் (அவஸ்தாஸப்தகங்களை யழிக்கைக்கு ஸூசகமாக)
ஏழெருது—ஸப்தருஷபங்களையும்
அடர்த்த—மர்த்திப்பானாய்
கள்ளம்—(இப்படியொருவர்க்கும் அறியவொண்ணாதபடி) கூடமான ஸ்வபாவங்களை
என்—எனக்கு ப்ரகாஸிப்பித்த
மாயவனே—ஆஸ்சர்யபூதனாய் (இந்த விரோதியை நிரஸித்த ப்ரீதியாலே)
கரு—கறுத்த
மாணிக்கம்—மாணிக்கத்தின்
சுடரே—சுடர்போலேயிருக்கிற வடிவழகையுடையனாய்
தெள்ளியார்—(அநந்யார்ஹமாம்படி தந்தாமுடைய ஸ்வரூபத்தில்) தெளிவையுடையராய் (தெளிவுக்கு ஊற்றாம்படி)
திரு—பகவத்ஸ்வரூபாதி ப்ரதிபாதகமாகிற ஸ்ரீயையுடைத்தான
நால்—நாலு

மறைகள்—வேதங்களினுடைய தாத்பர்யங்களும்
வல்லார் —தாங்களிட்டவழக்காம்படியானவர்கள்
மலி—நெருங்கிவர்த்திக்கையாலே
தண்—ஸாம்ஸாரிகதாபப்ரஸங்கமில்லாதபடி ஸ்ரமஹரமான
சிரீவரமங்கை—சிரீவரமங்கையின்
உள்—உள்ளே
இருந்த—என்னையநுபவிப்பிக்கைக்காக எழுந்தருளியிருந்த
எந்தாய்—உபகாரகனே !
எனக்கு—அநந்யகதியான எனக்கு
உய்யும்—உன் திருவடியடிமையைப் பெற்று உஜ்ஜீவிக்கும்
ஆறு—ப்ரகாரம்
அருளாய்—க்ருபைபண்ணியருள வேணும் (க)

ஆறு ;—(புள்ளின்வாய்) உன்னுடைய அதிமநோஹர திவ்ய சேஷ்டிதங்களாலும், நிரவதிகஸௌந்தர்யத்தாலும் என்னைத்தோற்பித்து உனக்கடிமையாக்கி யருளினவனே, ஸாங்கஸகலவேதவித்தரராய் த்வச்சரணாரவிந்தயுகளகோபாயராயிருந்த திவ்யஜநங்களாலே ஸம்ருத்தமான சிரீவரமங்கையுள்ளிருந்த வெந்தாய், அருளாய் உய்யுமாறெனக்கென்கிறார். (க)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. "அருளாயுய்யுமாறெனக்கு" அப்போதே வந்தருளக்கண்டிலர். ஏதேனும் தசையிலும், உன் திருவடிகளே சரணமென்றிருக்கும்படி என்னைப்பண்ணி யருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லையென்கிறார்.

ஆறெனக்குநின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்* உனக்கோர்கைம்
மாறுநானொன்றிலேனெனதாவியுமுனதே *
சேறுகொள்கரும்பும்பெருஞ்செந்நெலும் மலிதண்சிரீவரமங்கை *
நாறுபூந்தண்டுழாய்முடியாய் ! தெய்வநாயகனே !. (கய)

ப ;—அநந்தரம், "நம்மைப் பெறுகைக்கு நம் சரணங்களேகாணும் உபாயம்" என்று ப்ரகாஶிப்பிக்க, இவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லை யென்கிறார்.

எனக்கு—எனக்கு
ஆறு—ப்ராப்திக்குவழி
நின்பாதமே—உன் திருவடிகளே
சரணாக—புகலிடமான உபாயமாக
தந்தொழிந்தாய்—தந்துவிட்டாய்;
உனக்கு—(இப்படி யுபகாரகனான) உனக்கு
ஓர்—ஒருபடியாலும்
கைமாறு—ப்ரத்யுபகாரமாவது
நான்—(அகிஞ்சநனான) நான்

ஒன்று—ஒன்று
இலேன்—இன்றியிலேயிராநின்றேன்
எனது—என்னுடைய
ஆவியும்—ஆத்மாவும்
உனது—(பண்டே) உன்னதாயிரா
நின்றது ;
சேறு—சேற்றுநிலத்திலே
கொள்—இடங்கொள்ளுகிற
கரும்பும்—கரும்பும்
பெரு—(அதிலும்) பெருக்கவளருகிற
செந்நெலும்—செந்நெலும்
மலி—நெருங்கி
தண்—ப்ரமஹாரமான
சிரீவரமங்கை—சிரீவரமங்கையிலே
யிருப்பானாய்

நாறு—பரிமளோத்தரமாய்
பூ—செவ்வியையுடைத்தாய்
தண்—ப்ரமஹாரமான
துழாய்—திருத்துழாயாலே யலங்
க்ருதமான
முடியாய்—திருமுடியையுடையனாய்
தெய்வம்—நித்யஸூரிகளுக்கு
நாயகனே—நிர்வாஹகனானவனே !
உன்னுடைய போக்யதையா
லும் ஶேஷித்வத்தாலும்வியூ
திபூர்த்தியாலும் ப்ரத்யுபகார
த்துக்கு யோக்யதை யில்லை
யென்று கருத்து. (கய)

ஆறு;—(ஆறெனக்கு.) ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் உன் திரு வடிமலர்களே யென்றிருக்கும் இவ்வத்யவஸாயத்தை எனக்கு ஸ்வ பாவமாம்படி தந்தருளினாய், இதுவே யமையாதோ ; இம்மஹோப காரத்துக்கு உனக்கொரு கைம்மாறு செய்யப்பெறுகிறிலேன். இவ் வாத்மாவைக் கைம்மாறாகத் தந்தாலாகாதோ ? என்னில்,—எனதா வியுமுனதே ஸர்வப்ரகாரத்தாலும் பரிபூர்ணனான உனக்கு என் னாற்செய்யலாவதொன்றுண்டோ வென்கிறார். (கo)

ஈடு ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை ஸாபிப்ராயமாகக் கற்குமவர்கள், நித்யஸூரிகளுக்கு என்றும் போக்யராவரென்கிறார்.

தெய்வநாயகன்நாரணன் திரிவிக்கிரமனடியிணைமிசைக் *
கொய்ந்நாள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் *
செய்தவாயிரத்துள்ளிவை தண்சிரீவரமங்கையேபத்துடன் *
வைகல்பாடவல்லார் வானோர்க்காராவமுதே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழியைப் பாடவல்லவர்கள் நித்யஸூரி களுக்கு நிரந்தரபோக்யராவர்களென்று பலத்தையருளிச்செய்கிறார்

தெய்வம்—நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனை	சடகோபன்—ஆழ்வார்
நாயகன்—ஸர்வேஸ்வரனாய்	செய்த—அருளிச்செய்த
நாரணன்—நிருபாதிகஸம்பந்தயுக்தமான வாத்ஸல்யத்தை யுடையனாய்	ஆயிரத்துள்—ஆயிரந்திருவாய்மொழியினுள்ளே
திரிவிக்கிரமன்—ஸ்வஸேஷவஸ்துவுக்குஅந்யாபிமாநம்வாராதபடி அளந்துகொள்ளுமவன்	தண்—ஶ்ரமஹரமான
அடியிணைமிசை—திருவடிகளிலே	சிரீவரமங்கை—சிரீவரமங்கையை
கொய்கொள்—கொய்துகொள்ளும்படி ஸம்ருத்தமான	மேய—மேவிய
பூ—பூக்களையுடைய	இவை—இவை
பொழில்—பொழில்களாலே	பத்து—பத்தையும்
சூழ்—சூழப்பட்ட	உடன்—அர்த்தத்தோடே உடன்பட்டு
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான	பாடவல்லார்—பாடவல்லவர்கள்
	வானோர்க்கு—பரமபதவாஸிகளுக்கு
	வைகல்—எப்போதும்
	ஆரா—ஆராத
	அமுது—அம்ருதம்போலே நித்யபோக்யமாவர்கள்.

இது - முதலடியும் மூன்றாமடியும் எழுசீராய், அயலடியும் ஈற்றடியும் நாற்சீரான ஆசிரியத்துறை. (கக)

ஆறு ;—(தெய்வநாயகன்.) த்ரிவிக்ரமனுவகத ஸர்வேஶ்வரத்வத்தை யுடையனாயிருந்த நாராயணனுடைய திருவடிகளிலே, கொய்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் செய்த ஆயிரத்துள்ளிவை, தண்சிரீவரமங்கைமேய பத்துடன் வைகல்பாடவல்லார் வானோர்க்கு, காலதத்த்வமெல்லாம் புஜித்தாலும் ஆராத போக்யரென்கிறார்.

திருவாய்மொழி ஐந்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

எட்டாந்திருவாய்மொழி—ஆராவமுதே ப்ரவேஶம்.

——:o:——

ஆறு;—(ஆராவமுதே.) இப்படி சிரீவரமங்கலநகரிலே அலப்த மநோரதராய் அத்யந்தமவஸந்நரான ஆழ்வார், "தமக்கு ப்ராப்யமும் ப்ராபகமும் எம்பெருமான் திருவடிமலர்களே" என்றுள்ள திவ்யஜ்ஞாநத்தைப்பெற்ற இந்தலாபத்தை யநுஸந்தித்து அதனாலே விஶ்ராந்தராய்த் திருக்குடந்தையிலே போய்ப்புக்கு. அங்கும் எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறாமையாலே கிடந்து அலற்றுகிறார். *

ப;—எட்டாந்திருவாய்மொழியில், கீழ் - வானமாமலை திருவடிகளிலே அநுபவத்தை யபேக்ஷித்து, அவர் தந்திருவடிகளில் உபாயபாவத்தையும் ப்ரகாஶிப்பிக்கக் கண்டு ஸந்துஷ்டராய், பின்பும் அநுபவம் ஸித்திக்கக்காணாமையாலே அவஸந்நரான இவர்க்கு ஆராவமுதாழ்வார் தம்வடிவழகை ப்ரகாஶிப்பிக்க, "அங்கே தம்மபிமதம் தலைக்கட்டிக்கொள்ளலாம்" என்று நினைத்து; ஆராவமுதாழ்வாருடைய நிருபாதிக ஸம்பந்தத்தையும், ஸம்பந்தகார்யமான அவதாரௌஜ்ஜ்வல்யத்தையும், அவரையொழியத் தம்மை அநந்யாபேக்ஷராக்கினபடியையும், அவருடைய அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தையும், மாஹாத்ம்யப்ரகாஶகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், நித்யஸூரிஸேவ்யமான நிரதிஶயபோக்யதையையும்; போக்யதாப்ரகாஶகமான விக்ரஹவைலக்ஷண்யத்தையும், விபரீதமே பலிக்கிலும் விடாதபடியான தம்முடைய அநந்யகதித்வத்தை ப்ரகாஶிப்பித்தபடியையும், அநுமதியையும்பிறப்பித்து அநுபவிப்பிக்கும் ஆகாரத்தையும், ஆர்த்தாநுபவவிஷயமான அதிஶயிதஸாரஸ்யத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்ப்ரகாரவிஶிஷ்டரானவர் ஆலோகாலாபாதிகளாலே நம்மை யநுபவிப்பித்திலரே" என்று புத்திஸாக்ஷாத்கார ஸந்நிஹிதரான அவர்தம்மையேநோக்கி அத்யந்தம் ஆர்த்தராய்க்கூப்பிட்டு,எல்லாவவஸ்தையிலும் முன்பு ப்ரகாஶிப்பித்த திருவடிகளேயல்லது உபாயமில்லையென்று ப்ரதிபத்திபண்ணித் தலைக்கட்டுகிறார்.

ஈடு;—சிரீவரமங்கலநகரிலே எழுந்தருளியிருக்கிற வானமாமலை திருவடிகளிலே, வேரற்றமரம்போலேவிழுந்து அநந்யகதிகளாய்க்கொண்டு ஶரணம்புக்கார்; இவர் அப்படி பெரியவார்த்தியோடே ஶரணம்புகச்செய்தேயும் வந்துமுகங்காட்டாதிருக்க; கடலிலமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப்பெற்று தரிக்குமாபோலே, "இவ்வளவிலும் 'வேறொன்றுலேபேறு' என்றிருத்தல், மற்றொருவர் வாசலிலேசென்று கூப்பிடுதல் செய்யும் ப்ரமத்தைத் தவிர்த்தானிறே"

என்றுகொண்டு தரித்த இதுதான் திருக்குடந்தையளவும் கால் நடைதந்துபோகைக்கு உடலாயிற்று.

என்றான், இங்குத் தம்மபேக்ஷிதம் கிட்டாதொழியவும் அங்கே றப்போகவேண்டுவானென்? என்னில்,—"ஒருகால் ப்ரபத்திபண்ணினோம், அதுபலித்ததில்லை" என்ற நாஸ்திக்யத்தாலே விஸ்வாஸம் குலைந்து ருசியும் நெகிழுமவரன்றே "ஆஸ்ரிதார்த்தமாக எழுந்தருளியிருக்கிறவன் நங்காரியஞ்செய்து தலைக்கட்டாமையில்லை, 'இன்னவிடங்களிலே செய்யக்கடவோம்' என்று வ்யவஸ்த்திதமாயிருக்குமிறே, ஆனபின்பு, இங்குச்செய்யப்பார்த்திலனாகில் மற்றோரிடத்திலே செய்கிறான்; இனித்தான், ஸ்ரீபரதாழ்வான் 'பெருமாளை மீட்டுக்கொண்டுவந்து திருவபிஷேகம் பண்ணவேணும்' என்று பாரித்துக்கொண்டு செல்ல, 'பதினாலாண்டும் கழித்தல்லது மீளோம்' என்னும் ஸ்வதந்த்ரனிறே; ஆகையாலே நமக்கு நாலுநாள் தாழ்த்ததேயாகிலும் நங்காரியம் செய்யாமையில்லை" என்று பார்த்து, "திருக்குடந்தையிலே சென்றுபுகவே நம்மபேக்ஷிதங்களெல்லாம் கிட்டும், நமக்கு ஒருகுறைகளுமில்லை' என்றுபுக;

ஸ்ரீபரதாழ்வான் "ராஜ்யத்துக்கு நிமித்தபூதனானேன்" என்றத்தாலே ஒருபுண்பாடும், "'தாயைக்கொண்டு ராஜ்யத்தைவாங்கிப் பெருமாளைக் காடேறப்போகவிட்டான்' என்று நாட்டார் பாரென் நிருப்பார்கள்" என்றத்தாலே வந்ததொரு பயத்தையுமுடையனாய்க்கொண்டு; நான் திருவடிகளிலே சென்றுகிட்டினால், ப்ராதாவல்லேனோ! ஸிஷ்யனல்லேனோ! தாஸனல்லேனோ! என்பக்கல் ப்ரஸந்நராய் க்ருபைபண்ணியருளாதொழிவரோ! என்று பார்த்து; அம்பெய்வார் படைதிரட்டிக்கொண்டு போமாபோலே திருவயோத்யையிலுள்ளாரில் வ்ருக்ஷங்களகப்பட ஆர்த்தியிலே தன்னில் குறைந்தாரில்லையிறே, நம்யார்த்திகண்டு மீண்டிலராகிலும் ஆர்த்தர்பலரையுங் கண்டால் மீளாமையில்லையென்றுபார்த்து (க) "ஸஹிஸ்த்ரஸஹிதைஃ - ஏபிஶ்சஸசிவைஃ" என்கிறபடியே இவன் செல்ல; பெருமாளும், "ராஜ்யதந்த்ரங்களிற் குறைப்படாமல் நடத்தாநின்றாயே? காரியங்கள் செய்யுமிடத்தில் மந்த்ரிகளோடேகூடிச் செய்யாநின்றாயே?" என்றாப்போலே இவனுக்கிடமறவார்த்தை

(க) ரா-அயோ ௧௦௧-௧௨

கேட்டாப்போலே ; இவர்புக்கவிடத்தில் திருக்கண்களை அலரவிழித்துக் குளிரநோக்கியருளுதல், திருப்பவளத்தைத்திறந்து ஒருவார்த்தையருளிச்செய்தல், அணைத்தல்செய்யக்கண்டிலர்; (க) “ஶோகேஷு-ப்ரதீவக்ஷ்யதி - மாமக்ரூரேதிவக்ஷ்யதி” என்றுப்போலே ப்ரதிகூலர் சோறுண்டுவளர்ந்தவன் மநோரதம்பெற்றானிறே ; அப்படியே தம்மையும் கிட்டவந்து அணைக்கப்பெறாமையாலே மிகவும் அவஸந்நராய், போக்யதையாலும் ஈடுபட்டு ஸௌந்தர்யாதிகளாலும் போரநொந்து,ஸ்தநந்தயப்ரஜை தாய்பக்கலிலேகிட்டமுகம்பெறாவிட்டால் அலமர்ந்துநோவுபடுமாபோலே அவன்ஸந்நிதியிலே தளர்ந்துகிடந்து கூப்பிட்டு, இன்னமெத்தனைத்திருவாசல் தட்டித்திரிபக்கடவேன் என்னுமார்த்தியோடே தலைக்கட்டுகிறார். *

ஈடு ;—முதற்பாட்டு. உன்னழகாலே என்னையுருக்குகிற உன்னைக் கண்வளர்ந்தருளக்கண்டேன் ; குளிரநோக்குதல், அணைத்தருளுதல் செய்யக்காண்கிறிலேனென்கிறார்-

ஆராவமுதே ! அடியேனுடலம்நின்பாலன்பாயே *
நீராயலைந்துகரைய உருக்குகின்றநெடுமாலே ! *
சீரார்செந்நெற்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை *
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே !. (க)

ப ;—முதற்பாட்டில், உன்னுடைய நிருபாதிக ஸம்பந்தமடியாக உன்னழகாலே எனக்கு நிரதிஶயபோக்யபூதனாய் என்னை பரிதிலனாம்படி பண்ணாநின்றுகொண்டு திருக்குடந்தையிலே கண்வளரக்கண்டேனென்கிறார்.

எம்மானே—எனக்கு நிருபாதிகஸ்வாமியானவனாய் (அந்த ஸம்பந்தமடியாக)
ஆரா—(நிரந்தராநுபவம்பண்ணாநின்றாலும்) த்ருப்திபிறவாத
அமுதே—நித்யபோக்யபூதனாய்க்கொண்டு
அடியேன்—(இப்போக்யதைக்குத் தோற்று அடிமைபுகுந்த) என்னுடைய
உடலம்—ஶரீரமானது
நின்பால்—உன்பக்கல்
அன்பாயே—அன்பு தான் தனக்கு வேஷமாய் (அதடியாக)
நீராய்—ஜலமயமாம்படிகட்டுக்குலைந்து
அலைந்து—(ஒருநிலையில்நில்லாதே) வ்யாகுலமாய்
கரைய—(ஆஶ்ரயமும் தெரியாதபடி) கரையும்படியாக
உருக்குகின்ற—உருகப்பண்ணாநிற்கிற
நெடுமாலே—அபரிச்சிந்ந போக்யதா மாஹாத்ம்யத்தை யுடையவனே

(க) வி - பு - ரு - கஎ - கஉ.

சீர்——கனத்தாலே
ஆர்——விஞ்சின
செந்நெல்——செந்நெற்கதிர்கள்
கவரிவீசும்——கவரிவீசினாற்போலே யிருப்பதாய் (அதுக்கடியாக)
செழு——ஸம்ருத்தமான
நீர்——ஜலத்தையுடைத்தான
திருக்குடந்தை——திருக்குடந்தையிலே
ஏர்——அழகு
ஆர்——விஞ்சின
கோலம்——ஒப்பனையானது
திகழ——விளங்கும்படியாக
கிடந்தாய்——கண்வளர்ந்தருளினாய் ;
கண்டேன்——என்கண்ணாலேகண்டு அநுபவிக்கப்பெற்றேன்.

நினைத்தபடி பரிமாறப்பெற்றிலேனென்று கருத்து ; சீரென்று அழகாகவுமாம். (க)

ஆறு ;—உன்னோடு பிறரோடு வாசியின்றியே எல்லார்க்கு மொக்க ஸர்வகாலமும் அநுபவித்தாலும் ஆராதபோக்யமே, உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யாதி கல்யாண குணங்களாலே, அடியேனுடைய அசேதநமான இந்ததேஹமுங்கூட, உன்பக்கலுள்ள நிரதிஶயாநுராகத்தாலே நீராயுருகும்படி பண்ணிவைத்து எனக்கு அரியையாயிருக்கிறவனே ; சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை ஏரார்கோலந்திகழக்கிடந்தாய், கண்டேன். என்னை உன் திருக்கண்களாலே பார்த்தருளுதல், ஒருவார்த்தை யருளிச் செய்தருளுதல் காண்கிறிலேனென்கிறார். (க)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. இப்படி கூப்பிடச்செய்தேயும் ப்ரதிவசநம் பண்ணாமையாலே, "உம்முடைய கார்யம் நீரேசெய்யுமித்தனையன்றோ" என்றிருந்தானாகக் கொண்டு, முன்புபண்ணின உபகாரங்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.

எம்மானேயென்வெள்ளைமூர்த்தி ! என்னையாள்வானே !*
எம்மாவுருவும்வேண்டுமாற்றா லாவாயெழிலேறே !*
செம்மாகமலஞ்செழுநீர்மிசைக்கண்மலரும் திருக்குடந்தை *
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே ! என்னான்செய்கேனே ? (உ)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாக அநேகாவதாரங்களைப் பண்ணின நீ, உன் கண்ணாலே புரட்டிப்பார்க்கிறிலை ; நான் என்செய்வேனென்கிறார்.

எம்மானே——(என்காரியம் நீயிட்டவழக் காம்படி) எனக்குஸ்வாமியாய்
என்——எனக்கு ஸத்த்வோத்ரேகம்பிறக் கும்படி
வெள்ளை——பரிஶுத்தமான
மூர்த்தி——வடிவையுடையையாய் (அவ்வடிவழகைக்காட்டி)
என்னை——என்ஸத்தை யழியாமல்

ஆள்வானே—அநுபவிப்பித்துக்கொண்டுபோருமவனாய்
எ—இப்படி ஆஸ்ரிதார்த்தமாக தேவாதிகளான எல்லாவகைகளையுமுடைத்தாய்
மா—ஶ்லாக்யமான
உருவும்—அவதாரவிக்ரஹங்களை
வேண்டுமாற்றால்—இச்சாப்ரகாரத்தாலே
ஆவாய்—அங்கீகரித்து நிற்குமவனாய்
எழில்—அவ்வோவிக்ரஹங்களிலழகாலே புஷ்பாட்ஹாஸ்டிசித்தாஹாரத்தைப் பண்ணி
ஏறே—செருக்கனாயிருக்குமவனாய் வைத்து
செம்—சிவந்த
மா—பெருத்த
கமலம்—தாமரைகள்
செழு—ஸம்ருத்தமான
நீர்மிசை—ஜலத்தின்மேலே
கண்—எங்குமொக்க
மலரும்—மலருகிற
திருக்குடந்தை—திருக்குடந்தையிலே
அ—அந்த
மா—விலக்ஷணமான
மலர்—தாமரைப்பூப்போலேயிருக்கிற
கண்—திருக்கண்கள்
வளர்கின்றானே—வளரும்படி கிடக்கிறவனே !
நான்—நான் (இதற்கு)
என்—என்
செய்கேன்—செய்வேன் ?
எல்லாத்தாமரையும் மலரச்செய்தே இவையிரண்டுதாமரை என்னை நோக்கி மலருகிறதில்லையென்று கருத்து.

“அம்மாமலரென்றது - அழகியபெரியமலர்” என்றும் சொல்லுவர். (உ)

ஆறு ;—(எம்மானே.) எம்பிரானே, அஶேஷதோஷ ப்ரத்யநீககல்யாணைகதாந திவ்யரூபனே, அந்த திவ்யரூபகத ஸௌந்தர்யத்தாலே என்னைத்தோற்பித்து உனக்கடிமையாக்கினவனே, ஆஸ்ரிதபரித்ராணார்த்தமாக இச்சாநுகுண திவ்யரூப விஶிஷ்டனாய்க் கொண்டு பிறந்தருளுமவனே, நிரதிஶயதீப்தியுக்தனானவனே, திருக்குடந்தையில் தாமரைகளெல்லாம் மலராநிற்கச்செய்தே உன்னுடைய திருக்கண்களாகிற தாமரைகள் அலருகின்றனவில்லை ; நான் என்செய்கேனென்கிறார். (உ)

ஈடு ;—மூன்றாம்பாட்டு. இப்படி நசையற்றாப்போலே துடித்துக்கிடந்து கூப்பிட்டவிடத்திலும், குளிரநோக்குதல் வினவுதல் செய்யாமையாலே, பேறு தம்மதானால் பெறுவார்க்கும் சிலசெய்ய வேணுமென்று இருந்தானாகக்கொண்டு ; நான் என்காரியம் செய்கை

யென்று ஒன்றுண்டோ, நீசெய்து தலைக்கட்டித் தரவேணுமென்கிறார்.

என்னான்செய்கேன்யாரேகளைக ணென்னையென்செய்கின்றாய்*
உன்னாலல்லால்யாவராலு மொன்றும்குறைவேண்டேன்*
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தா யடியேனருவாணாள்*
சென்னாளெந்நாளந்நாளுனதாள் பிடித்தேசெலக்காணே. (௩)

ப ;—அநந்தரம், அகிஞ்சநனான நான் உன்னையொழிய வேறொருவராலும் அபேக்ஷையையுடையேனல்லேன் ; இப்படியாக்கின நீயே, யாவதாத்மபாவி உன்திருவடிகளிலே யடிமைகொண்டருளப் பார்க்கவேணுமென்கிறார்.

நான்—(கர்த்ருத்வம்ஸ்வாதீநமல்லாத) நான் (ஸ்வரக்ஷணார்த்தமாக)
என்—என்னப்ரவ்ருத்தியை
செய்கேன்—பண்ணுவேன் ; (வேறு, தந்தாங்காரியம் தாந்தாமறியாத சேதநரில்)
களைகண்—ரக்ஷகராவார்
யார்—ஆர் ;
என்னை—(அஶக்தனான) என்னை
என்செய்கின்றாய்—'துஸ்ஸஹோபாயங்களிலே மூட்டநினைத்திருக்கிறாயோ. உனக்கே பரமாக ஏறிட்டுக்கொள்ள நினைத்திருக்கிறாயோ) என்செய்யவிருக்கிறாய் ?
உன்னாலல்லால்—(ஸர்வரக்ஷகனாய் ப்ராப்தனாய் ஶக்தனான) உன்னையொழிய
யாவராலும்—(அரக்ஷகராய் அப்ராப்தராய் அஶக்தரானவர்கள்) ஆரேனுமொருவராலும்
ஒன்று—ஒரு
குறையும்—குறையும் (நிரம்புவதாக)
வேண்டேன்—வேண்டியிரேன் ;
கன்—சிக்கெனவு
ஆர்—விஞ்சியிருக்கிற
மதிள்—மதிள்
சூழ்—சூழ்ந்த
குடந்தை—திருக்குடந்தையிலே
கிடந்தாய்—கண் வளர்ந்தருளினவனே
அடியேன்—உனக்கடியேனான என்
அரு—ஆத்மவஸ்து
வாழ்—உஜ்ஜீவிக்கும்
நாள்—காலம்
செல்—அநுவர்த்திக்கும்
நாள்—நாள்
எ—எத்தனை
நாள்—நாள்;
அந்நாள்—அந்நாளெல்லாம்
உன—உன்
தாள்—திருவடிகளை
பிடித்தே—அவலம்பித்துக்கொண்டே
செல—நடக்கும்படி
காண்—பார்த்தருளவேணும்.

கன்னென்று - தொழிலுமாம். அருவென்று - அணுரூபமான ஸ்வரூபம்.

(௩)

ஆறு ;—(என்னான்செய்கேன்) என்னாலொரு செயலில்லை; நீயல்லது எனக்கு மற்றொருகதியில்லை, என்னுடைய யத்நத்தாலே உன் திருவடிகளைப் பெறக்கடவனாகவோ ! பார்த்தருளுகிறது, உன்னுடைய க்ருபையாலே உன்திருவடிகளைப் பெறுகையொழிய வேறோருபாயத்தால் பெறிலும்வேண்டா ; ஆனபின்பு, இனி இவ்வாத்மா உள்ளகாலமும் உன் திருவடிகளைப் பிரியாதேயிருக்கும்படி பார்த்தருளவேணுமென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு. ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து ஆஶ்ரிதர்க்காகத் திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனாயிருக்க, நினைத்தபரிமாற்றம் கிடையாமையாலே நோவுபடாநின்றேனென்கிறார்.

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய் !*
உலப்பிலானே ! எல்லாவுலகுமுடைய வொருமூர்த்தி !*
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தா யுன்னைக்காண்பான்நான்
அலப்பாய் * ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவனே. (௪)

ப ;—அநந்தரம், அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தை யுடைய ஸர்வேஶ்வரனை உன்னை இந்த அர்ச்சாவதாரதசையிலே நினைத்தபடி கண்டு அநுபவிக்கவாசைப்பட்டு அலமந்து க்லேஶியாநின்றேனென்கிறார்.

செல—மேலேபோக
காண்கிற்பார்—காணவல்ல ஶக்தியையுடையவர்கள்
காணுமளவும்—காணவல்லவளவுக்கும்
செல்லும்—அவ்வருகேபோம்படியான வைபவத்தையுடைய
கீர்த்தியாய்—குணவிபூதி ப்ரதையையுடையவனாய் (அந்தகுணவிபூதிகளினுடைய கணைக்கு)
உலப்பு—முடிவு
இலானே—இன்றியேயிருக்குமவனாய்
எல்லாவுலகும்—ஸர்வலோகத்தையும்
உடைய—அடிமையாகவுடைத்தாய்
ஒரு—அத்விதீயமான
மூர்த்தி—ப்ராப்யவிக்ரஹத்தையுடையனாய்வைத்து
நலத்தார்மிக்கார்—உன்பக்கல் ப்ராவண்யம் விஞ்சியிருப்பாருடைய
குடந்தை—திருக்குடந்தையிலே
கிடந்தாய்—(அவர்களுக்கநுபாவ்யனாய்க்கொண்டு) கண்வளர்ந்தருளினவனே !
உன்னை— இப்படி ஸர்வாதிகனாய் ஸர்வஸுலபனான) உன்னை
நான்—(அத்யந்தாபிநிவிஷ்டனான) நான்
காண்பான்—நினைத்தபடி கண்டநுபவிக்கைக்காக
அலப்பாய்—அலமந்து
ஆகாசத்தை -(நீவரஸம்பாவனையுள்ள) ஆகாசத்தை
நோக்கி—நோக்கி

அழுவன்—பக்திபாவஶரைப்போலே யழுது	தொழுவன்—ப்ரபத்திபாரைப்போலே தொழுவதாகா நின்றேன்.

பாலரைப்போலே யழுவது, பக்வரைப்போலே தொழுவதாகாநின்றே னென்றுமாம் (௪)

ஆறு;— (செலக்காண்கிற்பார்) அநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுண மஹோததியே, ஸர்வாத்மாக்களையும் உன்னழகாலே தோற்பித்து அடிமையாக்கிக்கொள்ளவல்ல திருவுடம்பை யுடையவனே, நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தாய், உன்னைக்காண்பான் நான் அலமந்து "ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றியருளினப்போலே வந்து தோற்றாய்" என்றுகொண்டு ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனென்கிறார். (௬)

ஈடு; அவ;—அஞ்சாம்பாட்டு. "உன்னைக் காணவேணும்" என்னும் சாபலத்தாலே தயநீயப்ரவ்ருத்திகள் பலவும் பண்ணினவிடத்திலும் காணப்பெற்றிலேன், உன் திருவடிகளை நான் பெறும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

அழுவன்தொழுவனாடிக்காண்பன் பாடியலற்றுவன் *
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன் *
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்கண்ணா *
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (ரு)

ப;—அநந்தரம். உன் கண்ணழகாலே ஈடுபட்டு நாநாவிததயநீய வ்ருத்திகளைப் பண்ணுகிற நான் உன்திருவடிகளைச் சேரும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

அழுவன்—(கலக்கத்தாலே) அழுவது	தழு—என்னைத்தழுவி (விடாதே நிற்கிற)
தொழுவன்—(தெளிவாலே) தொழுவது	வல்வினையால்—காதலாகிற ப்ரபல பாபத்தாலே
ஆடி—(ப்ரமத்தாலே) ஆடி	பக்கம்—(அவன் வரஸம்பாவனையுடைய) பக்கங்களை
காண்பன்—பார்ப்பது	நோக்கி—பார்த்து (அங்குக்காணாமையாலே)
பாடி—(குணபாரவஶ்யத்தாலே) பாடுவது	நாணி—("ஸ்வரூபமும் பெற்றிலோம் அபிமதமும்பெற்றிலோம்" என்று) லஜ்ஜித்து
அலற்றுவன்—(ஆர்த்தியாலே) ப்ரலாபித்து அலற்றுவது; ("இவ்வவஸ்தையில் வாராதொழியக்கூடாது" என்று நினைத்து)	

கவிழ்ந்திருப்பன்—கவிழ்ந்திருப்பன் ;
செழு—ஸம்ருத்தமாய்
ஒண்—தர்ஸநீயமான
பழனம்—நீர் நிலங்களையுடைய
குடந்தை—திருக்குடந்தையிலே
கிடந்தாய்—(ஆஸ்ரிதார்த்தமாகக்) கண் வளர்ந்தருளுமவனாய் (அவர்களுக்கு ரக்ஷகமும் போக்யமுமாய்)
செம்—சிவந்த
தாமரை—தாமரைபோலே யிருக்கிற
கண்ணா—திருக்கண்களையுடையவனே!
தொழுவனேனை—(அநந்யகதித்வத்தாலே) அத்யந்தக்ருபணனான என்னை
உன்—(ப்ராப்தனான) உன்னுடைய
தாள்—(போக்யமான) திருவடிகளை
சேரும்வகை—சேரும்படி (நீயே)
சூழ்கண்டாய்—ஒருநல்விரகு பார்க்க வேணும்.

தொழுவன் - தண்ணியன் ; சூழ்ச்சி - விரகு. (௫)

ஆறு ;—(அழுவன்) அழுதுகாண்பன், தொழுதுகாண்பன், ஆடிக்காண்பன், பாடிக்காண்பன், அலற்றிக்காண்பன், பின்னையும் நீ வரக்காணேன். காணாதொழிந்தவாறே, "இந்தலோகத்தார் உன் பக்கலிலே குணஹாநியைச் சொல்லாநிற்கிறாரே !" என்று லஜ்ஜித்துத் தலையெடுக்கமாட்டாதே, "என்னுடையபாபம்" என்றிருப்பன். செழுவொண்பழனக் குடந்தைக்கிடந்தாய், செந்தாமரைக் கண்ணா, உன்திருவடிகளைச் சேர்வதொரு விரகு பார்த்தருளாயென்கிறார். (௫)

ஈடு ; அவ ;—ஆறாம்பாட்டு. உன்போக்யதையிலே யந்வயித்த எனக்கு ஒருவிச்சேதம் வாராதபடி த்வத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும்போக்கி, உன்னைப் பெறுவதொரு விரகுபார்த்தருள வேணுமென்கிறார்.

சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே* தூராக்குழிதூர்த்துஎனைநாளகன்றிருப்பன்*
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே!*
யாழினிசையேயமுதே அறிவின்பயனேயரியேறே. (௬)

ப ;—அநந்தரம், நித்யஸூரிஸேவ்யனாய் நிரதிஶயபோக்யனான நீ என் விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டருள வேணுமென்கிறார்.

வாழ்—(பகவதநுபவமாகிற) வாழ்ச்சியாலே
தொல்—ஸ்வாபாவிகமான
புகழார்—புகழையுடையவர்களான
குடந்தை—திருக்குடந்தையிலே
கிடந்தாய்—(அவர்களுக்கு அநுபாவ்யனாய்க்) கண்வளர்ந்தருளினவனாய் (அப்படியே)
வானோர்—நித்யஸூரிகளுக்கும்
கோமானே—(போக்யனாய்க்கொண்டு) நிர்வாஹகனாய்
யாழின்—(மிடறுபோலே போதுசெய்யாத) யாழின்
இசையே—இசைபோலே (ச்ரவண போக்யனாய்)
அமுதே—நித்யபோக்யமான அம்ருதம் போலே ஸ்துத்யாதி முகத்தாலே நாக்குக்கு இனியனாய்
அறிவின்பயனே—ஜ்ஞாநபலமாகையாலே மநஸ்ஸுக்கு போக்யனாய் (இப்படி பாஹ்யாப்யந்தர ரூப ஸர்வேந்த்ரியங்களாலும் அநுபவியாநின்றாலும்)
அரியேறே—ஸிம்ஹ ச்ரேஷ்டம்போலே களாய்க் கொள்ளவொண்ணாதபடி மேனாணித்திருக்குமவனே (நான்)
உன்—உன்
அடி—திருவடிகளை
சேரும்—சேர்ந்து அநந்யார்ஹனாயிருக்கும்
ஊழ்—பழமையை
கண்டிருந்தே—கண்டிருந்தே
தூரா—துஷ்பூரமான
குழி—தூராசையாகிற குழியை
தூர்த்து—(தூர்விஷயங்களாலே) தூர்த்து
எனை—எத்தனை
நாள்—நாள்
அகன்று—அகன்று
இருப்பன்—இருக்கக்கடவேன்; (இதுக்கடியான)
என்—என்னுடைய
தொல்லைவினையை—அநாதிபாபத்தை
அறுத்து—அறுத்து
உன்னடிசேரும்—ஸ்வரூபப்ராப்தமான உன்திருவடிகளைச் சேரும்படி
சூழ்கண்டாய்—சூழ்ந்தருளவேணும்.

ஆறு;—(சூழ்கண்டாய்.) என்னுடைய ப்ரதிபந்தகத்தைப்போக்கி உன்திருவடிகளைச் சேர்வதோருபாயத்தைச்செய்தருளவேணும்; செய்தருளுமிடத்தில், நீசெய்தருளுகிற உபாயத்தையறிந்து அதில் அகப்படாதே தப்பினும், நான் அறியாதபடியொருபடி செய்தருளவேணுமென்று; அபேக்ஷித்தபடியே செய்தருளக்காணாமையாலே, ஆச்ரிதவாத்ஸல்ய ஸௌசீல்யஸௌலப்ய போக்யதாத்ய பரிமித கல்யாண குணகணனாயிருந்த உன் திருவடிகளோடுள்ள ஸம்ச்லேஷமாகிற மஹாரஸத்தை யறிந்துவைத்தே, துஷ்பூரமான இந்த்ரியங்களாலே இந்தப்ராக்ருத விஷயங்களையே புஜித்து இன்னமெத்தனை காலம் உன் திருவடிகளை அகன்றிருக்கக்கடவேனென்கிறார். (சு)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. உன்க்ருபையாலே உன்வைலக்ஷண்யத்தைக்காட்டி அடிமையாலல்லது செல்லாதபடியாக்கினபின்பு, உன் திருவடிகளைத்தந்து பின்னை ஸம்ஸாரத்தை யறுக்கவேணு மென்கிறார்.

அரியேறேயென்னம்பொற்சுடரே செங்கட்கருமுகிலே *
எரியேபவளக்குன்றே நாற்றோளெந்தாயுனதருளே *
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே *
தரியேனினியுன்சரணந்தந்து என்சன்மங்களையாயே. (எ)

ப ;—அநந்தரம், உன்னுடைய விக்ரஹவைலக்ஷண்யத்தைக் காட்டி, என்னை யடிமைகொண்டபின்பு, உன் திருவடிகளைத் தந்து, விரோதியைப் போக்கவேணுமென்கிறார்.

அரியேறே—நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலே மேனாணித்திருப்பானாய் (கேவல ஸ்வாதந்த்ர்யமேயன்றியே)
அம்—ஸ்ப்ருஹணீயமான
பொன்—பொன்போலேயிருக்கிற
சுடர்—வடிவிலொளியை
என்—எனக்கு அநுபவிப்பிப்பானாய் (ஆஸ்ரிதவிஷயத்தில் வாத்ஸல்யாம்ருதவர்ஷியான)
செம்—சிவந்த
கண்—திருக்கண்களையுடைத்தாய்
கருமுகிலே—முன்புசொன்ன பொன்னொளிக்கு ஆஸ்ரயமான நீலஸ்நிக்த விக்ரஹத்தை யுடையனாய்
எரியே—ஆஸ்ரிதவிரோதிவிஷயத்தில் (க) "ஜஜ்வாலதேவோவகோபாத்- அபித:பாவகோபமம்" என்னும் படி அக்நிபோலே சிவந்த
பவளக்குன்றே—பவளக்குன்றென்னலாம்படி உத்துங்கமாய் ஸ்நிக்தமான வடிவையுடையனாய்
நாற்றோள்—அந்த வடிவோடேசேர்ந்த நாலுதோள்களையுங் காட்டி
எந்தாய்—என்னை எழுதிக்கொண்ட ஸ்வாமியாய்
உனது—உன்னுடைய
அருள்—க்ருபையை
பிரியா—ஒருகாலும்பிரியாதபடி (நிரந்தரமாக)
அடிமை—வாசிகாதி கைங்கர்யங்களை (என்னை)
கொண்டாய்—கொண்டவனாய் அடிமைக்கு ப்ரதிஸம்பந்தியாக
குடந்தை—திருக்குடந்தையிலே
திருமாலே—லக்ஷ்மீஸஹிதனாய்க் கொண்டு ஸந்நிஹிதனானவனே!
இனி—(இப்படி உபகாரகனான நீ பிராட்டியோடேகூட ஸந்நிஹிதனான) பின்பு

(க) ரா - அயோ - சுக - உசு.

தரியேன்——ஆறியிருக்கமாட்டேன் ;
(எனக்கு ப்ராப்யமான)
உன்——உன்
சரணம்——திருவடிகளை
தந்து——தந்து
என்——என்னுடைய
சன்மம்——ஶரீரஸம்பந்தத்தை
களையாய்——ஸவாஸநமாகப் போக்க வேணும்.
எரிபேயென்று——ஸம்புத்தியாகவுமாம்

ஆறு ;—(அரியேறே.) உன்னுடைய க்ருபையாலே உன்னழகைக்காட்டி என்னை ஆத்மாந்ததாஸ்யைக ரதியாகப்பண்ணி யருளினாய் ; இனி உன்திருவடிகளைப் பிரிந்து ஒருக்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டேன் ; ஆனபின்பு, முந்தற உன்திருவடிகளைத்தந்து, பின்னை என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கியருளவேணு மென்கிறார்.

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. "தரியேன்" என்றபின்பும் முகங்கிடையாமையாலே கலங்கி ; அநுபவம் பெற்றிலேனேயாகிலும், "உன் திருவடிகளே தஞ்சம்" என்றுபிறந்த விஶ்வாஸம் "குலைகிறதோ" என்று அஞ்சாநின்றேன் ; அது குலையாபடி பார்த்தருளவேணு மென்கிறார்.

களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன் *
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா *
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது *
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. (௮)

ப ;——அநந்தரம், விபரீதமே பலிக்கிலும் வேறொரு ரக்ஷகரையுடையேனல்லேன் ; இப்படி அநந்யகதியான நான் உன்திருவடிகளை விடாதபடி அநுமதிபண்ண வேணுமென்கிறார்.

துன்பம்——(உன்னை யநுபவிக்கப்பெறாத) து:க்கத்தை
களைவாய்——போக்குவாய்
களையாதொழிவாய்——போக்காதொழிவாய்செய்
களைகண்——துக்கநிவர்த்தகவஸ்துவை
மற்று——வேறு
இலேன்——உடையேனல்லேன் ;
(துக்கநிவ்ருத்திக்குப் பரிகாரமாய்)
வளை——சூழ்ந்த
வாய்——வாயையுடைத்தான
நேமி——திருவாழியை
படையாய்——ஆயுதமாக வுடையையாய்
(ஆஶ்ரிதார்த்தமாக)
குடந்தை——திருக்குடந்தையிலே
கிடந்த——கண்வளர்ந்தருளுகிற
மாமாயா——அத்யாஶ்சர்யஸௌந்தர்ய யுக்தனே! (உன்னை அநுபவிக்கப்பெறாத ஆர்த்தியாலே)
உடலம்——ஶரீரம்
தளரா——தளர்ந்து
எனது——என்னுடைய

ஆவி—ப்ராணனானது
சரிந்து—நிலைகுலைந்து
போம்போது—ஶரீரத்தைவிட்டுப் போம்படியான போதாயிற்று (இவ்வளவில்)
இளையாது—சித்ததௌர்பல்யம் பிறவாதே
உன—உன்
தாள்—திருவடிகளையே
ஒருங்க—(உபாயமும் உபேயமுமாக) ஒருபடிப்பட
பிடித்து—பிடித்து
போத—போதும்படி
நீயே—நீயே
இசை—அநுமதி பண்ணவேணும் (அ)

ஆறு ;– (களைவாய்துன்பம்.) களைவாய்துன்பம், களையாதொழிவாய், திருவுள்ளமானபடி செய்தருளாய்; எனக்கு நீயல்லது மற்றொரு கதியில்லை. அடியேனுடைய துக்கங்களைப் போக்குகைக்காகவன்றோ திருவாழியை ஏந்திக்கொண்டிருந்தருளுகிறதும், திருக்குடந்தையிலே புகுந்தருளிற்றும். ஆனபின்பு, உடலந்தளர்ந்து என்னாவி சரிந்துபோகாநின்றது; இவ்வாத்மா முடிவதற்கு முன்னே ஈண்ட உன் திருவடிகளிலே வாங்கியருளவேணுமென்கிறார். (அ)

ஈடு ;—ஒன்பதாம்பாட்டு. ஸர்வேஶ்வரனாய்வைத்து ஸர்வஸமாஶ்ரயணீயனாகைக்காக இங்கே ஸந்நிஹிதனாய் எனக்கு அடிமையாலல்லது செல்லாதபடி பண்ணின நீ, கண்ணாலே காணலாம்படி வரவேணுமென்கிறார்.

இசைவித்தென்னையுன் தாளிணைக்கீழிருத்துமம்மானே *
அசைவிலமரர் தலைவர் தலைவா ஆதிப்பெருமூர்த்தி! *
திசைவில்வீசும் செழுமாமணிகள் சேருந்திருக்குடந்தை *
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே. (கூ)

ப ;—அநந்தரம், என்னையநுமதியைப் பிறப்பித்து உன் திருவடிகளை ப்ராப்யமாக அநுபவித்த நீ கிடையழகைக்காட்டினவோபாதி நடையழகுகாண வரவேணுமென்கிறார்.

என்னை—(அநாதிகாலம் விமுகனான) என்னை
இசைவித்து—ஶேஷத்வமாகிற ஸ்வரூபத்திலே "ஓம்" என்று இசையும்படி பண்ணி (அதுக்கீடாக)
உன்—உன்
தாளிணைக்கீழ்—திருவடிகள் விஷயமான ப்ராப்ய ப்ராபக புத்தியோடே
இருத்தும்—அநந்யபரனாயிருக்கும்படி பண்ணின

அம்மானே—ஸ்வாமியாய் (இப்படி ஸ்வரூபஜ்ஞாநம் பிறப்பித்தார்க்கு ப்ராப்யனுகைக்காக பகவதநுபவத்துக்கொருகாலும்)
அசைவு—அசைவு
இல்—இல்லாத
அமரர்—ஸூரிகளுக்கு
தலைவர்—தலைவரான அநந்தகருடவிஷ்வக்ஸேநர்க்கு
தலைவா—தலைவனாய்
ஆதி—ஸமஸ்தகாரணபூதமாய்
பெரு—ஸர்வாதிகமான
மூர்த்தி—விக்ரஹத்தையுடையனாய் (ஆச்ரிதர்க்கு அநுபவார்த்தமாக)
திசை—திக்குக்கள்தோறும்
வில்—ஒளியை
வீசும்—பரப்புகிற
செழு—ச்லாக்யமாய்
மா—பெருவிலையனான
மணிகள்—ரத்நங்கள்
சேரும்—சேருகிற
திருக்குடந்தை—திருக்குடந்தையில்
அசைவு—தௌர்லப்யப்ரஸங்கையாலே வந்த அலைச்சல்
இல்—தீர்ந்து
உலகம்—லோகம்
பரவ—ஸ்துதிக்கும்படி
கிடந்தாய்—கண்வளர்ந்தருளினவனே! (லோகத்துக்குக் கிடையழகு காட்டினவனோபாதி)
காண—(நான்நடையழகு) காணும்படி
வாராய்—வரவேணும்.

து:க்கஸாகரத்திலே யசைகிறலோகம் அழகிலே யகப்பட்டுப் பரவும்படியென்றுமாம். அசைவில்லாத பரமபதமாகவுமாம். இடம்வலங்கொள்ளுகிற திருமேனியசைவிலே லோகம் பரவுமென்றுமாம். (கூ)

ஆறு;—(இசைவித்து) "இவ்வாத்மா உனக்கே யடிமை" என்னுமிடத்தை என்னை ஸம்வதிப்பித்து, என்னை த்வச்சரணாரவிந்தயுகள ஸம்ச்லேஷவியோகைக ஸுகது:க்கனுக்கினவனே, சேஷசேஷாசநகருடப்ரமுகநாநாவிதா ஸங்க்யேயதிவ்யபரிஜநபரிசரிதசரணயுகளனாய் ஸர்வேச்வரனா யிருந்துவைத்து, ஸர்வஸமாச்ரயணீயத்வார்த்தமாகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவனே, காணவாராயென்கிறார். (கூ)

ஈடு;—அவ;—பத்தாம்பாட்டு. "திருக்குடந்தையிலேபுக, நம் மநோரதமெல்லாம் ஸித்திக்கும்" என்று சொல்ல, மநோரதித்தபடி தாம் பெறாமையாலே; இன்னமும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக்கடவேனென்கிறார்.

வாராவருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய் *
ஆராவமுதாய் அடியேனுவியகமேதித்திப்பாய் *
தீராவினைகள்தீரவென்னையாண்டாய் திருக்குடந்தை
ஊரா* உனக்காட்பட்டு மடியேனின்னமுழல்வேனோ. (கo)

ப ;—அநந்தரம், கண்டு அநுபவிக்கவொண்ணாதபடி அகவாயிலேநின்று நிரதிஸய ஸாரஸ்யத்தை விளைக்கிற உன்னை, அர்ச்சாவதார ஸுலபனாகப் பெற்று அடிமை புகுந்துவைத்து எத்தனைகாலம் அலமாக்கடவேனென்கிறார்.

வாரா—கண்ணிட்டுக்கண்டு அநுபவிக்கலாம்படி வடிவழகோடே நடந்துவாராதே
அருவாய்—அரூபியாய்க்கொண்டு
வரும்—என்னகவாயிலேவந்து தோன்றி
என்மாயா—உன் ஆஸ்சர்ய குணங்களை எனக்கு ப்ரகாஸிப்பிக்கிறவனாய் (அந்த அந்தராத்மத்வத்தளவன்றியே)
மாயா—அபக்ஷயவிநாஸாதிரஹிதமான
மூர்த்தியாய்—நித்யமங்கள விக்ரஹயுக்தனாய்க்கொண்டு
ஆரா—அநுபவிக்க த்ருப்திபிறவாத
அமுதாய்—அம்ருதம்போலே போக்யபூதனாய்
அடியேன்—உனக்கு ஸேஷமான என்னுடைய
ஆவி—ப்ராணாஸ்ரயமான
அகம்—நெஞ்சுக்குள்ளே
தித்திப்பாய்—நிரதிஸய ஸாரஸ்யத்தை விளைப்பானாய் (இந்த ஆந்தராநுபவத்துக்கு அநாதி ப்ரதிபந்தகமாய்)
தீரா—ஒருகாலும் தீராத
வினைகள்—பாபங்கள்
தீர—நசிக்கும்படியாக
என்னை—என்னை
ஆண்டாய்—வாசிக கைங்கர்யங்கொண்டு போந்தவனாய் (அவ்வளவில் நில்லாதே கண்டு அநுபவிக்கலாம்படி)
திருக்குடந்தை—திருக்குடந்தையை
ஊராய்—அஸாதாரணதேசமாகவுடையையாய்க்கொண்டு ஸந்நிஹிதனானவனே
உனக்கு—(இப்படி ஸௌலப்ய ஸௌந்தர்ய விஸிஷ்டனான) உனக்கு
ஆட்பட்டும்—அடிமைப்பட்டிருக்கச் செய்தேயும்
அடியேன்—அநந்யார்ஹனாய் அநந்யகதியான நான்
இன்னம்—இன்னம் மேலுண்டான காலத்திலும்
உழல்வேனோ—நினைத்தபடி பரிமாறப் பெறாமல் அலமாக்கடவேனோ?

இன்னம் எத்தனை உகந்தருளின நிலத்திலே முகங்காட்டி, ஆசைப்பட்டபடி யநுபவிக்கப்பெறாதே க்லேஸிக்கக்கடவேனென்று கருத்து. வாராவருவாயென்று நித்யமான ஆத்மாவுக்கு அந்தர்யாமியாயென்றுமாம். (க0)

ஆறு ;—(வாராவருவாய்.) கண்கள் உகக்கும்படிவாராதே என்னெஞ்சுக்குத் தோற்றும்படி வருமவனே, உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யநிதியான வடிவைக்காட்டி எனக்கு நிரதிஸயபோக்யமானவனே, த்வதேகபோகத்வ விரோதியாய் ஒருவராலும் தீர்க்கவொண்ணாத விரோதிகளைத் தீர்த்தருளினவனே, இப்படி அடியேனை

விஷயீகரித்தருளுகைக்கிடாகத் திருக்குடந்தையிலே புகுந்தருளினவனே, உனக்காட்பட்டும் அடியேனின்ன முழல்வேனோ வென்கிறார். (கo)

ஈடு ; அவ ;—நிகமத்தில் - இப்பத்தைப் பழுதறக்கற்க வல்லார், காமிநிகளுக்குக் காமுகரைப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவரென்கிறார்.

உழலையென்பில்பேய்ச்சிமுலையூ டவளையுயிருண்டான் *
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன் *
குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும் *
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழியை மௌக்த்யந்தீர்ந்து அப்யஸிக்க வல்லவர்கள் பகவதீயர்க்குக் கமநீயராவரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

உழலை—உழலைகோத்தாற்போலே யிருக்கிற
என்பு—எலும்புகளையுடைய
பேய்ச்சி—பேய்ச்சி
முலையூடு—முலையினகவாயாலே
அவளை—அவளை
உயிருண்டான—ப்ராணாபஹாரம்பண்ணின விரோதி நிரஸநஸ்வபாவனான க்ருஷ்ணனுடையவையாய்
அவை—தமக்கு உபாயமாக முன்பு ப்ரகாஶிப்பித்த
கழல்களே—திருவடிகளையே
சரணாக—அபிமதஸித்திக்கு உபாயமாக
கொண்ட—புத்தி பண்ணிக்கொண்ட
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வாரானவர்
குழலில்—ஸப்தஸ்வரத்துக்கும் உத்பாதகமான வங்கியத்திலும்
மலிய—மிக்கவினிமையை யுடைத்தாம்படி
சொன்ன—அருளிச்செய்த
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்துள்—ஆயிரந் திருவாய்மொழியினுள்
இப்பத்தும்—இப்பத்தையும்
மழலை—தங்கள்மௌக்த்யம்
தீர—தீர்ந்து
வல்லார்—வ்யாவ்ருத்தியோடே சொல்லவல்லவர்கள்
மானேய்—மான்போலேயிருக்கிற
நோக்கியர்க்கு—நோக்கையுடைய மதிமுகமடந்தையரான திவ்யாப்ஸரஸ்ஸுக்களுக்கு
காமர்—ப்ரஹ்மாலங்காரமுகத்தாலே கமநீயராம்படி யாதரிக்கப்படுவர்கள்.

மானேய் நோக்கியர்க்குக் காமுகரைப்போலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆதரணீயரென்று த்ருஷ்டாந்தாபிப்ராயமாகவும் சொல்லுவர். குழல் - வங்கியம். இது - அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;—(உழலை.) ஆஶ்ரிதவிரோதி நிரஸநைகபோகனுயிருந்த எம்பெருமானுடைய திருவடிமலர்களையே ப்ராப்யமும் ப்ராபகமுமாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன், வண்டுவரைப் பெருமானுடைய திருக்குழலோசையிற்காட்டிலும் இனியவாகச்சொன்ன ஆயிரத்துளிப்பத்தும் மழலைதீரவல்லார், மானேய்நோக்கியர்க்கு ப்ரியதமர் போக்யராமாபோலே, எம்பெருமானுக்கு போக்யராவரென்கிறார். (கக)

திருவாய்மொழி ஐந்தாம்பத்து எட்டாந்திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஒன்பதாந்திருவாய்மொழி—மானேய்நோக்கு ப்ரவேசம்.

——:o:——

ஆறு ;—(மானேய்நோக்கு.) திருக்குடந்தையிலே புக்கவிடத்திலும் தம்முடைய அபேக்ஷிதம் கிடையாமையாலே, திருவல்லவாழிலே செல்லத் தம்முடைய மநோரதங்கள் பூரிக்குமென்று அங்கே போகப்புக்கு, பலஹாநியாலே முட்டப்போகமாட்டாதே மிகவும் அவஸந்நரான ஆழ்வார், எம்பெருமானோடே விஶ்லேஷித்த ஒரு பிராட்டி தசையையுடையராய்த் தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

எம்பெருமனோடே கலந்து பிரிந்தாளொருபிராட்டி, திருவல்லவாழுக்கு அணித்தாகவிருந்தவூரில், திருச்சோலையும், அங்குத்தைப் பரிமளத்தைக்கொண்டு புறப்படுகிறதென்றலும், அங்குத்தைச்சோலைகளிலே மதுபாநமத்தமானவண்டுகளுடைய இனிதான மிடற்றோசைகளும், வைதிகக்ரியாகோலாஹலங்களும், ஹோமதூமங்களும், மற்றுமுண்டான ஸம்ப்ரமங்களுமெல்லாம் உள்ளுப்புகப்பெறாதே யிருக்கிற தன்னைமிகவும்நலிய, அவற்றாலும் நோவுபட்டு, திருவல்லவாழிலேபுக்குப் பரிமாறவாசைப்பட்ட அவளைக்கண்டு "நீ நினைக்கிறவிது ஈடல்ல" என்று தோழிமார் நிரோதியாநிற்க, தன் ஆர்த்தியை அவர்களுக்கு ஆவிஷ்கரித்து அவர்களை அநுநயியாநின்றுகொண்டு, திருவல்லவாழிலேபுக்கு நினைத்தபடி பரிமாறவல்லேனேயென்று அவர்களைக்குறித்துச் சொல்லுகிறாள். *

ப ;—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ் - திருக்குடந்தையிலே ஆராவமுதாழ்வாரை அநுபவிக்கத்தேடித் தாம்நினைத்தபடி பரிமாறப்பெறாமையாலே "இன்னமுழல்வேனோ" என்று ஆர்த்தரானவளவிலும் அவனையொழிய ரக்ஷகரில்லாமையாலும், உகந்தருளின திவ்யதேசமொழிய ப்ராப்யமில்லாமையாலும்,' நிரதிஶயபோக்யமாய் ஸம்ருத்தமான திருவல்லவாழிலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரன் தம்முடைய திருவுள்ளத்திலே முகங்காட்ட, அவனுடைய ஸ்வபாவவிஶேஷங்களிலே வித்தராய், நிருபாதிகஶேஷித்வத்தையும், தத்ஸித்தமான உபகாரகத்வத்தையும், அந்த உபகாரகத்வத்தினுடைய நைரந்தர்யத்தையும், உபகாரரூபமான நித்யாஶ்ரித ஸம்ஶ்லேஷத்தையும், நித்யநிரதிஶய போக்யதையையும், ஆஶ்ரிதோபகாரகமான அர்த்தித்வத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், வரையாமல் அங்கீகரிக்கும் ஶீலாதிஶயத்தையும், ஆதிக்யஸூசக

மான ஆயுதவத்தையும், அஸாதாரணஸம்பந்தத்தையும் அநுஸந்தித்து, ஏவம் விசிஷ்டனான ஸர்வேச்வரனுடைய அநுபவத்திலே அத்யந்தம் அபிநிவிஷ்டராய், அவ்வநுபவஸித்திக்கு அவன்திருவடியே உபாயமென்கிற விச்வாஸத்தையுடையராய்க்கொண்டு ; அவன் எழுந்தருளியிருக்கிற, நிரதிசய ஸர்வப்ரகாரபோக்யதையை யுடைத்தான திருவல்லவாழிலே சென்று அநுபவிக்கக் கூடுமோவென்று ஸுஹ்ருத்துக்களைக்குறித்து அருளிச்செய்த பாசுரத்தை ; அந்த நாயகனோடு கலந்து பிரிந்தாளொருநாயகி "அவன்வர்த்திக்கிற தேசத்திலே புகப்பெறுவோமோ" என்று தோழிமாரைக் குறித்துத் தன்னாற்றாமை கூறின பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு ;—திருக்குடந்தையிலே போய்ப் புக்கவிடத்திலும் தம் அபேக்ஷிதம் பெறாமையாலே திருவல்லவாழேறப்போக வொருப்பட்டு, தம்மபிமதம் ஸித்தியாதவோபாதி அங்குமுட்டப்போகவுங் கூட அரிதாம்படி தமக்குப்பிறந்த அவஸாதத்தை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார். மாசறுசோதியிலே - இவர்தாம் மடலெடுக்கப்புக்கு, " அவனுக்கு அவத்யம் " என்று தவிர்ந்தார் ; இங்கு - ஆற்றாமைதோற்ற, கண்டதிருப்பதிகள்தோறும் புக்கு நுழைந்து திரியாநின்றார் ; இதுக்கடியேதும் தெரிகிறதில்லை. அங்கு - அவன் ஸ்வரூபம் பரிஹரித்தார், இங்கு - தம்முடைய ஸ்வரூபம் நோக்கப்பார்க்கிறார் ; அங்கு - வடிவிலே யணையவேணுமென்று ஆசைப்பட்டார் ; பின்பு இவ்வளவும்வர அவ்வடிவிலே அவகாஹித்தபடியாலே ஆற்றாமைமுறுகி, (க)' கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் " என்கிறபடியே அடிமைசெய்ய ஆசைப்படுகிறார். இனி இவர் தமக்குத்தான் ஸம்ச்லேஷமாவது - மாநஸாநுபவமென்றிறே ப்ரவேசத்திலே அடியிலே சொல்லிற்று ; இங்ஙனேயிருக்க, திருவல்லவாழேறப் புறப்பட்டுப் போகையாவதென் ? பந்துவர்க்கம் நிஷேதிக்கையாவதென் ? என்னில்,—அந்த மாநஸாநுபவந்தனக்கு ஒருகலக்கம்வரவமையுமிறே.

எம்பெருமானோடே கலந்து பிரிந்து பிரிவாற்றாமை நோவுபடுகிறாளொருபிராட்டி, தன்னுடைய ஆபிஜாத்யாதிகளையும் பாராதே திருவல்லவாழேறப் புறப்பட்டுப்போகப்புக, இத்தையறியும் தோழிமார் வந்து " இதுகார்யமல்ல, நந்தலைமைக்குப் போராதுகாண் " என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, " இனி நீங்கள் சொல்லுகிற

(க) நாய்ச்சியார்திரு - ௧௩ - ௯.

வற்றால் நான் பெற்றதென்; அவ்வூரில் திருச்சோலையும், அங்குண்டான பரிமளத்தைக் கொய்துகொண்டு புறப்படுகிற தென்றலும், அங்கே மதுபானம்பண்ணிக் களித்துப் பாடாநின்றுள்ள வண்டுகளினுடைய இனிதானமிடற்றோசையும், ஊரிலுண்டான வைதிகக்ரியா கோலாஹலங்களும், நகரஸம்ப்ரமங்களும், இவையெல்லாம் நீங்கள் என்னைமீட்க நினைக்கிறவோபாதி ‘அங்கே போரு போரு’ என்று அழையாநின்றது; ஆனபின்பு நீங்கள் சொல்லுகிறவற்றால் பெற்றதென்” என்று தன்னார்த்தியை அவர்களுக்கு ஆவிஷ்கரித்து அவர்களை அநுநயியாநின்றுகொண்டு; திருவல்லவாழிலே நான் நினைத்தபடியே போய்ப்புக்குப் பரிமாறவல்லேனே யென்று அவர்களுக்குச் சொல்லுகிறாளாயிருக்கிறது.

“இதுதான் நான் அநுபவித்தேன்” என்று ஜீயர் அருளிச்செய்வர்; பட்டர்திருவடிகளை யாஸ்ரயித்துப் பின்பொருகால் மேல்நாட்டுக்கெழுந்தருளி மீண்டு பெரியத்வரையோடே ‘திருநாளுக்கு உதவவேணும்’ என்றுவர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க; இராத்திருநாளெழுந்தருளி இங்குண்டான ஸம்ப்ரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப்பெறாதொழிவதாய்க் கொண்டு “போரநோவுபட்டோம்” என்று அருளிச்செய்வர். ஏகதத்விதத்ரிதர்கள் ஸ்வேதத்வீபத்தைச்சென்று கிட்டி, உள்ளுப்புகுகைக்கு யோக்யதை யில்லாமையாலே புறம்பேநின்று; அங்குள்ளார் எம்பெருமானைக்கண்டு படுகிற ஸம்ப்ரமத்தைச் செவியாலே கேட்டுநிற்பது, கண்ணால் காணப்பெறாதொழிவதாய்க் கிடந்து பட்டாப்போலே கிடந்து கூப்பிடுகிறாராயிற்று இவரும்.

ஈடு; அவ;—முதற்பாட்டு. தோழிமாரைக் குறித்து, திருவல்லவாழிலே நின்றருளின ஸர்வேஸ்வரன் திருவடிகளைக் கிட்டப்பெறுவதென்றோ வென்கிறாள்.

மானேய்நோக்குநல்லீர்! வைகலும்வினையேன்மெலிய *
வானார்வண்கமுகும் மதுமல்லிகைகமழும் *
தேனார்சோலைகள்சூழ் திருவல்லவாழுறையுங்
கோனாரை * அடியேனடிகூடுவதென்றுகொலோ?. (௧)

ப ;—முதற்பாட்டில், நிரதிஶயபோக்யமான சோலையை யுடைய திருவல்லவாழிலே யெழுந்தருளிநிற்கிற நிருபாதிகஸ்வாமி திருவடிகளைக் கிட்டுவதென்றோ வென்று தோழிமாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

மான்—மானின்நோக்கோடு
ஏய்—சேர்ந்த
நோக்கு—நோக்கையுடையீர்களாய்
நல்லீர்—என்பக்கல் நலமே நிரூபகமாயிருக்கிறவர்களே !
வினையேன்—(நினைத்தபடி அவனைக் கிட்டிப் பரிமாறவொண்ணாத) பாபத்தையுடையேனான நான்
வைகலும்—எப்பொழுதும்
மெலிய—மெலியும்படியாக
வான்—ஆகாசமெல்லாம்
ஆர்—நிறையும்படியாய்
வண்—(தன்னோடு சேர்ந்த மல்லிகைக் கொடிக்குத் தன்னுடம்பைக் கொடுக்கும்) வண்மையை யுடைய
கமுகும்—கமுகும்

மது -(அத்தோட்டைச்சேர்த்தியாலே) மதுஸ்யந்தியான
மல்லிகை—மல்லிகையும்
கமழும்—பரிமளித்ததாய்
தேன்—மதுபரிமளாக்ருஷ்டங்களான வண்டுகளாலே
ஆர்—நிறைந்த
சோலைகள்—சோலைகள்
சூழ்—சூழ்ந்த
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே
உறையும்—நித்யவாஸம்பண்ணுகிற
கோனாரை—நிருபாதிக ஶேஷியானவரை
அடியேன்—அவருடைய மேன்மைக்குத் தோற்ற) அடியேனான நான்
அடி—திருவடிகளிலே
கூடுவது—சேர்வது
என்றுகொலோ—என்றாயிருக்கிறதோ?

வினையேன்மெலிய என்றவிடம் - வண்கமுகோடே கூட்டவுமாம், திருவல்லவாழுறையு மென்றவிடத்தோடே கூட்டவுமாம். (க)

ஆறு ;—அழகிய நோக்கையுடையீர், தன்னைப்பெறாதே துக்கப்படும்படி மஹாபாபத்தைப் பண்ணின நான் நாடோறும் வ்யஸநபரம்பரைகளாலே மிகவும் அஶக்தையாக, வானார்வண்கமுகும் மதுமல்லிகைகமழும் தேனார்சோலைகளாலே சூழப்பட்ட திருவல்லவாழிலே நிரந்தரவாஸம்பண்ணுகிற எம்பெருமானுடைய திருவடிகளிலே அடியேன்போய்ப் புகுவதென்றோ வென்கிறாள். (க)

ஈடு ;— அவ; இரண்டாம்பாட்டு. நிஷேதிக்கிற தோழிமார்கள் தங்களையே, அவன்பாதரேணுவை நான் சூடுவதென்றென்கிறாள்.

என்றுகொல்தோழிமீர்காள் ! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ ?*
பொன்திகழ்புன்னைமகிழ் புதுமாதவிமீதணவி *
தென்றல்மணங்கமழும் திருவல்லவாழ்நகருள்
நின்றபிரான்* அடிநீறடியோங்கொண்டுசூடுவதே. (உ)

ப ;—அநந்தரம், நிஷேதமுகத்தாலே தன்னை நலிகிறவர்கள் தங்களையே பார்த்து, புஷ்பவ்ருக்ஷஸம்ஶ்லேஷத்தாலே தென்றல் பரிமளத்தை ப்ரவஹிக்கிற திருவல்லவாழிலே நிற்கிற உபகாரகனுடைய பாததூளியை ஶிரஸா வஹிப்பதென்றென்கிறாள்.

தோழிமீர்காள்—(ஸமாநஸுகது:கைகளான) தோழிமீர்காள் !
எம்மை—'என் அபிமதத்துக்கு உங்களைத் துணையாக நினைத்திருக்கிற) எம்மை
நலிந்து—நிஷேதித்து நலிந்து (உங்கள்பேற்றுக்கும் இழவாம்படி;
நீர்—நீங்கள்
என்—என்ன காரியம்
செய்தீர்—செய்கிறீகோள் ;
பொன்—பொன்போலே
திகழ்—விளங்கினதாதுகளை யுடைத்தாயிருக்கிற
புன்னை—புன்னை
மகிழ்—மகிழ்
புது—அபிநவமான
மாதவி—குருக்கத்தி
மீது—இவற்றின்மேலிற்பூவோடே
அணவி—அணைந்து
தென்றல்—தென்றலானது
மணம்—பரிமளத்தை
கமழும்—பரப்பாநிற்கிற
திருவல்லவாழ்—திருவல்லவாழாகிற
நகருள்—நகரத்துக்குள்ளே
நின்ற—நின்ற
பிரான்—உபகாரகனுடைய
அடிநீறு—அடிப்பொடியை
அடியோம்—அவன்ஸந்நிஹிதனான உபகாரத்துக்கு அடியோமான நாம்
கொண்டு—ஶேஷத்வாநுரூபமாக ஸ்வீகரித்து
சூடுவது—ஶிரஸாவஹிப்பது
என்றுகொல்—என்றோ ?

எம்மையென்று - ஆத்மபஹுவசநம், அடியோமென்று - தோழிமாரையுங் கூட்டிக்கொள்ளுகிறாள். (உ)

ஆறு ;—(என்றுகொல்.) என்ப்ரக்ருதியை யறிந்திருக்கிற நீங்கள் என்னை யாஶ்வஸிப்பியாதே நலிந்து என்ன ப்ரவ்ருத்தி பண்ணுகிறீர்கள். பொன்திகழ் புன்னைமகிழ் புதுமாதவிமேலே யணைந்து தென்றல் மணங்கமழும் திருவல்லவாழிலே நின்றருளின மஹோபகாரகனுடைய பாதரேணுவைச் சூடுவதென்றோ வென்கிறாள். (உ)

ஈடு ;—மூன்றாம்பாட்டு. தோழிமாரைப்பார்த்து, நான் அவனை நித்யாநுபவம் பண்ணப்பெறும் நாள் என்று ? என்கிறாள்.

சூடுமலர்க்குழலீர் ! துயராட்டியேனைமெலிய *
பாடுநல்வேதவொலி பரவைத்திரைபோல்முழங்க *
மாடுயர்ந்தோமப்புகைகமழும் தண்திருவல்லவாழ் *
நீடுறைகின்றபிரான்கழல் காண்டுங்கொல்நிச்சலுமே ? (ரு)

ப ;—அநந்தரம், வேதகோஷமும் வைதிக க்ரியாதூமமும் மாறாத திருவல்லவாழிலே நித்யவாஸம்பண்ணுகிற நிரந்தரோபகாரத்தைப் பண்ணுமவன் திருவடிகளை நித்யாநுபவம் பண்ணக்கூடுமோ வென்கிறாள்.

சூடு—சூடப்பட்ட
மலர்—மலரையுடைத்தான
குழலீர்—மயிர்முடியை யுடையீரானவர்களே !
துயராட்டியேனை — விஶ்லேஷ து:கிதையானவென்னை
மெலிய—மெலியும்படியாக
பாடு—பாடப்படுவதாய்
நல் — (க) "வேதாநாம் - ஸாமவேதோஸ்மி" என்று அங்குவர்த்திக்கிறஸர்வேஶ்வரனுக்குத் திருமேனியோபாதியாம்படி) நன்மையையுடைய
வேதவொலி—ஸாமவேதத்வநியானது

பரவை—ஸமுத்ரத்தினுடைய
திரைபோல்—திரைக்கிளப்பம்போலே
முழங்க—முழங்காநிற்க
மாடு—பரிஸரங்களிலே
உயர்ந்து—யாகங்களிலே கிளம்பி
ஓமப்புகை—ஹோமதூமமானது
கமழும்—ஹவிர்க்கந்தத்தைப்பரப்புவதாய்
தண்—ப்ரமஹரமான
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே
நீடுறைகின்ற—நிரந்தரவாஸம்பண்ணுகிற
பிரான்—மஹோபகாரகன்
கழல்—திருவடிகளை
நிச்சலுங்காண்டுங்கொல் — நித்யாநுபவம் பண்ணக்கூடுமோ ? (ரு)

ஆறு ;—(சூடுமலர்.) "நாங்கள் நோவுபடில் இவள் மிகவும் நோவுபடும்" என்று தரிப்புத்தோற்ற ஒப்பித்திருக்கிற உங்கள் ஸந்நிதியும் என்னை நலியாநின்றது. பண்டே து:க்கப்படுகிற நான் மெலியும்படி பாடாநின்றுள்ள ஸாமவேதத்வநி கடலில் திரைபோலே முழங்க, பார்ஶ்வங்களில் யாகங்களிலே உயரவெழாநின்றுள்ள ஹோமதூமம் நாறுவதும் செய்ய நிரதிஶயபோக்யமான திருவல்லவாழிலே, எத்தனையேனும் பிற்பட்டார்க்கும் அநுபவிக்கலாம்படி நித்யமாக வர்த்திக்கிற மஹோபகாரகனுடைய திருவடிகளையென்று காணவல்லோமென்கிறாள். (ரு)

(க) கீதை - க௰ - உஉ

ப்ரயோஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களிலே கறுத்தெழுகிற ஹோமதூமங்கள் ஆகாஶாவகாஶமெல்லாம் மறைக்கும்படியான திருவல்லவாழிலே யிருந்து நிரதிஶயபோக்யனுமாய் என்னை ஸர்வஸ்வஹரணம்பண்ணின அழகையுமுடையவனை என்னுடைய கண்கள் விடாய்தீரக் காணப்பெறுவதென்றோ வென்கிறாள். (ரு)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு. திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமநனுடைய போக்யமான திருவடிகளை நான்காண்பதென்றோ வென்கிறாள்.

காண்பதெஞ்ஞான்றுகொலோ ? வினையேன்கனிவாய்மடவீர் ! *
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும் *
சேண்சினையோங்குமரச் செழுங்கானல்திருவல்லவாழ் *
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே. (சு)

ப ;—அநந்தரம், பாடுகிறவண்டும் புதுத்தென்றலுமான கடற்கரைச்சோலையையுடைய திருவல்லவாழிலேநிற்கிற, ஆஶ்ரிதார்த்தமாக வர்த்தியான ஸ்ரீவாமநனுடைய போக்யமான திருவடிகளைக் காண்பதென்றோ வென்கிறாள்.

பாண்——காநரூபமான
குரல்—மிடற்றோசையையுடைய
வண்டினொடு—வண்டுகளோடே
பசுந்தென்றலும்—புதுத்தென்றலும்
ஆகி——ஆய்
எங்கும்—ஸர்வப்ரதேசத்திலும்
சேண்——உயர்ந்த
சினை——பணைகளையுடைத்தாய்க் கொண்டு
ஓங்கு—வளருகிற
மரம்—மரங்களையுடைய
செழு—தர்ஶநீயமான
கானல்—கடற்கரைச்சோலையை யுடைத்தான
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே நிற்கிற
மாண்—(அர்த்தித்வ ப்ரகாஶகமான) ப்ரஹ்மசர்யத்தையும்
குறள்—வாமநத்வத்தையுமுடைத்தான
கோலம்—தர்ஶநீயவிக்ரஹத்தை யுடையவனான
பிரான்—மஹோபகாரகனுடைய
மலர்— மலர்த்தியையுடைய
தாமரை—தாமரைபோலே போக்யமான
பாதங்கள்— திருவடிகளை
கனி—கனிபோலேபழுத்த
வாய்—அதரஶோபையையுடையராம்படி முகமலர்ந்து
மடவீர்—எனக்கு விதேயைகளாய்ப் போந்தவர்களே !
வினையேன்——(என்னினைவுக்கீடாகப் பரிமாறப்பெறாத) பாபத்தை யுடையேனான நான்
காண்பது—காண்பது
எஞ்ஞான்றுகொலோ—எந்நாளாயிருக்கிறதோ ?, (சு)

ஆறு ;—(காண்பது) [வினையேன் கனிவாய்மடவீர்] - இப்போது நான் நோவுபடாநிற்க, நீங்கள் உருவுதல்தீர்ந்து பண்டுபோலேயிருப்பதே. மதுபாநமத்தமாகையாலே நல்லமிடற்றோசையையுடைய வண்டுகளோடுகூட எங்கும் இளந்தென்றலுண்டாய், அத்தாலே அறவுயர்ந்த பணைகளை யுடைத்தாய்க்கொண்டு வளராநின்றுள்ள அழகிய சோலையையுடைய திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமநனுடைய மிகவும் ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை நான் காண்பதென்றோவென்கிறாள். (கூ)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. அவன் திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமே யென்கிறாள்.

பாதங்கள்மேலணி பூந்தொழக்கூடுங்கொல் பாவைநல்லீர் *
ஓதநெடுந்தடத்துள் உயர்தாமரைசெங்கழுநீர் *
மாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்துந்திருவல்லவாழ் *
நாதனிஞ்ஞாலமுண்ட நம்பிரான்தன்னைநாடொறுமே. (எ)

ப ;—அநந்தரம், தர்ஸநீய தடாகங்களையுடைய திருவல்லவாழுக்கு நிர்வாஹகனான ஆபத்ஸகன் திவடிகளிலணிந்த பூவையாகிலும் தொழக்கூடுமோ வென்கிறாள்.

ஓதம்—ஸமுத்ரம்போலே
நெடு—பெருத்த
தடத்துள்—தடாகங்களுக்குள்ளே
உயர்—உயர்ந்த
தாமரை—தாமரையும்
செங்கழுநீர்—செங்கழுநீரும்
மாதர்கள்—மாதருடைய
வாள்—ஒளியையுடைத்தான
முகமும்—முகத்தழகையும்
கண்ணும்—கண்ணழகையும்
ஏந்தும்—பரிக்கும்படியான
திருவல்லவாழ்—திருவல்லவாழுக்கு
நாதன்—ஸ்வாமியாய்
இ—இந்த
ஞாலம்—ஜகத்தை
உண்ட—ப்ரளயங்கொள்ளாதபடி வயிற்றிலேவைத்து நோக்கின அபதாநத்தாலே
நம்—நமக்கு
பிரான்தன்னை—உபகாரகனென்று தோன்றவிருக்கிறவனை
நாடொறும்—நித்யமாக
பாவை—பாவைபோலே
நல்லீர்—அவயவங்களினுடைய வகுப்பழகையுடைய விலக்ஷண ஸ்வபாவைகளே!
பாதங்கள்—திருவடிகளின்
மேல்—மேலே
அணி—அணிந்த
பூ—பூவையாகிலும்
தொழ—தொழ
கூடுங்கொல்—கூடுமோ. (எ)

ஆரு ;—(பாதங்கள்.) தன்மநோரதத்தை நிஷேதியாமையாலே தோழிமாரை யுகந்து ஸம்போதிக்கிறாள். கடல்போலே பெருத்திருந்துள்ள பொய்கைகளிலே வளர்ந்த தாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும், ஸ்த்ரீகளுடைய அழகியமுகங்களோடும் கண்களோடும் ஒக்கும்படியான திருவல்லவாழுக்கு நாயகனாய், ஜகத்தையெல்லாம் ப்ரளயத்தில் தன்வயிற்றிலேவைத்துப் பரிஹரித்தருளி, அவ்வளவுமன்றிக்கே ஆஸ்ரிதர்க்கு மிகவும் உபகாரகனானவனுடைய திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமோவென்கிறாள்.

ஈடு ; அ ;—எட்டாம்பாட்டு. ஸர்வஸுலபனானவன் திருவடிகளிலே ஸர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக்கூடவற்றேயென்கிறாள்.

நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல் நன்னுதலீர் *
ஆடுறுதீங்கரும்பும் விளைசெந்நெலுமாகியெங்கும் *
மாடுறுபூந்தடஞ்சேர் வயல்சூழ்தண் திருவல்லவாழ் *
நீடுறைகின்றபிரான் நிலந்தாவியநீள்கழலே. (அ)

ப ;—அநந்தரம், அழகியவிளை நிலங்களாலே சூழப்பட்ட திருவல்லவாழிலே நித்யவாஸம் பண்ணுகிறவனுடைய, ஸகலஸம்ஸ்லேஷ ஸ்வபாவமான திருவடிகளை நிரந்தராநுபவம் பண்ணக்கூடுமோவென்கிறாள்.

எங்கும்—ஸர்வப்ரதேஸத்திலும்
ஆடு—ஆடுதலை
உறு—உறும்படி
தீ—இனிய
கரும்பும்—கரும்பும்
விளை—முதிரவிளைந்த
செந்நெலும்—செந்நெலும்
ஆகி—ஆய்
மாடு—பரிஸரத்தை
உறு—அணுகின
பூந்தடம்—பூத்ததடாகங்களை
சேர்—சேர்ந்த
வயல்—வயலாலே
சூழ்—சூழப்பட்ட
தண்—குளிர்ந்த
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே
நீடுறைகின்ற—நிரந்தரவாஸம் பண்ணுகிற
பிரான்—மஹோபகாரகனுடைய
நிலம்—பூமியை
தாவிய—அளந்துகொண்டு
நீள்—எல்லார்தலையிலும் சென்று பொருந்தும்படி வளர்த்தியையுடைத்தான
கழல்—திருவடிகளை
நல்—தத்ப்ரணமத்தாலே தர்ஸநீயமாம்படியான
நுதலீர்—நுதலையுடையவர்களே !
நாடொறும்—நாடோறும்
வீடு—கூடணவிச்சேதம்
இன்றியே—இன்றியே
தொழக்கூடுங்கொல்—தொழக்கூடுமோ (அ)

ஆறு ;—(நாடொறும்.) [நன்னுதலீர்] - ப்ராப்ய பாம்ஸஅல பரார்த்தயலலாடைகளாக உங்களைக் காண்பதென்றே. எப்போதும் பக்வபலமாய் அருகேயிருக்கிற பூத்தபொய்கைகளோடு சேர்ந்த வயல்சூழ்ந்து ப்ரமஹரமான திருவல்லவாழிலே அநுக்ரஹஸீல ஞாய்க்கொண்டு நிரந்தரவாஸம் பண்ணுகிறவனுடைய குணகுண நிரூபணம் பண்ணாதே எல்லாரையும் அங்கீகரிக்கக்கடவதாய், ஆஶ்ரிதரிருந்தவிடத்திலே செல்லும் திருவடிகளை ஸர்வகாலமும் இடைவிடாதே தொழக்கூடவற்றேயென்கிறாள். (௮)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. நம்முடைய கழலுகிறவளைகள் பூரிக்க அவனைக்கண்டு தொழும்படி அவனருள் கூடவற்றேயென்கிறாள்.

கழல்வளை பூரிப்பயாங்கண்டு கைதொழக்கூடுங்கொலோ *
குழலென்னயாழுமென்னக் குளிர்சோலையுள் தேனருந்தி *
மழலைவரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ் *
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே. (௯)

ப ;—அநந்தரம், மதுபாநமத்தமான வண்டுகளோடும் திருவல்லவாழில் கையுந் திருவாழியுமான ஸர்வேஶ்வரனுடைய க்ருபையானது, நாம் அவனை யநுபவிக்கும்படி லப்யையாகவற்றேயென்கிறாள்.

குளிர்—குளிர்ந்த
சோலையுள்—சோலையிலே
தேன்—மதுவை
அருந்தி—பாநம்பண்ணி
மழலை—முக்தங்களாய்
வரி—வரியையுடைத்தான
வண்டுகள்—வண்டுகளானவை
குழலென்ன—குழலென்று சொல்லும்படியாகவும்
யாழென்னவும்—யாழென்றுசொல்லும்படியாகவும்
இசை—இசை
பாடும்—பாடாநிற்கிற
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே நிற்பானாய்
சுழலில்—ஸ்வதேஜோப்ரமணத்தாலே
மலி—மிகைத்திருக்கிற
சக்கரம்—திருவாழியையுடையனான
பெருமானது—ஸர்வேஶ்வரனுடைய
தொல்—ஸ்வாபாவிகமான
அருள்—க்ருபையானது
கழல்—கழலுகிற
வளை—வளைகள்
பூரிப்ப—பூரிக்கும்படி
யாம்—நாம்
கண்டு—அவனைக்கண்டு
கைதொழ—கைதொழும்படியாக
கூடுங்கொலோ—கிட்டவற்றே ?
அருளொன்று—உதவியாய் அவனுடைய உபகாரத்தைக்கண்டு நாம் கைதொழக்கூடுமோ வென்றுமாம். (௯

ஆறு ;—(கழல்வளை.) குளிர்ந்தசோலைகளிலேபுக்கு மதுபாநத்தைப்பண்ணி, குழலோசையென்னவும் யாழோசை யென்னவுமாம்படி, முக்தமாய்க் கண்ணுக்கு அழகியவான வண்டுகள் ப்ரீத்யதிசயத்தாலே இசைபாடாநின்றுள்ள திருவல்லவாழிலே, ப்ரதிகூல நிரஸநத்வரையாலே மிகவும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியை தரித்துக்கொண்டுநின்ற ஸர்வேஶ்வரனை, நம்முடைய கழலுகிறவளைகள் பூர்ணமாகக்கண்டு தொழலாம்படி அவனருள் கூடவற்றோவென்கிறாள். (கூ)

ஈடு ; அவ ;— பத்தாம்பாட்டு. அவனுடைய ஸ்வாபாவிக க்ருபையாலே அவனைக் காணப்பெற்று, ப்ரீதியாலே இனிதாய்க்கொண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றோ வென்கிறாள்.

தொல்லருள்நல்வினையால் சொலக்கூடுங்கொல் தோழிமீர்காள் *
தொல்லருள்மண்ணும்விண்ணும் தொழநின்றதிருநகரம் *
நல்லருளாயிரவர் நலனேந்துந்திருவல்லவாழ் *
நல்லருள்நம்பெருமான் நாராயணன்நாமங்களே. (கo)

ப ;—அநந்தரம், விலக்ஷண புருஷவாஸஸ்தாநமான திருவல்லவாழில் நிருபாதிகஸம்பந்த விஶிஷ்டனான நாராயணன் திருநாமங்களை, அவன் க்ருபையாலே நாம்சொல்லக்கூடுமோவென்கிறாள்.

தொல்— ஸ்வாபாவிகமான
அருள்-அவனுடை யஉபகாரகத்வத்தை
மண்ணும்—ஸம்ஸாரத்திலுள்ளாரோடு
விண்ணும்—பரமபதத்திலுள்ளாரோடு வாசியற
தொழ—அநுபவித்துத்தொழும்படி
நின்ற—அவன்வந்துநின்ற
திரு—ஸ்ரீமத்தான
நகரம்—நகரமாய்
நல்—ஆஶ்ரிதவிஷயத்தில் அவனிலும் விஞ்சின
அருள்—அருளையுடையரான
ஆயிரவர்—ஆயிரம்புருஷர்கள்
நலன்—பகவத்ஜ்ஞாந ப்ரேமாதிரூபமான நன்மையை
ஏந்தும்—தரிக்கும்படியான
திருவல்லவாழ்—திருவல்லவாழிலே
நல்—நன்றான
அருள்—அருளையுடையவனாய்க் கொண்டு
நம்—நம்மை யநுபவிப்பிக்கும்
பெருமான்—ஸ்வாமியாய்
நாராயணன்—ஸமஸ்தகுண விபூதி யுக்தனான நாராயணனுடைய
நாமங்கள்—தத்தத்குணவிபூதிவாசகமான திருநாமங்களை
தோழிமீர்காள்—(திருநாமோச்சாரணத்துக்கு உகந்திருக்கும்) தோழிமீர்காள் !
(அவனுடைய)

தொல்—ஸ்வாபாவிகமான
அருள்—அருளாகிற
நல்வினையால்—ஸுக்ருதவிசேஷத்தாலே
சொலக்கூடுங்கொல்—நாம்சொல்லக்கூடுமோ?

அருளென்று - உபகாரமாய், அதடியான அவனுடைய நல்லசெயல்களாலே சொல்லி யெத்தக்கூடுமோவென்றுமாம். (கo)

ஆறு ;—(தொல்லருள்.) தோழியீர்காள், தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரமும் திருநாடுமொக்க அநுபவிக்கலாம்படியான திருநகரியாய் எம்பெருமான் தன்னிற்காட்டில் அநுக்ரஹஶீலரான ஆயிரவர் தன்னுடைய கல்யாணகுணத்தைக் கொண்டாடும்படியான திருவல்லவாழிலே நின்றருளி, நல்லருளையுடையனாய்க்கொண்டு நமக்கு ஸ்வாமியான நாராயணனுடைய திருநாமங்களை, அவனுடைய ஸ்வாபாவிகக்ருபையாலே நாம் ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு சொல்லக்கூடவற்றோ வென்கிறாள். (கO)

ஈடு ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார் ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்தே பகவதநுபவத்தாலே எல்லாரிலும் சிறந்தவர்களென்கிறார்.

நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் *
சேமங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த *
நாமங்களாயிரத்து ளிவைபத்துந்திருவல்லவாழ் *
சேமங்கொள்தென்னகர்மேல் செப்புவார்சிறந்தார்பிறந்தே (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழியைச் சொல்லவல்லவர்கள் பகவதநுபவயோக்ய ஜந்மத்தையுடையவர்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

நாமங்களாயிரமுடைய—("பேராயிரங்கொண்டதோர்பீடுடையன் - நாராயணன்" என்கிறபடியே ப்ரதாநநாமமான நாராயண ஶப்தத்தினுடைய அம்ஶமான) நாமஸஹஸ்ரத்தையுமுடையனாய்
நம்பெருமான்—(அவற்றை யநுபவித்து) "நம்ஸ்வாமி" என்று ஸர்வரும் பற்றும்படியான ஸர்வேஶ்வரனுடைய
அடிமேல்—திருவடிகளின்மேலே (நினைத்தபடி யநுபவிக்கப்பெறாத அபிநிவேஶம் நடக்கச்செய்தேயும்)
சேமம்—க்ஷேமகாரத்வ புத்திரூப வ்யவஸாயத்தை
கொள்—உடையராய்

தென்—கட்டளைப்பட்ட
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
தெரிந்து—("இத்திருவடிகளே ரக்ஷகம்" என்று) ஆராய்ந்து விஸ்வஸித்து
உரைத்த—அருளிச்செய்த
நாமங்கள்—அவனுக்குத் திருநாமங்கள் போலே வாசகமான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
இவை—இவை
பத்தும்—பத்தையும்
திருவல்லவாழ்—திருவல்லவாழாகிற
சேமங்கொள்—ரக்ஷாயுக்தமான
தென்—அழகிய
நகர்மேல்—திருநகரிவிஷயமாக
செப்புவார்—செப்பவல்லவர்கள்
பிறந்து—ஶரீரஸம்பந்தத்தோடே யிருந்துவைத்து
சிறந்தார்—பகவதநுபவமாகிற சிறப்பையுடையாரவர்கள்.
இது...கலித்துறை. (கக)

ஆறு ;—(நாமங்கள்.) நாமங்களாயிரத்தையுமுடையனாய் ஸர்வேஶ்வரத்வேந ப்ரஸித்தனானவன் திருவடிகளிலே, தமக்கு ரக்ஷை பார்த்துக்கொண்ட ஆழ்வார் ஆராய்ந்தருளிச்செய்த ஆயிரந்திருநாமங்கள்போலே குணசேஷ்டிதாதிகளுக்கு ப்ரதிபாதகமான ஆயிரத்திலும் இத்திருவாய்மொழியைத் திருவல்லவாழாகிற சேமமுடைத்தான தென்னகரிலே கூட்டிச்சொல்லவல்லவர், ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்தே எல்லாரிலும் சிறந்தாரென்கிறார் (கக)

திருவாய்மொழி ஐந்தாம்பத்து ஒன்பதாந் திருவாய்மொழி

முற்றிற்று

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பத்தாந்திருவாய்மொழி--பிறந்தவாறு ப்ரவேஸம்.

—:o:—

ஆறு ;—(பிறந்தவாறும்.) இப்படி ஸ்ரீவரமங்கலநகர் திருக்குடந்தைத் திருவல்லவாழ்களில் எம்பெருமானோடே யதாமநோரதம் ஸம்ஸ்லேஷிக்கப்பெறாமையாலே அவஸந்நரான ஆழ்வார் ; எம்பெருமான் ஸ்ரீமதுரையிலேவந்து வஸுதேவர் திருமகனாய்ப் பிறந்தருளினபடியையும், ஸகலமநுஜநயநவிஷயதாங்கதனாய்க்கொண்டு வளர்ந்தருளினபடியையும், அசேஷஜந மநோநயநஹாரியாய் அதிதைவாதிமாநுஷமான திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணினபடியையும், மற்றும் மத்ஸ்யகூர்மாதிரூபேண அவதீர்ணனாய்ச் செய்தருளின திவ்யசேஷ்டிதங்களையும் காணப்பெற்றிலேன் ; இனி "அவற்றையநுஸந்திக்கவேணும்" என்றுபுக்கு மிகவும் ஸிதிலனாகாநின்றேன் ; அந்தஸைதில்யத்தைப் போக்கி, அநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று எம்பெருமானை ஸரணமாகப் பற்றிமுடிக்கிறார். *

ப ;—பத்தாந் திருவாய்மொழியில், இப்படி திருவல்லவாழிலே யநுபவிக்க ஆசைப்பட்டு அதுகிடையாமையாலே ஆர்த்தராய், (க) "நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்" என்கிறபடியே அவனுடைய ஸர்வாவதாரஸித்தமான குணசேஷ்டிதங்களை யநுஸந்தித்து, தரிக்கப்பார்த்து ; க்ருஷ்ணனுடைய அவதாராதி வ்ருத்தாந்தத்தையும், அபிமதவிஷய வ்யாபாரத்தையும், பாலசேஷ்டிதங்களையும், த்ரிபுரவாஸிகளான அஸுரவர்க்கத்தினுடைய அந்தர்ப்பேதத்தையும் அதிமாநுஷசேஷ்டிதங்களையும், ஸ்த்தித்யாஸந ஸயநாதி வ்யாபாரத்தையும், ஆந்தரமாகவும் பாஹ்யமாகவும் ப்ரகாஸாப்ரகாஸகத்வத்தையும், ஸர்வாதிகத்வஸூசகமான ஸ்ருஷ்டிவ்யாபாரங்களையும், ஆர்த்தியாயும் தன்னபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொள்ளுமாகாரத்தையும், ஆஸ்ரிதவிஷயத்தில் அருந்தொழில்செய்து உபகரிக்கும்படியையுமநுஸந்தித்து, அவைதானே அப்ராப்தியில் ஸைதில்யாவஹமாகையாலே ஆர்த்தராய், "உன்னுடைய சேஷ்டிதாதிகளை நான் நிலைநின்று அநுபவிக்கும்படி பண்ணியருளவேணும்" என்று அபேக்ஷித்து, அவன் திருவடிகளிற்பிறந்த உபாயவிஸ்வாஸம் யாவத்ப்ராப்தி யநுவர்த்தித்தபடியை யருளிச்செய்து, இப்படி உபாயபூதனுடைய ஸ்வரூபயாதாத்ம்யத்தை நிரூபித்துத் தலைக்கட்டுகிறார். *

(க) பெரியாழ் - திரு - ௫ - ௪ - ௮

ஈடு ;—“திருவல்லவாழிலே போய்ப்புக்கு அங்கு நிற்கிறவனோடே பரிமாறவேணும்” என்று மநோரதித்துக்கொண்டுபோக, கால்நடைதாராமல் நடுவழியிலே விழுந்துகிடந்து கூப்பிட்டார்; இனி “இவ்வளவில் குணாநுபவம்பண்ணி யாகிலும் தரிப்போம்” என்று பார்க்க, அதுதானும் பேற்றோபாதியரிதாம்படி ஶைதில்யத்தை விளைப்பிக்க; ஸர்வாவஸ்த்தைகளிலும் - உன்னைப்பிரிந்து நின்றாலும் தரித்துநின்று குணாநுபவம்பண்ண வல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று அவன் திருவடிகளிலே ஶரணம்புகுகிறார்.

ருஷிகளுக்குண்டான ஸம்ஸார பயத்தோபாதியும் போருமாயிற்று ஆழ்வார்களுக்கு பகவத்விரஹத்தால்வரும் க்லேஶம்; அவர்கள் தந்தாம்பேற்றுக்குத் தாந்தாம் சிலயத்நம் பண்ணாநிற்பர்கள், இவர்கள் அத்தலையாலே பேறுமளவும் அஶோகவநிகையில் பிராட்டியைப்போலே துடியாநிற்பர்கள்; அவர்களுக்குத் தங்கள் தலையிலேயும் சிலகிடக்கையாலே விளம்பம் பொறுக்கலாம், இவர்களுக்கு அங்ஙன் சொல்லலாவதொன்றில்லையாகையாலே கிடந்து அலமாப்பர்கள்.

“அவனடியாலேநம்பேறு” என்றிருக்கிறவர்களுக்கு ஒருகண்ணழிவில்லையே சொல்லலாவது. (க) “நவஸீதாகயாஹீநா நவாஹமேவிராகவ - நசஸீதாத்வயாஹீநா நசாஹமபிராகவ” என்கிறபடியே, லாபாலாபங்களில் பிராட்டியையும் தம்மையும் ஏகப்ரக்ருதியாகச் சொன்னாரிறே; (உ) “ஸாவொ நாந்ருத்ர ஹநுதி - பாவோ நாந்யத்ரகச்சதி” என்று, திருவடி ராமாவதாரமொன்றிலும் ஸக்தனாயிருக்குமாபோலே, இவர் எல்லாவவதாரங்களிலும் எல்லாசேஷ்டிதங்களிலும் அகப்பட்டிருப்பாரொருவர். அர்ச்சாவதாரத்திலே தம்மபேக்ஷிதம்பெற வாசைப்பட்டவர் அதுகிடையாமையாலே அவதாரங்களிலே போகிறார்; “விபவமுள்ளவிடத்தே சென்றால் சிறிது அபேக்ஷிதம் கிடைக்கும்” என்றிருப்பரே.

விபவங்களிலே இழந்தார்க்கும் இழவுதீர்க்கிற விடமாயிருக்க, இத்தைவிட்டு “பெறலாம்” என்று, விபவமுள்ளவிடந் தேடிப்போகையாவதென்? என்னில்,—அர்ச்சாவதாரத்தில், அதீந்த்ரியனான தன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்குகையும் ஸர்வாபேக்ஷி

(க) ரா-அயோ-௫௩-௩௧. (உ) உத்தர-ரா-௪௦-௧௫.

தங்களையும் கொடுக்கையுமொழிய, குளிரநோக்குதல் வினவுதல் அணைத்தல் செய்யக்கடவதன்றாக ஸங்கல்பித்திருக்கையாலே, "ஸத்யஸங்கல்பனுடைய ஸங்கல்பம் குலையும்படி அதிநிர்ப்பந்தம் பண்ணக்கடவோமல்லோம்" என்று, (க) "संस्पृश्याकृष्य च प्रीत्या सुगाढं परिषस्वजे - ஸம்ஸ்ப்ருஶ்யாக்ருஷ்யசப்ரீத்யாஸுகாடம்பரிஷஸ்வஜே" என்னும் க்ருஷ்ணாவதாரத்திலே போந்தார் ப்ரத்யாஸத்தியாலே.

"இவ்வாழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணாவதாரமென்றவாறே போரமண்டியிருப்பர்கள், இதுக்குஹேதுவென்?" என்று பட்டரைக்கேட்க, "ஒருவனுக்கு து:க்கம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப்போகாதிறே; அப்படியே; அல்லாத அவதாரங்களைப் போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே, 'ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம், பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே,' என்னுமிழவாலே வயிறெரித்தலேயா யிருக்கும்" என்று அருளிச்செய்தார்.

இனித்தான் ராமாவதாரத்தில், தமப்பன் ஸம்பராந்தகனாய் ஏகவீரனாயிருப்பானொருவன்; பிள்ளைகள் தாங்கள் ஆண்புலிகள், குடிதானே வன்னியமறுத்திருப்பதொருகுடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத் தாக்கிக் கொண்டிருப்பர்கள், ஆகையால் எதிரிகள் என்கிற ஸப்தமுமில்லை; இங்கு அங்ஙனன்றிக்கே, தமப்பன் ஒருஸாதுவ்ருத்தன்; பிறந்தது கம்ஸன் சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவனகத்தருகே; ஸ்ரீப்ருந்தாவநத்திலே, எழும்பூண்டுகளகப்பட அஸுரமயமாயிருக்கும், ரக்ஷகரானவர்கள் ஓரடிதாழநிற்கில் பாம்பின்வாயிலே விழும்படியாயிற்று இவன்தன்படிகளிருப்பது, அப்படியானால் வயிறெரியாதே செய்வதென்? இவர்கள்; அக்காலத்திலே உணர்ந்து நோக்கப்பெற்றிலர்கள், அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள்.

அவர்களிலே யொருவரானவிவர் சொல்லுகிறபடியிறேயிது - (க) [தெரிந்துணர்வு இத்யாதி] - மாயாம்ருகத்தின் பின்னேபோய் இளைத்து மீண்டெழுந்தருளினபோது அடிசுட்டுப் பொறுக்கமாட்

(க) பெரியதிருவ - ௮௨.

டாமையாலே "தழைகளை முறித்துப்பொகட்டு அவற்றிலே நின்று ஆறியெழுந்தருளினார்" என்று கேட்டு, பாவியேன்! "அன்று உதவி அத்திருவடிகளிலே என் தலையை மடுக்கப்பெற்றிலேன், வ்யர்த்தமே போயிற்றிறே அநாதிகாலமெல்லாம்" என்று நொந்தாரிறே. இப்படியேயிறே போனதுக்கு இவர்கள் வயிறெரியும்படி. "திருநீலமணியார்மேனியோடு என்மனம் சூழவருவாரே" என்றும் வயிறுபிடித்தாரிறே இவர்.

"இவர் அவனுடைய அவதாரங்களையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும், (க) "தாயர்மகிழ வொன்னார்தளரத் தளர்நடை நடந்த" என்கிறபடியே, ஆஸ்ரிதரைவாழ்விக்கவும் அநாஸ்ரிதரை யழியச்செய்யவும் அடியிட்டு அப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணாவதாரத்தையும் அநுஸந்தித்து மிகவும் ஸிதிலரானவிவர்; தரித்து நின்று உன்னை யநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று அவனை ஸரணம்புகுகிறார்" என்று ஆழ்வான் பணிக்கும். அன்றியே, 'விஸ்லேஷஸமயத்திலே உன்குணங்கள் புத்திஸ்த்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவுபடுகைதவிர்ந்து, உன்திருவடிகளிலே வந்துசேர்ந்து உன்னைக்கிட்டி யநுபவிக்கும்படி பண்ணியருளவேணுமென்று அவனைக்குறித்து அருளிச்செய்கிறார்' என்று எம்பார் அருளிச்செய்யும்படி.

அங்ஙனன்றிக்கே, "'ஸர்வேஸ்வரன் க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம்பண்ணித் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான்" என்றுகேட்டு, 'அங்கே யதாமநோரதம் நமக்குக் கலந்து பரிமாறலாம்' என்று தெற்குத்திருவாசலாலே சென்றுபுக, "இப்போது இங்ஙனே வடக்கிற்றிருவாசலாலே புறப்பட்டு தன்னுடைச் சோதியேற வெழுந்தருளினான்" என்றுகேட்டு விழுந்துகிடந்து கூப்பிடுகிறார் என்று பிள்ளான்பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

ஈடு; அவ;—முதற் பாட்டு. இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்யாநின்று கொண்டு, உன்னுடைய அவதாராதிகள் என்னை மர்மத்திலே தொட்டு ஸிதிலமாக்காநின்றன. இஸ்ஸைதில்யம் நீங்கி உன்னை தரித்துநின்று நான் அநுஸந்திப்பது எப்போதென்கிறார்.

(க) பெரியாழ்வார் திரு - க - அ - கக.

பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதங்கைசெய்து*ஐவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களும் *
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்ற* இச்
சிறந்தவான்சுடரே உன்னையென்றுகொல்சேர்வதுவே. (க)

ப ;—முதற்பாட்டில், க்ருஷ்ணனுடைய அவதாராதி சேஷ்டிதங்களை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

பிறந்த—(க) ("அஜாயமாந: - அஜாயமாந:", (உ) "நாராயணாத் - நாராயணாத்", (ங) "அஜோபிஸந் - அஜோபி ஸந்" என்கிறபடியே அகர்மவஸ்யனாய்வைத்து அஜஹத்ஸ்வபாவனாய் ஆஸ்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக இதர ஸஜாதீயனாய்ப்) பிறந்த
ஆறும்—ப்ரகாரமும்
வளர்ந்த— கைக்கீழே காற்கீழே விரோதிகளழியும்படியாகவும் ஆஸ்ரிதரபிமாநித்த த்ரவ்யமே தாரகமாம்படியாகவும்) வளர்ந்த
ஆறும்—ப்ரகாரமும்
பெரியபாரதம்—மஹாபாரதத்திலே
கைசெய்து—படையைக்கைவகுத்து
ஐவர்க்கு—பாண்டவர்களைவர்க்கும்
திறங்கள்—விஜயோபாயப்ரகாரத்தை
காட்டியிட்டு—ப்ரதர்ஸிப்பித்து
செய்து—(ஆஸ்ரிதர்க்கு உபகரித்தும், அநாஸ்ரிதரை யழியச்செய்தும்) அவதாரகார்யம் சமைந்து
போன—தன்னுடைச்சோதியேறப் போன
மாயங்களும்—ஆஸ்சர்யப்ரகாரங்களும்
நிறந்தன்—மர்மமான ஹ்ருதயப்ரதேஸத்துக்கு
ஊடு—உள்ளே
புக்கு—ப்ரவேஸித்து
எனது—என்
ஆவியை—ஆத்மாவை
நின்று—க்ஷணந்தோறும் நின்று நின்று
உருக்கி—த்ரவத்ரவ்யமாக்கி
உண்கின்ற—க்ரஸியாநின்றன ;
இ—எனக்கு நித்யஸந்நிஹிதமாய்
சிறந்த—அநுரூபமாய்
வான்—அபரிச்சேத்யமான
சுடரே—தேஜஸ்ஸை யுடையவனே ! (இந்த ஸ்வபாவங்களை ஸிதிலனாகாமல் நின்று அநுபவிக்கலாம்படி)
உன்னை—உன்னை
என்றுகொல்—என்றோ
சேர்வது—சேர்வது. (க)

ஆறு ;—அகர்மவஸ்யனாயிருந்துவைத்து ஆஸ்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தோடேகூட வந்து அவதரித்ததும் ; பூதநாதிப்ரதிபக்ஷங்கள் மாயும்படியாகவும், நவநீத சௌர்யாதி திவ்யசேஷ்டிதங்களாலே அநுகூலர் வாழும்படியாகவும்,

(க) உத்தராநுவாகம். (உ) நாராயணோபநிஷத்.
(ங) கீதை - ச - சு.

வளர்ந்தபடியும்; பாண்டவர்களுக்காக அபரிச்சேத்யமான பாரத ஸேனையை யணிவகுத்தும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும், தூத்யஸாரத்யாதிகளைப் பண்ணியும், இப்படிச்செய்த சீர்மையறியாத தூர்த்தேசத்திலேயிராதே யெழுந்தருளின ஆஸ்சர்யங்களும்; விரஹவ்யஸநத்தாலேயற வவஸந்நமான என்னுடைய ஆத்மாவை மர்மத்திலே புக்கு விடாதேநின்று ஶிதிலமாக்கி முடியாநின்றது; அபரிச்சேத்யமான அழகையுடைய உன்னைக்கிட்டுவதென்றோவென்று எம்பெருமானைக் குறித்துக் கூப்பிடுகிறார். (௧)

ஈடு;—இரண்டாம் பாட்டு. ஏறடர்க்கை தொடக்கமான உன் சேஷ்டிதங்கள் என்னை ஶிதிலமாக்காநின்றன. நான் தரித்துநின்று அநுபவிக்கும்படி பண்ணவேணுமென்கிறார். இனி, அல்லாத வவதாரங்களையும் ஆராய்ந்தால் இத்தன்மையவா யிருக்குமிறே, ஆகையாலே அவ்வருகு போகமாட்டார், அடியில் இழியமாட்டார், இனி வளர்ந்தவாறேறப் போமித்தனையிறே; (௧) "சீராற்பிறந்து" இத்யாதி. பிறந்தவாறு அவனேசெய்கையாலே இவர்க்கு அங்குச் செய்யலாவதில்லை, இனி அநுகூலர்க்குக்கண்டு பரிகைக்கு விஷயமுள்ளது வளர்ந்தவாற்றிலேயிறே, அவ்வளர்ந்தவாறுதான் இருக்கிறபடி சொல்லுகிறார்.

வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும்மாயமாவினைவாய்பிளந்ததும்*
மதுவைவார்குழலார் குரவைபிணைந்தகுழகும் *
அதுவிதுவுதுவென்னலாவனவல்ல என்னையுன்செய்கைநைவிக்கும்*
முதுவையமுதல்வா! உன்னையென்றுதலைப்பெய்வனே. (௨)

ப;—அநந்தரம், அபிமதவிஷயத்தில் உன்னுடைய வ்யாபாரங்கள் என்னை ஶிதிலனாக்காநின்றதென்கிறார்.

வதுவை வார்த்தையுள்—வதுவை கல்யாணவார்த்தை பிறந்தவளவிலே
ஏறு—ஏறுகளை
பாய்ந்ததும்—மேல்விழுந்துகொன்றதுவும்
மாயம்—அஸுராவிஷ்டமாய் க்ருத்ரிமமான
மாவினை—கேஶியாகிறகுதிரையை (கோபிமார் அஞ்சாதபடி)
வாய்—வாயை
பிளந்ததும்—பிளந்ததுவும்
மதுவை - மதுவை
வார்—வாரவிடுகிற
குழலார்—குழலையுடையாரான பெண்களுடனே

(௧) பெரியதிருவ - ௧௬.

குரவை—குரவை
பிணைந்த—கோத்து
குழகும்—இனியவ்யாபாரங்களைப் பண்ணினதுவும்
அது—அது
இது—இது
உது—உது
என்னலாவன—என்று விசேஷித்துச் சொல்லலாவன
அல்ல—அல்ல;
என்னை—(உன்னளவில் அதிப்ராவணனை) என்னை (நிரதிசய போக்யமான)
உன்—உன்
செய்கை—செயலானவை
நைவிக்கும்—ஶிதிலனாக்காநிற்கும்;
வையம்—ஜகத்துக்கு
முதுமுதல்வா—ப்ரதாநகாரணபூதனானவனே!
உன்னை—உன்னை
என்று—என்று
தலைப்பெய்வன்—கிட்டுவேன்?

அழிந்த ஜகத்தையுண்டாக்கின நீ ஶிதிலனாகிற வென்னை ஸத்திராக்குவதென்றென்று கருத்து வதுவை - விவாஹம (உ)

ஆறு ;—(வதுவை.) விவாஹப்ரஸங்கத்திலே ஏறுகளின்மேலே பாய்ந்தபடியும், வஞ்சகமாய்வந்த குதிரையை வாய்பிளந்தபடியும், மதுஸ்யந்தியான குழலையுடையவர்களோடே திருக்குரவையிலே கலந்த கலப்பும்; உன்செயலானவையாலே, எல்லா சேஷ்டிதங்களும், உன் குணப்ரஸங்கத்திலே நையும் ப்ரக்ருதியான என்னை மிகவும் ஶிதிலமாக்காநின்றன, ப்ரளயத்தி லழுந்தின ஜகத்தை யுண்டாக்கினாப் போலே என்னை தரிப்பித்து, உன்னை யநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார். (உ)

ஈடு ;—மூன்றும்பாட்டு. உன்பாலசேஷ்டிதங்கள் என்னை நலியாநின்றதென்கிறார்.

பெய்யும்பூங்குழற்பேய்முலையுண்டபிள்ளைத்தேற்றமும்* பேர்ந்தோர் [சாடிறச்
செய்யபாதமொன்றால் செய்தநின்சிறுச்சேவகமும்*
நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள நீயுன்தாமரைக்கண்கள்
பையவேநிலையும்வந்து என்னெஞ்சையுருக்குங்களே. (௩) [நீர்மல்க

ப ;—அநந்தரம், உன்னுடைய பாலசேஷ்டிதங்களானவை என்னெஞ்சை உருகப்பண்ணாநின்றன வென்கிறார்.

(யசோதைவடிவுகொண்டு ஒப்பித்து வருகையாலே)
பெய்யும்—வைத்த
பூ—பூவையுடைத்தான
குழல்—மயிர்முடியையுடைய
பேய்—பேயின்
முலை—முலையை
உண்ட—உண்ட
பிள்ளை—பிள்ளைத்தனத்திலே
தேற்றமும்—வேற்றுமுலையையறிந் தெளிவும்
ஓர்—அஸுராவிஷ்டமாய்நலியவந்த தொரு
சாடு—சகடம்
போர்ந்து—போர்ந்துபோய்
இற—முடியும்படியாக
செய்ய—சிவந்த
பாதம்—திருவடி
ஒன்றால்—ஒன்றாலே
செய்த—செய்தருளின
நின்—உன்னுடைய
சிறுச்சேவகமும்—பாலபராக்ரமமும்;
நெய்—நெய்
உண்—அமுதுசெய்த
வார்த்தையுள்—வார்த்தைபிறந்த வளவிலே
அன்னை—தாயானயசோதை (பரிவாலே கையிலே)
கோல்—கோலை
கொள்ள—கொள்ள
நீ—(எல்லாரையும் உன்கோற்கீழே நடத்தும்படி ஸர்வசக்தியான) நீ
உன்—உனக்கு அநுரூபமாய்
தாமரை—தாமரைபோலேயிருக்கிற
கண்கள்—கண்களானவை
நீர்—நீர்
மல்க—மல்கும்படி
பைய—பீதனுய்க்கொண்டு ஒடுங்கி நிற்கும்
நிலையும்—நிலையும்
வந்து—(முற்காலத்திலே செய்துபோனவை இன்று என்னளவும்) வந்து
என்—என்னுடைய
நெஞ்சை—சபலமானநெஞ்சை
உருக்குங்கள்—உருக்காநின்றன. (ந)

ஆறு;—(பெய்யும்பூங்குழல்.) பூப்பெய்தகுழலையுடைய பூதனையுடைய முலையுண்ட பிள்ளைத்தனத்திலே யுண்டாயிருக்கிற ரஸஜ்ஞாநமும்; அதுக்குமேலே அஸுராவேசத்தாலே ஊருகிறதொரு சகடத்தைச் சிவந்த திருவடியொன்றாலே உதைத்த சிறுமையிலுண்டான ஆண்பிள்ளைத்தனமும்; நெய்யைக் களவுகண்டான் என்னும் வார்த்தாப்ரஸ்தாவத்திலே ஸ்நேஹியான தாயார் கையிலேயொரு துரும்பைக்கொள்ள, அத்யந்தஸுந்தரனான நீ, உனக்குத் தகுதியாய்த் தாமரைப்பூப்போலேயிருக்கிற கண்கள் அச்சத்தினாலே நீர் மல்கும்படி, "அடிபடுகிறது" என்றுபேகணித்து நின்றநிலையும் வந்து என்னெஞ்சை நீராக்காநின்றனவென்கிறார். (ந)

ஈடு ; அவ ;—நாலாம்பாட்டு பௌத்தாவதார வ்ருத்தாந்தம் மிகவும் என்னை நலியாநின்றதென்கிறார். அநுகூலவிஷயத்தில் களவுசொல்லிற்று - கீழ்ப்பாட்டில், ப்ரதிகூலவிஷயத்தில் களவுகண்டபடி சொல்லுகிறது - இப்பாட்டில்.

கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும்* கலந்தசுரரை
உள்ளம்பேதஞ்செய்திட்டு உயிருண்டவுபாயங்களும் *
வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடைவேறலாமைவிளங்கநின்றதும்*
உள்ளமுள்குடைந்து என்னுயிரையுருக்கியுண்ணுமே. (ச)

ப ;—அநந்தரம். த்ரிபுரவாஸிகளான அஸுரவர்க்கத்தை அந்தர்பேதாதிகள் பண்ணிமுடித்தப்ரகாரம் என்னாத்மாவை ஶிதிலமாக்காநின்றதென்கிறார்.

கள்ளவேடத்தை—(வேதபாஹ்ய புத்தரூபமான) க்ருத்ரிமவேஷத்தை
கொண்டு—கொண்டு
போய்—(அழகாலும் பக்வதையாலும் ஆப்தபுத்திபிறக்கும்படி) போய்
புரம்—த்ரிபுரத்திலே
புக்க—புக்க
ஆறும்—ப்ரகாரமும் ;
அசுரரை—அங்குத்தையஸுரரை
கலந்து—உட்புக்குச்செறிந்து
உள்ளம்பேதம்—சித்தபேதத்தை
செய்திட்டு—பண்ணி (அவர்களுக்கு உபாஸ்யனைருத்ரன்தன்னாலே)
உயிர்—அவர்கள்ப்ராணனை
உண்ட—அபஹரித்த
உபாயங்களும்—விரகுகளும்
வெள்ளம்—ஸம்ருத்தமான
நீர்—கங்காஜலத்தை
சடையானும்—ஜடையிலேயுடைய ருத்ரனும்
நின்னிடை—உன்பக்கல்
வேறலாமை—(க) “விஷ்ணோராத்மா பகவதோ பவஸ்ய-விஷ்ணுராத்மாபகவதோபவஸ்ய” என்று ஶரீரஶரீரிபாவத்தாலே அப்ருதக்ஸித்தப்ரகாரமானபடி
விளங்க—ப்ரமாணப்ரஸித்தமாக
நின்றதும்—நின்றதும்
உள்ளம்—என்னெஞ்சுக்குள்ளே
உள்—ஜ்ஞாநவ்ருத்திகள்தோறும்
குடைந்து—அவகாஹித்து
என்—என்
உயிரை—ஆத்மாவை
உருக்கி—நீராகவுருக்கி
உண்ணும்—க்ரஸித்துவிடாநின்றன.

ஆறு ;—(கள்ளவேடத்தை.) கண்டாருடைய நெஞ்சை அபஹரிக்கும்படியான அழகிய வேஷத்தைக்கொண்டு த்ரிபுரத்திலே புக்கபடியும். அஸுரரோடேசேர்ந்து வைதிகஶ்ரத்தைகளைப்போக்கி அவர்களுக்கு ப்ராணஹாநி பண்ணினவிரகுகளும், கங்கையை தரித்த ருத்ரன் த்வததீநனென்று ப்ரஸித்தமாம்படி நின்றதுவும். அந்க

(க) பாரத - கர்ண.

லனுவேன்?

தஃகரணத்தை யுள்ளேபுக்குக் குடைந்து என் ஆத்மாவை நீராக்கி முடியாநின்றனனென்கிறார். (௪)

ஈடு ; அவ ;—அஞ்சாம்பாட்டு. ஆஶ்ரிதவிஷயமாகவும் ஸர்வவிஷயமாகவும் பண்ணின சேஷ்டிதங்களை யநுஸந்திக்குந்தோறும் என்மநஸ்ஸு மிகவும் அழியாநின்றதென்கிறார்.

உண்ணவானவர்கோனுக் காயரொருப்படுத்தவடிசிலுண்டதும் *
வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்ததும் *
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்தமாயங்கள் *
எண்ணுந்தோறுமென்னெஞ் செரிவாய்மெழுகொக்குநின்றே. (௫)

ப ;—அநந்தரம், அதிமாநுஷ சேஷ்டிதங்களை அநுஸந்திக்குந்தோறும் என்னெஞ்சு, அக்நிஸகாஶத்தில் மெழுகுபோலே யாகாநின்றதென்கிறார்.

வானவர்கோனுக்கு—ஸபரிகரனான இந்த்ரனுக்கு
உண்ண—புஜிக்கைக்காக
ஆயர்—(பரஸம்ரக்ஷணதத்பரரான) இடையர்
ஒருப்படுத்த—ஸோத்யோகராய்ச் செய்த
அடிசில்—அடிசிலை
உண்டதும்—(கோவர்த்தநரூபியாய்க் கொண்டு) அமுதுசெய்ததும்
வண்ணம்—தாதுக்களாலே நாநாவர்ணமாய்
மால்—பெருத்திருக்கிற
வரையை—மலையை
எடுத்து—எடுத்து
மழை—(ஆராதநபங்கத்தாலே க்ருத்தனான இந்த்ரன் ப்ரவர்த்திப்பித்த) மழையை
காத்ததும்—தடுத்ததும் (இப்படி விஶேஷவிஷயமன்றியே)
மண்ணை—(பூம்யுபலக்ஷிதமான) ஜகத்தை
முன்—ப்ரதமத்திலே
படைத்து—ஸ்ருஷ்டித்து
உண்டு—ப்ரளயம்வந்தவாறே வயிற்றிலேவைத்து நோக்கி
உமிழ்ந்து—(அநந்தரத்திலே) உமிழ்ந்து
கடந்து—(அந்யாபிமாநம் தீரும்படி) அளந்து
இடந்து—(அவாந்தரப்ரளயத்திலே வராஹரூபியாய்) இடந்து
மணந்த—ப்ரளயோத்தீர்ணையான பூமியோடே ஸம்ஶ்லேஷித்த
மாயங்கள்—ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களானவிவை
எண்ணுந்தோறும்—இத்தையநுஸந்திக்கும் காலந்தோறும்
என்—என்
நெஞ்சு—நெஞ்சானது
நின்று—ஒருபடிப்பட
எரிவாய்—அக்நியிடத்தில்
மெழுகொக்கும்—மெழுகுபோலே த்ரவியாநின்றது. (௫)

ஆறு ;—(உண்ணா.) உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப் படுத்தவடிசிலுண்டதும் இந்த்ரன் க்ருத்தனாய்வர்ஷிக்க,நாநாவர்ணமானபெரியமலையை யெடுத்து மழைகாத்ததும்; ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணினதுவும் ; இப்படி செய்தருளின ஆஸ்சர்யங்களை யநுஸந்திக்குந்தோறும் என்னுடைய மநஸ்ஸு,நெருப்பிலேபுக்க மெழுகுபோலே ஒருகாலேமுடியாதே நின்று உருகாநின்றதென்கிறார் (ரு)

ஈடு; அவ ;—ஆறாம் பாட்டு. உன் ஸகல சேஷ்டிதங்களையும் காண, விடாய்ப்பட்ட நான் நினைக்கவும் க்ஷமனாகிறிலேன் ; ப்ரளயாபத்தில் ஜகத்தை ரக்ஷித்தாப்போலே, அநுஸந்திக்க வல்லேனாம்படி பண்ணி என்னை ரக்ஷிக்கவேணுமென்கிறார்.

நின்றவாறுமிருந்தவாறும் கிடந்தவாறும்நினைப்பரியன *
ஒன்றலாவுருவாயருவாய நின்மாயங்கள் *
நின்றுநின்றுநினைகின்றே னுன்னையெங்ஙனம்நினைகிற்பன்* பாவி
ஒன்றுநன்குரையா யுலகமுண்டவொண்சுடரே. (சு) [யேற்கு

ப ;—அநந்தரம், ஸ்த்திதயாஸநஶயநாதி வ்யாபாரங்கள் ஒருபடிப்பட நினைக்கலாயிருக்கிறதில்லை, நான் நினைக்கவல்லனாம் ப்ரகாரம் அருளிச்செய்ய வேணுமென்கிறார்.

(திருவூரகம், திருப்பாடகம் திருவெஃகா இவற்றிலே)
நின்றவாறும்—நின்றபடியும்
இருந்தவாறும்—இருந்தபடியும்
கிடந்தவாறும்—கிடந்தபடியும் (அப்படி ஆஸ்ரிதஹ்ருதயங்களில் "திஷ்டந்" என்றும் "ஆஸ்தே" என்றும் "ஶேதே" என்றும் ப்ரமாணஸித்தமாம்படி வர்த்தித்தபடியாகவும்)
நினைப்பு—நினைக்கைக்கு
அரியன—அரியவாயிராநின்றன ; (இப்படி
ஒன்று—ஒருபடி
அலா—அல்லாத
உருவாய்—ஆகாரத்தை யுடையவனாய்

அருவாய—எனக்கு அநுபவிக்கைக்கு உருத்தெரியாத
நின்—உன்னுடைய
மாயங்கள்—ஆஸ்சர்யசேஷ்டிதங்களானவற்றை
நின்றுநின்று—ஸ்திரமான நெஞ்சை யுடையனாய் ஸமயந்தோறும் நின்று நின்று வருந்தி
நினைகின்றேன்—முட்டநினைக்கப்பாரா நின்றேன் ;
உன்னை—(ஸமயதில்யாவஹசேஷ்டிதனான) உன்னை
எங்ஙனம்—எங்ஙனே
நினைகிற்பன்—ஒருபடிப்பட நினைக்க வல்லேனாவேன்?

பாவியேற்கு—(ஸ்த்திரசிந்தை பண்ணமாட்டாத) பாபத்தை யுடையேனான எனக்கு
உலகம்—ப்ரளயாபத்திலே யழிகிற ஜகத்தை
உண்ட—அமுதுசெய்துநோக்கி
ஒண்சுடரே—அத்யுஜ்ஜ்வலனானவனே! (ஸைதில்யார்ணவத்தில் அழுந்தாதபடி (௧) "[illegible] ஸ்திதோஸ்மி" என்னும்படியாக)
ஒன்று—அத்விதீயமாயிருப்பதொரு
நன்கு—விலக்ஷணோபாயம்
உரையாய்—அருளிச்செய்யவேணும்

நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமென்று - க்ருஷ்ணாவதாரத்திலே தொட்டிலுக்குள்ளே நின்று இருந்து கிடந்தபடியையுஞ் சொல்லுவார். (௬)

ஆறு;—(நின்றவாறும்.) ராமக்ருஷ்ணாவதாரங்களில் நின்றருளினதை தொடக்கமாயுண்டான சேஷ்டிதங்களையும், மற்றும் நினைக்கவரியவாய் அநேகப்ரகாரமாய் எனக்குத் தோற்றுகிறுக்கிற உன்னுடைய ஆஸ்சர்யமான சேஷ்டிதங்களையும், நினைக்கும்படி நின்று நின்று ஆராயாநின்றேன் ; உன்னை எங்ஙனேநினைப்பன். ப்ரளயத்தில் ஜகத்துக்குவந்த ஆபத்தைநீக்கி உஜ்வலனான நீ, உன்னுடைய குணப்ரஸங்கத்திலே ஶிதிலனாகைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னுடைய ஸைதில்யம்போய் நான்தரிப்பதொரு நல்விரகு சொல்லவேணுமென்கிறார். (௬)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. மாநஸாநுஸந்தாநமேயாய் ஶிதிலனாய்ப்போகாமே, கண்ணாலேகண்டு அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறுமுண்மையோடின்மையாய்வந்து*
கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன * [என்
எண்கொள்சிந்தையுள்நைகின்றே னென்கரியமாணிக்கமே* என்கண்
திண்கொள்ளவொருநா ளருளாயுன்திருவுருவே. (௭) [கட்குத்

ப ;—அநந்தரம். பாஹ்யஸம்ஶ்லேஷம்பண்ணி நினைத்தபடி அநுபவிக்கப்பெறாதே மாநஸாநுபவமேயாய் க்லேஶியாதபடி, என்கண்கள் ஸ்த்திராநுபவம் பண்ணும்படி உன்வடிவைக் காட்டவேணுமென்கிறா.

உண்மையோடு—என்னகவாயிலே ப்ரகாஶித்து உளனாகிற ஆகாரத்தோடே
இன்மையாய்—புறவாயில் ப்ரகாஶத்தினுடையவில்லாமையை யுடையனாய்க்கொண்டு

---

(௧) கீதை ௧௮.

வந்து—வந்து
ஒண்—ஒள்ளிய
சுடரோடு—தேஜஸ்ஸோடே ஸஹாவஸ்த்திதமான
இருளுமாய்—இருளென்னலாம்படி
நின்ற—நின்ற
ஆறும்—ப்ரகாரமும், (அப்ப்ரகாரத்திலே)
என்—என்
கண்—கண்
கொளாவகை—உன்னையநுபவியாதபடி
கரந்து—உள்ளே மறைந்து நின்று
நீ—
என்னை—என்னை
செய்கின்றன—செய்கிறவிவற்றை
எண்—எண்ணவேணுமென்று
கொள்—கொள்ளுகிற
சிந்தையுள்—நெஞ்சோடே
நைகின்றேன்—ஶிதிலனாகாநின்றேன்;
என்—என்னுடைய, இந்தஶைதில்யத்துக்கு ஹேதுவாய்
கரியமாணிக்கமே—நீலரத்நம்போலேயிருக்கிற வடிவையுடையவனே
உன்—உன்னுடைய
திரு—ப்ராப்தமாய் போக்யமான
உரு—ரூபத்தை, (காணவாசைப்பட்ட)
என்—என்
கண்கட்கு—கண்களுக்கு
திண்—திண்மையையுடைத்தாக
கொள்ள—காணும்படி
ஒருநாள்—ஒருகால்
அருளாய்—அருளவேணும்.
கலந்தென்றுபாடமாய்—கலசியென்றுமாம் (எ)

ஆறு;—(ஒண்சுடர்.) ஆஶ்ரிதர்க்கு மெய்யனாய்த்தோற்றியும், அநாஶ்ரிதர்க்குப் பொய்யனாய்க் கைவாராதே யிருக்கிறபடியையும், ஹ்ருதயத்திலே ஸந்நிஹிதனாய்வைத்தே என்கண்ணுக்குக் காணவொண்ணாதபடி மறைந்து என்னை நலிகிறநலிவுகளையும் மநோரதிக்கிற மநோரதத்திலே ஶிதிலனாகாநின்றேன். உன்வடிவழகை எனக்கு புஜிக்கத்தந்தருளின நீ, நான் த்ருடமாகக் காணலாம்படி என்னுடைய கண்களுக்கு உன்னுடைய திருவுருவை ஒருநாள் அருளவேணுமென்கிறார். (எ)

ஈடு;—எட்டாம்பாட்டு. உன்குணசேஷ்டிதாதிகளைக் கேட்ட கேட்டபோதுதோறும் ஶிதிலனாகாநின்றேன், என்செய்கேனென்கிறார்.

திருவுருவுகிடந்தவாறும் கொப்பூழ்ச்செந்தாமரைமேல் * திசைமுகன்
கருவுள்வீற்றிருந்து படைத்திட்டகருமங்களும் *
பொருவிலுன்றனிநாயகமவை கேட்குந்தோறுமென்னெஞ்சம்நின்று
அருவிசோருங்கண்ணீர் என்செய்கேனடியேனே. (அ) [நெக்கு

ப.—அநந்தரம், உன்னுடைய ஸர்வாதிகத்வ ஸூசகமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைக் கேட்குந்தோறெல்லாம் என்னெஞ்சுநெகிழ்ந்து கண்ணீர் சோராநின்றது, நான் என்செய்வேனென்கிறார்.

(காரணமான ஏகார்ணவஜலத்திலே),
திரு—அழகிய
உருவு—திருமேனி
கிடந்தவாறும்—கண்வளர்ந்தபடியும்
கொப்பூழ்—அந்தவடிவிற்கொப்பூழில்
செம்—சிவந்த
தாமரைமேல்—தாமரையின்மேலே யுண்டான
திசைமுகன்—சதுர்முகனாகிற
கருவுள்—கருவுக்குள்ளே
வீற்று—அந்தராத்மாவானவேறுபாடு தோன்றும்படி
இருந்து—இருந்து
படைத்திட்ட—("அவன்ஸ்ருஷ்டி பண்ணினான்" என்னும்படி நீ ஜகத்தை) ஸ்ருஷ்டிக்த
கருமங்களும்—வ்யாபாரங்களுமாகிற
பொரு—எதிர்
இல்—இல்லாத
உன்—உன்னுடைய
தனிநாயகம்—அத்விதீயநாயகத்வ ப்ரகாசகமான
அவை—அவற்றை
கேட்குந்தோறும்—(ப்ரமாணமுகத்தாலே) கேட்குந்தோறும்
என்—என்
நெஞ்சம்—நெஞ்சு
நின்று—ஒரு படிப்பட நின்று
நெக்கு—கட்டுக்குலைந்து நெகிழ்ந்து
கண்ணீர்—கண்ணீரானது
அருவி—அருவிபோலே
சோரும்—விழாநின்றது;
அடியேன்—(நீயிட்ட வழக்காம்படி பாதந்த்ரனான) நான்
என்—எத்தை
செய்கேன்—செய்வேன்
ஸம்பந்தமுண்டாகையாலே விடமாட்டுகிறிலேன், மைதில்யம்பிறவாத படியத்நிக்கமாட்டுகிறிலேன். (அ)

ஆறு;—(திருவுருவு.) அழகியவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும், திருநாபிகமலத்திலே சதுர்முகனாகிற அதிஷ்டாநத்தினுள்ளே வீற்றிருந்து ஸ்ருஷ்டித்த க்ரமங்களும், ஒப்பின்றிக்கே விஸஜாதீயமான உன்னுடைய குணசேஷ்டிதங்களைக் கேட்குந்தோறும் என்னெஞ்சம் நெகிழ்ந்து நிற்பதும்செய்து, கண்ணீர் அருவிபோலே சோராநின்றதென்கிறார். (அ)

ஈடு;—ஒன்பதாம்பாட்டு. த்ரைவிக்ரமாபதாநத்தை யநுஸந்தித்து அத்தாலே ஶிதிலனாகிற நான் உன்னை தரித்து நின்றநுபவிப்பதென் றென்கிறார்.

அடியைமூன்றையிரந்தவாறும் அங்கேநின்றாழ்கடலுமண்ணும்விண்
மூடிய* ஈரடியால் முடித்துக்கொண்டமுக்கியமும் * [ணும்
நொடியுமாறவைகேட்குந்தோறும் என்னெஞ்சம்நின்றனக்கேகரைந்
கொடியவல்வினையேன் உன்னையென்றுகொல்கூடுவதே. (௬) [துகும்

ப—அநந்தரம், அர்த்தியாயிருந்து மபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொண்ட வுன்னுடைய வபதாநங்களைக் கேட்குந்தோறெல்லாமென்னெஞ்சு உருகாநின்றது, ஸ்த்ரீசித்தனும்படி உன்னைக்கூடுவதென் றென்கிறார்.

(த்ரைலோக்யத்தையு மபேக்ஷியாதே,)
மூன்று—மூன்று
அடியை—அடியை
இரந்த—"தரவேணும்" என்று அவன் மருதபடி அபேக்ஷித்த
ஆறும்—ப்ரகாரமும்
அங்கு—அவனிசைந்து உதகம்பண்ணின யஜ்ஞவாடந்தன்னிலே
நின்றே—நின்றே
ஆழ்—அகாதமான
கடலும்—ஸமுத்ரங்களையும்
மண்ணும்—ஸப்தத்வீபையான பூமியையும்
விண்ணும்—ப்ரஹ்மலோகபர்யந்தமான ஆகாசத்தையும்
ஈரடியால்—இரண்டடியாலே
முடிய—முடியும்படியாக
முடித்துக்கொண்ட—தன்னினைவு தலைக்கட்டிக்கொண்ட
முக்கியமும்—ப்ராதாந்யமுமாகிற
அவை—அவற்றை
நொடியும்—சொல்லும்
ஆறு—ப்ரகாரம்
கேட்குந்தோறும்—கேட்குந்தோறும்
என்—என்
நெஞ்சம்—நெஞ்சானது
நின்தனக்கே—அவாப்தஸமஸ்தகாமனாய்வைத்து ஆஸ்ரிதார்த்தமாக அர்த்தியான உன்னுடைய ஶீலஸ்வரூபத்திலே
கரைந்து—கரைந்து;
உகும்—ஒழுகிப்போகாநின்றது;
வல்—ஒரு ப்ராயஸ்சித்தஸாத்யமன்றியே
கொடிய—அநுபவித்துக்கழிக்கவொண்ணாதே
வினையேன்—அநிஷ்டாவஹமான, ப்ரேமரூபமாயிருக்கிற பாபத்தையுடையேனான நான், (உடை குலைப்படாதபடி) நிலைநின்றநுபவிக்கும்படியாக
உன்னை—உன்னை
என்றுகொல்—என்றோ?
கூடுவது—கூடுவது. (நொடிதல்-சொல்லுதல்.) ௬)

ஆறு;—(அடியை) மஹாபலி பக்கலிலே மூன்றடியை யிரந்தபடியும், அந்நிலையிலே நின்றே யிரண்டடியாலே த்ரைலோக்யத்தை யகப்படுத்திக்கொண்டு நீ நினைத்தத்தை முடித்துக்கொண்ட வேண்டப்பாடும், அவற்றைச்சொல்லக் கேட்குந்தோறு மென்னுடைய வந்தஃகரணம் உன்னுடைய ப்ரஸ்தாவமாத்ரத்திலே கரைந்

துதும். உன்னை யநுஸந்தித்தால் ஶிதிலனுகைக்கிடான மஹாபாபத்தைப்பண்ணின நான் உன்னையென்று தரித்தநுபவிப்பதென்கிறார்.

ஈடு ;—பத்தாம்பாட்டு. ஸமுத்ரமதந வைசித்ர்யத்தை யநுஸந்தித்து ஶிதிலனுகாநின்றேன், உன்னை தரித்துநின் றநுஸந்திக்க வல்லேனும்படி விரகுசொல்லவேணுமென்கிறார்,

> கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதந்தேவருண்ண * அசுரரை
> வீடும்வண்ணங்களேசெய்து போனவித்தகமும் *
> ஊடுபுக்கெனதாவியை யுருக்கியுண்டிடுகின்ற * நின்தன்னை
> நாடும்வண்ணஞ்சொல்லாய் நச்சுநாகணையானே. (௪௰)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாகவருந்தொழில்செய்தூஉபகரித்த அம்ருதமதநவ்ருத்தாந்தங்களானவை என்னை ஶிதிலமாக்காநின்றது, உன்னை நிலைநின்றநுபவிக்கும்படி யருளிச்செய்யவேணு மென்கிறார்.

கூடி — தேவாஸுரர்களிருவரோடுங்கூடிநின்று
நீரை—க்ஷீரார்ணவஜலத்தை மத்தும் கயிறுமாதாரமும்முதலான ஸம்விதாநங்களைப்பண்ணி
கடைந்த—கடைந்த
ஆறும்—ப்ரகாரமும்
அமுதும்—அங்குத்தோன்றின அம்ருதமானது
தேவர்—தேவர்கள்
உண்ண—உண்ணும்படி
அசுரரை—அசுரர்களை
வீடும்—விடுவிக்கும்
வண்ணங்கள்—ப்ரகாரங்களையுடைய ஸ்த்ரீவேஷபரிக்ரஹாதிகளை
செய்துபோன—பண்ணிப்போன
வித்தகமும்—விஸ்மயநீயாகாரமும்
ஊடு—உள்ளே
புக்கு—புக்கு
எனது—என்
ஆவியை—ஆத்மாவை
உருக்கி—நீர்ப்பண்டமாகவுருக்கி
உண்டிடுகின்ற—க்ரஸித்துவிடாநின்றன ;
நஞ்சு—அநுபவவிரோதிகளை, (அழியச்செய்யும் விஷத்தையுடையனை)
நாகம்—திருவநந்தாழ்வானோடே
அணையானே—நித்யஸம்ஶ்லிஷ்டனானவனே
நின்றன்னை—உன்னை
நாடும்—நித்யாநுபவம்பண்ணும்
வண்ணம்—ப்ரகாரம்
சொல்லாய்—அருளிச்செய்யவேணும்.

ஆறு ;—(கூடிநீரை) அசுரர்களோடே கூடிநின்று கடலைக்கடைந்தருளினபடியும் ; அதின்பலமான அம்ருதத்தை தேவர்கள்புஜிக்க, அசுரர்களத்தைவிடும்படியாக ஒருவடிவைக்கொண்டுபோன விஸ்மய

மு முள்ளேபுக்கு என்னாத்மாவை யுருக்கி முடிக்கின்றன. திருவநந்தாழ்வானுன்னோடு நித்யஸம்ஶ்லேஷம் பண்ணுமாபோலே நானுன்னைப் பூர்ணமாக தரித்து நின்றநுபவிக்கும் விரகுசொல்லவேணு மென்கிறார். (௧௰)

ஈடு; அவ;—நிகமத்தில், இப்பத்துங்கற்றார் பரமபதத்திலே போய் நித்யாநுபவம்பண்ணப்பெறுவ ரென்கிறார்.

நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கென்று* நாடொறு
மேகசிந்தையனாய்க் குருகூர்ச்சடகோபன்மாறன் *
ஆகநூற்றவந்தாதியாயிரத்துள்ளிவையுமோர்பத்தும்வல்லார் *
மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர்வைகலுமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பரமபதத்தி லாநந்த ப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

நாகணைமிசை—திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளின
நம்—நம்முடைய
பிரான்—ஸ்வாமியானவன்
சரணே—திருவடிகளே
சரண்—உபாயம்
நமக்கு—நமக்கு
என்று—என்று
நாடொறும்—என்றுமொக்க
ஏகசிந்தையனாய் — மநோரதத்தை யுடையராய்க்கொண்டு
குருகூர்ச்சடகோபன்மாறன்—ஆழ்வார்
ஆக—தாமுளராகைக்கு
நூற்ற—அருளிச்செய்த
அந்தாதி—அந்தாதியான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
ஓர்—அத்விதீயமான
இவை—இவை
பத்தும்—பத்தையும்
வல்லார்—அப்யஸிக்கவல்லவர்கள்
மாகம்—பரமாகாசமான
வைகுந்தத்து—ஸ்ரீவைகுண்டத்திலே
வைகலும்—யாவதாத்மபாவியான காலமெல்லாம்
மகிழ்வெய்துவர்—ஆநந்தநிர்ப்பரரா யிருக்கப்பெறுவர்கள்.
நூற்கை—பண்ணுகை. இது—ஆசிரியத்துறை. (௧௧)

ஆறு;—(நாகணைமிசை) சரணம்புக்காரை எம்பெருமானுபேக்ஷிக்கநினைக்கிலு முபேக்ஷிக்கவொட்டாதே விஷயீகரிக்கப்பண்ணும்

ஸ்வபாவனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்து ஆஶ்ரிதவிஷயத்தி லுபகாரகனாயிருந்துள்ள வெம்பெருமானுடைய திருவடிகளே நமக்குச்சரணமென்று நாள்தோறு மிதொருமனோரதமே யுடையரான ஆழ்வார், தாமுளராகைக்காக பகவத்குண ப்ரேரிதராய்க் கொண்டுசொன்ன ஆயிரத்திலுமிப்பத்தும் கற்றார், ஸ்ரீவைகுண்டத்திலேபோ யெம்பெருமானை நித்யாநுபவம் பண்ணப்பெறுவரென்கிறார்.

(௧௧)

திருவாய்மொழி ஐந்தாம்பத்து பத்தாந்திருவாய்மொழி

வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.